Koviloor Digital Library

F3

# தொல்காப்பிய வளம்

பதிப்பாசிரியர்

முனைவர் ச. வே. சுப்பிரமணியன்

மெய்யப்பன் பதிப்பகம்

VTN089

Koviloor Digital Library

Koviloor Digital Library

# தொல்காப்பிய வளம்

தமிழூர் கண்ட முனைவர் ச.வே.சு. அவர்களின்
பவளவிழா வெளியீடு

ALAGAPPA UNIVERSITY, KARAIKUDI
CENTRAL LIBRARY
Accession No 64545
Date of purchases:
Call Number: 494'.8045T
P4

பதிப்பாசிரியர்

முனைவர் ச.வே. சுப்பிரமணியன்

VTN089

அழகப்பா பல்கலைக்கழகம் ★ காரைக்குடி ★ வளர் தமிழ் நூலகம்

ALAGAPPA UNIVERSITY ★ KARAIKUDI ★ CENTRAL LIBRARY

மெய்யப்பன் பதிப்பகம்
53, புதுத்தெரு, சிதம்பரம்-608001.

Koviloor Digital Library

முதல் பதிப்பு : 25, டிசம்பர், 2004
திருவள்ளுவர் ஆண்டு : 2035
**விலை : ரூ. 50.00**
மெய்யப்பன் பதிப்பக வெளியீட்டு எண் : 129

நினைவில் வாழும்
நிறுவனர்
**ச. மெய்யப்பனார்**

டாக்டர் ச. மெய்யப்பன், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.

பல்கலைக்கழகங்கள் பலவற்றில் இவர் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்.

'வள்ளுவம்' இதழின் நிறுவன ஆசிரியர்.

குன்றக்குடி அடிகளார் 'தமிழவேள்' என்றும், தருமபுரம் ஆதீனத் தலைவர் 'செந்தமிழ்க் காவலர்' என்றும் விருதுகள் வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.

'பதிப்புச்செம்மல்' என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

கிடைக்குமிடம் :
**மணிவாசகர் நூலகம்**

12-B, மேல சன்னதி, சிதம்பரம்- 608001. ©:230069
31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை-600108. ©:25361039
5, சிங்காரவேலுதெரு, தி. நகர், சென்னை-600017. ©:24357832
110, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை-625001. ©:2622853
15, ராஜ வீதி, கோயமுத்தூர்-641001. ©:2397155
28, நந்தி கோயில் தெரு, திருச்சி-620002. ©:2706450

அச்சிட்டோர் : மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை – 600 021.
தொலைபேசி : 25954528

Koviloor Digital Library

# தொல்காப்பியத்தின் வளம்

ச.மெ. மீனாட்சி சோமசுந்தரம்

தமிழ்ப்பண்பாட்டின் சுரங்கமாக அமைவது தொல்காப்பியம் உலக மொழிகளில் பொருள் இலக்கணம் கூறும் ஒரே மொழி தமிழ் மொழி மட்டும்தான். தொல்காப்பியம் என்ற இலக்கணம் தோன்றுவதற்கு முன்பு தமிழில் 5000 ஆண்டுகளாவது தமிழ் இலக்கியம் பரந்து செழித்து வளர்ந்து இருத்தல் வேண்டும் இல்லை எனில் தொல்காப்பியம் போன்ற ஒரு இலக்கண நூல் தோன்ற முடியாது.

தொல்காப்பியம் உலகப் பொது நூல் அதில் கூறப்பெறாத செய்திகளே இல்லை. தொல்காப்பியம் மொழி இலக்கணம் மட்டும் அன்று வாழ்வியல் இலக்கணமாகவும் அமைந்துள்ளது.

ஆண்டுதோறும் தமிழூரில் உலகத்தமிழ்க் கல்வி இயக்கத்தின் சார்பில் கருத்தரங்கு நடந்து வருகிறது. நூல்களும் வெளியிட்டு வருகின்றன. இந்த ஆண்டு உலகத்தமிழ்க் கல்வி இயக்கத்தின் 7வது கருத்தரங்கும் ச.வே.சுவின் பவளவிழா கருத்தரங்கும் மூன்று நாட்கள் நடைபெறுகின்றன.

தொல்காப்பியத்தை நுணுகி ஆய்ந்து உணர்ந்த அறிஞர்கள் பலரின் கட்டுரைத்தொகுப்பினை நாங்கள் வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

என் தந்தை பதிப்புச் செம்மல் முனைவர். ச.மெய்யப்பன் அவர்கள் பேரறிஞர் வ.சு.ப.மாணிக்கனார் வழியில் தொல்காப்பியத்தின் பெருமையை நன்கு உணர்ந்தவர் தொல்காப்பியத்தைப் பரப்ப வேண்டும் என்ற எண்ணம் என் தந்தைக்கு எப்போதும் உண்டு. உலகத்தமிழ் கல்வி இயக்கத்தின் கருத்தரங்கிற்கு என் தந்தை பெரும்பாலும் ஆண்டு தோறும் செல்வது உண்டு.

மணிவாசகர் பதிப்பகம் ச.வே.சுவின் தொல்காப்பியத் தெளிவுரை வெளியிட்டு தொல்காப்பியத்தை தமிழ் மாணாக்கர் மத்தியில் பரப்பி வருகிறது.

தொல்காப்பியத் தெளிவுரை 6 பதிப்புகள் வந்துள்ளன.

அதை ஒட்டி தொல்காப்பியத்தை உலகிற்கு உணர்த்த வேண்டும் என்பதற்காக ஆங்கிலத்தில் தொல்காப்பியத்தையும் வெளியிட்டுள்ளோம்.

Koviloor Digital Library

மு.பழனியப்பன், க.ஆ.இராமசாமி, அ.ஆறுமுகம், முத்துராமலிங்கம் போன்றோர் கட்டுரைகள் இடம் பெறுகின்றன

ச.வே.சு.அவர்கள் தமிழுரை அமைத்து தமிழுக்காக வாழ்ந்து வருபவர் தொல்காப்பியத்தின் பெருமையினைப் பலநிலைகளில் உலகிற்குத் தமிழிலும் ஆங்கிலத்திலும் உணர்த்தி வருபவர் அவர் நடத்தும் கருத்தரங்குகளுக்கு என் தந்தை பதிப்புச் செம்மல் அவர்கள் எல்லா ஊக்கமும் கொடுத்து வந்தார். அந்நிலையில் இப்போது தொல்காப்பியம் பற்றிய நூல்களை வெளியிடுவதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம்.

Koviloor Digital Library

# உள்ளே

பதிப்புரை ........................................................................................... 3

உள்ளே ........................................................................................... 5

முன்னுரை ........................................................................................... 6

கட்டுரையாளர் முகவரிகள் ........................................................................................... 8

1. தொல்காப்பிய அகம், புறத்திணை மரபுகள் தமிழர் தோல்விக்குக் காரணமோ? – க.ப.அறவாணன். ........................................ 9
2. தொல்காப்பிய வழி தமிழ் இலக்கியத்தின் காலம் – ச.வே.சுப்பிரமணியன் ........................................ 15
3. தொல்காப்பிய களவியலும் திருக்குறள் களவியலும்– மு.பழனியப்பன் .... 21
4. தொல்காப்பியர் கூறும் உள்ளுறை– க.மலர்விழி ........................................ 30
5. தொல்காப்பியத்தில் மெய்ப்பாடுகள்– தா.க.அனுராதா ........................................ 40
6. தொல்காப்பிய மெய்ப்பாடு–சில சிந்தனைகள் – அன்னிதாமசு ............. 49
7. தொல்காப்பியரும் இளம்பூரணரும்– க.வெற்றிவேல் ........................................ 59
8. சேனாவரையர், பேராசிரியர் கதைகள்.க.ஆ.இராமசாமி ........................................ 70
9. தொல்காப்பியமும் இராமாயணமும்–வஞ்சினம்– பி. ஜானகி ..................... 84
10. தொல்காப்பியமும் தற்கால மரபுக்கவிதையும்–ச.சிவகாமி ........................ 95
11. தொல்காப்பியமும் பாரதிதாசனும்– இரா. பழனியம்மாள் ........................ 111
12 தொல்காப்பியமும் அகப்பொருள் விளக்கமும் தி. ராஜரெத்தினம் ......... 118
13. தொல்காப்பியத்தில் சமூக உறவுமுறை– அ.ஆறுமுகம் ........................ 125
14. தொல்காப்பியமும் திருக்குர்ஆனும் –ஆ.பீ.யூ அப்துல் காதர் .............. 130
15. தொல்காப்பியர் உள்ளம். – முத்துராமலிங்கம் ........................................ 144
15. பொருளிலக்கண ஆராய்ச்சி – கு.வெ. பாலசுப்பிரமணியன்.. ................ 156

**16. THE BOOK - The qualities and methodologies of book writing Dr. S.Shanmugam. ........................................ 165**

Koviloor Digital Library

# முன்னுரை

உலகத்தமிழ்க் கல்வி இயக்கத்தின் சார்பில் நடைபெறும் 7வது கருத்தரங்கில் தொல்காப்பியத்திற்கு இரண்டு தொகுதிகள் வெளிவருகின்றன. பல நிலைகளில் பல பேரறிஞர்கள் எழுதிய கட்டுரைகள் அவ்விரு தொகுதிகளிலும் இடம் பெறுகின்றன.

இவ்விரண்டாம் தொகுதியில் மேனாள் துணைவேந்தர் க.ப.அறவாணன் அவர்கள் தொல்காப்பிய. அகம்புறத்திணை மரபுகள் ஒருவேளை தமிழர்களின் தோல்விக்குக் காரணமாக இருக்குமோ? என்று ஐயுறும் கட்டுரையைத் தந்துள்ளார். தமிழர்களின் வளர்ச்சிக்குத் தொல்காப்பியம் பல நிலைகளில் துணைபுரிந்து உள்ளது. என்பதில் ஐயமில்லை. ஆனால் தமிழர்களின் தேய்வுக்கு என்ன காரணம் என்பதைப் பற்றிச் சிந்திக்கும் நிலையில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

தொல்காப்பியம் போன்ற ஓர் ஒப்பற்ற இலக்கண நூல் தோன்றுவதாக இருந்தால் தமிழ் இலக்கியம் குறைந்தது தொல்காப்பியத்திற்கு முன் ஐந்தாயிரம் ஆண்டுகளாவது வளமை உடையதாக இருத்தல் வேண்டும் என்பதை அடுத்த கட்டுரை விளக்குகிறது.

தொல்காப்பியத்தின் தாக்கம் திருக்குறளில் உள்ளதை முனைவர் பழனியப்பனின் கட்டுரை விளக்குகிறது.

இலக்கியச் சுவையை மிகுவிப்பதற்கு உள்ளுறை போன்ற அமைப்புக்கள் உதவுகின்றன. அதனைத் தொல்காப்பியர் வழி நின்று ஆய்கிறது. அடுத்த கட்டுரை

மெய்ப்பாடுகள் உலகம் தழுவியவை. எல்லா மனிதர்க்கும் மெய்ப்பாடுகள் வருவது இயல்பு. அதனை வகைப்படுத்தி, சமஸ்கிருத எண்ணங்களையும் தந்துவிளக்குகிறது. அடுத்த கட்டுரை.

மெய்ப்பாட்டுக்களங்களாகப் பிறருக்குரிய களனாக நகையும், ஏனைய ஏழு மெய்ப்பாடுகளும் தமக்குரிய களனாக அமைவதாகப் பேராசிரியர் அன்னிதாமசு கட்டுரை தெளிவுபடுத்தி விளக்குகிறது. அதோடு மெய்ப்பாட்டுச் சொற்கள் தொல்காப்பியத்தில் எங்கெங்கு எல்லாம் உள்ளதோ அதை எல்லாம் எடுத்து விளக்குவதோடு அச்ச மெய்ப்பாடே மிகுதியாக அமைவதை உளவியல் பார்வையில் பார்க்கவேண்டும் என்பதையும் விளக்கி சிலப்பதிகார உரையா சிரியர் அடியார்க்கு நல்லார் தரும் அச்சம் பற்றிய எண்ணங் களையும் தருகிறார்.

Koviloor Digital Library

வஞ்சினம் பற்றித் தொல்காப்பியம் கூறும் எண்ணங்களைத் தந்து இராமாணத்தில் அது பெறுகின்ற இடத்தை விளக்குகிறது. அடுத்த கட்டுரை

தொல்காப்பியத்தின் தாக்கமும் வேறுபாடும் எவ்வாறு தற்கால மரபுக்கவிதைகளில் அமைந்துள்ளன என்பதைத் தெளிவு படுத்துகிறது. இணைப்பேராசிரியர் சிவகாமியின் கட்டுரை.

தொல்காப்பியத்தின் தாக்கம் பாரதிதாசன் வரை உள்ளது என்பதைத் தெளிவுபடுத்துகிறது, அடுத்த கட்டுரை.

தொல்காப்பியத்திற்கு முதல் உரையாசிரியராக அமைந்த இளம்பூரணரின் சிறப்புக்களைப் பற்றிப் பேசுகிறது அடுத்த கட்டுரை.

சேனாவரையர், பேராசிரியர் போன்ற உரையாசிரியர்கள் பல கதைகளைச் சான்றுகளுக்காக எடுத்துக்காட்டுகின்றனர் அக்கதைகளின் ஆழத்தை நுணுகிப் பார்த்து விளக்குகிறது, தமிழ் அறிஞர் க.ஆ.இராமசாமி அவர்களின் கட்டுரை

தொல்காப்பியத்தை உலக அறிவியல் நூல்களோடு இணைத்துப்பார்க்கவேண்டும் என்ற உணர்வில் அமைக்கப்பெற்ற கட்டுரை தொல்காப்பியமும் திருக்குர்ஆனும் என்பது. அதைச் சிறப்பாக அமைத்துள்ளார், அப்துல் காதல்.

நம்பி அகப்பொருளில் எவ்வாறு தொல்காப்பியத்தின் தாக்கமும் வேறுபாடும் அமைந்துள்ளது என்பதை விளக்குகிறது அடுத்த கட்டுரை

தொல்காப்பியர் உள்ளத்தைப் பார்க்க முயல்கிறார் அறிஞர் முத்துராமலிங்கம்.

ஐம்பது ஆண்டுகாலப் பொருள் அதிகார ஆராய்ச்சி பற்றிய கட்டுரையைத்தருகிறார் தமிழ்ப் பேராசிரியர் கு.வெ.பால சுப்பிரமணியன் அவர்கள்.

மருத்துவர் சண்முகம் அவர்கள் தொல்காப்பிய வழி ஒரு நூல் எவ்வாறு அமையவேண்டும் என்பதை ஆங்கிலக்கட்டுரையாகத் தந்துள்ளார்.

வழக்கம்போல் பதிப்புச்செம்மலின் வழிநின்று அவர்திருமகன் ச.மெ.மீனாட்சி சோமசுந்தரம் அவர்கள் இந்நூல் தொகுப்பினை மனமகிழ்வோடு வெளியீட்டு தொல்காப்பியத்தைப் பரப்புவதற்கு வழிவகை செய்தமைக்கு உலகத்தமிழ்க் கல்வி இயக்கம் தன் அன்பான நன்றியினைத் தெரிவிக்கிறது.

எல்லா நிலைகளிலும் துணைபுரிந்து வருகின்ற மேலாளர் இராம.குருமூர்த்தி அவர்களுக்கு நன்றியுடையேன்.

தமிழூர். அன்புள்ள
29-12-2004 ச.வே.சுப்பிரமணியன்.

Koviloor Digital Library

## கட்டுரையாளர் முகவரிகள்

1. முனைவர் க.ப. அறவாணன் மேனாள் துணைவேந்தர், (ம.சு. பல்கலைக்கழகம் - நெல்லை). 2, முனிரத்தினம் தெரு, அய்யாவு நாயுடு குடியிருப்பு - சென்னை- 29.

2. ச.வே. சு. தமிழூர். - 627 808.

3. முனைவர் மு. பழனியப்பன். மா.மன்னர் கல்லூரி, புதுக்கோட்டை

4. க.மலர்வழி -தமிழ்த்துறை விரிவுரையாளர்- ஸ்ரீவாசவி கல்லூரி, ஈரோடு

5. தா.க. அனுராதா. ஆய்வாளர்- அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அண்ணாமலைநகர்.- 608 002.

6. முனைவர் அன்னிதாமசு. பேராசிரியர். உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்- தரமணி அஞ்சல் சென்னை- 600 113.

7. செல்வி பி.ஜானகி. ஆய்வு உதவியாளர். உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம். தரமணி அஞ்சல். சென்னை- 113.

8. முனைவர் சசிவகாமி. இணைப்பேராசிரியர். உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்- தரமணி அஞ்சல் - சென்னை-113.

9. திரு. க.வெற்றிவேல். ஆய்வாளர்; அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.- 608 002.

10. திரு. க.ஆ. இராமசாமி- 4, பழைய கிராமம் தெரு, சேரன்மாதேவி ,- 627 414.

11. முனைவர். அ. ஆறுமுகம் - பாவேந்தர் பதிப்பகம், 4/79, சீரகம், திருமழபாடி, பெரம்பலூர் மாவட்டம்- 621 851.

11. அபீயு. அப்துல் காதர், மேலப்பாளையம்,

12. திரு. திராஜரெத்தினம், ஆய்வாளர், கேரளப்பல்கலைக்கழகம் திருவனந்தபுரம்.

13. திரு ஆ. முத்துராமலிங்கம் தச்சநல்லூர்.

14. முனைவர் குவெ. பாலசுப்பிரமணியன் தமிழ்ப்பேராசிரியர் தஞ்சாவூர்.

15. டாக்டர் எஸ்- சண்முகம், திருநெல்வேலி.

Koviloor Digital Library

Alagappa university
Central Library
64545

# 1. தொல்காப்பிய அகம், புறத்திணை மரபுகள் தமிழர் தோல்விக்குக் காரணமோ?

க.ப.அறவாணன்,
சென்னை.

இன்றைய தமிழர் வீழ்ச்சிக்கான வித்து பண்டைய தமிழ்ச் சமுதாயத்திலேயே ஊன்றப்பட்டிருக்குமோ என்று ஐயுற வேண்டியுள்ளது. சமகாலத் தமிழச் சமுதாயத்தில் அக வாழ்க்கையிலும், புற வாழ்க்கையிலும் உணர்ச்சிக்கு முதலிடம் கொடுத்தலும், ஒற்றுமை அற்று இருத்தலும், உள்ளொன்று புறமொன்றாய் நடத்தலும், மறைத்தலும் நிரம்பியுள்ளன. தமிழர் கடந்த காலம் முழுதும் இத்தகு வேண்டாப் பண்புகளிலேயே வாழ்ந்திருத்தல் கூடும். பண்புகளாலேயே வீழ்ந்திருத்தல் கூடும். இக்குணங்கள் மரபு (Genetic) வழிப்பட்டனவோ?

எனவேதான், தொடர்ந்து தமக்குரிய உரிமைகளை இழந்தும் அடிமைப்பட்டும் இவர்கள் கிடந்தனரோ? கிடக்கின்றனரோ?.

புறம், அகம், என்ற அளவில் மட்டும் இக்கருத்தைத் தொல்காப்பியக் கருத்துகளுடன் உரசிப்பார்ப்போம். தொல்காப்பியம், பண்டைய தமிழர் தம் வாழ்க்கையின் நேர்ப் படப்பிடிப்பு அன்று; சட்ட நூலும் அன்று. தம்கால, தமக்கு முற்பட்ட கால இலக்கியங்களையும், இலக்கணங்களையும், உயர்ந்தோர் வழக்கங்களையும், உள்வாங்கி நிரல்படப் படைக்கப்பட்ட சிறந்த நூல். பொருளதிகாரத்திற்கும் இது பொருந்தும். தொல்காப்பியர் பார்வையிட்ட இலக்கிய இலக்கணங்ளுக்குத் தமிழ் முன்னோர்தம் வாழ்க்கையே மூலமுதலாக இருந்திருக்கும். எனவே, வாழ்க்கையைப் பார்த்துப் படைக்கப்பட்ட இலக்கியங்களில் கற்பனைகளும், புனைவுகளும் கூடிக் கலந்திருப்பதைத் தவிர்த்திருக்க வாய்ப்பில்லை.

புறத்திணைகள் ஏழு, அவற்றுள் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை ஆகியன போர்த்திணைகள், ஏனைய வாகை, காஞ்சி,

ALAGAPPA UNIVERSITY, KARAIKUDI
CENTRAL LIBRARY
Accession No. 64545
Date of purchase:
Call Number:

Koviloor Digital Library



பாடாண் ஆகிய மூன்றனுள் வாகையும் காஞ்சியும் போரின் நேர்முகத்திணைகள் அல்ல. போர் நடந்து முடிந்தபின் காணப்பெறும் போர்க்களக்காட்சிகளைப் வருணிப்பவை. பாடாண்திணை கிட்டத்தட்ட போர்க்களத்திலிருந்து விடுபட்ட திணையாகத் தோற்றுகிறது. இலக்கியத் திணையாகவும் தோற்றுகிறது. போருக்குரிய புறத்திணைகளைக் கூர்ந்து கவனித்தால் பகைவர் மேல் கொள்ளும் பகை, மறைப்பு எதுவுமின்றி வெளிப்படையாக இருக்கிறது. போர்க்களத்தின் இரு முகத்திலும்போரிடும் வீரர்கள் ஒருவரை ஒருவர் நேர் முகமாக எதிர்க்கிறார்கள். ஒருவர்மேல் ஒருவர் வாள் வீசுகிறார்கள். வேல் எறிகிறார்கள். வெட்சித்திணையில் கூறப்பெறும் 'புடைகெட ஒற்றின் ஆகி வேய்' (புறத்திணை 3;3) தவிர ஏனைய அனைத்தும் அனைவரும் பார்க்க நடக்கும் வெளிப்படை நிகழ்ச்சிகளே இவற்றுள் ஒளிவும் இல்லை. மறைவும் இல்லை.

இந்த ஒளிவு மறைவு இன்மைக்கு மாறாக அகத்திணைகள் (அகத்திணை இயல், களவியல், கற்பியல், பொருளியல்) முழுதும் ஒளிவு மறைவு அடிப்படையிலேயே படைக்கப் பட்டிருக்கின்றன. களவியல் நூற்பா (116) 'தன்னுறு வேட்கை கிழவன் முன்கிளத்தல் எண்ணுங்காலை கிழத்திக்கு இல்லை' என்று குறிக்கிறது. மண்பானையில் வைக்கப்பட்ட தண்ணீரின் இருப்பும் அளவும், ஈரக்கசிவால் வெளியே தாமே தெரிதல் போலத் தலைவியின் உள்ளத்தைத் தலைவன் புரிந்து கொள்ள வேண்டும். பிறிதொரு நூற்பா (களவில் 133) 'மறைந்த ஒழுக்கம்' என்றே குறிப்பிடுகிறது. பெண் தன் உள்ள உணர்வை வெளிப்படுத்தியே தீர வேண்டிய தலைவனிடம் கூடக் குறிப்பாக மறைத்துச் சொல்லவேண்டும். தலைவியின் காதல் நிலைமையை அவளது தந்தை, தமையன், தாய், செவிலி ஆகியோரிடம் தலைவி நேர்முகமாகத் தெரிவித்தல் கூடாது. தலைவியின் நிலைமைக் கண்டு குறிப்பினால் அன்னோர் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். (களவியல். 47) 'அறத்தொடு நிலை'யின் படிநிலைகள் இவ்வடிப்படையிலேயே நிகழ்கின்றன. திருமணமாகிய பின்பும் கூடத் தற்புகழ் கிளவி கிழவன் முன் கிளத்தல் எத்திறத்தானும் கிழத்திக்கு இல்லை என்பது வரன்முறை. (கற்பியல். 39).

பெண் தன்னைப் புலப்படுத்திக் கொள்ளுதல் மட்டுமின்றிக் காதலியும், காதலனும் சேர்ந்து பழகுதல், பேசுதல் ஆகியனவும் மறைந்து ஒழுகத்தக்கனவாகவே காட்டப்பட்டுள்ளன. கற்பிலும் கூடத் தலைவியும் தலைவனும் சேர்ந்து மகிழ்ந்திருத்தல் மறைவிற்குரியதாகும். புலவிக்காலத்தில் மட்டும் மனைவி உயர்வும்,

Koviloor Digital Library



கிழவோன் பணிவும் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. (பொருளியல் :31).

· புறத்திணையில் பங்கேற்கும் ஆடவரின் பெயர்கள் வெளிப்படையாகக் குறிப்பிடலாம். ஆனால், ஆகத்திணையில் பங்கேற்கும் ஆண், பெண் பெயர்கள் சுட்டிக் கூறப்படக் கூடாது (அகத்திணை-57) என்று தடை ஆக்கப்பட்டிருக்கிறது. புறத்திணையில், பகையை வெளிப்படையாகக் காட்டலாம். வெளிப்படச் சொல்லலாம். பெயரையும் வெளிப்படையாகக் குறிக்கலாம். புறத்திணையில் பெண்ணின் பங்கேற்பு தடை செய்யப்பட்டிருக்கிறது. எண்ணரும்பாசறை பெண்ணொடு புணரார். (கற்பியல். 34) அகத்திணை, ஆண், பெண், இருவர்க்கும் உரியது. புறத்திணையோ ஆணுக்கு மட்டுமே உரியது. தலைவன் பொருள்வயின் பிரியும்போது அது களவுக் காலத்துக் காதலியாக இருப்பினும் கற்புக் காலத்து மனைவியாக இருப்பினும் உடன் அழைத்துச்செல்லக் கூடாது என்ற தடை இருந்துள்ளது. பொருளுக்காகவோ, பிற காரணங்களுக்காகவோ, கடற்பயணத்தைத் தலைவன் மேற்கொள்ளும் போது தன்னுடன் தலைவியை அழைத்துச் செல்லக் கூடாது என்கிற தடையும் இருந்துள்ளது. 'முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை' (அகத்திணை 39) இத்தடைகள் இல்லாது இருந்து பெண்ணையும் உடன் அழைத்துச் செல்லப்பண்டைய தமிழ்ச் சமுதாயம் அனுமதித்திருக்குமானால் தமிழர் வரலாறே மாறி இருக்கும் என்று தோன்றுகிறது. பொருளுக்காக நாடுகள் கடந்தும், கடல் கடந்தும், அயல் நாடுகளுக்குச் செல்லும் தலைவன் மனைவியையும் உடன் அழைத்துச் சென்றிருப்பானேயானால் தரைவழி வேறு நாடுகளிலும், கடல் தாண்டிய வேறு வேறு நாடுகளிலும் தமிழர் குடியிருப்புகள் பல்கி இருக்கும். ஒருகால் அந்நாடுகளே கூடத் தமிழர் ஆதிக்கத்தின் கீழ் உள்ள நாடுகளாகியிருக்கும். கிரேக்க, ரோமர்தம் யவனக் குடியிருப்புகள் சங்ககாலத்திலேயே தமிழகத்தில் இருந்தன. அந்நாட்டு அழகிய பெண்கள் பல ஆயிரம் மைல் கடந்து வந்து தமிழக அரண்மனை அந்தப்புரங்களில் பணிபுரிந்தனர். சீனர்கள் தம் தாயகம் கடந்து குடும்பத்துடன் வேறு நாடுகளுக்குச் சென்று தம் குடியிருப்புகளைப் பெருக்கிக் கொண்டனர். சிங்கப்பூர் முதலான நாடுகளைத் தம் வயப்படுத்தினர். ஆந்திர நாட்டுத் தெலுங்கு நாயக்கர், குடும்பத்துடன் தமிழகம் முழுதும் ஊடுருவினர். இன்று தமிழ்நாட்டின் பல பகுதிகள் அவர்களின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளன.

Koviloor Digital Library



6266

போர்ப் பங்கேற்பில் பெண்ணை விலக்கியதன் மூலம் (கற்பியல் 34) பெண்களால் கிடைக்கும் சமபலத்தை இழந்தனர். (ஒப்பிடுக; எகிப்திய அரசி கிளியோபாத்ரா (கி.பி. 69-90), டாலமி XI யின் மகள். தந்தை இறந்துவிட மகன் டாலமி 12 அரசன் ஆகியிருத்தல் வேண்டும். கிளியோபாத்ராவின் சொந்தத்தம்பி அவன். அவனே அவள் கணவனும் கூட. ரோம அரசன் சீசரின் (கி.பி. 48) படையுதவியுடன் அரசைக் கைப்பற்றுகிறாள். தம்பியை, கணவனைக் கொன்றுவிடுகிறாள். பதினெட்டு ஆண்டு அரசாள்கிறாள். படைக்குத்தலைமை தாங்கி உரோம அரசன் அகஸ்டஸை எதிர்த்துக் கடலில் போர்புரிகிறாள். இத்தகைய தமிழ் அரசியர் கி.மு.வில் ஒருவரேனும் உண்டா?). பொருள்வயின் பிரியும் போது பெண்களை ஒதுக்கியதன் மூலம் சம்பாத்தியத்தில் பாதியை இழந்தனர். ஓதலிலும், ஓதற்பிரிவிலும் பெண்களை விலக்கி அவர்களைப் பேதைகள் ஆக்கியதன் மூலம் அறிவார்ந்த பாதிச் சக்தியையும் இழந்தனர் - தமிழர்.

புறத்திணை என்பது தனக்கு ஆகாப் பகைவனைச் சந்திக்கும் களம். மறைப்பும் தந்திரமும், இரகசியமும், ஒற்றும் மிகுதியாக இருக்க வேண்டிய இடம். உணர்ச்சி வசப்படக்கூடிய இடம் அதுவன்று- பகையை உணர்ச்சியோடு சந்தித்தால் நாம்தான் தோற்போம். அறிவு, சூட்சுமம் முதலானவற்றால் சந்தித்தால் நாம் வெற்றி பெறுவோம். மறைவும் இரகசியமும் காப்பாற்றப்பட வேண்டிய போர்க்களத்தில் வெட்சி முதல் தும்பை ஈறான வெளிப்படைப் போர் நெறிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நேருக்கு நேர்போர் முறைகள் ஆளப்படுகின்றன.

இப்போர்களும் மெய்யான எதிரிகள் இருவர்க்கு இடையே நடந்த போர்கள் அல்ல. தமிழ் பேசும் குடிகளுக்கு இடையே நடந்த போர்கள். குழுப்போர்கள்; குடிப்போர்கள். சேர, சோழ, பாண்டியர் ஆகிய மூவேந்தர் இடையே நடந்த போர் என்று தொல்காப்பியமே பதிவு செய்து வைத்துள்ளது.

வேந்திடை தெரிதல் வேண்டின் ஏந்து புகழ்
போந்தை வேம்பே ஆர் என வரூஉம்
மாபெரும் தானையர் மலைந்த பூவும் (புறத்திணை – 5:3–5)

போரில் யார் தோற்றாலும் தோற்பது தமிழ்க்குடியே! ஆக, புறத்திணைவழி வீரம் ஊட்டப்பட்டது. வெளிப்படையாக ஊட்டப்பட்டது. அதாவது, உணர்ச்சி ஊட்டப்பட்டது. மூட்டப்பட்டது. எதற்காக? ஒரு தமிழ்க்குடி இன்னொரு தமிழ்க்குடிமேல் வாள்வீச, வேல் எறிய.

ஒருத்தனை ஒருத்தன் பகைத்தலும், பகைத்துச் சமரிடுதலும் நல்ல பண்புகள் அல்ல. (பயிலுக திருக்குறள். இகல், அதிகாரம்,

Koviloor Digital Library



86) ஒருவனை ஒருவன் பகைத்தே ஆதல் வேண்டும், அடுதல் வேண்டும், படுதல் வேண்டும் என்பன மனிதனின் இயல்புகளும் அல்ல, இயல்பு ஊக்கமும் அன்று. மானிடத்திற்குப் பண்பல்லாத ஒன்றை, இயல்பல்லாத ஒன்றை, இயல்பு ஊக்கம் இல்லாத ஒன்றை ஊக்கப்படுத்திய தமிழ் முன்னோர், ஆண் பெண் வாழ்வில் மறைவைக் கடைபிடித்தது ஏன்? பெண்ணும் ஆணும் ஒருவரை ஒருவர் விரும்புதல் மானுடப் பண்பு, மானுட இயல்பு, உடலின் இயல்பூக்கம். யாருக்கும் தெரியாது நேசித்தல் வேண்டும். மறைந்தொழுகுதல் வேண்டும் என்று இயல்புக்கு மாறான கட்டுப்பாட்டைப் பண்டைத் தமிழ்ச் சமுதாயம் விதித்ததன் மூலம் மறைவு ஒழுக்கத்தையும், பொய் ஒழுக்கத்தையும், போலி ஒழுக்கத்தையும் மறைமுகமாக ஊக்கியது.வெளிப்படையாக இருக்க வேண்டியவற்றில் வெளிப்படையாக இல்லை. இருக்க வேண்டாத பகைக்களத்தில் வெளிப்படையாக இருந்ததன் மூலம் தமிழ்ச் சமுதாயம் பகைவரிடம் தொடர்ந்து தோற்றிருத்தல் வேண்டும். அடிமை ஆகியிருத்தல் வேண்டும். இக்கருத்தை நம் தமிழ் மன்னர் மேற்கொண்டிருந்த ஒரு நம்பிக்கையும் உறுதி செய்கிறது. வெள்ளைக்காரர்கள் துப்பாக்கியைக் கொண்டு வந்து மறைந்திருந்து. தமிழ் மறவர்களைக் கொன்றனர். அப்போது தமிழ் மன்னர்கள் இது கோழைத்தனம் என்றும் பகைவனை வாள், வேல், ஈட்டி ஆகியவற்றால் முகம் பார்த்து நேருக்கு நேர் போர் செய்தலே வீரத்தனம் என்றும் சொல்லிக் கொண்டிருந்தனர்.

துப்பாக்கிகளை விலைக்கு வாங்கிப் போர் செய்யவும் மறுத்தனர். இச்செய்தி பிற்காலத் தமிழர் வரலாற்றில் ஆதாரத்தோடு பதிவாகி இருக்கிறது. (பார்க்க அறவாணன்; தமிழர் மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள்) மனைவியைக் காதலிப்பதை இரகசியம் ஆக்கிக் கொண்டவர்கள் பகைவனைச் சந்திப்பதை பரகசியமாக்கிக் கொண்டார்கள். விளைவு புறவாழ்க்கையிலும் வீழ்ச்சி; அக வாழ்க்கையிலும் வீழ்ச்சி,

விரும்பும் எந்த ஆணும் பெண்ணும் சாதி மதக் கட்டுகளைக் கடந்து காதலித்தலும் மணந்து கொள்ளுதலும் இயல்பாக இருத்தல்வேண்டும். செவிலி, நற்றாய், தந்தை, தமையன் ஆகியோர் வரவேற்றுப் போற்றுமுகமாக நிகழ்ந்திருத்தல் வேண்டும். மணவிலக்கு மறுமணம், இருபாலர்க்கும் பொதுவாகவும், இயல்பாகவும் கடைப்பிடிக்கப்பட்டிருத்தல் வேண்டும். இவ்வையெல்லாம் நிகழாமல் போனமைக்கு உரிய நச்சுவித்து பழைய காலத்திலேயே விதைக்கப்பட்டு வளர்க்கப்பட்டுவிட்டதாகத் தோன்றுகிறது.

Koviloor Digital Library



இம்மனப்போக்கே நூற்றாண்டு, நூற்றாண்டாகத் தமிழரிடம் தொடர்ந்து வளர்க்கப் பெற்று வருகிறது. அதன் விளைவாகவே, இவர்கள் வாழ்க்கைக் களத்தில் வெல்ல முடியாமல் தவிக்கின்றனர்.

ஆண் பெண் உறவில் எல்லை கடந்த, உடல்/உள்ள இயல்புகளுக்கு எதிரான கட்டுத்திட்டங்களைப் போற்றாத கிரேக்க-ரோமான்ய மக்களும், அவர் வழி வந்த ஐரோப்பிய மக்களும் உலகையே வென்றனர். ஆண்டனர். ஆண் பெண் உறவில் நீக்குப் போக்கைப் போற்றும், மலையாளிகளிடமும், பஞ்சாபியிடமும் முயற்சியும், இருக்க வேண்டிய பெண்ணெனும் சக்தியையே இழக்க நேரிட்டது. உளவியல்சார் சிக்கல்கள் பல்கின. பாலுறவுக் குற்றங்கள் பல்கின. மெய்யான அயலினப் பகைவரான களப்பிரர், பல்லவர், சாளுக்கியர், அராபியர், ஆந்திரர், மராத்தியர், ஐரோப்பியர் ஆகியோரை எதிர் கொண்டு வெல்லும் ஆற்லையும் நாம் இழந்தோம். உணர்ச்சிப் போதைக்குரிய சமுதாயமாகவே சாதி, மத, கட்சி உந்துதல்களால் ஒற்றுமை அற்று வாடுகிறோம்.

Koviloor Digital Library

ALAGAPPA UNIVERSITY, KARAIKUDI
CENTRAL LIBRARY
Accession No. 64545
Date of purchases:
Call Number: 494,8045T P4

## 2. தொல்காப்பிய வழி தமிழ் இலக்கியத்தின் காலம்

ச.வே.சுப்பிரமணியன்,
தமிழூர்.

உலகில் உள்ள பழமையான மொழிகளிளுள் தமிழும் ஒன்று. பழமையானமொழிகளாகக் கருதப்பெறுகின்ற இலத்தீன், கிரீக், ஹீப்ரு, சமஸ்கிருதம், தமிழ் ஆகிய நான்கும் குறிப்பிடத்தக்கன. பேச்சுவழக்கிலும் எழுத்துவழக்கிலும் அன்றுமுதல் இன்றுவரை அமைந்துவருகின்ற மொழியாகத் தமிழ் மொழிமட்டும்தான் உள்ளது என்பதைப் பிரிட்டானிக்கா என்ற கலைக்களஞ்சியம் குறிப்பிடுகிறது.

இன்று கிடைக்கின்ற நூல்களில் முதல் நூலாக முதன்மை நூலாகத் தொல்காப்பியம்அமைந்துள்ளது. அதற்கு முன்பும் பல நூல்கள் இருந்தன என்பதற்குத் தொல்காப்பியம் குறிப்பிடும் என்ப, மொழிப, என்மனார் புலவர், அறிந்திசினோரே, உணர்ந்திசினோரே, போன்ற சொற்களும் தொடர்களும், உணர்த்துகின்றன.

தமிழகத்தில் கடல்கோள்கள் பலநிகழ்ந்தன என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை. சோழநாட்டின் பழைய தலைநகராகிய பூம்புகார்ப்பட்டினம் கடலுள் இன்றும் உள்ளது. என்பதைக் கடல் அகழ் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இன்றுள்ள குமரிக்குத் தெற்கே 490 மைல் நிலப்பரப்பாக இருந்தது என்றும் அதனை லெமூரியாக்கண்டம் என்று உரைத்தனர் என்பதும் வரலாற்றுச் செய்தி. இறையனார் களவியல் உரையின் படி தென்மதுரையில் முதற்சங்கமும், கபாட புரத்தில் இடைச்சங்கமும், வடமதுரையில் கடைச்சங்கமும், இருந்தன என்பதைத் தொல்காப்பியமும், சங்கப் பாடல்களும் நமக்கு உணர்த்துகின்றன.

தமிழ் இலக்கியங்கள் மிகுந்த வளமுடையனவாக இருந்தால்தான் தொல்காப்பியம் போன்ற நூல் தோன்ற முடியும் என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை.

பொருளிலக்கணம் என்பது உலக மொழிகளில் தமிழுக்கு மட்டுமே உரியது என்பதை நாம் அறிவோம். பொருளதிகாரத்தில் செய்யுளியல் என்ற பகுதி இலக்கியங்களின் வகைகள் பற்றியும்

Koviloor Digital Library



அமைப்புகள் பற்றியும் விளக்குகின்ற ஒரு இயல். தொல்காப்பியத்தில் செய்யுளியல் தான் மிகுதியான நூற்பாக்களைக் கொண்டுள்ளது. 241 நூற்பாக்கள் உள்ளன. உலக இலக்கிய ஆய்வினைச் செய்ய முயன்றால் செய்யுளியல் போன்ற ஒரு அமைப்பு எந்த உலக மொழிகளிலும் இருப்பதாகத் தெரியவில்லை.

இலக்கியங்களை மூன்று நிலைகளில் ஆய்வு செய்யலாம். 1.இலக்கியத்தின் புறநிலை, அல்லது வடிவம், 2.இலக்கியத்தில் கூறப்பெறுகின்ற பொருள், 3.இலக்கியத்தை வெளியீடும் முறை. சான்றாகக் காப்பியம், புதினம், சிறுகதை, நாடகம் போன்ற இலக்கிய வகைகளுக்கு முதல் நிலையில் வடிவம் அமைகிறது. இரண்டாவது நிலையில் அது கூறுகின்ற பொருள். மூன்றாம் நிலையில் கூறுகின்ற முறை.

இலக்கியச் சுவையை மிகுவிப்பதற்காகப் பல முறைகளைப் பயன்படுத்தினர் புலவர். அவற்றுள் ஒன்று ஓசை நயம் அமைகிறது. ஓசை நயத்திற்குத் தொடை வகைகள் துணைபுரிகின்றன.

தமிழில் தொடைவகைகள் பதிமூன்றாயிரத்து அறுநூற்று தொண்ணூற்று ஒன்பது (13,699) என ஒரு நூற்பா வரையறை செய்கின்றது. அந்நூற்பா கணக்கியல் அடிப்படையில் அமைந்துள்ளது.

மெய்பெறு மரபின் தொடைவகை தாமே
ஐ ஈர் ஆயிரத்து ஆறு ஐஞ் ஞூற்றொடு
தொண்டு தலையிட்ட பத்துக்குறை எழுநூற்று
ஒன்பதுஃது என்ப உணர்ந்திசினோரே (தொல்.1358)

(என் -எனின்) மேற்சொல்லப்பட்ட தொடை யெல்லாம் விரிவகையான் உணர்த்துதல் நுதலிற்று.

(இ-ள்). வடிவுபெற்ற மரபினையுடைய தொடையினது பாகுபாடு பதின்மூவாயிரத்து அறுநூற்றுத் தொண்ணூற்றொன்பது என்றவாறு.

அவையாமாறு? மொழிமுதலாகிய எழுத்து உயிர் பன்னிரண்டு, இதன் கிளையெழுத்து ஒரோவொன்றிற்குப் பதினொன்று ளவாகலின் அவற்றை உறழ நூற்று முப்பத்திரண்டாம். 'கதநபம' என்றவற்றை உயிர் பன்னிரெண்டோ டுறழ அறுபதாம். அவ்வறுபதையும் முதற் றொடையாக்கிக் கிளையெழுத்தோடுறழ அறுநூற்றறுபதாம். சகரத்தின் முதலாகெழுத்து ஒன்பது அவற்றைக் கிளையெழுத்தோ டுறழ எழுபத்திரண்டாம். வகரத்தின் முதலாகெழுத்து எட்டு, அவற்றை கிளையெழுத்தோடு உறழ ஐம்பத்தாறாம். யகரத்தின் முதலாகெழுத்து ஒன்று, கிளை யெழுத்தில்லை. ஞகரத்தின்

Koviloor Digital Library



முதலாகெழுத்து மூன்று அவற்றைக் கிளையெழுத்தோ டுறழ ஆறாம். இவ்வகையினான் முதலெழுத்துத் தொண்ணூற்று மூன்றுங் கிளையெழுத்துத் தொளாயிரத்திரு பத்தாறும் ஆக மோனைத் தொடை ஆயிரத்தொருபத்தொன்பதாம். (1019).

எதுகையாமாறு. உயிரெழுத்து மொழியிடையில் வாராது. உயிர்மெய்எழுத்து இருநூற்றொருபத்தாறில் ஈவ்வருக்கம் ஒழிந்த எழுத்து இருநூற்று நாலினையுங் கிளை யெழுத்திினொடு உறழ இரண்டாயிரத்து நானூற்றுநாற்பத்தெட்டாம். இதனொடு ஒற்றுப் பத்தொன்பதுங் குற்றுகரம் ஆறுங்கூட்ட எதுகைத் தொடை இரண்டாயிரத்து நானூற்று எழுபத்துமூன்று பாகுபாடாம். (2473)

முரண்தொடை சொன்முரண் பொருண்முரன் என இரண்டாம். (2)

இயைபுத்தொடையாமாறு. உயிரெழுத்து மொழியீற்றின் கண் உயிர்மெய்யாகி வருதலின் அமையாகா, உயிர் மெய் இரு நூற்றொருபத்தாறில் இறுதிக்கண் வாராத நகரவுயிர்மெய் பன்னிரண்டும் அகரம் பதினேழும் இகரம் பதினாலும் உகரம் இரண்டும் எகரம் ஒன்றும் ஒகரம் ஒன்றும் இவை ஒழிந்து நின்ற எழுத்து நூற்றறுபத்தைந்தும் ஞணநமன யரலவழள என்னும் புள்ளியிறுதி பதினொன்றும் குற்றுகராஈறு ஆறும் ஆக இயைபுத்தொடை நூற்றெண்பத்திரண்டு பாகுபாடாம். (182)

அளபெடைத் தொடையாமாறு மொழிமுதலாகு முயிரளபெடை ஏழு, கதநபம என்னும் உயிர்மெய்யளபெடை முப்பத்தைந்து, சகர அளபெடை, ஐந்து வகரஅளபெடை ஐந்து யகர அளபெடை இரண்டு, இவை ஐம்பத்துநான்கில் உயிரளபெடை தனிநிலையாம். ஏனையவற்றை முதனிலை இடைநிலை இறுதிநிலை எனவுறழ நூற்றுநாற்பத்தொன்றாகும். ஒற்றுக்களுள் வல்லெழுத்தாறும் ரகமும் ழகரமும் ஒலித்து ஏனைய பதினொன்றும் அளபெடுக்க ஒற்றளபெடை பதினொன்றாம். இவ்வகையினான் அளபெடைத் தொடை நூற்றைம்பத்தொன்பது வகையாம். (159)

இவ்வகையினோடு இத்தொடை மூவாயிரத் தெண்ணூற்று முப்பத்தைந்து வகையாம். (3835).

பொழிப்புத் தொடையிற் கிளையெழுத்து வாராது.

மோனைப்பொழிப்புத் தொண்ணூற்றுமூன்று, எதுகைப் பொழிப்பு இருநூற்றிருபத்தொன்பது, முரண்பொழிப்பு இரண்டு, இயைபுப் பொழிப்பு நூற்றெண்பத்திரண்டு அளபெடையுள் ஒற்றளபெடை பொழிப்பாகி வாராமையின் உயிரளபெடைப் பொழிப்பு நூற்றுநாற்பத்தெட்டு. இவையெல்லாங் கூட்டப் பொழிப்புத்தொடை அறுநூற்றைம்பத்து நாலுவகையாம் (654).

தொ.உ.

Koviloor Digital Library



ஒருஉத்தொடையும் இவ்வகையினால் அறுநுற்றைம்பத்து நாலாம். (8556)

இனிச் செந்தொடையாமாறு மொழிமுதலாகும் எழுத்துத் தொண்ணூற்று மூன்று மற்றையடியினு மொத்து வருங்கால் அவை மோனையுள் அடங்குதலின் அவற்றை ஒழித்து ஏனையெழுத்துத் தொண்ணூற்றிரண்டோடும் உறழ எண்ணாயிரத் தைந்நூற் றைம்பத்தாறு வகையாம்.

இவ்வகையினால் தொடைவிகற்பம் பதின்மூவாயிரத்தறு நூற்றுத்தொண்ணூற்றொன்பதாம்.

உலக மொழிகள் எதிலும் இதுபோன்று தொடைவகைகள் உள்ளனவா என்பது ஐயமாக உள்ளது. கூர்ந்து நோக்கிய காரணத்தால் இத்தனை வகைகளைத் தெரியமுடிகிறது. அதோடு இலக்கியங்கள் மிக மிகுதியாக இருந்தால்தான் இவ்வாறு வரையறை செய்யமுடியும்.

முதல் எழுத்து ஒன்றுவது மோனை. (தொல்-1349).

அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர். – குறள். 427.

இரண்டாம் எழுத்து ஒன்றுவது எதுகை. (தொல்-1350).

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது. (குறள். 7)

சொல்லாலும் பொருளாலும் முரண்படுவது முரண். (தொல்-1352). - பொருள்.

இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்குவது. (குறள். 99)

சொல்

செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்த செயல். (குறள். 637)

அடிதொறும் ஈற்றொழுத்து ஒன்றிவரின் இயைபுத்தொடை (தொல்-1353).

மலையிடைப்பிறவா மணியே யென்கோ
அலையிடைப்பிறவா வமுதே யென்கோ (சிலம்பு 2;77, 78)

ஓசைக்காக அளபு மிகுதியாக வருவது அளபெடைத் தொடை (தொல்-1354).

கடாஅ உருவொடு கண்ணஞ்சாது யாண்டு
உகஅமை வல்லதே ஒற்று. (குறள். 585)

ஓர் சீர் இடையிட்டு முதற்சீரும் மூன்றாம் சீரும் எழுத்துப் பொருந்தி வந்தால் அது பொழிப்புத் தொடை (தொல்-1355).

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்கம்.... (குறள். 6)

Koviloor Digital Library



இரண்டு சீர் இடையிட்டு முதற்சீரிலும் நான்காம் சீரிரும் மோனை முதலாயின வரத் தொடுப்பின் அது ஒருஉத் தொடை (தொல்-1356).

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து........ (குறள். 28)

மேலே கூறப்பெற்றுள்ள தொடையும் தொடை விகற்பங்களும் போலன்றி வேறுபட்டு இயல்பாக தொடுக்கப்பட்டியலும் அமைப்புக்களைச் செந்தொடை என்று கூறுவர். (தொல்-1357).

முரண்

1. இணை

உடையார்[1] முன் இல்லார்[2] போல் ஏக்கற்றுங் கற்றார்
உடையரே கல்லா தவர். குறள்–395

2. பொழிப்பு

செல்[1] விருந்து ஓம்பி வரு[3] விருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு. – குறள்– 86

3. ஒருஉ

அடக்கம்[1] அமரருள் உய்க்கும் அடங்காமை[4]
ஆரிருள் உய்த்துவிடும். – குறள்–121

4. கூழை

உது[1]க்காண் அது[2]வே யிது[3]வென மொழிகோ. . . –குறுந் 191:1

5. மேற்கதுவாய்

வெள்[1]வளைத் தோளும் சேய[3]ரிக் கரு[4]ங்கணும்.....–காரிகை உரை
கரு[1]ங்கட் கருணைச் செந்[3]நெல் வெண்[4]சேறு. – நற் 367:3

6. கீழ்க்கதுவாய்

காலையும்[1] பகலும்[2] கையறு மாலையும்[4] . . . .– குறு 32:17. முற்று
இன்றே[1] சென்று[2] வருவது[3] நாளை[4] – குறு 189:1

பேராசிரியர் தொடைவகைகள் பதின்மூவாயிரத்து எழுநூற்று எட்டு (13,708) என்று கூறுவார்.

நச்சினார்க்கினியர் தொடைவகைகள் பத்தொன்பதாயிரத்து இருநூற்று தொண்ணூற்று ஒன்று (19,291). என்று கூறுவார். அதற்கு விளக்கங்களும் நச்சினார்க்கினியர் தருகிறார்.

அடுத்த நூற்பாவில், தெரிந்தனர் விரிப்பின் வரம்பில ஆகும். என்று தொல்காப்பியர் கூறுகிறார். இதனால் தொடைவகைகளுக்கு எல்லைஇல்லை என்று தெரிகிறது.

தமிழ் இலக்கியங்கள் மிகப் பல்கி பெருகி இருந்த காரணத்தால்தான் தொடைவகைகள் 13,000த்துக்கு மேல் என்று எல்லா உரையாசிரியர்களும் தெளிவுபடுத்துகின்றனர். அதோடு செந்தொடை என்பது வரையறை அற்று வருவது. அதற்கு மிகுதியான இலக்கியங்கள் இருந்தால்தான் விளக்கங்கள்

Koviloor Digital Library



தரமுடியும் இந்த ஒரு நூற்பாவை அடிப்படையாக ஆழமாக ஆய்வுசெய்து பார்த்தால் தமிழ் இலக்கிய வகைகள் குறைந்தது ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மிகுந்த வளமுடையதாக இருந்திருக்கவேண்டும் என்று தோன்றுகிறது.

தொல்காப்பியம் போன்று ஒரு இலக்கண நூல் தோன்றுவதாக இருந்தால் தமிழ் இலக்கியத்தின் காலம் அதற்கு முன்பு ஐந்தாயிரம் ஆண்டுகள் பழமையுடையதாக வளமையுடையதாக இருத்தல் வேண்டும் என்பதில் ஐயமில்லை. அதற்கு இந்த நூற்பாவே எடுத்துக்காட்டாக அமைகிறது.

ஓசை அடிப்படையில் இலக்கியங்களைச் சுவைத்து தமிழர்கள் மகிழ்ந்தனர் என்பதற்கு இருபது வண்ணங்களைக் கூறுகிறார். தொல்காப்பியர்.

அவை 1. பாஅ வண்ணம், 2. தாஅவண்ணம், 3. வல்லிசை வண்ணம், 4. மெல்லிசை வண்ணம். 5. இயைபு வண்ணம், 6. அளபெடை வண்ணம். 7. நெடுஞ்சிர் வண்ணம். 8. குறுஞ்சீர் வண்ணம். 9. சித்திர வண்ணம், 10. நலிபு வண்ணம். 11. அகப்பாட்டு வண்ணம். 12. புறப்பாட்டு வண்ணம். 13. ஒழுகு வண்ணம். 14. ஒரூஉ வண்ணம். 15. எண்ணு வண்ணம். 16. அகைப்பு வண்ணம். 17. தூங்கல் வண்ணம், 18. ஏந்தல் வண்ணம். 19. உருட்டு வண்ணம், 20. முடுகு வண்ணம் என இருபது வண்ணங்களின் பெயர்களைத் தருகிறார். அவை அனைத்தும் ஓசை அடிப்படையில் அமைந்தன. சான்றாக

அறிவு அறைபோகிய பொறி அறு நெஞ்சத்து
இறைமுறைபிழைத்தோன் வாயிலோயே! (சிலம்பு– 20; 25, 26)

என்ற வல்லிசை வண்ணத்தைச் சான்றாக்கலாம். இதுபோன்று எல்லா வண்ணங்களும் ஓசை இனிமையோடு பொருள் ஆழமும் உடையவை.

## பயன் கொண்ட நூல்கள்

1. தொல்காப்பியம் - தெளிவுரை - ச.வேசுப்பிரமணியன்- மணிவாசகர் பதிப்பகம். ஆறாம் பதிப்பு - 2003.
2. தொல்காப்பியம்-செய்யுளியல்-உரைவளம், க.வெள்ளைவாரணன், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம். -1989.

Koviloor Digital Library

## 3. தொல்காப்பியக் களவியலும் திருக்குறள் களவியலும்

மு.பழனியப்பன்,
புதுக்கோட்டை.

எழுத்து, சொல், பொருள் என்ற முப்பகுப்புடைய தொல்காப்பியம் செய்யுளுக்கான மிகச்சிறந்த பாடுபொருட்களாக அகம், புறம் என்ற இரண்டைக் கொள்ளுகின்றது. தொல்காப்பியம் வலியுறுத்திய இப்பாடுபொருட்களை அப்படியே பின்பற்றி சங்க இலக்கியங்கள் பாடப்பெற்றுள்ளன. இதன் தொடர்வாய் படைக்கப்பெற்ற திருக்குறள் தன் பாடுபொருட்களை முன்னிலிருந்து சற்று விலக்கி மூன்றாக வகுத்துக்கொள்ளுகின்றது. அறம் பொருள் ஆகிய இரண்டும் புறத்தடிப்படையில் அமைந்த திருக்குறள் பாடுபொருட்களாகும். தொல்காப்பியர் கண்ட பொருளும், திருவள்ளுவர் கண்ட பொருளும் முற்றிலும் வேறுபட்டன என்பது இங்குக் கருதத்தக்கது.

புறத்தைப் புதுமைப்படுத்திக் கொண்ட வள்ளுவரால் அகத்தைப் புகுத்துப் பகுக்க இயலவில்லை. அகப்பாடுபொருளை இன்பம் என்ற ஒன்றாகவே கண்டு, அவ்வின்பத்தையும் தொல்காப்பிய வழி களவு, கற்பு எனவே வள்ளுவர் அமைத்துக் கொண்டதன்படி சில செய்திகளைப் பெறமுடிகின்றது. தொல்காப்பியராலும் சங்க இலக்கியங்களாலும் நயத்தக்க முறையில் கையாளப் பெற்ற அகப்பாடு பொருளின் நிலைத்த தன்மை சான்றோர் நெறியைப் பொன்னே போல் போற்றும் சீலத்தால் வள்ளுவரால் பேணப்பெற்றுள்ளது. அகப்பாடுபொருளைப் புகுக்கவும் பகுக்கவும் இயலாத நிலையில் எக்காலத்திற்கும் மாறுபடாவகையில் அடிமுடிகண்ணுற்ற நிலையில் தொல்காப்பியர் இலக்கணம் வரையறுத்துள்ளார். முற்றிலும் உணர்த்தப்பெற்ற இப்பாடுபொருளைப் பின்பற்றிச் செல்ல மட்டுமே இயலும் என்ற நிலையில் வள்ளுவர்

Koviloor Digital Library



இப்பாடுபொருள் குறித்த படைப்பாக்கத்தில் ஈடுபட்டுள்ளார் என்பது இதன்மூலம் தெளிவாகின்றது.

இருப்பினும் தொல்காப்பியம் கூறும் அகப்பொருள் அடிப்படைகளான முதல், கரு, உரிப்பொருள்களில் உரிப் பொருளைச் சரியான அளவிலும், கருப்பொருள்களை ஓரளவிற்கும் முதற்பொருளை விடுத்தும் அகப்பாடுபொருள் திருக்குறளில் கையாளப் பெற்றுள்ளமை, தொல்காப்பியத் தினின்று வேறு பட்டமைவதாக உள்ளது. உரிப்பொருள் அகப்பாடல்களின் உயிர் நிலையானது என்பதாலும், முதற்பொருள், கருப்பொருள்களை விரித்துக்கூறுமளவிற்குக் குறளின் அடிவரையறை இடம் தராமையாலும் மேற்கண்ட வேறுபாடுகள் வள்ளுவரால் அமைக்கப் பெற்றுள்ளன.

அதிலும் குறிப்பாக புணர்தல், பிரிதல் என்ற இரண்டு உரிப்பொருள்களின் அடிப்படையில் மட்டுமே இன்பத்துப்பால் அமைக்கப் பெற்றுள்ளமை நோக்கத்தக்கது. "இது புணர்ச்சி, பிரிவு என இருவகைப்படும். ஏனை இருத்தல், இரங்கல், ஊடல், என்பனவோ எனின்.. அவ்வாறே அவற்றைப் பிரிவின்கண் அடக்கினார் என்க" என்று வள்ளுவரின் இரு உரிப்பொருள் ஏற்புக்கு அமைதி காண்கின்றார் பரிமேலழகர்.

களவியல் இயல் அமைப்புமுறை

தொல்காப்பிய பொருளதிகாரத்துள் அகத்திணையியல், புறத்திணையியல் ஆகிய இரண்டிற்கும் அடுத்த நிலையில் மூன்றாவதாக அமைவது களவியல் ஆகும். இது ஐம்பத்தொரு நூற்பாக்களைக் கொண்டது. காதலர்கள் மணத்திற்கு முன்பு கூடி இன்புற்று வாழும் முறையை உரைப்பது ஆகும். இவ்வியல் இயற்கைப்புணர்ச்சி இடந்தலைப்பாடு பாங்கற் கூட்டம் பாங்கியர் கூட்டம் என்று நான்காக விரிகின்றது.

திருக்குறள்-களவியல் இன்பத்துப்பாலின் முதல்பகுதியாக அமைகின்றது. அகப்பொருளைப் பாடவந்த வள்ளுவர் அகத்திணை மரபுகளை விளக்கும் முன்னுரையான இலக்கணச்செய்திகளை விடுத்து. நேரடியாக அகப்பொருளை இலக்கியமாக்க முனைந்துள்ளார். இன்பத்துப்பாலின் முதல் ஏழு அதிகாரங்கள் களவிற்குரியன. அடுத்த பதினெட்டு அதிகாரங்கள் கற்பிற்குரியன. அதாவது தொல்காப்பியர் உணர்த்த முயன்ற ஐம்பத்தொரு களவியல் நூற்பாச் செய்திகளை எழுபது குறட்பாக்களில் வள்ளுவர் படைக்க முயன்றுள்ளார்.

தொல்காப்பியக் களவியல் செய்திகள் அனைத்தையும் உள்வாங்கி வள்ளுவர் தம் களவியலை அமைத்துள்ளமை அவரது

Koviloor Digital Library



களவியலைக் கற்கையில் தெரியவருகின்றது. களவியல் தொடர்பாக அகத்திணையியல். பொருளியல் ஆகியவற்றில் சுட்டப்பெறும் கருத்துக்கள் பெரும்பாலும் வள்ளுவரால் சுட்டப்பெறவில்லை. தொல்காப்பியக் களவியலுக்கு இணையான, மாறாத இலக்கியத்தைப் படைக்கவே வள்ளுவர் முனைந்துள்ளார் என்பது கருதத்தக்கது.

**களவு –வரைவிலக்கணம்**

இன்பம், பொருள், அறம் என்ற முப்பொருள்கள் வழிப்பட்ட, அன்பொடு புணர்ந்த ஐந்திணைகளுள் காமக்கூட்டம் என்பது எண்வகை மணங்களுள் நல்லயாழ்ப்பாணர் கூடும் காமக் கூட்டத்தின் இயல்பாய் அமைவது. களவு (தொ.க.1) என்பது தொல்காப்பியம் வகுத்திருக்கும் களவுக்கான வரைவிலக்கணமாகும். இலக்கியம் செய்வோர் மீண்டும் இலக்கணம் வலியுறுத்தல் வேண்டா என்ற கொள்கையராய் வள்ளுவர் நின்றமையால் இதற்கான குறளை வள்ளுவர் படைத்திலர் போலும்.

**காட்சி**

அடுத்த நூற்பா காட்சிக்கான காரணத்தை விளக்குகின்றது. “ஒன்றே, வேறே என்றிரு பால்வயின், ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்பது காட்சி” (தொ.க.2) என்பது தொல்காப்பிய நெறி. “காட்சிக்குக் காரணம் பால் எனப்படும் நல்வினை, இது பிறவி தோறும் வருவது என்பது உரையாசிரியர் காட்டியவழி” இக்கருத்தை, இதே நிலையில் ஊழ் அதிகாரத்துள் இலக்கியமாக்கியுள்ளார் வள்ளுவர். “பரியினும் ஆகாவாம் பால் அல்ல உய்த்துச் சொரியினும் போகா தம்” (தி.376) என்ற குறளில் பாலது ஆணை விளக்கம் பெறுகின்றது.

**ஐயம்**

தலைவன் கண்ட தலைவியது காட்சி அவனுக்கு ஐயத்தை ஏற்படுத்தி நிற்கின்றது. அவ்வையம் சிறந்ததாயின் காமக் கூட்டத்திற்குச் சிறப்பு இழிந்ததாயின் காமக்கூட்டத்திற்கு இழிவு.” (தொல்.க.3) என்பது ஐயத்துக்கான தொல்காப்பிய வரையறையாகும். “அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கணம்குழை மாதர்கொல் மாலும் என் நெஞ்சு” (தி.108) என்பது வள்ளுவர் அமைத்த களவியலின் ஐயம் சார்ந்த முதல் குறட்பா. தொல்காப்பிய களவியலுக்கும், திருக்குறள் களவியலுக்கும் முதல் ஒப்புமைப்பாலமாக அமைந்த பாடல் ஆகின்றது.

**தெளிவு**

தோன்றிய ஐயத்தைத் தலைவன் தலைவியின் தோற்ற இயல்பு கொண்டு நீக்கிக் கொள்வது தெளிவாகும். “வண்டே, இழையே

Koviloor Digital Library



வள்ளிபூவே/ கண்ணே அலமரல் இமைப்பே அச்சமென்று / அன்னவை பிறவும் ஆங்கண் நிகழ/ நின்றவை களையும் கருவி என்ப" (தொ.க.4) என்ற நூற்பாவிற்கு ஏற்ப இலக்கியம் கண்டுள்ளார் வள்ளுவர். அவை பின்வருமாறு-

இழை அணிகலன் கொண்டு தெளிவது இழை ஆகும். "கடாஅக் களிற்றின்மேல் கண்படாம்மாதர் படாஅ முலைமேல் துகில்'' (தி.1087) என்று அணியும் அணி உவமை இங்கு தலைவனைத் தெளிவுபடுத்துகின்றது.

அச்சம் 'கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல் நோக்கம் இம்மூன்றும் உடைத்து" (தி.1085) என்ற குறட்பா தலைவியின் கண்தரும் அச்சம் முதலான மெய்ப்பாடு கருதி தலைவனைத் தெளிவுபடுத்துவதாக உள்ளது.

கண் கண் இமைத்தல் அலமரல் முதலியன தலைவியை மானிடப் பெண்ணாக எடுத்துரைப்பன. 'கொடும்புருவம் கோடாமறைப்பின் நடுங்கஞர் செய்யல மன்இவள் கண்"(தி.1086) "கண்டார் உயிர்உண்ணும் தோற்றத்தால் பெண்தகைப் பேதைக்கு அமர்த்தன கண்" (த.1084) 'உண்டார்கண் அல்லது அடுநறாக் காமம்போல் கண்டார் மகிழ்செய்தல் இன்று" (தி.1090) ஆகிய குறட்பாட்கள் கண் கொண்டு தெளிவுபடுத்துவன.

### குறிப்பறிதல் கருவி

ஐயம் தெளிவுற்றபின், தலைவியின் குறிப்பைத் தலைவன் அறிய விழைவான், அவ்வாறு அவன் விழைகையில், தலைவியும் அக்குறிப்பு வெளிப்படுத்தி நின்றால் களவு இனிது தொடக்கம் பெறும். தலைவன், தலைவியர் இருவரது வேட்கையும்-ஒருவரோடுஒருவரை அறிவாலும், அவாவாலும் இணைவிக்கக் கூடியதாக அமைந்துவிட்டால் அது காமஉணர்வைக் கூட்டியுரைக்கும் குறிப்புரையாகிவிடுகின்றது. (தொ.க.5) இச்சூழலுக்கு ஏற்ற இனிய கவிதையை வள்ளுவர் பின்வருமாறு படைக்கின்றார் ''நோக்கினாள் நோக்கு எதிர்நோக்குதல் தாக்கணங்கு தானைக் கொண்டன்ன துடைத்து" (தி.1082) நோக்கம் இரண்டும் கூட்டி உரைக்கும் குறிப்புரைக்குரிய குறளாக இக்குறள் விளங்குகிறது.

### குறிப்பறிந்தவழி நிகழ்வன

தலைவன், தலைவியர் இருவரும் ஒருவர் வேட்கையை ஒருவர் அறிந்த பொழுதிலும், அறிந்தபின்னும் நிகழும் நிகழ்வுகளைக் காட்ட வள்ளுவர் தனி அதிகாரத்தையே படைத்துள்ளார். குறிப்பு அறிதல் என்ற தலைப்புடைத்தான இவ்வதிகாரம்" குறிப்பே குறித்தது கொள்ளுமாயின் ஆங்கவை நிகழும் என்மனார் புலவர்" (தொ.க.6) என்ற நூற்பாவிற்கு இலக்கியமாகின்றது.

Koviloor Digital Library



தலைவன் தலைவியர் இயல்பு

தொல்காப்பியர் மேற்காட்டிய நூற்பாவினுக்கு அடுத்து. தொடர்ந்து களவு நிகழ்ச்சிகளை விவரிக்காமல் தலைவன், தலைவியர் ஆகியோர் இயல்பைக் காட்டிச் சற்று இடையீடுபடுத்தியுள்ளார். இதேநிலை வள்ளுவத்திலும் உள்ளமை குறிக்கத்தக்கது. “பெருமையும் உரனும் ஆடூஉமேன” (தொ.க.8) “அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல் நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப” (தொ.க.8) என்ற இலக்கண வரையறைகளுக்கு ஏற்ப வள்ளுவர் இலக்கியம் கண்டுள்ளார். “ஒள்நுதற்கோ உடைந்ததோ ஞாட்சினுள் நண்ணாரும் உட்கும்என் பீடு” (தி.1088) என்பது தலைவனின் வீரத்தை உரசிக்காட்டும் குறட்பாவாகும். “பிணைஏர் மடநோக்கும் நாணும் உடையாட்கு அணி எவனோ ஏதில தந்து’ (தி.1089). இது தலைவியின் மடம், நாணம் குறித்த செய்திகளை வெளிப்படுத்தும் குறட்பாவாகும். இவ்விரு குறட்பாக்களும் களவியலின் முதல் அதிகாரத்துள் தொக்கி நின்றமை கருதத்தக்கது.

இயற்கைப்புணர்ச்சிக்குமுன் நிகழ்வன

தொல்காப்பியத்துள்ளும், திருக்குறளுள்ளும் சற்று இடையீடுபட்ட களவு இலக்கணம் இனித்தொடர்கிறது- “வேட்கை ஒருதலையுள்ளுதல், மெலிதல், ஆக்கஞ்செப்பல், நாணுவரை இறத்தல், நோக்குபவையெல்லாம் அவையே போறல், மறத்தல், மயக்கம், சாக்காடு, முதலியன இயற்கைப்புணர்ச்சிக்குமுன் நிகழும் நிகழ்வுகளாகத் தொல்காப்பியத்துள் சுட்டப்பெற்றுள்ளன” (தொ.க.9) “வேட்ட பொழுதின் அவை அவை போலுமே தோட்டார் கதுப்பினாள் தோள்” (தி.1105) என்ற குறள்-நோக்குபவை எல்லாம் அவையே போறலுக்கு இலக்கியமாகின்றது. மற்றவை குறளுள் இல்லை.

களவில் தலைவன் கூற்று

இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், பாங்கியர் கூட்டம் என்ற நான்கும் நிகழும் காலத்துத் தலைவன் கூற்று நிகழ்த்துவதுண்டு. அவற்றைத் தொகுத்து உரைப்பதாக தொல்காப்பிய களவியல் பதினொன்றாம் நூற்பா அமைகின்றது. மெய்தொட்டு பயிறல் முதலாக மடல்மாக்கூறுதல் ஈறான தலைவன் கூற்று நிலைகளை உள்வாங்கித் திருவள்ளுவர் இனிவரும் திருக்குறள் களவியல் பகுதிகளைச் செய்துள்ளார். இவற்றைத் தொல்காப்பியம் கூறும் தலைவன் கூற்றுப் பகுதிகளுக்கான இலக்கியமாக அமைத்துக் கொள்ள இயலும்.

Koviloor Digital Library



இயற்கைப்புணர்ச்சி–தலைவன் கூற்று

1. மெய்தொட்டுப்பயிறல்- 'கண்டு, கேட்டு, உண்டு. . . " (தி.1101) "உறுதோறும். உயிர்தளிர்ப்பத் (தி.1106)"

2. கூடுதல் உறுதல் - "வீழும் இவர்க்கு இனிதே. . . . " (தி.1108)

இடந்தலைப்பாடு –தலைவன் கூற்று

1. பெற்றவழி மகிழ்ச்சி - "பிணிக்கு மருந்து-- " (தி.1102)

2. பிரிந்தவழி கலங்கல். "நீங்கின் தெறூஉம் குறுங் . . " (தி.1104)

பாங்கர் கூட்டம்

1. வாயில் பெட்பினும். "தாம் வீழ்வார் மென்தோள், . . " (தி.1103) "தம்இல் இருந்து. . . ."(தி.1107) அறிதொறும் அறியாமை.." (தி.1110)

பாங்கியர் கூட்டம்

1. மடலேறுதல் "நாணொடு நல்லாண்மை. . . " (தி.1133) "அறிகிலாரெல்லாரும்.. . . . " (தி.1139)

மேலும், நாணுத்துறவுரைத்தல் என்ற அதிகாரத்தில் இடம் பெறும் தலைவன் கூற்றுக் குறட்பாக்கள் அனைத்தும் இவ்வழிச் சேர்வனவே.

தோழியர் கூட்டத்துடன் கூற்று நிகழ்த்தும் இன்னும் சில இடங்களும், தொல்காப்பியத்தில் இதன்பின்னர் சுட்டப்பெற்றுள்ளன. "பண்பிற் பெயர்ப்பினும், பரிவுற்று மெலியினும், அன்புற்று நகினும், அவட்பெற்று மலியினும், ஆற்றிடை யுறுதலும், அவ்வினைக்கு இயல்பே (தொ.க.12) இந்நூற்பாவிற்கான இலக்கியங்களும் திருக்குறளில் உள்ளன.

1. பண்பிற்பெயர்ப்பினும் 1113, 1120 எண்ணுடைய குறட்பாக்கள்,

2. பரிவுற்றுமெலிதல் - "தொடலைக்குறுந்தொடி. . . ' (தி.1135)

3. அவட்பெற்று மகிழ்தல்.

அ. பகற்குறி "காணிற்குவளை. . ' (தி.1114) மேலும் 1111, 1112, 1115 ஆகிய குறட்பாக்களும் இதற்கு உரியன.

ஆ. இரவுக்குறி - 1116, 1117, 1118, 1119, ஆகிய குறளெண்கள் இரவுக்குறியில் தலைவியைப் பெற்று மகிழ்ந்தன.

தலைவன், தலைவி கூற்று

அடுத்த நூற்பா தலைவன், தலைவியர் இருவர்க்கும் ஒப்பாய் அமைந்த கூற்றுக்களை அடுக்கி உரைக்கின்றது. இருவகைக் குறிபிழைப்பு ஆகிய இடத்து முதல் புரைபட வந்த மறுத்தல் ஈறாக அமைந்த அவை தலைமக்களுக்குப் பொதுவான கூற்றுக்களாகும். நாணு நெஞ்சலைப்ப விடுத்தற் கண்ணும் - என்ற நிலையில் புனைந்துரையாகவும். மெய்யாகவும், தலைவன் தலைவியின் நாணம் கருதி கூற்று உரைத்தல் தொல்காப்பிய மரபு. இந்நிலைக்குக் "களித்தொறும் கள்ளுண்டால், (தி.1145) 'ஊரவர்

Koviloor Digital Library


கௌவை எருவாக. . . " (தி.1147) ஆகிய இரு குறட்பாக்கள் இலக்கியமாகின்றன.

தலைவி கூற்று நிகழ்த்துமுன் நடைபெறுவன.

தலைவி-அச்சம், மடம், நாணம், உடையவள், ஆதலின் தன் வேட்கையை அவள் குறிப்பினும், இடத்தானும் மட்டுமே புலப்படுத்துவாள் வெளிப்படப் புலப்படுத்தாள் (தொ.க.18) அச்சம் நீங்கினும் நாணும் மடனும் தலைவியை விட்டு நீங்கா (தொ.க.19) தலைவியின் இவ்வியல்புகளை வள்ளுவர் களவியலின் முதல் அதிகாரத்தில் காட்டிவிடுகின்றார்.

தலைவிகூற்று

தொல்காப்பியம் களவுக்காலத்தில் தலைவி கூற்று நிகழ்த்தும் இடங்களைப் பலபட விரித்துரைக்கின்றது. மறைந்தவற் காண்டல் முதலாக அவன்வயிற் பரத்தை ஈறாகக் கூறப்பெற்ற அனைத்தும் தலைவிக்குரிய தனிக்கூற்றின. இருப்பினும் வள்ளுவர் தலைவியை வெளிப்படையாகப் பேசும் குணத்தினளாகப் படைக்கவில்லை. வள்ளுவரின் களவியல் தலைவி மிகக் குறைந்த இடங்களிலேயே கூற்று நிகழ்த்துகிறாள். அவை ஏறக்குறைய எட்டு என்பர். அவையும் தலைவனைப் பிரிந்தவழி கலங்கியவையே. 1126, 1127, 1128, 1129, 1130, 1146, 1147, 1149 ஆகிய எண்ணுடைய குறட்பாக்கள் காதற் சிறப்புரைத்தல், அலர் அறிவுறுத்தல் என்னும் அதிகாரங்களின் பிற்பகுதியின. இவையே தலைவி பேசிய இடங்களாக வள்ளுவர் படைத்தன. வள்ளுவத் தலைவி களவியலுள் மிகக் குறுகிய அளவிலேயே தொல்காப்பியத்தை நோக்குகையில் காட்டப்பெற்றுள்ளாள் என்பது இதன்மூலம் தெளிவாகின்றது.

தோழிகூற்று

களவியலில் தோழி குறிப்பிடத்தக்க இடம் பெறுபவள். இவள் தலைவன், தலைவியர்தம் கூட்டத்திற்கு உறுதுணையானவள். இவள் பேசக்கூடிய இடங்களையும் தொல்காப்பியம் பட்டியல் இடுகின்றது. "நாற்றமும். . . " எனத் தொடங்கும் களவியல் இருபத்துநான்காம் நூற்பா தோழி கூற்றினை அடுக்கியுரைப்பதாகும். ஆனால் வள்ளுவர் தோழிக்கும், தலைவிக்குத் தந்த அதே அளவு இடத்தையே வழங்கியுள்ளார்.

"எண்ணமும் பன்னகை கண்ணிய வகையினும்" என்ற தோழிக்கூற்றுப் பகுதிக்கு வள்ளுவர் இலக்கியம் படைத்துள்ளார். எண்ணுதற்கரிய பல நகையாடல்களைத் தலைவனிடம் கூறும் நிலையில் தோழி கூற்று நிகழ்த்துவாள் என்ற முறையில் வள்ளுவர் அலர் அறிவுறுத்தல் என்ற அதிகாரத்தைப் படைத்துள்ளார். அக்குறட்பாக்கள் அனைத்தும் இவ்வகைக் கூற்றினவே. இக்கூற்று தவிர பிறவற்றை வள்ளுவர் தவிர்த்துள்ளார்.

Koviloor Digital Library



பாங்கன், செவிலி, தலைமயன், தந்தை ஆகியோரின் இயல்பு, கூற்றுநிலை ஆகியனவற்றையும் தொல்காப்பியம் விரித்துரைத்த அளவிற்கு வள்ளுவர் எடுத்துரைக்க முயலவில்லை. தொல்காப்பிய வழிப்பட்ட களவியல் செய்திகளை எடுத்தாளும் போக்கைத் தோழி கூற்றோடு வள்ளுவர் நிறுத்திக் கொண்டுவிட்டார். களவுவழிப்பட்ட வரைவினை அவர் எடுத்துரைக்காமல் கற்பியல் செய்திகளை எடுத்தாளச் சென்றுவிட்டமை தொல்காப்பிய அடிப்படையில் சற்று இடைவெளி தருவதாக உள்ளது.

இப்போக்கு ஒருபுறம் இருக்க தலைவன் கூற்றில் புதுமை படைக்க வள்ளுவர் முனைந்துள்ளார் என்ற செய்தி இங்கு கவனிக்கவேண்டியதாகும். காதல் சிறப்புரைத்தல் அதிகாரத்தில் இடம்பெறும் 1121, 1122, 1123,1124, 1125 ஆகிய தலைவன் கூற்றுப்பாக்கள் தொல்காப்பியர் அடிப்படையில் அமையாப் புதுமையின. இவற்றை வள்ளுவர் இலக்கியச் சுவைகருதியோ, அல்லது காதல் சிறப்பு உரைக்கக் கருதியோ பாடியிருக்கவேண்டும்.

**முடிவுகள்**

வள்ளுவர், தொல்காப்பியர் தம் களவியல் கருத்துக்களை அப்படியே எடுத்துக்கொண்டு அவற்றினுக்கான இலக்கியம் படைக்க விழைந்துள்ளார் என்பது உறுதி. களவியல் என்ற பாடுபொருளைப் பாடத்தலைப்பட்ட வள்ளுவர், தலைப்பு முதலாக பாடுபொருள் வரை அனைத்திலும் தொல்காப்பியரைப் பின்பற்றியுள்ளமை தொல்காப்பியத்தைப் பெருமைப் படுத்துவதாக உள்ளது. அறம், பொருள், ஆகிய பாடுபொருள்களில் புதுமை படைத்த வள்ளுவரின் ஆற்றல் களவியலைப் பொறுத்தவரையில் முன்னோர் மொழியைப் பின்பற்றிச் செல்லல் என்னும் வகைத்தாய் அமைந்துள்ளது.

ஏறக்குறைய தொல்காப்பியக் களவியலில் இடம்பெற்றுள்ள முதல் இருபத்து நான்கு நூற்பா வரையான செய்திகளை வள்ளுவர் எடுத்துக்கொண்டு திருக்குறள் களவியலைப் படைக்க முற்பட்டுள்ளார். மேலும், இச்செய்திகளைக் கூறிட அவர்க்கு ஏறக்குறைய எழுபது குறட்பாக்கள் தேவைப்பெற்றுள்ளன.

தொல்காப்பியக் களவியலில் இடம்பெறும் செவிலி, நற்றாய், தந்தை, உடன்பிறந்தார் முதலானவரின் இயல்பும் கூற்றும் இங்குக் காட்டப்படவில்லை. தாய், தந்தை முதலானவர்க்கு முன்பகுதிகளில் இலக்கணம், இலக்கியம் படைத்தமையால் வள்ளுவர் இங்கு சுட்டாமல் விட்டிருக்கலாம். மேலும், களவியல் என்பதை வள்ளுவர் முழக்க தலைமக்கள்சார்ந்த நிலையில் அமைத்திருப்பதாலும் மற்றவரது இயல்புகளை இங்குக் கூறவில்லை.

Koviloor Digital Library



குறிப்பறிதல், நாணுத்துறவுரைத்தல், அலர் அறிவுறுத்தல் ஆகிய அதிகாரங்கள் முறையே தொல்காப்பியம் சுட்டும் குறிப்பறிதல், தோழியர் கூட்டத்துடன் மடல் குறித்துப்பேசல், பல நகையாடல்களைத் தோழி தலைவனிடம் கூறுதல் என்ற நிலைகளில் விரிவான இலக்கியம் உரைக்கப் பெறுவனவாக வள்ளுவரால் படைக்கப்பெற்றுள்ளன.

திருக்குறள் களவியலில் இடம்பெறும் தலைவன், தலைவி ஆகியோர் தொல்காப்பியர் சுட்டும் இலக்கண வரையறைப்படி அமைந்தவர்களே!

திருக்குறள் களவியலில் தலைவன் கூற்றுக்குத் தரப்பெற்ற அளவு, இடம் தலைவி, தோழி ஆகியோர்க்குத் தரப்பெறவில்லை.

திருக்குறள் களவியலில் இடம்பெறும் தலைவன் கூற்றுப்பாக்கள் அனைத்தும் தொல்காப்பியம் காட்டும் தலைவன் கூற்றுகளில் அடங்கத்தக்கன.

வள்ளுவர் தொல்காப்பிய களவியல் வழியில் மாறுபடாது சென்றுள்ளார் என்பது முடிந்த முடிபாகின்றது.

**கட்டுரை தொடர்பாக சில கருத்துக்கள்**

இனிவரும் காலங்களில், தொல்காப்பியத்திற்கு உரைகாண முயல்வோர்- களவியலுக்கு இலக்கியம்வேண்டும் நிலையில், திருக்குறள் பாக்களை முழுதும் எடுத்தாள முற்படவேண்டும். திருக்குறளுக்கு உரையெழுதுவோர் களவியலுக்கு உரையெழுதும்போது- தொல்காப்பியக் களவியலை அடியொற்றி துறை பிரித்து உரை காண முயலவேண்டும். இதன்மூலம் தொல்காப்பியத்தின் முதன்மையும், முடிவாகும். தன்மையும் வெளிப்படும். இதன் மூலம் திருக்குறள் வடமொழி சாரத் தமிழ் வழி நூலே என அரிதியிட்டு உரைக்கமுடியும்.

## பயன்கொண்ட நூல்கள்


1. சிவலிங்கனார், ஆ (தொ/உ.ஆ)., தொல்காப்பியம் களவியல் உரைவளம், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, 1995,
2. ச.வேசுப்பிரமணியன் (உ.ஆ), திருக்குறள் நயவுரை, மெய்யப்பன் தமிழ் ஆய்வகம், சிதம்பரம் 2001.
3. தண்டபாணிதேசிகர், ச. திருக்குறள், உரைவளம்-காமத்துப்பால், தருமபுர ஆதீனம், தருமபுரம், 1952.
4. மு. பழனியப்பன். பெண்ணியவாசிப்பு. காவ்யா, சென்னை- 2003.

Koviloor Digital Library

## 4. தொல்காப்பியம் கூறும் உள்ளுறை

க.மலர்விழி
ஈரோடு

சங்க இலக்கியங்களில் முக்கியமாகக் கருதப்படுகின்ற இரு கூறுகள் காதலும் வீரமும் ஆகும். காதல் வாழ்க்கையினை 'அகம்' என்று கூறுவர். "காதல் வாழ்வே உயர்ந்த வாழ்வு" என்பது உலகோரின் தெள்ளிய கோட்பாடாகும். அக்காதல் வாழ்வே இலக்கியத் தோற்றத்திற்கு உரிய விளை நிலமாதலின் அது பற்றி இலக்கியத்தில் கூறும் மரபுகளைத் தொகுத்துரைப்பதே அகத்திணை இயலாகும். "அகப் பாடல்களைப் பற்றி நன்கு அறிந்து கொள்வதற்குத் தொல்காப்பியர் கூறும் அகத்திணையியல் அரிய கலங்கரை விளக்கு" என்று வ.சு.ப மாணிக்கம் கூறியுள்ளார். இவற்றிலிருந்து அகத்திணையின் பெருமை நமக்கு விளங்கும். அகத்தின் பண்பினை ஐந்திணைகளான குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எடுத்துக் கூறுகின்றன.

'இன்பமும், பொருளும், அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின் (தொல்– 1038)

காமக் கூட்டம் 'என வாழ்க்கைக்கு வேண்டிய பொருள் சேர்த்தல், அப்பொருளின் துணைகொண்டு அறம் பெருக்குதல், அன்புடன் இல்லறம் நடத்தல் போன்றவையே ஐந்திணையின் தன்மை என்று உரைக்கின்றது. மேலும், ஐந்திணையும் முதல், கரு, உரி என்ற மூன்றையும் அடிப்படையாகக் கொண்டு வரும் என்பதையும் விளக்குகின்றது.

"முதல் எனப்படுவது நிலம் பொழுது" (தொல்.950)

"கரு எனப்படுவது.

தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
இவ்வகைப்பிறவும் கரு என மொழிப" (தொல்.964)

உரிப்பொருள் என்பது.

Koviloor Digital Library



"புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் அவற்றின் நிமித்தம் என்றிவை (தொல்.960)
தேருங்காலைத் திணைக்குரிப் பொருளே"

என ஒவ்வொரு திணைக்கும் உரிய உரிப்பொருளைக் குறிப்பிடுகிறது. ஐந்து திணைகளுக்குரிய நிலங்களில், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நான்கினைப் பற்றி தொல்காப்பியம் கூறுகின்றது. ஆனால், பாலையின் தன்மையினைச் சிலம்பு கூறுகின்றது.

ஐந்நிலங்களின் பெயர்களும் அந்த நிலங்களில் காணும் மலர்கள் அல்லது மரங்களை வைத்து பெயர் சூட்டப்பட்டிருக்கும் என எண்ணத் தோன்றுகின்றது.

சங்கப் பாடல்கள் அனைத்தும் முதல்,கரு, உரிப்பொருளால் ஆனவை. சங்கப் பாடல்களை, ஆராய்ந்த ஆராய்ச்சியாளர்கள். "ஒரு பாடலுக்கு முதல், கரு, உரிப்பொருள்கள் அவசியம் எனக் கூற இயலாது. முதல் கரு பொருள்கள் இடம் பெறாமல் உரிப்பொருளை மாத்திரமே விளக்குகின்ற அகப்பாடல்கள் உள்ளன என்பர்.

சங்கப் பாடல்களைப் பாடிச் சென்ற புலவர்கள் பாடல்களுக்குள்ளே மறைமுகமாய். உள்ளுறை உவமம், குறிப்பு, இறைச்சி என்ற படிமங்களை ஆங்காங்கே வைத்துப் பாடியுள்ளனர். 'சித்பவானந்தம்' என்னும் குறள் நூல், இறைச்சியொடுள்ளுறை ஈண்டறிந்தார், காண்பார். புறத்தொடக்கத்துப் பொருள் என இரண்டு கண்களைப் பெற்றவர்கள் உலகப்பொருள்களை நன்கு காண முடியும், என உள்ளுறையும், இறைச்சியும் தெரிந்தவர்கள் சங்ககாலப் புறப்பொருளையும் அகப் பொருளையும் உணர முடியும் என உள்ளுறை இறைச்சி பற்றிக் குறிப்பிடுகின்றது.

## உள்ளுறை

அகப்பொருளொழுகலாற்றில், சொல்லால் வெளியிட்டுக் கூறுதற்கரியஅல்லாத எண்ணங்களை நாகரிகமாக மறைத்துக் கூறுதற் பொருட்டு அமைத்துக் கொண்ட உரையாடல் முறையே உள்ளுறை உவமமாகும்.

உள்ளுறையைப் பற்றித் தொல்காப்பியர், பொருளதிகார அகத்திணையியலில் உரைக்கின்றார்.

"உள்ளுறுத்து இதனோடு ஒத்துப் பொருள் முடிகென
உள்ளுறுத்து உரைப்பதே உள்ளுறை உவமம்" (தொல். 994)

புலவன் ஒரு கருத்தை உள்ளத்தே கருதிக் கொண்டு அக்கருத்து வெளிப்படையாகக் கூறப்படும் கருப்பொருள்களோடு ஒத்து அமைவதாய் உட்பொருளாகக் கூறப்படுவது உள்ளுறை உவமமாகும்.

Koviloor Digital Library



(எ.கா) ". . . .இகுளை பெரிய
கேழலட்ட பேழ்வாயேற்றை
பலாவ மலடுக்கம் புலவ ஈர்க்கும்"

என்ற பாடலில் தோழி, பெரிய ஆண் பன்றியினைக் கொன்ற ஆண்புலி பலா மரங்கள் செறிந்துள்ள மலைகள் நாறும்படி அப்பன்றியின் உடலை இழுத்துச் செல்லும். பலா மரங்கள் நிரம்பிய தலைவியின் பெற்றோர்களது ஊர். மலைகள் நாறும்படிப் புலால் உடலினை இழுத்துச் செல்லுதல் என்பது தலைவன் தலைவியை தினந்தோறும் சந்தித்துச் செல்ல அதனால் ஊரில் அலர் பரவுகிறது. என உள்ளுறை கையாளப்பட்டுள்ளது.

இவ்வுள்ளுறை உவமத்தை இன்னொரு வகையாகவும் தொல்காப்பியர் உவமயியலில் கூறியுள்ளார்.

"பிறிதொரு படாது பிறப்பொடு நோக்கி
முன்னை மரபின் கூறுங்காலை
துணிவொடு வருஉம் துணிவினோர்கொளினே" (தொல்.1244)

"உவமம் வேறு உவமிக்கப்படும் பொருள் வேறு என்று ஒன்றற்கொன்று வேறாகத் தோன்றாமல் உவமைத் தோற்றத்திலேயே உவமிக்கப்படும் பொருளைக் குறிப்பாக நோக்கி உணரப்படும். அப்பொருள் உவமமும், பொருளுமென முற்கூறிய இயல்பினில் கூறுவோரது தெளிவுடன் பொருந்தி அதன் உள்ளுறையாக விளங்கும். எனவே, உள்ளுறையை, நல்லுணர்வுடையோரே உணர்ந்து கொள்ள முடியும் எனக் கூறுகின்றது.

"கான மஞ்சை யறையீன் முட்டை
வெயிலாடு முசுவின் குருளையுருட்டும்
குன்ற நாடன் கேண்மை என்றும்
நன்று மன் வாழி தோழியுண் கண்
நீரொடொராங்குத் தணப்ப
உள்ளாதாற்றல் வல்லு வோர்க்கே (குறுந்.38)

தலைவன் தலைவியைத் திருமணம் செய்து கொள்வதற்கு வேண்டி பொருளீட்டுவதற்காக வேற்றூருக்குச் சென்றிருக்கின்றான். அவன் பல நாட்கள் கழிந்தும் திரும்பவில்லை. அவன் பிரிவினை ஆற்ற இயலாது தலைவி மனம் வருந்துகிறாள். அவள் தோழியினை நோக்கிக் 'காட்டில் வாழும் மயில் பாறையினிடத்து ஈன்ற முட்டையினை வெயிலில் உருட்டி விளையாடும் குரங்குக் குட்டியினையுடைய மலை நாட்டின் தலைவனுடைய நட்பு, நம் மையுண்ட கண்களிலிருந்து பெருகும் நீரினைக் கண்டும் அதற்கு ஆற்றியிருக்கும் வன்மையுடையவர்க்கு என்றும் நம்மையாகும். என்று கூறுகிறாள். இதுவே இப்பாட்டின்

Koviloor Digital Library


பொருளாகும். "மயிலின் முட்டையைக் குரங்குக்குட்டி வெயிலின் உருட்டி விளையாடும் என்ற இயற்கை வருணனையை இப்பாட்டில் காணுகிறோம். மயிலின் முட்டையகத்துள்ள குஞ்சுக்கு நேரும் தீமையைக் கருதாமல் குரங்குக்குட்டி அதனை வெயிலில் உருட்டுவது போன்று யான் எய்தும் துன்பத்திற்கு இரங்காமல் இவ்வூரார் என்றும் என் களவொழுக்கத்தைப் பழி தூற்றுகின்றனர் என்ற உட்பொருளை உள்ளுறையை இவ்வியற்கை வருணனை நமக்கு நயமாக உணர்த்துகின்றது. உவமம் இருவகைப்படும்.

"உள்ளுறை உவமம் ஏனை உவமம் எனத் தள்ளாது ஆகும் திணையுணர்வகையே" (அகத். 146). என உவமம் உள்ளுறைக்கண் உவமமும் ஏனை உவமமும் என இருவகையாலும் திணை உணரும் வகை நப்பாதாகும் என்பர் தொல்காப்பியர்.

உள்ளுறையின் நோக்கம்

தெய்வமில்லாத ஏனைக் கருப் பொருள்களின் நிகழ்ச்சியினை வெளியிட்டுரைக்கும் முகத்தால் அந்நிகழ்ச்சியினை உவமையாகக் கொண்டு தலைவன், தலைவியாகிய அகத்திணைமக்களின் ஒழுகலாறுகளை உய்த்துணர்ந்து கொள்ளச் செய்தல் உள்ளுறையின் நோக்கம் என்பதனை,

"உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலம் எனக்
கொள்ளும் என்ப குறி அறிந்தோரே (அகத்.47)

என்ற நூற்பாவால் அறியலாம். ஆனால், இதற்கு டாக்டர் ந. சுப்புரெட்டியார் அவர்கள் "தமிழர்கள் தெய்வ வழிபாட்டில் சிறந்தவர்கள். தெய்வத்திற்கு முதலிடம் கொடுத்து வாழ்கின்றவர்கள், ஆகையால் உள்ளுறைஉவமையை அமைக்கும் பொழுது, கருப்பொருள்களில் தெய்வத்தைத் தவிர ஏனையவற்றைத் கொண்டனர். அதன் சிறப்பை அவர்கள் கெடுக்க விரும்பவில்லை" என்கிறார். ஆனால், ஒன்றினை மட்டும் கூற முடியும். உயர்ந்த பண்புகள் நிறைந்த மானிடரைக் குறிப்பிடும் பொழுது, தெய்வத்தோடு ஒப்பிட்டு உள்ளுறையினைப் பயன்படுத்தலாம். இதனை,

'வெல்போர் இராமன் அருமறைக் கவித்த
பல்வீழ் ஆலம் போல
ஒலியவந் தன்றிவ் அழுங்கல் ஊரே" (அக. 70)

இப்பாடல் தோழி தலைவிக்குத் திருமணச் செய்தியினை அறிவித்த போது கையாண்ட உள்ளுறை. முன்பு தலைவன்-தலைவியின் காதலைப் பற்றி அறிந்த ஊர் மக்கள் அம்பல் தூற்றினர். இப்போது தலைவியைத் தலைவன் திருமணம் செய்து கொள்ளப் போகிறான் என்றவுடன் ஊர் மக்களின் அம்பல் நின்று

Koviloor Digital Library



விட்டது. இதனை இராமன் அரக்கரை வெல்லுவதற்கான அரிய செய்தியினை வானர வீரர்களுடன் ஆராயத் துணிகையில் ஆலமரத்தில் ஆரவாரிக்கும் பறவைகளின் சப்தம் இடையூறாக இருக்க இராமன் உடனே தன் வைகவித்த செயல் தலைவன் தலைவியுடன் திருமணம் செய்து கொள்ளத் துணிந்து தன் கரம் ஈந்தமைக்கு ஒப்பானது. ஆகையால் பறவைகளின் இரைச்சல் அடங்கல் போல, அவ்வூரில் ஆம்பலும் அடங்கியது என்று கூறுகின்றது. உள்ளுறைப் பிறிதொரு பொருள் புலப்படுமாறு நிற்றல்.

"உடனுறை உவமம் சுட்டு நகை சிறப்பெனக்
கெடலரு மரபின் உள்ளுறை ஐந்தே (தொல்-1188)

என உள்ளுறையின் ஐந்து வகையினைப் பற்றித் தொல்காப்பிய பொருளதிகாரம் நமக்குக் கூறுகின்றது.

உடனுறை

உடனுறை என்பது, உடன் உறைவது ஒன்றைச் சொல்ல அதனால் வேறு பொருள் தோன்றுவது. இஃது உள்ளுறை என்று இலக்கண, இலக்கிய உலகில் பேசப்படுகிறது.

"விளையாடாய மொடு வெண் மணல் அழுத்தி
மறந்தனம்துறந்த காழ் முனையகைய
நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப
நும்மினுஞ் சிறந்தது நுவ்வையாகுமென்று
அன்னைகூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே"

இதனுள் 'புன்னைக்கு நாணுதும்' எனவே அவ்வழித்தாய் வளர்த்த புன்னையென்றும் 'பலகாலும் அன்னை கூறினள்' என்று உடனுறை இப்பாடலில் கூறப்பட்டுள்ளது. ஆனால் நச்சினார்க்கினியர் உடனுறை என்பதற்கு 'நான்கு நிலத்தும் உளவாய் அந்நிலத்துடன் உறையும் கருப்பொருள்கள் என அவர் வலிந்து பொருள் கூறியுள்ளார். உள்ளுறை ஐந்துமே கருப்பொருளை நிலைக் களனாகக் கொண்டு வருவதாலும் அக்கருப்பொருள் நான்கு நிலத்தும் உறைவதாலும் இறைச்சி மட்டில் உடனுறை என்றல் பொருந்தாமையாலும் அவர் கருத்து பொருந்தாது எனலாம்.

உவமம்

கருப்பொருள் நிகழ்ச்சி கூறி அது போலப் பிறிதொரு கருத்துப் பெறவைப்பது உவம உள்ளுறையாகும்.

"விங்கு நீர் அவிழ் நிலம் (கலி-66)
"வெறி கொள் இனச்சுரும்பு மேய்ந்ததோர்காவிக்

Koviloor Digital Library



குறைபடுந்தேன் வேட்டும் குறுகும் – நிறைமதுச் சேர்ந்த
உண்டாகும் தன் முகத்தே செவ்வி உடையதோர்
வண்டா மரைபிரிந்த வண்டு' (தண்டி)

ஒரு தலைவன் தலைவியின் பால் இன்பம் துய்த்துப் பரத்தையின் பால் செல்கின்றான். அதனைக் கண்ட தலைவி ஒரு வண்டு தாமரையிலே தேனை உண்டு மகிழ்கிறது. பிறகு அத்தாமரையை விட்டுப் பிரிந்து சென்று சோலையின் கண் உள்ள குவளைப் பூவிலே உள்ள தேனை உண்ண ஆசைப்பட்டு. அப்பூவை அடையும் என்று பேசுகிறாள். இதன்கண் தலைவனின் பரத்தமை குறிப்பாகத் தலைவியால் இகழ்ந்து பேசப்படுகின்றது. ஆகவே இது உவம உள்ளுறையாகும்.

சுட்டு உள்ளுறை

ஒரு பொருளைச் சுட்டிக் கூற அதன் மூலம் வேறோர் கருத்துப் பெற வைப்பது சுட்டு உள்ளுறை. இது இரண்டு வகைப்படும்.

<u>சுட்டப்படும் பொருளாற் பெறப்படும் பிறிதொரு பொருள் உணருதல்</u>

"வேரல் வேலி வேர்கோட் பலவின்
சாரல் நாட செல்வியை யாகுமதி
. . .    . . . .    . . . . " (குறுந். 18)

என்ற பாடலின் திணைப் பொருள் தோழி தலைவனை வரைவு கடாவுதல் இதனுள்

"சிறிய கிளையில் பெரும்பழம் தொங்குவது போலச்
சிறிய உயிரில் பெரிய காமம் நிறைந்துள்ளது'

என்பது சுட்டப்படும் பொருள் அஃது என்பது. சுட்டு ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல அதனால் பெறப்படும் சுட்டு.

'யாரும் இல்லைத்தானே கள்வன்" (குறுந்– 25)

என்ற பாடலின் திணைப் பொருள், தலைவன் களவுப் புணர்ச்சிக்குப் பின்னர் வரைந்து கோடல் இன்றிக்காலம் நீட்டித்த விடத்துத் தலைவி தன் தோழியிடம் கூறியது.

குருகின் செயல் இயற்கை வருணனை என்பதில்லாமல் சுட்டிச் சொல்லப்பட்ட ஒரு நிகழ்ச்சியாதலின் இப்பாடல் சுட்டு உள்ளுறைப் பாடல் எனலாம். (குருகு ஆரலையே பார்த்திருந்தது ஆதலின் அது சான்று கூறாது என்பது ஓர் பொருள் உண்மையும் காணத்தக்கது.)

நகை

ஒருவர் நகைப்பது கண்டு ஒருபொருளைக் குறிப்பாக உணருமாறு வைப்பதும், நகைத்துப் பேசுவதன் மூலம் ஒரு பொருளைக் குறிப்பாக உணருமாறு வைப்பதும் ஆகிய இரண்டையு மேநகை உள்ளுறைக்குக் கொள்ளலாம்.

Koviloor Digital Library



"விட்டென விடுக்கு நாள் வருக அது நீ
தேர்ந்தனை யாயின் தந்தனை சென்மோ
குன்றத்தன்ன குவவு மணல் அடைகரை
நின்ற புன்னை நிலந்தோய் படுசினை
வம்ப நாரை சேர்க்கும்
தண் .கடற் சேர்ப்ப நீ யுண்ட என் நலனே" (குருந்–236)

"வரைவிடை வைத்துப் பிரியக் கருதிய தலைவன், தோழியிடம் தலைவியை ஆற்றுவிப்பாயாக எனக் கூறியது. தோழியானவள் நகையாடி உரைத்துச் செலவிழுங்குவித்தது'' என்பது திணைப்பொருள். இதனுள் "தலைவியின் நலனையுண்டாயல்லவா? அதைத் தந்துவிட்டுச் செல்" - என்று கூறியதில் உண்டதை மீண்டும் தர இயலாத செயலை 'தந்து செல்' என்றது நகைப்புக்குரியதாகும். இதற்கேற்ப கருப்பொருள் நிகழ்ச்சியும் நகையாகவே அமைந்தது.

''புன்னை மரத்தின் மணலைத் தொடுமாறு தாழ்ந்த கிளைகளில் இதுகாறும் அங்கு வந்தறியாத புதிய நாரையானது வந்து தங்கும்' என்ற செய்தி நகைப்புக்குரியதாக அமைந்தது. "எங்கேயோ இரையுண்ட நாரை தான் தங்குவதற்கு உயர் கிளையை இடமாகக் கொள்ளாமல் மணலில் தாழ்ந்த கிளையை இடமாகக் கொண்டு தங்குவது நகைப்புக்குரியதாயிற்று. அதுபோலத் தலைவியின் நலனையுண்ட நீ பிரிந்த சென்றக்கால் இவள் நினைவாகவே இருந்து எவ்விடம் செல்வது என்பது அறியாது எங்கேனும் செல்லினும் செல்வாய் ஆதலின் செலவழுங்குக என்னும் பொருளைத் தருதலால் இப்பாடல் நகையுள்ளுறை ஆகும்.

சிறப்பு

சிறப்பு என்பது இதற்குச் சிறந்தது இது எனக் கூறுதலானே பிறிதோர் பொருள் கொள்ள வைப்பது. ஒன்றைச் சிறப்பிப்பதன் மூலம் வேறு ஒரு பொருள் புலப்படுமாயின் அது சிறப்பு உள்ளுறை எனப்படும்.

"ஆம்பற் பூவின் சாம்பல் அன்ன (குறுந். 46)

என்ற பாடலில்

"புன்கண் மாலையும் புலம்பும்
இன்று கொல் தோழியவர் சென்ற நாட்டே"

என்ற பாடல் வரிகள் மாலை நேரத்தின் சிறப்பைக் கூறுகின்றது.

மேலும் அந்தமில்லாத சிறப்பினாகிய இன்பத்திடத்து உள்ளறைப்பொருண்மை வருதலும் வகுத்த இயல்பு எனப்படும்.

"நுண் எழில் மாமைச் சுணங்கணி அகம் தம்' (கலி. 4)

என்ற வழி, இன்பத்தின் கண்ணும் பிறிதோர் பொருள் உண்டு என்பது விளங்கும். உள்ளுறையில் அடங்கும் பிறபொருண்மைகள்

Koviloor Digital Library



மங்கல மொழியும் அவையல் மொழியும்
மாறில் ஆண்மையில் சொல்லிய மொழியுங்
கூறிய மருங்கிற் கொள்ளும் என்ப" (தொல்.1190)

மங்கல மொழி முதலாக சொல்லப்பட்ட மூன்றும் உள்ளுறையில் அடங்கும். மங்கல மொழி என்பது வாழ்த்து மொழி 'நோயிலராக நங்காதலர்' (அகம். 114) என வாழ்த்தியது மங்கல மொழியாகும். இதனுள் வாழ்த்தியோர்க்கு 'வாழ்த்துதல்' என்பது நோக்கம் அல்ல. 'நோயுடையராக' என்று எண்ணும் நோக்கமும் அல்ல. ஒருவெறுப்பில் கூறிய மங்கல மொழியாகும்.

அவையல் மொழி

"கடைக்கண்ணால் கொல்வான்போல் நோக்கி
நகைக்கூட்டம் செய்தானக் கள்வன் மகன்"

என்பதில் கள்வன் மகன் என்றது அவையல் மொழி அல்லது வைஇய மொழி'

"இதுவும் ஓர் ஊராண்மைக் கொத்த படிறுடைத்து"

என்பது ஆண்மையிற் சொல்லிய பழமொழி (கலி. 89)

இவை மூன்றும் இகழ்ச்சிக்குறிப்பு உடையன வாயினும் இதனைக் கேட்ட தலைவன் இகழ்ச்சியாகவே கருதாமல் இதனை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வான்.

உவமப்போலி

"உவமப்போலி ஐந்தென மொழிப" (தொல்–1245)

குறிப்பு மொழியாக வரும்.

உவமப் போலியை வினை, பயன், மெய், நிறம், பிறப்பு, ஆகிய ஐந்து வகைப்படுத்தித் தொல்காப்பியர் கூறுகிறார். உவமப்போலி என்பது பேராசிரியர் கருத்துப்படி உள்ளுறை உவமமேயாகும். இவ் வைந்தின் அடிப்படையில் உள்ளுறை வரும் என்பது அவர் கருத்தாகும்.

"பொய்கைப் பள்ளி புலவு நாறு நீர் நாய்
வாளை நாளிரை பெறூஉம் ஊர
எந்நலந் தொலைவ தாயினும்
தன்னலம் பெரும் பிறர்த் தோய்ந்த மார்பே"

என்ற பாடலில் பரத்தையிற் பிரிந்து வந்த தலைமகனோடு தலைமகன் புலந்து கூறுவதாக அமைந்ததாகும். இதன் கண், பொய்கையாகிய தூய இடத்திற் பிறந்த நீர் நாயானது, தான் முதல் நாள் தின்ற வாளை மீனின் புலால் நாற்றத்தோடும், பின்னை நாளினும் அதனையே விரும்பிப் பெறும் ஊரனே எனத் தலைவனை அழைக்கும் முகமாக, அத்தலைவன் நல்ல குலத்திற் பிறந்தும் இழி குலத்தவராகிய பரத்தையரைத் தோய்ந்து பின்னும் அவரையே நாடிச் சேர்தலைக் கருதியுணர வைத்தமையின் இது பிறப்புப் பற்றி வந்த உள்ளுறை உவமமாகும். இவ்வாறே வினை,

Koviloor Digital Library



பயன், மெய், உரு என்ற உள்ளுறைகளும் சங்கப்பாடல்களில் இடம் பெறும்.

உள்ளுறை உவமம் கூறுவதற்கு உரியவர்கள்

உள்ளுறை உவமையை வரையறை செய்த தொல்காப்பியர் உவமயியல் உள்ளுறை உவமத்தைக் கையாளக் கூடியவர்கள் யாவர்? அவர்கள் கூறும் செய்திகள் எவை. உள்ளுறை எந்த இடத்தில் இடம் பெற வேண்டும். என்பதனுக்கெல்லாம் விதி வகுத்துள்ளார்.

தலைவன், தலைவி, தோழி, செவிலி, பாங்கன், பாணன் போன்றவர்களே உள்ளுறை கூறுவதற்கு உரியவர்கள் என்று குறிப்பிடப்பட்டுக் காட்டுகின்றார்.

தலைமகள் உள்ளுறை உவமம் கூறின் அவள் அறிந்த பொருள் பற்றிக் கூறப்படும்.

"கிழவி சொல்லின் அவளறி கிளவி (தொல்-1247) என்றும், தோழி உள்ளுறை கூறுவளாயின் தான் பயின்ற நிலத்துள்ளன அன்றிப் பிற நிலத்துள்ளனவற்றை உவமையாகக் கூறப்பெறாள்.

'தோழிக்காயின் நிலம் பெயர்ந்துரையாது' (தொல்–1247)

என்ற நூற்பாவின் மூலம் உரைக்கின்றார்.

தலைவிதான் வாழும் நிலத்துள்ளன எல்லாம் அறிந்து கொள்ளும் அளவிற்குப் பயிற்சி அற்றவள் என்றும், அவளுடைய தோழி முதலிய ஆயத்தாராயின் சுற்றத்தார் தம் நிலத்திலுள்ள எல்லாம் அறிந்திருந்தலால் எத்தகைய தவறுமில்லை என்கிறார்.

"கிழவோற் காயின் உரனொடு கிளக்கும்' (தொல்–1248)

ஏனோர்க்கெல்லாம் இடம் வரைவின்றே. (தொல்–1248)

தலைமகன் உள்ளுறை உவமை கூறுங்கால் தனது உரனுடைமை தோன்றச் சொல்லப்படும். பாங்கன், பாணன் முதலிய ஏனையோர் கூறுங்கால் இடம் வரைவின்றே என்று குறிப்பிடுகிறார்.

'கிழவோட்கு உவமை ஈரிடத்து உரித்தே" (தொல்–1250)

என்ற சூத்திரத்திற்கு நெய்தல் மற்றும் மருதத்தில் தான் தலைவி உவமை கூறப்பெறலாம் என்பர். மகிழ்ச்சி விளைவிக்கும் சொல்லும் புலவியாகியத் துன்பத்தினைப் புலப்படுத்துஞ் சொல்லும் இவ்வுள்ளுறை உவமையிடத்தே தோன்றும் என்றும் இரண்டிடத்தும் தலைமகள் உள்ளுறை கூறப் பெறாள்.

"கிழவோற் காயின் இடம் வரை வின்றே" (தொல்–1251)

தலைமகனுக்கு இத்தகைய இடவரையறை எதுவும் இல்லை. எப்பொருட் கண்ணும் வரும்.

"தோழியும் செவிலியும் பொருந்துவழி நோக்கிக்
கூறுவதற்குரியர்கொள்வழியான" (தொல்–1252)

Koviloor Digital Library



எனத் தோழியும், செவிலியும், காலத்திற்கும் இடத்திற்கும் பொருந்துமாறு நோக்கி கேட்போர், எளிதில் உய்த்துணர்ந்து கொள்ளுதற்குரிய நெறியில் கூறுதற்குரியவராவர்.

தலைவி எந்நிலத்தைச் சார்ந்தவளாக இருந்தாலும், இன்பம் மற்றும் துன்ப நேரங்களில் உவமை கூறலாம் என்பது சரியான கருத்தாக இருக்கலாம். தோழியும் செவிலியும் பொருந்துமிடம் பார்த்துக் கூறுதற்குரியவர். கேட்போர் யாவர் எனத் தெளிந்து உள்ளுறை உவமை கூறல் வேண்டும் என்பர் இளம்பூரணர்.

தொல்காப்பியர் கூறும் உள்ளுறை என்ற இக்கட்டுரையிலிருந்து உள்ளுறையினைப் பற்றி உணர்ந்து கொள்வது என்னவென்றால்.

1. 'உள்ளுறை' கருப்பொருளை மையமாகக் கொண்டு வரும்.
2. உள்ளுறை என்பது தலைவனை இடித்துரைப்பதற்காகவே பயன்படுத்தப்படுகிறது.
3. உள்ளுறை பொதுவாக, விலங்குகளின், பறவைகளின் செயலைப் பின்னணியாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.
4. உயர்ந்த மானிடருக்கு உள்ளுறை கூறும் போது தெய்வத்தோடு ஒப்பிட்டு உள்ளுறையாகப் பயன்படுத்துவதைச் சங்கப்பாடல்கள் மூலம் அறிய முடிகிறது.
5. 'உடனுறை' என்பது உள்ளுறை அல்ல. இறைச்சி என்ற நச்சினார்க்கினியர் கருத்துப் பொருந்தாது என்பதனை உணர முடிகின்றது.
6. உவமப் போலியும் உள்ளுறைதான் என்ற பேராசிரியர் கருத்தை அறிய முடிகிறது. மேலும் .
7. பொதுவாக உள்ளுறையின் நோக்கம் தலைவனின் தீய ஒழுக்கம், கூடா ஒழுக்கம் போன்றவற்றைத் தவிர்க்கவே கூறப்பட்டுள்ளது.
8. உள்ளுறை உவமையினைக் கையாளக் கூடியவர்கள், இடம் ஆகியவற்றையும் அறிய முடிகின்றது.

## துணை நின்ற நூல்கள்


1. தொல்காப்பியம் - பொருளதிகாரம் - இளம்பூரணர் உரை.
2. தொல்காப்பியம் வரலாறு. க. வெள்ளைவாரணன்
3. தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள் - உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் - முனைவர் செஜீன் லாறன்ஸ் முனைவர் கு. பகவதி
4. தொல்காப்பியம் உரைவளம் பொருளதிகாரம் பொருளியல் ஆ. சிவலிங்கனார்
5. இலக்கியத் திறனாய்வியல் - தஏ. ஞானமூர்த்தி
6. யாப்பும் இலக்கணமும்
7. தொல்காப்பியம் காட்டும் உள்ளுறையும் இறைச்சியும் -எட்டாவது உலகத்தமிழ் மாநாட்டு மலர் 1995.
8. டாக்டர் வசுப மாணிக்கம் - 'தமிழ்க்காதல்'

Koviloor Digital Library

## 5. தொல்காப்பியத்தில் மெய்ப்பாடுகள்

தா.க. அனுராதா
அண்ணாமலைநகர்

தொல்காப்பியம் என்பது தமிழ்ப் பழமை காட்டும் வரலாற்றுச் சுவடி. வருங்காலப் புத்தமிழுக்கு அறிவூட்டும் வழிகாட்டி. தமிழ் மக்களின் உலக வாழ்க்கையையும் செய்யுள் நெறியையும் திறம்பட ஆராய்ந்து எழுதிய நாட்டு நூலாகும். மக்களின் அகப்புறச் செயல்பாடுகளையும் அவர்தம் வாழ்க்கைச் சூழலையும் கொண்ட ஒரு படைப்பிலக்கியமே தொல்காப்பியம்.அதிலும் குறிப்பாக மாந்தரின் மன உணர்வுகளை வெளிப்படுத்தும் மெய்ப்பாட்டியல் என்னும்பகுதி சிறப்பு மிகுந்தது. இப்பகுதியில் காணப்படும் மெய்ப்பாடுகளைப் பற்றி ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### மெய்ப்பாடுகள் விளக்கம்

மெய்ப்படு என்பதின் திரிந்த வடிவமே மெய்ப்பாடு என்பதாம். மெய் + படு = மெய்ப்படு. 'படு' என்ற வினைச்சொல் 'பாடு' என நீண்டு முதனிலை திரிந்த தொழிற்பெயராகின்றது. எனவே மெய்யில் படுதல் மெய்ப்பாடாகி 'உள்ளக் கிளர்ச்சி மெய்யில் (Emotion) படுதல் என்னும் பொருள் பெறும். மெய்ப்பாட்டை 'Physio Revelation' என்ற ஆங்கிலச் சொல்லால் குறிப்பர். 'Physique' என்பது மெய். பாடு என்பது 'Physical expression'. அஃதாவது, 'உடலசைவுகளால் வெளிக்காட்டப் பெறும் உள்ளக் கிளர்ச்சியே மெய்ப்பாடு' ஆகும்.

### தொல்காப்பியர் சுட்டும் மெய்ப்பாடு

தொல்காப்பியர் வழக்கினை நாடக வழக்கு, உலகியல் வழக்கு, புலனெறி வழக்கு என மூன்றாகப் பகுப்பர். புலனெறி வழக்கினின்றும் முகிழ்த்ததே தொல்காப்பியப் பொருளதிகாரம். பொருளதிகாரத்தின் ஒன்பது இயல்களுள் ஓர் இயலாகவே மெய்ப்பாட்டியல் விளக்குகின்றது.

Koviloor Digital Library



தொல்காப்பியர் செய்யுளுக்குரிய உறுப்புகளாக 34 உறுப்புகளைக் கூறுகின்றார் (செய்.1) அவ்வுறுப்புக்களுள் ஒன்றாக மெய்ப்பாடு விளக்குகின்றது. மெய்ப்பாடுகள் இவையெனச் சுட்ட முனைந்த தொல்காப்பியர்.

'எண்வகை இயல்நெறி பிழையாதாகி
முன்னுறக் கிளந்த முடிவினது அதுவே' (செய். 203)

எனச் செய்யுளியலில் மெய்ப்பாட்டியலைச் சுட்டுகின்றார். ஆகவே, மெய்ப்பாட்டியலில் வரும் மெய்ப்பாடும், செய்யுளியலில் வரும் மெய்ப்பாடும் ஒன்றே என்பது தெளிவாகிறது.

மெய்ப்பாடு என்பதற்குத் தொல்காப்பியர்

'உய்த்துணர் வின்றித் தலைவருபொருளால்
மெய்பட முடிப்பது மெய்ப்பாடாகும்' (செய். 202)

என விளக்கம் தருகின்றார். இவர்தம் கருத்தைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால், உரையாசிரியர்களின் கருத்துக்களின்படி மெய்ப்பாடென்பது செய்யுளியலுக்கு உரியதென அறிந்துகொள்ள முடிகிறது.

மெய்ப்பாடு –சான்றோர் சிலரின் கருத்துக்கள்

- மெய்ப்பாடென்பது பொருட்பாடு. 'உலகத்தார்' உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்கும் புலப்படுவதோராற்றான் வெளிப்படுதல்' என்பர் - பேராசிரியர்
- மெய்யின்கண் தோன்றுதலின் மெய்ப்பாடாயிற்று' என்பர் இளம்பூரணர். மெய்ப்பாடு என்பதற்கு 'பொருளின் புலப்பாடு' எனப் பொருள் விரித்தலுமுண்டு.
- உலகத்தாராது உள்ள நிகழ்ச்சி அவரது உடம்பின்கண் தோன்றும் கண்ணீரரும்பல். மெய்ம்மயிர் சிலிர்த்தல்,வியத்தல், நடுக்கம் முதலிய புறக்குறிகளால் காண்போர்க்கும் புலனாகுந்தன்மை மெய்ப்பாடென்பர்- க. வெள்ளைவாரணன்.
- உள்ளக் கிடக்கையை மெய்யிற்படுத்தல்' மெய்ப்பாடென்பர் - ச.வே.சு.
- புலன்களும் புலன்களின் வாயிலாக மனத்திற்கும் இன்பம் தருவதைக் குறிக்க முன்னோர் ஒரு சொல்லைத் தேடினர். அதைத் தமிழில் 'சுவை' என்றனர். அதைப் புலப்படுத்தும்போது தொல்காப்பியம் எட்டுவகை மெய்ப்பாடுகள் எனக் கூறுகிறது. என்பர் டாக்டர் மு.வ.

வெளிப்பாட்டு நிலைகள்

மெய்ப்பாடு மூன்று வகையான நிலைகளில் வெளிப்படுகின்றது. அம்மூன்றிற்கும் உள்ள தொடர்பை பின்வருமாறு காட்டலாம்.

Koviloor Digital Library



கவிதையும் மெய்ப்பாடும்

மனிதன் பேசத் தொடங்கிய போதே கவிதையும் தோன்றியது. நாடகத்தில் நடிகர்கள் தம் உள்ள உணர்ச்சிகளை உடம்பின் வழியே தக்க புறக்குறிகளாய் வெளிப்படுத்தி காண்பவர்களுக்கு அவ்வுணர்ச்சிகள் புலனாகச் செய்வது போல் கவிஞர்களும் தக்க சொற்களால் தொடர்களால் வெளிப்பாட்டு நிலைகளை வெளிப்படுத்தி கற்பார்க்கும் கேட்பார்க்கும் அவ்வுணர்ச்சிகளைப் புலனாகச் செய்வதுபோல, கவிஞர்களும் தக்க சொற்களால் தொடர்களில் உணர்ச்சியின் வெளிப்பாட்டு நிலைகளை வெளிப்படுத்துவர்.

அத்தகைய அரிய கவித்திறம் வாய்க்கப் பெற்றவர்களுள் ஒருவர் கபிலர். அவர்தம் குறிஞ்சிப்பாட்டில், யானை ஒன்றின் சினத்தை - சினத்தால் உண்டாகும் மெய்ப்பாடுகளை,

'கார்ப்பெயல் உருமிற் பிளிறிச் சீர்த்தக
இரும்பிணார்த் தடக்கை இருநிலஞ் சேர்த்திச்
சினந்திகழ் கடாஅஞ் செருக்கி மரங்கொல்பு
மையல் வேழம் மடங்கலின் எதிர்தர' (குறிஞ்சிப்பாட்டு 162–166)

எனத் தெளிவுற எடுத்துரைக்கின்றார். இத்தகைய ஆற்றல் வாய்க்கப் பெற வேண்டுமாயின், மெய்ப்பாடுகளைப் பற்றிய நுண்ணுணர்வு மிகவும் இன்றியமையாதது.

இரசக் கோட்பாடு

மெய்ப்பாட்டினை வட மொழியாளர்கள் இரசக் கோட்பாட்டின் அடிப்படையில் வழங்கி வருகின்றனர். தமிழ்ச் சுவையுடன் வடமொழி இரசத்தைப் பொருந்திக் கூறுகின்ற நிலையினை அறிஞர்களிடையே இன்றளவும் காணலாம்.

1. உவகை - சிருங்காரம்
2. அழுகை - கருணம்
3. பெருமிதம் - வீரம்
4. வெகுளி - ரௌத்திரம்
5. நகை - ஹாஸ்யம்
6. அச்சம் - பயானஹம்
7. இளிவரல் - மீபத்ஸம்
8. மருட்கை - அற்புதம்

என்பன. இவற்றோடு சாந்தமும் (நடுவுநிலை) இணைக்கப்பட்டு நவரஸங்கள் என அழைக்கப்பட்டன.

இந்த ஒன்பது வகையான இரசங்களினுள்ளேயே மனித உணர்ச்சி நிலைகள் அடங்கி வருகின்றன. என்பது வடமொழி ஆசிரியர்களின் கருத்தாக அமைகின்றன வடமொழியாளர்கள் மெய்ப்பாட்டைப் 'பாவம்', 'சத்துவம்' என்பர். இதனைத் தமிழில்

Koviloor Digital Library



சுவை என்றும் மெய்ப்பாட்டுக் குறிப்பு என்றும் வழங்குவர். வடமொழியாளர் கருத்து தொல்காப்பியரது கருத்தினின்றும் வேறுபட்டதாகும். பாவம் என்பது இயல்பாக எழும் உள்ளக் கிளர்ச்சி அன்று- ஒன்றைப் போல பாவித்தலே பாவம் ஆகும். வடமொழி ரஸக் கொள்கை கூத்தின் அடிப்படையில் ஆக்கப்பட்டதாகும்.

**கூத்திலும் நாட்டியத்திலும் தோன்றும் மெய்ப்பாடுகள்**

மெய்ப்பாடு என்ற சுவைக் கோட்பாடு, நாடகம், கூத்து, ஆடல் பாடல் நாட்டுப் புறக்கலைகளிலிருந்துதான் இலக்கியத்திற்கு வந்தது என்பதைத் தொல்காப்பியர்,

'பண்ணைத் தோன்றிய எண் நான்கு பொருளும்
கண்ணிய புறனே நால்நான்கு என்ப' (மெய். 1)

என இந்நூற்பாவில் கூறியுள்ளார்.

நாடக அரங்கில் தோன்றிய 32 பொருளும் சிந்திக்குமிடத்து அதன் சுருக்கமாக 16ல் அடங்கும். காணப்படும் பொருளும் காண்பவனது கண், செவி முதலிய பொறியுணர்வும் கலப்பதால் சுவை தோன்றும். மனக்குறிப்பும் அதன் உடல் வெளிப்பாடும் ஒருங்கு இணைந்தவையே இதனால் 32 என்பது 16 என ஆகின்றது.

'நால் இரண்டு ஆகும் பாலுமாருண்டே' (மெய். 2)

பதினாறு எனினும் இலக்கியத்தைப் பொறுத்தவரை இது எட்டெனவே கொள்ளப்படும். இலக்கியத்தில் தோன்றும் சுவைக்குப் படைத்தவன் உட்படப் பல காரணங்களிருப்பினும் பாடலால் படிப்பவனிடம் விளைவும் சுவையே வெளிப்பட நிற்பதால், இங்கு எட்டு என்பது பொருந்தும்,

**மெய்ப்பாடுகளின் அமைப்பு**

விளையாட்டு பொருட்டாகிய நகை முன் வைக்கப்பட்டது. அதற்கு மறு தலையாகிய அழுகை அதன்பின்னும் வைக்கப்பட்டது. தான் அளிவந்து பிறிதோர் பொருள் வியங்கும் ஆதலின் இளிவரலின் பின் வியப்பு வைக்கப்பட்டது. வியப்புப் பற்றியும் அச்சம் பிறக்கும் ஆதலின் அச்சம் அதன் பின்னும், அச்சத்திற்கு மறுதலையான வீரம் அதன் பின்னும் வைக்கப்பட்டது வீரத்தின் பயனாகிப் பிறர்க்கு வரும் வெகுளி அதன்பின்னும் வைக்கப்பட்டது. வெகுளிக்கு மறுதலையாக இருப்பதாலும் எல்லாவற்றினும் ஒதுதற்குச் சிறந்ததாக இருப்பதாலும் முதலிற் சொல்லப்பட்ட நகைக்கு இயைபுடைத்து ஆதலானும் உவகை இறுதியில் வைக்கப்பட்டது.

**எண்வகை மெய்ப்பாடுகள்**

உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிக்கேற்ப உடலில் தோன்றும் வேறுபாடே மெய்ப்பாடு ஆகும். அவற்றை,

Koviloor Digital Library



'நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டே மெய்பா டென்ப' (மெய்-3)

என்று தொல்காப்பியர் எண்வகையாகக் கூறியுள்ளார். இலக்கியத்தில் காணப்படும் இந்த எண்வகை சுவைகளும் 'எள்ளல்' முதல் 'விளையாட்டு' ஈறாக நான்கு பொருள்களில் தோன்ற முப்பத்திரண்டாக விரியும், இம்முப்பத்திரண்டு பொருளையும் குறித்து அதன் புறத்து நிகழ்வன சுவையும் குறிப்புமாகிய பதினாறாகும்.

சுவைக்கப்படும் பொருள், அதனை நுகர்ந்த பொறியுணர்வு, அது மனத்துட்பட்ட வழி உள்ளத்து நிகழும் குறிப்பு, குறிப்பு உண்டானவுடன் கண்ணீர் தோன்றல், மெய்ம்மயிர் சிலிர்த்தல் போன்ற உடம்பின்கண் வரும் வேறுபாடு என்ற நான்கும் ஒவ்வொரு சுவைக்கும் உள்ளது. ஆகவே எட்டுச் சுவை முப்பத்திரண்டாகும்.

மெய்ப்பாடுகள் – பிறக்கும் முறை

நகை - இகழ்ச்சியிற் பிறப்பது
அழுகை - அவலத்துள் பிறப்பது
இளிவரல் - இழிப்பிற் பிறப்பது
மருட்கை - வியப்பிற் பிறப்பது
அச்சம் - அஞ்சத் தகுவனவற்றாற் பிறப்பது
பெருமிதம்- வீரத்திற் பிறப்பது
வெகுளி - வெறுக்கத் தக்கனவற்றாற் பிறப்பது
உவகை - சிருங்காரத்தால் பிறப்பது

இவ்வாறு சுவைகள் பிறத்தலின் தன்மை விளங்குகின்றது.

மெய்ப்பாடுகளின் நிலைக்களன்கள்

நகை - எள்ளல், இளமை, பேதமை, மடன்
அழுகை - இழிவு, இழவு, அசைவு, வறுமை
இளிவரல் - மூப்பு, பிணி, வருத்தம், மென்மை
மருட்கை - புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம்
அச்சம் - அணங்கு, விலங்கு, கள்வர், இறை
பெருமிதம்- கல்வி, தறுகண், இசைமை, கொடை
வெகுளி - உறுப்பறை, குடிகோள், அலை, கொலை
உவகை - செல்வம், புலன், புணர்வு, விளையாட்டு

என சுவையொன்றிற்கு நான்கு பொருளாய் முப்பத்திரண்டாய் அமைகின்றன.

மேற்கூறிய எண்ணான்குமின்றி இவை முப்பத்திரண்டும் அவைபோல மெய்ப்பாடெனப்படும் என்ற செய்தி மெய்ப்பாட்டியல் 18 ஆம் நூற்பாவில் இடம்பெற்றுள்ளது. இதன்

Koviloor Digital Library



கண் கூறப்படும் முப்பத்திரண்டு மெய்ப்பாடுகள் முறையே உடைமை, இன்புறல், நடுவுநிலை, அருள், தன்மை, அடக்கம், வரைதல், அன்பு, கைம்மிகல், நலிதல், சூழ்ச்சி, வாழ்த்தல், நாணுதல், துஞ்சல், அரற்று, கனவு, முனிதல், நினைதல், வெரூஉதல், மடிமை, கருதல், ஆராய்ச்சி, விரைவு, உயிர்ப்பு, கையாறு, இடுக்கண், பொச்சாப்பு, மறதி, பொறாமை, வியர்த்தல், ஐயம், மிகை, நடுக்கம் என்பனவாம். இவையும் மேற்கூறிய முப்பத்திரண்டும் அகத்திணைக்கும் புறத்திணைக்கும் பொதுவாகி வரும்.

புணர்ச்சிக்குமுன் நிகழும் மெய்ப்பாடுகள்

"புதுமுகம் புரிதல், பொறிநுதல் வியர்த்தல்
நகுநயம் மறைத்தல் சிதைவு பிறர்க்கு இன்மையொடு
தகுமுறை நான்கே ஒன்றென மொழிப' (மெய்13)

முதன் முதலில் கூட்டம் நிகழும்போது தலைவியின் கண் நிகழும் மெய்ப்பாடுகளை இந்நூற்பா நுவல்கிறது. இவை முற்றிலும் பாலியல், உளவியல் சார்ந்த மெய்ப்பாடுகளாகும். இவை நாடக வழக்கிற்கும் உலக வழக்கிற்கும் பொதுவானவை ஆகும். இவற்றை ஆறு படிநிலைகளாகச் சொல்கிறார் தொல்காப்பியர். முதன் மூன்று நிலைகள் புணர்ச்சி நிகழும் முன் தலைவியின் கண் தோன்றுபவை என்றும், பின் மூன்று நிலைகள் புணர்ச்சி முடிந்தபின் நிகழ்பவை என்றும் கூறுகிறார். தலைவன் பால் நிகழும் மெய்ப்பாடுகளை வரையறைப்படுத்த இயலாததால் அவை பற்றிக் கூறவில்லை தொல்காப்பியர்.

"கூழை விரித்தல் காதொன்று களைதல்
ஊழணி தைவரல் உடையொர்த்துடுத்தலொடு
கெழீஇய நான்கே இரண்டென மொழிப" (மெய் – 14)

'அல்குல் தைவரல் அணிந்தவை திருத்தல்
இல்வலி யுறுத்தல் இருகையும் எடுத்தலொடு
சொல்லிய நான்கே மூன்று என மொழிப' (மெய் – 15)

என்று இரண்டாம் மூன்றாம் நிலையில் நிகழும் அவத்தைகளாகத் தொல்காப்பியர் கூறுகிறார்.

புணர்ச்சிக்குப் பின் நிகழும் மெய்ப்பாடுகள்

இயற்கைப் புணர்ச்சிக்குப் பிறகு நிகழ்பவைகள் எல்லாம் நான்காம் நிலையில் அமைவனவாகும். புணர்ச்சிக்கு முன் நிகழும் பன்னிரெண்டும் படிநிலைகள் ஆனது போலப் புணர்ச்சிக்குப் பின் நிகழும் பன்னிரெண்டும் மூன்றுபடி நிலைகளாகக் கூறுகின்றார்.

"பாராட்டு எடுத்தல் மடம்தப உரைத்தல்
ஈரமில் கூற்றம் ஏற்று அலர் நாணல்

Koviloor Digital Library



கொடுப்பவை கோடல் உளப்படத் தொகைஇ
எடுத்த நான்கே நான்கென மொழிப" (மெய் – 16)

இவ்வாறெல்லாம் கூறி மேலும் சில மெய்ப்பாடுகளைக் கூறுகிறார். தொல்காப்பியர் இம் மெய்ப்பாடுகளையுமா கூற வேண்டும் எனச் சிலர் அருவருப்பது போலப் பேசுவர். இன்று பள்ளி அளவிலேயே பாலியல் கல்வி வேண்டுமென்பர் இதன் சிறப்பை அறிந்து போற்றுவர்.

'தெரிந்து உடம்படுதல் திளைப்பு வினைமறுத்தல்
கரந்திடத்து ஒழிதல் கண்டவழி உவத்தலொடு
பொருந்திய நான்கே ஐந்தென மொழிப' (மெய்– 17)

'புறஞ்செயச் சிதைதல் புலம்பித் தோன்றல்
கலங்கி மொழிதல் கையறவு உரைத்தலொடு
புலம்பிய நான்கே ஆறென மொழிப' (மெய்–18)

என்று ஐந்தாம், ஆறாம் நிலையில் நிகழும் அவத்தைகளாகத் தொல்காப்பியர் கூறுகிறார். மேற்சொல்லப்பட்ட இருபத்து நான்கு மெய்ப்பாடுகளும் அவை போல்வன பிறவும் காமவொழுக்கத்து நிமித்தமென்று சொல்லப்படும்.

கைக்கிளை பெருந்திணைகள்

'அவையுமுளவே அவையலங் கடையே' (மெய்– 21)

என்பதைக் கைக்கிளைக்குரிய மெய்ப்பாடு சொல்லியதாகவும்,

'இன்பத்தை வெறுத்தல், துன்பத்துப் புலம்பல்,
எதிர்பெய்து பரிதல், ஏதம் ஆய்தல்,
பசியட நிற்றல், பசலை பாய்தல்,
உண்டியிற் குறைதல், உடம்பு நனி சுருங்கல்
கண்துயில் மறுத்தல் கனவொடு மயங்குதல்,
பொய்யாக் கோடல், மெய்யே என்றல்
ஐயம் செய்தல், அவன்தமர் உவத்தல்,
அறன் அழித்துரைத்தல், ஆங்கு நெஞ்சழிதல்,
எம்மெய்யாயினும் ஒப்புமை கோடல்,
ஒப்புவழி உவத்தல், உறுபெயர்கேட்டல்,
நலத்தக நாடின் கலக்கமும் அதுவே' (மெய்–22)

என்ற இருபதையும் பெருந்திணைக்குரிய மெய்ப்பாடு சொல்லியதாகவும் முதல் உரையாசிரியர் இளம்பூரணர் கருதுவர்.

கைக்கிளை பெருந்திணை முதல் முடிவுத் திணைகளாகத் தொல்காப்பியர் சொல்லியிருந்தாலும் இவ்விரு திணைகளும் பெருக்கமில்லா மிகச் சுருக்கமுடையன. கைக்கிளைக் குறிப்பே, பெருந்திணைக் குறிப்பே என நடைப்படுத்துவர் தொல்காப்பியர். கைக்கிளை பெருந்திணைக்கு இலக்கியங்களும் போதிய அளவிற்குக் கூட இல்லை. தொல்காப்பியர் சொல்லிய குறிப்புகளுக்கும் இலக்கிய விளக்கங்கள் கிடைக்கவில்லை.

Koviloor Digital Library



மெய்ப்பாட்டிற்குரிய தலைவி ஐந்திணைத் தலைவியாக இருக்க முடியுமேயல்லாமல் பெருந்திணைக்கு உரியவளாகக் கருத முடியவில்லை. தலைமகன் பிரிந்த துன்பப் பொழுதில் வெளிப்படும் இரங்கல் உணர்ச்சியின் மெய்ப்பாடுகளாகவே இவை புலப்படுகின்றன.

### அழிவில் கூட்டம்

வரைந்தெய்துங் கூட்டத்திற்கு ஏதுவாகிய எட்டு மெய்ப் பாடுகள் அழிவில் கூட்டம் என்னுந்தலைப்பில் இடம் பெற்றுள்ளன. அழிவில் கூட்டமென்பது, வரைந்தெய்துங் கூட்டத்தையே குறிப்பிடும். அவை முட்டு வயிற்கழறல், முனிவு மெய்நிறுத்தல், அச்சத்தில் அகறல், அவன் புணர்வு மறுத்தல், தூது முனிவின்மை, துஞ்சிச் சேர்தல், காதல் கைம்மிகல், கட்டுரையின்மை, என்பனவாகும்.

### தலைமக்களுக்குரிய ஒப்புமைகள்

காம நிகழ்ச்சியின் கண் ஒத்த அன்பினராய்க் கூடுதற்குரிய தலைவனும், தலைவியும் ஆகிய இவ்விருவர் பாலும் குடிப்பிறப்பு, அதற்குத்தக்க நல்லொழுக்கம், ஆள்வினைத் தன்மை. பருவம், வடிவம், வடிவ வனப்பினை வாயிலாகக் கொண்டு நிகழும் அன்பு, உள்ளத்தை ஒருவழி நிறுத்தல், எல்லா உயிர்களிடத்தும் அருளுடையராதல், அறிவு, தெய்வப்பொலிவு, இப்பத்தும் தலைவன் தலைவிக்குரிய ஒப்புமைக் குணங்களாகும்.

### காமக் குறிப்பாகாதன

நிம்பிரி, கொடுமை, வியப்பு, புறமொழி, வன்சொல், பொச்சாப்பு, மடிமை, குடிமை, இன்புறல், ஏழைமை, மறப்பு, ஒப்புமை என்ற பன்னிரெண்டும் காமக் குறிப்பாகாதன. இவையெல்லாம் இல்லாமை நல்லது என அறிவுடையோர் கூறுவர்.

### மெய்ப்பாடுகளின் நுட்பம்

மெய்யின்கண் உணர்வு எவ்வுயிர்க்கும் வெளிப்படும் ஆனால் மெய்யுணர்வு அறியும் அறிவு மனிதர் எல்லார்க்கும் வாய்த்து விடுவதில்லை. மெய்ப்பாடு அறிதிறன் உயர்திணை மாந்தர்களுள்ளும் தொல்காப்பியர் போன்ற மிகச் சிறந்த அறிஞர்களுக்கே வாய்க்கும். மெய்ப்பாடு அறிதலால் உளப்பாங்கையும் அறிய முடியும். மெய்யின் நிகழ்ந்ததாயினும் உளத்தால் மெய்யில் நிகழ்ந்ததாகும். எனவே மெய்ப்பாட்டறிவு என்பது உள்ளம் அறியும் அறிவாகும். இம்மெய்ப்பாடு அறிவாரை.

Koviloor Digital Library



"கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்
உணர்வுடை மாந்தர்க் கல்லாது தெரியின்
நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே' (மெய்-27)

என இலக்கணப்படுத்துவர் தொல்காப்பியர். இவரல்லாத ஏனையோர் மெய்ப்பாட்டுப் பொருளை எண்ணுதற்கும் அரியராவர்.

*முடிவுரை*

*தொல்காப்பியர் பொருள் மெய்ப்பாடு பற்றிப் பொதுவாக கருதினாலும் திணை இலக்கியமே அவர் கண்முன் நிற்கிறது. களவு வாழ்க்கையில் ஈடுபடும் தலைமக்களின் உடலின் கண் தோன்றும் மெய்ப்பாடுகளே அதிகம் காணப்படுகின்றன. உலக மக்களின் அகவாழ்வியலும் புறவாழ்வியலும் தோன்றும் மெய்ப்பாடுகள், மக்களின் மன உணர்வுகளை அறிந்து கொள்ளுவதற்கு பெரிதும் உதவுகின்றன.*

Koviloor Digital Library

## 6. தொல்காப்பிய மெய்ப்பாடு சில சிந்தனைகள்

அன்னிதாமசு
சென்னை

மெய்ப்பாடு பற்றிய கல்விக்கு, 'மெய்ப்பாட்டியல்' எனும் தனியியல் ஒன்றை அமைத்துள்ளது, தொல்காப்பியம். இதில், 'அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப' (தொல். 1197) என்ற சொல்வருகை உண்டு. இவ்வியலுக்கு வெளியே, உவமவியலிலும், செய்யுளியலிலும், இச்சொல் ஆளப்படுகின்றது. மெய்ப்பாடு எட்டு என்ற எண்ணிக்கை பற்றிய கருத்து உவமவியல் நூற்பாவில் வலியுறுத்தப்படுகின்றது.

பெருமையும் சிறுமையும் மெய்ப்பாடு எட்டன்
வழி மருங்கு அறியத் தோன்றும் என்ப (தொல்.1240)

செய்யுளியலில், செய்யுளுறுப்பும், ஒன்றாக மெய்ப்பாட்டைச் சுட்டியதுடன் (...பயனே மெய்ப்பாடு எச்சவகை எனாஅ, . . தொல். 1259) அதற்கு விளக்கமும் அளிக்கின்றது.

உய்த்துணர்வு இன்றித் தலைவரும் பொருளான்
மெய்ப்பட முடிப்பது மெய்ப்பாடு ஆகும். (தொல். 1460)

இதில் மூன்று கருத்துக்கள் முன்னிற்கின்றன. உய்த்துணர்தல் மெய்ப்பாட்டிற்குத் தேவைப்படாது, அது வெளிப்படையாக அமையும். பாடுபொருள் சூழற்பொருள் எதுவோ அதைச் சார்ந்து மெய்ப்பாடு வெளிப்படும். மெய்யில் உடலில் தோன்றும் வண்ணம் அது புலப்படும் என்பவை அவை

தொல்காப்பியத்தின் ஓரியலின் கருத்து தன்னில்தான் நிறைந்து அமைந்துவிடுவதில்லை. பிற இயல்களிலும் மேவி நிற்கின்றது என்ற எண்ணத்திற்கு மெய்ப்பாடு ஒரு சான்றாகும்.

### வகைப்பாடு

மெய்ப்பாடு பற்றியமையும் ஒரு கருத்து அது எண்வகைப் படும் என்பது. எட்டன் பட்டியல் மெய்ப்பாட்டியலில் மட்டும் உண்டு.

நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று— (தொல். 1197)

Koviloor Digital Library



இப்பட்டியலைப் பார்க்கும்போது சில எண்ணங்கள் எழுகின்றன. இம்முறைவைப்புக்குக் காரணம் உண்டா? இவற்றையும் அகத்திற்கு உரியன, புறத்திற்கு உரியன எனப் பகுக்க முடியுமா? மெய்ப்பாட்டியலுக்கு வெளியே இவை எங்கெங்குத் தொல்காப்பியத்தில் இடம்பெறுகின்றன? அதிலிருந்து கிடைக்கும் கருத்து என்ன? மெய்உடல் என்ற நிலையில், மெய்ப்பாடு ஐம்புலனுணர்வின் உடல்சார்ந்து அமையினும், ஆறறிவாம் மனத்தின் செயற்பாடு கருதப்பட்டமை உளதா? என்பன போன்று சிந்தனைகள் எழுகின்றன.

மெய்ப்பாட்டில் இரு தளங்கள் அமைகின்றன. ஒன்று. பாத்திரம் / கதை மாந்தர் புலப்படுத்துவன. மற்றொன்று பார்வையாளர் / சுவைஞர் / வாசகர் வெளிப்படுத்துவன. இவற்றுள் முன்னதைப் பற்றி மெய்ப்பாட்டியல் ஆய்வு செய்கின்றது. பாத்திரம் / கதைமாந்தர் இந்த எண்சுவைகளை வெளிப்படுத்தும்போது, தாமே களமாக அவை தோன்றுமா - அன்றி, பிறர் களமாக அவை தோன்றுமா என்பது ஐயம். சான்றாக, நகை (சிரிப்பு) எனும் மெய்ப்பாட்டை ஒருவர் புலப்படுத்த அமையும் நான்கு களமும் பிறர்சார்பின. எள்ளல் பிறரை எள்ளி நகைத்தல். இளமை- பிறரது குழந்தைத்தனத்தால் - குழந்தைச் செயலால் தமக்கு ஏற்படும் சிரிப்பு (Innocence). பேதைமை பிறரது அறியாமை செயல் பாட்டடிப் படையாகத் தமக்கு எழும் சிரிப்பு (ignorance). மடன் பிறரது அறிவின்மை - செயலடிப்படையால் தமக்கு எழும் நகைப்பு (Foolishnees), என்பன. நகை மெய்ப்பாடு, பிறர் களமாகத் தோன்றுவதை இவை வெளிப்படுத்துகின்றன.

களன் பிறருக்கு, மெய்ப்பாடு பாத்திரத்திற்கு என்ற இந்நிலை நகையில் மட்டுமே உளதோ என்று தோன்றுகிறது. பிற அனைத்தும் இதுபோலன்றி, தன்னுணர்வு, ஒத்துணர்வு என்ற இரு பான்மையில் தற்சார்களனாகி வருகின்றன என்பது எண்ணம், சான்றாக, இளிவரல் எனும் 'துன்பம்' என்பதைக் காட்டலாம். தனக்கோ பிறர்க்கோ ஏற்பட்டுள்ள முதுமைநிலை காரணமாக, நோய்ப்பாங்கு காரணமாக, துயரங்கள் காரணமாக, மெலிவு நிலைதாழ்ச்சி காரணமாகத் துன்பம் எனும் மெய்ப்பாட்டை வெளிப்படுத்திக் காட்டலாம்.

தன்னனுபவம் மெய்ப்பாட்டிற்கு அடிப்படையாக அமைவதில், தற்சார்ந்து புலப்படுதல், தற்சார்பின்றியும் புலப்படுதல் எனவும் அணுகலாம். உவகை, கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் புலனுணர்வடிப்படையினது என்றால், தற்சார்ந்தே புலப்பட வாய்ப்புண்டு. வியப்பு எனும் மருட்கை, தன்னோடு தொடர்பு இல்லாத புதுமை பற்றித் தோன்றுவதோ, அழுகை, பிறர் தளர்ச்சி, தாழ்ச்சி கண்டு

Koviloor Digital Library



எழுவதாக அமைவதோ இதிலிருந்து ஒரு வட்டம் அகல்கின்றது. இவ்வாறு கணிக்கும் போது, உணர்வுச் சுவைகள், உடல்மொழியாக, (body-language) வெளிப்படுவதில் மனம் அறிவு முக்கியப்பங்கு வகிப்பது தெரிகிறது. நகையை முதலில் வைத்துப் பிறவற்றை அடுத்து வைத்ததும் இவண் சுட்டிய களவேறுபாடுபற்றிப் போலும். நகையும் உவகையும் மகிழ்ச்சி, களிப்பு என அண்மித்தோன்றினும் பிறர்சார்களன், தற்சார்களன், என வேறுபடுவதால், பட்டியலின் ஈரெல்லையில் அகன்று வைக்கப்பெற்றன போலும்.

இடம்

எண்வகை மெய்ப்பாடுகளில், சில மெய்ப்பாட்டியலில் மட்டும் இடம் பெற, பிற, தொல்காப்பியத்தின் பிற இயல்களிலும், அதிகாரங்களிலும் வருவது தனித்த சிந்தனைக்குரியது. அவற்றுள்ளும், சில மெய்ப்பாடுகள் ஒரு சில குறிப்புப் பெற, பிற மெய்ப்பாடுகள் பல்முறை குறிக்கப்படுவதும் இவ்வாறே சிறப்பாக எண்ணுதற்குரியது.

1. அழுகை, 2. இளிவரல், 3. பெருமிதம், என்பன என்னும் சொற்கள் மெய்ப்பாட்டியலில் மட்டும் இடம்பெறுகின்றன. (பார்க்க. தொல்காப்பியச் சிறப்பகராதி) 4. மருட்கை 5. வெகுளி ஆகியன இரண்டிரண்டு வருகை பெறுகின்றன. மருட்கை பொருளதிகாரத்தில் வெகுளி, சொல்லதிகாரம், வருகின்றது. 6. உவகை மூன்று வருகையுடன் சொல்லதிகாரம், பொருளதிகாரங்களில் இடம் பெறுகின்றன. 7. நகை, ஐந்து வருகையுடன்பொருளதிகாரத்தில் மட்டும் காணப்படுகின்றது. 8. அச்சம் என்பது சொல் -பொருளதிகாரங்களில் பரந்து 14 வருகை பெற்று முன்னிற்கின்றது. சொல், சொற்பொருள் நோக்கில் மெய்ப்பாட்டுச் சொற்கள் சொல்லதிகாரத்தில் வருகின்றன. பொருளதிகாரத்தில், பாத்திரங்களின் பண்பு, உணர்வு, சூழல் சார்ந்து வருகின்றன. எனினும், இந்த எண் சுவைகளை, அகத்திற்குரியன புறத்திற்குரியன என வகுத்துக் கொள்ள ஏது புலப்பட்டிலது.

நகையும் உவகையும்

நகை சிரிப்பு, உவகை உவப்பு அதாவது இரண்டும் மகிழ்ச்சி இரண்டும் இன்பம். இரண்டிற்கும் இடையேயுள்ள வேறுபாடு நுட்பமானது. நால்வகை தோற்றக் களங்கள் காரணமாக இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டை மெய்ப்பாட்டியலில் காணலாம்.

எள்ளல் இளமை பேதைமை மடன் என்று
உள்ளப்பட்ட நகை நான்கு என்ப (தொல். 1198)
செல்வம் புலனே புணர்வு விளையாட்டு என்று
அல்லல் நீத்த உவகை நான்கே (தொல். 1205)

Koviloor Digital Library


இவ்வேறுபாடு பற்றியும், பட்டியலின் ஈரெல்லையில் இவை போதிய இடைவெளியுடன் அமைக்கப்பட்டுள்ளன எனல் தகும்.

பிற இயல்களிலுள்ள கையாளுகையைப் பார்க்கும் போது, நகைக்கும் உவகைக்கும் இந்த அளவு வேறுபாட்டுத் தெளிவு இருப்பதாகத் தெரியவில்லை. களவியல் (தொல். 1047, 1060) கற்பியல் (தொல். 1097) பொருளியல் (தொல்.1188) செய்யுளியல் (தொல்.1429) ஆகியன 'நகை'ச் சொல்லாட்சி உடையன.

உள்ளுறை உவமத்தின் ஐவகையுள் ஒன்று நகை உரை வகை நான்கில் ஒன்று 'பொருளொடு புணர்ந்த நகைமொழி' எனப் பொருளியலும் செய்யுளியலும் தருவன தனித்தன. களவில் தலைவியின் புன்னகை, கற்பில் புன்முகம் காட்டும் புதல்வன் என்பன மகிழ்ச்சி வெளிப்பாடு இவற்றில் மெய்ப்பாட்டியலின் களங்கள் இல்லை. ''பலரும் அறிந்தால் நகைப்பிற்கு இடமாகுமெனக் கூறும் போது" (தொல்காப்பியம் தெளிவுரை. ப. 419) என்பது மட்டும் 'எள்ளல்' என்பதில் (பரிகசிப்பு) உட்படக் கூடும்.

உவகைச் சொல்லாட்சி, 'உவப்பே உவகை' (தொல். 789) என உரியியலிலும், அச்சமும் உவகையும்' எனப் புறத்திணையிலும் (தொல்.1037) வருவன. மெய்ப்பாட்டியல் களங்களை ஒட்டி அமைந்தில. 'ஏமம் சான்ற உவகைக் கண்ணும்' (தொல். 1057) எனக் களவியலில் வருவதே அகப்பொருட் சார்புடனமைந்து, தலைவி கூற்றுச் சூழலில், புலன் அல்லது புணர்வு என்ற மெய்ப்பாட்டுக் களன் கொள்கின்றது.

ஒரு பட்டியலின் இரண்டு எல்லைகளில் வைக்கப்பெற்றிருப் பினும், நகையும் உவகையும் அந்த அளவு அகற்சி காட்டுகின்றனவோ அந்த அளவு அணுக்கம், 'மகிழ்ச்சி' என்பதால் பிற இயலில் காட்டுகின்றன, எனக் கூறத் தோன்றுகின்றது.

**மருட்கை**

மருட்கை, பொருளியலில் (தொல். 1182) தலைவன் வரக் காலந்தாழ்ந்தவிடத்துத் தலைவியின் மருட்கை மொழியாகக் காட்டப்படுவதில் வியப்பு என்பதுடன் மயக்கம் என்பதையும் சுட்டுகின்றது. மரபியலில் நூலின் உரைபற்றி, 'ஐயமும், மருட்கையும் செவ்விதின் நீக்கி' (தொல். 1604) என அமையும்போது மயக்கம், (பொருள்) திரிபுணர்ச்சி என விளங்கிக்கொள்ள முடிகின்றது. இவை, மெய்ப்பாட்டியல் களங்களுடன் நிற்கவில்லை என்பது சுட்டற்குரியது.

**வெகுளி**

வெகுளியின் வெளிக்குறிப்பு இரண்டும் சொல்லதிகாரத்தில் உள்ளன. வேற்றுமையியல், ஐகாரமாகிய இரண்டாம் வேற்றுமைப்

Koviloor Digital Library



பொருண்மைப்பட்டியலில் (தொல்556) இதனை உட்படுத்தியது உரியியல்,

'கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள' (தொல் 855)

என நிறக்குறியீடுகள் சுட்டுகின்றன. முகம் கறுத்தது, கண் சிவந்தன எனக் கோபம் எனும் உணர்வை வெளிப்படுத்தும் இந்நிறச் சொற்கள் தனித்த சிந்தனைக்குரியன. இந்த ஒரு மெய்ப்பாட்டிற்கே இவை சுட்டப்படுவதும் எண்ணற் குரியதாகும். நகை முதலிய பிற ஏழு மெய்ப்பாடுகட்கும் கூட இத்தகு நிறச் சுட்டு அமைய முடியுமா? இலக்கியத்திலோ, வாழ்வியலிலோ இவை பற்றிய குறிப்புக்கிடைக்க வாய்ப்பு உளதா? குறியீட்டகராதிகள் வழி கருத்து விளக்கம் பெற இடம் உண்டா? போன்று எழும் ஐயங்கள் உள.

மெய்ப்பாடும் குறியீடும்

கருமை, துக்கக் குறியீடாக அமைவதால், அழுகையை அந்நிறம் குறிக்கலாம். நேரெதிராக அமையும் நகைக்கு, வெண்மை நிறமாகக் கூடும். இளிவரல், பசலை நிறமான இளமஞ்சள், மருட்கை-பொன்மை, அச்சம் - ஆழ்நீலம், பெருமிதம்-வெள்ளி நிறம், உவகை இளஞ் சிவப்பு என்பன போன்று கருதிப்பார்க்கலாம். முழுமையான ஆழ் ஆய்வுக்குப் பின்னே முடிவுக்கு வரஇயலும்.

வெண்மையும் கருமையும் பொதுவாக 'நிறம்' எனக் கருதப்படாமையும் உண்டு, எந்த நிறமும் அற்றது எனவும் எல்லா நிறமும் உள்ளடக்கியது எனவும் கருத்து அமையும். பல நிறங்களில் தொடர்ச்சி அல்லது நிறமாலை எனப் பார்க்கும் போது வானவில், ஊதா, ஆழ்நீலம், நீலம்- பச்சை- மஞ்சள் -ஆரஞ்சு-சிவப்பு என அமையும். இடைக்கால வேதியல் முறையில் (alchemic order) மஞ்சள். நீலம்- பச்சை - கறுப்பு- வெள்ளை- சிவப்பு- பொன்மை என ஏழு அமையும். எனவே, எண்வகை மெய்ப்பாட்டுக்கும் இவற்றை ஒத்ததொரு நிறமாலை அமைக்கக் கூடும் எனவே தோன்றுகிறது.

வெண்மை, தூய்மைக்கும், எளிவந்த தன்மைக்கும் (innocence) சார்த்தப்படுவதுண்டு, கருமை, இறப்பு, துக்கம். (mourning) ஆகியவற்றோடு இணைக்கப்படுகிறது. நெருப்பு குருதி ஆகியவற்றின் நிறமான சிவப்பு, கோபம், வலியத்தாக்குதல் (aggression) என்பனவற்றைச் சுட்டி நிற்கின்றது. நீலம், சிந்தித்தலையும் (thinking) மஞ்சள், உள்ளுணர்தலையும் (intuition) பசுமை புலனுணர்தலையும் (sensatian) இளஞ்சிவப்பு, புலனின்பத்தையும் காட்டுவதுண்டு. நிறக் குறியீடுபற்றிய இத்தகு உலகளாவிய சிந்தனைகள் முழுமையாகப் பெறப்பட்டு மெய்ப்பாட்டு நிறமாலை அமைக்க முடியலாம்.

Koviloor Digital Library



அச்சம்

மிகுதியாகப் பேசப்படும் மெய்ப்பாடாக அச்சம் அமைவதை உளவியல் நோக்கில் பார்ப்பது தனியாய்வுக்குரியது.

அச்சம், சொற்பொருளாய்வாகச் சொல்லதிகாரத்திலும், பண்பு, உணர்வுப் புலப்பாடாகப் பொருளதிகாரத்திலும் பொருந்துகின்றது. வேற்றுமையியலில், ஐந்தாம் வேற்றுமைக்குரிய பொருளாகிறது. (தொல். 562) வேற்றுமை மயங்கியலில் அச்சக் கிளவிக்கு ஐந்தும் இரண்டும் (தொல். 584) என உருபு மயங்குதல் சுட்டுப்பெறுகின்றது. இடையியலில், 'கொன்' எனும் இடைச்சொல் அச்சப் பொருண்மையில் வருவது (தொல். 739) தரப்படுகின்றது. உரியியல், பேம், நாம், உரும் என அச்சம் பற்றி வரும் மூன்று பரியாயச் சொற்களையும் (தொல். 848), கடி எனும் சொல் அச்சம் குறித்து வருவதையும் (தொல். 866) சுட்டுகின்றது.

பொருளதிகாரத்தில், அகத்திணை, (தொல். 982), புறத்திணை (தொல். 1037) களவியல் (தொல். 1041, 1045, 1057, 1082), கற்பியல் (தொல். 1092, 1094) பொருளியல் (தொல். 1171, 1178), ஆகியன அச்சம் எனும் சொல்லுக்கு இடம் தருகின்றன. புறத்தை விட அகத்தில் அச்சத்தின் இட மிகுதி இங்குப் புலப்படுகின்றது.

புறத்திணை, நிமித்தம் காரணமாக ஏற்படும், அச்சம் பற்றிக் கூறுவது, அணங்கு-விலங்கு கள்வர் இறை (அரசன், (தொல். 1202) எனும் மெய்ப்பாட்டியல் சுட்டும் களங்களுள் உட்படாதனவாகும்.

அச்சமும் உவகையும் எச்சம் இன்றி
நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும் (தொல். 1037, 16–17)

என்பது, 'புரவலனுக்கு ஏற்பட இருக்கும் தீமைக்கு அச்சமும் நன்மைக்கு மகிழ்ச்சியும் அடையும் இரவலன், நாள் புள்நிமித்தம் பார்க்கும் நிலையும் என உரைபெறுவது கவனிக்கத் தக்கது.

அகப்பொருட் சார்ந்து வரும் இடங்களும் நால்வகைக் களத்துள் முழுமையாக உட்படுவன அல்ல, தலைவிக்குரிய பண்புகளுள் ஒன்றாக அச்சம் அமைகின்றது. (1045) 'கண்ணே அலமரல் இமைப்பே அச்சம் (1041) எனத் தலைவியை மானுடப்பெண் என உணர அச்சப்பண்பு இடம் தருகின்றது. நற்றாய் கூற்றுக்கும் (982). தலைவி கூற்றுக்கும் (1057) அச்சம், சூழல் அமைக்கின்றது. களவுத் தலைவன் இரவுக்குறிக்கு வருங்கால், வழியருமை பற்றி அச்சம் கொள்ள மாட்டான் (1082) கற்பில் அவன் பிரியும் போது அவன் வழிப்பயணம் பற்றித் தலைவி அச்சம் கொள்கிறாள். (1094) கற்பில், தலைவன், கூற்று, பிரிவுச் சூழலில் அவள் அச்சம் கொள்ளும் போது அமைகின்றது. (1092). தலைவன் பிரிந்து விடுவானோ என்ற அச்சம் காரணமாக உடன்போக்கு அமைதலும் (1171), அவன் நலம் பாராட்டும் போது, பிரிந்து விடுவானோ என்ற அச்சம் தலைவிக்கு ஏற்படுதலும் (1178)

Koviloor Digital Library



பொருளியல் தரும் செய்திகளாகும். இவற்றில் பெரும்பாலும் தலைமகளைச் சார்ந்து அச்சம் வருவது சிந்தித்தற்குரியது.

**களங்கள்**

எண்வகை மெய்ப்பாடுகளைத் தொல்காப்பியத்தின் பிற இயல் கருத்துக்களோடு ஒத்தும் உறழ்ந்தும் மேலே கண்டமை போன்று எண்வகை மெய்ப்பாட்டுக் களங்கள் முப்பத்திரண்டையும் (8*4=32) பிற இயல்களில் வரும் தகவலொடு பொருத்திப் பார்க்கவும் இடனமையும் எனத் தோன்றுகின்றது. அது தனி ஆய்வாகும்.

**உணர்ச்சி**

மெய்ப்பாட்டியலின் இறுதிக்கு வரும்போது, மெய்ப்பாடுகளை உணர, உணர்த்தப் புலனுணர்ச்சியின் இன்றியமையாமை புலப்படுத்தப்படுவதும் சிந்தனைக்குரியது. கட்புலனும், செவிப்புலனுமாகிய இரு உணர்வுகளின் கூர்மை, மெய்ப்பாட்டை உணர மிகத் தேவையாகும் என்பது தொல்காப்பியக் கருத்து.

கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்
உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே (தொல். 1221)

'கண்ணாலும், செவியாலும், தெளிவாக அறிந்து உணரும் அறிவுடையார்க்கு அன்றி, ஆராயுமிடத்து, நல்நயம், சான்ற மெய்ப்பாட்டின் பொருள்களை எண்ணி அறிந்து கொள்ளுதல், அரிதாகும்' என்பது உரை.

இங்குச் சில சிந்தனைகள் எழுகின்றன. எந்த மெய்ப்பாடு எந்தப் புலன் சார்ந்தது எனப் பார்க்க முடியுமா? ஒரு புலன் சார்ந்த மெய்ப்பாடு உண்டா? சில புலன்கள், குறிப்பிட மெய்ப்பாட்டில் முன்னிற்கின்றன எனக் கண்டு கணிக்க முடியுமா? ஐம்புலன் மெய்ப்பாடு எது-எவை? எந்தப் பொறிகள் மெய்ப்பாட்டுப் புலப்பாட்டில் பெரிதும் பங்கேற்கின்றன? சுவையிலிருந்து மெய்ப்பாட்டுக்கும், மெய்ப்பாட்டிலிருந்து அவிநயத்திற்கும் எனப் பார்த்தால் விளக்கமும் தெளிவும் பெற இயலுமா?

சுவை நுண்மையாக அமையலாம். ஆனால் மெய்ப்பாடு, உடலில் வெளிப்படுவதால் பருமையுடையது. எனினும், நகை-சிரிப்பாக வாய்ப்புலனில் வெளிப்படல், அழுகை-கண்ணீராகக் கட்புலனில் வெளிப்படல் என எளிமையாக எல்லா மெய்ப்பாட்டையும் கூறிக் காட்டல் கடினம். இவையும், கைகொட்டிச் சிரித்தல் என வாய்மெய்ப்புலன்கள், ஓலமிட்டுப் புரண்டழுதல் என வாய் - மெய்- கட் புலன்கள் இணைய வரலாம். முகம், கண், வாய்- உதடு-, உடல் செயற்பாடுகள் இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், போன்றவற்றில் ஒருங்கிணைப்புடன் வெளிப்படுவது நினைத்துப்பார்ப்பதற்குரியது. சொல்லின்றி

Koviloor Digital Library



-பேச்சின்றி உடலசைவுகள்- பொறிச் செயல்களால் இவை புலப்படுத்தப்படுவதற்கு வாய்ப்புண்டு. எனினும், உவகை எப்படி வெளிப்படுத்தப்படும்? மகிழ்ச்சி- பூரிப்பு என முக-கண் வெளிப்பாடா? இது சிந்தனைக்குரியது.

அடியார்க்கு நல்லார், இளங்கோவின் சிலப்பதிகார அரங்கேற்றுக் காதைப்பகுதிக்கு உரையெழுதும் போது அவிநயம் பற்றித்தரும் விளக்கங்கள் இங்குக் கருதுதற்குரியன. அச்சம், உவகை எனச் சான்றுக்காக இரண்டனை முன்வைக்கலாம்.

சுவை ஒன்பது வகைப்படும் எனக் கூறி 'பயச்சுவை அவிநயம்' என்பதனை அவற்றுள் ஒன்றாக அமைத்து விளக்குகின்றார். ஒடுங்கிய உடம்பு, நடுக்கம், விழித்த கண், கலங்கிய உள்ளம், ஒளிந்து வருதல், கையால் மறுப்புக் காட்டல், அங்குமிங்குமாகத் திரும்பிப்பார்த்தல் என்பன அச்ச வெளிப்பாடுகள்.

அச்ச அவிநயம் ஆயுங்காலை
ஒடுங்கிய உடம்பும் நடுங்கிய நிலையும்
அலங்கிய கண்ணும் கலங்கிய உளனும்
கரந்துவரல் உடைமையும் கை எதிர் மறுத்தலும்
பரந்த நோக்கமும் இசை பண்பினவே (10)

இவ்வாறே, அவிநயமென்பது பாகவம், அஃது இருபத்து நான்கு வகைத்து என விளக்குகின்றார். அதில் உவந்தோன விநயம் மலர்ந்த கண்கள், இனிய உள்ளம், கோபமற்ற புன்முறுவல், உட்காருதல், போகுதல், பாடுதல் போன்ற ஒருங்கிணைந்த வெளிப்பாடுகளுடையதாக அமைக்கப்படுகின்றது.

உவந்தோன் அவிநயம் உரைக்கும் காலை
நிவந்து இனிது ஆகிய கண்மலர்உடைமையும்
இனிதின் இயன்ற உள்ளம் உடைமையும்
முனிவின் அகன்ற முறுவல் நகை உடைமையும்
இருக்கையும் சேறலும் கானமும் பிறவும்
ஒருங்குடன் அமைந்த குறிப்பிற்று அன்றே. (11)

இங்கு, உவகையில் அமையும் 'முறுவல் நகை' நகை எனும் மெய்ப்பாட்டைச் சொல்லால் ஒத்தும் பொருளால் அகன்றும் பெற உதவுகின்றது.

மேலும், சுவையும்-புலனும் மெய்ப்பாடாக இணையுமாறு அடியார்க்கு நல்லாரால் எடுத்து மொழியப்படுவது முத்தாய்ப்பாகும். கட்புலனின் முதன்மை, தொல்காப்பியத்தில் போல் இங்கு புலப்படும்.

சுவைகளில் எண்ணம் வந்தால் (சத்துவம்) தோற்றும் உடம்பில்
உடம்பின் மிகத் தோற்றும் முகத்து, முகத்தின் மிகத்தோற்றும்
கண்ணில் கண்ணின் மிகத்தோற்றும் கண்ணின் கடையகத்
தென்றவாறு.

Koviloor Digital Library



மூக்கு, செவி என்ற இரு புலன்கள், கருத்து வெளிப்பாட்டுப் புலங்களாக முன்னிற்காமையால், ஒருவேளை, இவை சுவை மெய்ப்பாடுகளை வெளிப்படுத்துவதில் பங்கு பெறாதிருக்கலாம். பிற புலன்கள், முதன்மை பெறுகின்றன. அடியார்க்கு நல்லார் கருத்துப்படி 'கண்' முதன்மை பெற்றாலும், அண்மை நோக்குக்கு, அடுத்து இருக்கும் பார்வையாளருக்கு, எளிதில் புலப்பட்டுவரும், ஆனால் அகன்றிருந்து பார்ப்பவருக்கு 'மெய்'ப்புலன் சார்ந்து முகம், கை, கால்-உடல் என்பன முன்னிற்பதே மெய்ப்பாட்டைத் தெளிவாகப் புலப்படுத்தும் எனக் கருதலாம்.

முடிவுரை

தொல்காப்பியம் மெய்ப்பாட்டுக்குக் கோட்பாடுகள் வகுக்கின்றது. அதன் எண்வகை மெய்ப்பாடு என்ற பட்டியலின் வருகை முறைக்குத் தகுந்த காரணம் உளது. நகை, 'பிறர்' களனாவதால், பிற ஏழிலிருந்தும் வேறுபட்டது. நகையும் உவகையும் உணர்வால் 'மகிழ்ச்சி'யாக அமையினும் களத்தாலும், வெளிப்பாட்டாலும் வேறுபட்டமையால் பட்டியலில் ஈரெல்லையில் வைக்கப்பெறுகின்றன. மெய்ப்பாட்டியலுக்கு வெளியே செல்லாது அழுகை, இளிவரல், பெருமிதம் என்பன அமைகின்றன. அச்சம் பரவலாகப் பல இயல்களிலும் இடம் பெற, அது, மகளிர் பண்புகளுள் ஒன்று என்ற கருத்து அடிப்படையாகத் தென்படுகின்றது. வெகுளி மட்டும் நிறக் குறியீட்டுச் சுட்டுப் பெறுவது பிற உணர்வுகட்கும் விரித்துக்காண விழைவு ஏற்படுத்துகின்றது. புலன்களும் மெய்ப்பாடும் என இணைத்து நோக்குவதில் சிந்தனைப் புதுமை ஏற்படுகின்றது. அடியார்க்கு நல்லார் உரைப்பகுதியும் மெய்ப்பாட்டியலும் இணைந்த ஆய்வு வேண்டப்படு மொன்றாகும்.

அடிக்குறிப்பு

1. தொல்காப்பியம் தெளிவுரை ச.வேசுப்பிரமணியன், மணிவாசகர் பதிப்பகம்,சென்னை, மூன்றாம் பதிப்பு 1999. நூற்பா எண்கள் இந்நூலில் உள்ளவாறு.
2. தொல்காப்பியச் சிறப்பகராதி, (தொகுதி) ப.வேநாகராசன், த. விஷ்ணுகுமரன், பன்னாட்டுத் திராவிட மொழியியல் நிறுவனம், திருவனந்தபுரம், 2000.
3. Antithesis of WHITE, black is its equal in terms of absolute colour like white it can be set at either end of the chromatic seale as a boundary to both warm and cold colours. . . . black can become the arsenics on the sum the relegation or the reechoes of colour

Koviloor Digital Library



white. . . . Absolute in itself. . .. it can signify either the absence of colour or the sum of all colours. The penguin Dictionary of symbols. Jean chevalier and Alain Cheer braut, Penguin Books, London, 1996, pp. 92, 1105

4. Colours – alchemie order – yellow, blue, green, black, white, red, gold, - A Dictionary of symbols, J.E. cirlet, Doven publications, New york, 2002. P.60.

5. White – widely associated with purity. . . . . innocence and purity. Europeans associate black with death it is used on days of mourning.

   Red is the colure of fire and blood hence its association with anger and aggression – 1000 symbols, Rowna & Rupert shepherd, Thames and Hudson, New York, 2002. PP. 345, 343.

6. blue. . . .stands for thinking; yellow,. . . .for intuition; red. .. .for the surging and tearing emotions; while green,. . . .represents the function of sensation – a dictionary of symbols Op. cir., p. 53

7. pink -3 sensuality emotions joy, youth. – A Dictionary of symbols and imagery Ad de varies, North Holland publishing company, London, 1974, P. 367.

8. தொல்காப்பியம் தெளிவுரை, முன்சுட்டியது. ப. 401.

9. மேற்படி ப. 493

10. சிலப்பதிகாரம் மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும் (பதி) உவே. சாமிநாதையர், ஸ்ரீதியாகராச விலாச வெளியீடு, சென்னை. 1968 ப. 83

11. மேற்படி ப. 85

12. மேற்படி ப. 84

Koviloor Digital Library

## 7. தொல்காப்பியரும் இளம்பூரணரும்

க. வெற்றிவேல்
அண்ணாமலைநகர்,

தொல்காப்பியம் என்னும் பழம்பெரும் இலக்கணநூல் தமிழ்மொழியின் தொன்மைக்கும் சிறப்பிற்கும் சான்றாய் விளங்குகிறது. வளமாக வாழ்ந்த தமிழினத்தின் உயர்ந்த கொள்கைகளையும் எண்ணங்களையும் உலகிற்கும் உணர்த்தும் விழுமிய நூலாய் ஒளிர்கின்றது. இதனை இயற்றிய தொல்காப்பியரின் குரல், காலத்தையும், இடத்தையும் கடந்துவந்து தெளிவாக ஒலிக்கின்றது. தொல்காப்பியம் தனக்குப் பின் தோன்றிய பல இலக்கண, இலக்கியங்களுக்கு எல்லாம் தலைமை தாங்கி வழிகாட்டி நடத்திச் செல்கின்றது.

தொல்காப்பியத்தின் கருத்தை உணரவும், உணர்த்தவும், புலவர் பெருமக்கள் காலந்தோறும் முயன்று வந்தனர். அம்முயற்சியின் விளைவாய் உரைகள் பல பெருகி உரைவளம் கொண்ட பெருநூலாய் தொல்காப்பியம் திகழ்கின்றது.

**தொல்காப்பியத்தின் தொன்மை**

தொல்காப்பியம் நிலந்தரு திருவிற்பாண்டியன் அவையில் இயற்றி அரங்கேற்றியதாகத் தொல்காப்பியப் பாயிரம் வகுத்த பனம்பாரனார். கூற்றால் அறியப்பெறுகின்றது. இந்நூல் இற்றைநாள் தமிழுக்கு கிடைத்துள்ள நூல்களுள் காலத்தால் முந்தியதோடன்றிச் சிறப்பினாலும் தமிழர் தம் மொழிச்சீர்மை, அறம், மறம், மானம், அரசு, அமைச்சு படை, செல்வம் முதலிய எல்லாச் சிறப்பும் அறிதற்கு உறுதுணையாய் நின்று உதவும் பெற்றியானும் வீழா ஞாயிறுப் போன்று நின்றொளிர்கின்றது.

**தொல்காப்பியர்**

ஒல்காப்புலமைத் தொல்காப்பியர், எனப் போற்றப்பெறும் பெரியோரே, தொல்காப்பியம் என்ற பழமையான இலக்கண நூலைத் தமிழுலகிற்கு அளித்தவர். 'தொல்காப்பியன் எனத் தன்பெயர் தோற்றி' எனத் தொல்காப்பியத்திற்குப் பாயிரம் தந்த சமகாலப்புலவர் பனம்பரனார். நூலாசிரியரைத் தொல்காப்பியர் என்ற பெயரால் விளிக்கின்றார்.

Koviloor Digital Library



"தொல்காப்பியர் இயற்பெயர் என்று கூறுவோர் அக்காலத்தில் தமிழக மக்கள் இட்டு வழங்கிய இயற்பெயர்களுள் காப்பியன்' என்பதும் ஒன்று எனவும் இயற்பெயருடன் அடைமொழி கொடுத்து வழங்கப்பெற்ற பல்காப்பியன் வெள்ளூர்க் காப்பியன் என்ற பெயர்கள் போல தொல்காப்பியன் என்ற பெயரும் தொல் என்ற அடைமொழியுடன் வழங்கப் பெற்ற பெயர் எனவும் காப்பியன் என்னும் சொல் பண்டைய நாளில் இயற்பெயராக வழங்கினமை காப்பியஞ்சேந்தன் என வழங்கும் சங்கப்புலவர் பெயரால் நன்கு புலனாகும்.

தொல்காப்பியர் என்பது ஊர்ப்பெயர் என்றும் அவ்வூரினராதலின் தொல்காப்பியன் எனப்பட்டார் என்றும் அத்தொல்காப்பியரால் செய்யப்பெற்றது தொல்காப்பியம் என்பர். சிவஞானமுனிவர்.

**காலமும் வரலாறும்**

தொல்காப்பியத்தை ஆக்கி உதவியருளிய நூலாசிரியரான தொல்காப்பியரைப் பற்றிய வரலாறுகள் ஒன்றும் தெற்றெனப் புலனாகவில்லை. ஆசிரியர் தொல்காப்பியர் வரலாற்றுண்மைகளும் நன்கு அறிதற்குரிய சான்றுகள் இந்நூலினும், பிற நூல்களிலும் தென்படவில்லை. இவ்வாறே பழங்காலந் தொட்டு இற்றை ஞான்று வரை தமிழகத்தில் வாழ்ந்த புலவர்கள், வள்ளல்கள், அரசர்கள் பெரியார்கள், கூத்தர்கள், பாணர்கள், முதலியோர்களின் வரலாறுகள். ஒன்றும் தெளிவாக அறிதற்கில்லை. வரலாறுகள் எதை எடுத்தாலும் யாருடைய வரலாற்றை ஆய்ந்துணர முற்பட்டாலும் அவற்றுள் பிற்காலக் கட்டுரைக்கதைகளையும், புகுத்தி, முற்கால வழக்கில் இல்லாதனவும், பிற்கால வழக்கில் இல்லாதனவும், பிற்காலத்தில் வந்த பாக்களைக் கொண்டு அவர் புனைந்தன வாகக் கொண்டு காட்டியும், அவர்தம் உண்மை வரலாற்றை அறிய முடியாத வகையில் வரலாற்றை எழுதிய பலர், வரலாற்று முறைக்குக் கறைசெய்து போதருவாராயினர்.

'சங்க கால நூல்களில் பல்லாயிரக்கணக்கான பாடல்கள் உள்ளன. அவற்றைப் பாடிய புலவர்களின் பெயரே தெரியாத வண்ணம் உள்ளன. ஆனால், அவர் அமைத்த அரிய சொற்றொடர் உவமை, கருத்துநயம், இவற்றைக் கொண்டே, தொகுப்பாசிரியர் வெளியிட்டுஉள்ளனர்.

தொல்காப்பியர் நூல் செய்த காலம் மிகப்பழமையான காலமென்பது எவரும் மறுக்கமுடியாத ஒன்றாகும். ஆனால் இவர்காலத்தில் தமிழில் ஆரியக்கொள்கைக் கலப்புகள் நிறைந்து விட்டன. ஆரியமொழிகளும் தமிழ் மொழியிற் கலந்து வழக்காறாக வழங்கத்தலைப்பட்டன என்பதற்குரிய சான்றுகள் இந்நூற்கண் காணப்பெறுகின்றன. அதற்குச் சான்றாக, சொல்லதிகார எச்சவியலில்

Koviloor Digital Library



'வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ' (தொல்-884)
என, வடமொழி தமிழிற்கலந்து வழங்குதற்கு வரையறை செய்து வகுத்துரைப்பதைக் காணலாம்.

தொல்காப்பியர் காலத்தினைப் பற்றி அறிஞர் பெருமக்களிடையே பல்வேறு கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன.

கி.மு. 1000-க்கு முற்பட்டது என்பர், நாவலர் சோம. சுந்தரபாரதியார். கி.மு. 3500 க்கு முற்பட்டது என்பர் க.வெள்ளைவாரணனார், கி.பி. முதல் இரண்டு நூற்றாண்டு என்பர் பி.டி. சீனிவாச ஐயாங்கார். கி.பி. 4 அல்லது 5 ஆம் நூற்றாண்டு என்பர் பேராசிரியர் எஸ்.வையாபுரிபிள்ளை. கி.பி. 5 ஆம் நூற்றாண்டு என முடிவுறுத்துவார். கே.ஏ. நீலகண்ட சாத்திரியார் எனத் தொல்காப்பியர் காலத்தைப் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன.

### தொல்காப்பிய உரை எழுந்த வரலாறு

'அனைத்துச் சிறப்பும் ஒருங்கே பெற்ற அரிய பெரிய இந்நூலுக்குப் பல நூற்றாண்டுகள் வரை, உரை எழுதப்பெறவில்லை. தமிழகம் செய்த நல்லூழ்வகையால் இளம்பூரணவடிகள் தோன்றினார். இவர் தமிழ்மொழியை முற்றக்கற்று முழுதுணர்ந்து, தொல்காப்பிய நூற்பெருங்கடலுட் புக்குத் தம் நுண்மாண் நுழைபுல மாட்சியால் நுணுகி ஆய்ந்து தெள்ளத் தெளிந்த பேருரை வகுப்பாராயினார். இளம்பூரணரின் உரை மூன்று அதிகாரங்களுக்கும் முற்ற முடியவுள்ளது. இவர் முதன் முதலில் தொல்காப்பியத்திற்கு உரையெழுதிய பெருமைச் சிறப்புக் கொண்டு இவரை உரையாசிரியர் என்னும் சிறப்புப் பெயரால் வழங்குவராயினர். இவர்தம் உரைச்சிறப்புக்கு இப்பெய ரொன்றே சான்று நின்று பகரும்.

### இளம்பூரணர்

பழம்பெரும் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் முழுமைக்கும் முதன்முதலில் உரைகண்டு, அதனைத் தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு நன்கு அறிமுகப்படுத்திய பெருமை இளம்பூரணரையே சாரும். "பிறர் உட்புகுந்து காணமுடியா வண்ணம் இருண்டு கிடந்த தொல்காப்பியம் என்னும் சரக்கறையுள், தம் அறிவென்னும் அவியா விளக்கைக் கொண்டு துருவி, அங்கே குவிந்து கிடந்த அரதனக் குவியல்களை உலகிற்கு முதன் முதலில் விளக்கிக் காட்டிய பெருந்தகையார். அறிதற்கரியதாகிய தொல்காப்பியக் கடலைத் தம் மதிவலி கொண்டு கடைந்து முதன் முதலில் இலக்கண அமுதம் அளித்த பெரியார். என்று புலவர் போற்றும் புகழுக்கு உரிய சான்றோர் இவர்."

தொல்காப்பியம் போன்ற பழம் பெரும் இலக்கண நூல்களுக்கு, அவை தோன்றிப் பல நூறு ஆண்டுகள் கழிந்த பின்னர் முதன் முதலில் உரைகாண்பது எளிய செயலன்று.

Koviloor Digital Library



தகுதிவாய்ந்த ஒருவர் உரைகண்டபின், அவரைப் பின்பற்றி வேறு உரை கண்டு விளக்கம் எழுதுதல் அரிய செயலன்று, இளம்பூரணர்க்குப் பின் தொல்காப்பியத்திற்கு உரைகண்ட சேனாவரையர், நச்சினார்க்கினியர். முதலியோர் இவரது உரையைப் போற்றி பலமுறை பயின்று தெளிவு பெற்று இவருடைய புலமைச்சிறப்பை நன்கு உணர்ந்துள்ளனர். இவரிடம் பெருமதிப்பு கொண்டு இருந்துள்ளனர். தொல்காப்பியம் மாபெரும் இலக்கண நூலாக இன்று இத்துணைச் சீரும் சிறப்பும் எய்தித்திகழ இவரது உரை துணைசெய்தது என்று கூறுவது வெறும் புகழ்ச்சியன்று.

இளம்பூரணர் ஒருவரே 'உரையாசிரியர்' என்ற சிறப்பு பெயரால் தமிழிலக்கிய உலகிற்கு அறிமுகமானவர். இவரது பெயரைக் கூறாமல் உரையாசிரியர் என்றே மற்றைய உரையாசிரியர்களாகிய சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகியோர் குறிப்பிடுகின்றனர்.

சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் உரை வேனிற் காதையின் தொடக்கத்தில் உரையாசிரியரான இளம்பூரண அடிகள் என்று குறிக்கப் பெறுவதால், இளம்பூரணரே உரையாசிரியர் என்று உணரலாம்.

**சமயம்**

மயிலை நாதர் இளம்பூரணரைத் துறவி என்று குறிப்பிடுகின்றார். நன்னூலின் பத்துவகை எச்சங்களையும் குறிக்கும் (நூற்பா. 359) பெயர்வினை என்னும் சூத்திரத்திற்கு உரையும் விளக்கமும் எழுதிய பின், 'இஃது ஒல்காப்புலமைத் தொல்காப்பியத்துள் உளங்கூர் கேள்வி இளம்பூரணர் எனும் ஏதமில் மாதவர் ஓதிய உரை என்று உணர்க' என்று குறிப்பிடுகின்றார்.

தொல்காப்பியரைப் பனம்பாரணனார் பாயிரம் 'படிமை யோன்' என்று குறிப்பிடுகின்றது. படிமையோன் என்பதற்குத் 'தவ ஒழுக்கத்தையுடையான்' என்று இளம்பூரணர் பொருள் எழுதுகின்றார்.

இளம்பூரணர் பெயருடன் அடிகள் என்ற சொல் சேர்ந்து வழங்குவதால் இவரை சமண முனிவர் என்று கருதலாம்.

அகத்திணையியலின் முதற்சூத்திர உரையின் இறுதியில் இந்நூலுடையார் காமத்து பயனின்மை உய்த்துணர வைத்தவாறு அறிந்து கொள்க' என்று உரைக்கிறார். இங்கே இவரது துறவுள்ளம் வெளிப்படுகின்றது."

**காலம்**

இளம்பூரணர் தம் உரையில் புறப்பொருள் வெண்பாமாலை, யாப்பருங்கல விருத்தி ஆகியவற்றிலிருந்து மேற்கோள் தந்து

Koviloor Digital Library



விளக்குவதால் அந்நூல்களுக்குப்பின் வாழ்ந்தவர் எனலாம். இவரது கருத்தை நன்னூலார் மேற்கொண்டிருப்பதால் இவரின் காலம் பதினோராம் நூற்றாண்டாக இருக்கலாம்.

'இளம்பூரணர் குறிப்பிடும் மேற்கோள் நூல்களில் இரண்டு குறிப்பிடத்தக்கவை. அவை புறப்பொருள் வெண்பாமாலையும், தமிழ்நெறி விளக்கமும், இவற்றின் காலம் முறையே 850- 75, 825 - 850 ஆகும். அன்றி நக்கீர தேவநாயனாருடைய மூத்தபிள்ளையார் திருவிரட்டைமணி மாலைப் பாடல்கள் இரண்டை இளம்பூரணர் மேற்கோள் காட்டியுள்ளார். இவர் காலம் 900-925 இவை இடைச்செருக்கலல்ல என்று நாம் கொண்டு கால நிர்ணயம் செய்வதாயிருந்தால், இளம்பூரணர் 9, 10, ஆம் நூற்றாண்டுகளுக்குப் பின்னும், 12 ஆம் நூற்றாண்டுக்கு முன்னும் வாழ்ந்தவர் என்று உறுதியாய்க் கூறலாம்.

**உரையின் இயல்பு**

இளம்பூரணர் உரை, அழகான தெளிந்த நீரோடை போன்றது. பற்றற்ற துறவி தூய்மையான வாழ்வு நடத்தி மூத்த முதிர்ந்து காவி உடையுடன் அருள் பழுத்த நெஞ்சத்துடன், முகம் மலர்ந்து நம்மிடம் இன்சொல் பேசுவது போன்ற இன்ப உணர்வை இவர் உரை உண்டாக்குகிறது. ஆரவாரமும் பகட்டும் இவர் உரையில் எங்கும் காண்பதரிது. மிகமிகச் சுருக்கமாவே தெளிந்த கருத்தைக் கூறிவிளங்க வைக்கின்றார்.

இளம்பூரணர் பிறமொழிப் பயிற்சி மிகுதியாக இல்லாதவர். தமிழ்க்கடலுள் பலகால் முழ்கித் திளைத்தவர். தமிழ்மரபு நன்கு அறிந்த சான்றோர். இவரது தமிழ்நெஞ்சம் பல இடங்களில் வெளிப்படுகின்றது. இவரைச் சிவஞான முனிவர் தமிழ்நூல் ஒன்றே வல்ல உரையாசிரியர் என்று தொல்காப்பிய சூத்திர விருத்தியில் குறிப்பிடுகின்றார்.

இளம்பூரணர் தம் காலத்தில் வழங்கிய புதிய இலக்கணக் கொள்கைகளை ஆங்காங்கே கூறிச் செல்லுகின்றார். தொல்காப்பியத்திற்குப் பழைய நூல்களில் இருந்து மட்டுமன்றித் தம் காலத்திற்கு சிறிது முன்னர் தோன்றிய நூல்களிலிருந்து மேற்கோள் காட்டவும் தயங்கவில்லை. புறத்திணையியலில், புறப்பொருள் வெண்பா மாலையிலிருந்துப் பல வெண்பாக்கள் உதாரணமாய்க் காட்டப்படுகின்றன. உவமையியல், பிற்கால அணிநூல், கருத்துக்கள் இடம்பெறுகின்றன. செய்யுளியலில் யாப்பருங்கலம் போன்ற பிற்கால யாப்பு நூல்கள் எடுத்துக்காட்டப் படுகின்றன. பொருளியலை இவர், அகம், புறம் என்ற இரண்டிற்கும் புறனடை என்று கூறுகிறார்.

Koviloor Digital Library



### தயக்கமும் ஐயமும்

தொல்காப்பியர் கருத்தையும் இலக்கணக் கொள்கைகளையும் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கு இவர் பெரிதும் முயன்றுள்ளார். காலயிடையீடும், புதிய இலக்கணக் கொள்கைகளும் பழைய இலக்கணம் பற்றிய பல்வேறு கருத்தும் இவருக்குத் தயக்கமும் மலைப்பும் உண்டாக்கின எனலாம். அதனால் நடுநிலை பிறழாத உள்ளம் கொண்ட இவர். தாம் உரைத்த கருத்துக்களையும், பொருளையும், முற்ற முடிந்த முடிபுகளாகக் கருதவில்லை. பல நூற்றாண்டுகள் கழித்து, அந்நூலின் கருத்தை உள்ளவாறு அறிய முயன்று, முதன் முதலில் உரையொழுதிய இவர்க்கு இத்தகைய தயக்கமும் ஐயமும் ஏற்பட்டதில் வியப்பு ஒன்றுமில்லை.

சொல்லதிகாரத்தில் 'நிலப்பெயர் குடிப்பெயர்' என்று தொடங்கும் சூத்திரத்தில் (சொல். 162 இளம்பூரணர்). 'இன்றிவர் என்னும் எண்ணியற்பெயர்' என்ற அடிக்கு ஒருவர், இருவர், மூவர் என்பன, என்று விளக்கம் எழுதியபின், இன்றிவர் என்பது, இத்துணைவர் என்னும் பொருட்டு போலும்' என்று ஐயத்தோடு கூறுகின்றார்.

### உரைத்திறன்

தொல்காப்பிய மூலத்தைக் கொண்டே தொல்காப்பியர் கருத்தை அறிந்துகொள்ள வேண்டும் என்று கருதுபவர், இளம்பூரணர் செய்த உரை இல்லாதிருத்தால், பல சூத்திரங்களுக்குப் பொருள் தெரியாமல் மயங்கும் இளம் பூரணர்க்குப்பின் வந்த உரையாசிரியர்களும், இளம்பூணரையே பின்பற்றி, இவரது பொருள்விளக்கம், மேற்கோள், எடுத்துக்காட்டு ஆகியவற்றைப் போற்றி மேற்கொண்டு உரை எழுதுகின்றனர்.

### எழுத்ததிகாரத்தில்

'அளவிற்கும் நிறையிற்கும் மொழிமுத லாகி
உளஎனப் பட்ட ஒன்பதிற்று எழுத்தே' (எழுத்து. 170)

என்ற சூத்திரவிளக்கம் இம்பூரணர் உரை இன்றேல் விளங்காது. மேலும்,

'ஐ அம் பல்என வரூஉம் இறுதி
அல்பெயர் எண்ணும் ஆயியல் திரியாது' (எழுத்து– 393)

என்ற சூத்திரத்திற்கு இளம்பூரணரின் உதவியின்றேல் பொருள் புரிவதற்குக் கடினம்.

### சொல்லும் பொருளும்

உரையாசிரியர் சில சொற்களின் பொருளை நன்கு விளக்கிச் செல்கிறார். அத்தகைய விளக்கம் ஆராய்ச்சி உலகிற்குப் புதிய ஒளி தரவல்லவை.

Koviloor Digital Library



'படிமையோன் என்பதற்குத் தவ ஒழுக்கத்தை உடையான்' என்று பாயிரப்பகுதியில் பொருள் கூறிய இவரே 'படிமை' என்பது 'ப்ரதிமா' என்னும் 'வடமொழித்திரிபு' என்று உரைக்கிறார். (தொல்-974).

'உயர்ந்தோர் என்ற வழிக் குலத்தினான் உயர்ந்தாரையும் காட்டும், கல்வியான் உயர்ந்தாரையும் காட்டும், செல்வத்தான் உயர்ந்தாரையும் காட்டும். (அகத்திணை- நூ-3). எனப் பல சொற்களை இனிதுவிளக்கியுள்ளார்.

பொருளும் பயனும்

கைக்கிளை என்ற பொருண்மை யாதோ எனக் கேள்வி கேட்டு அத்தொடரைப் பிரிந்து 'கை-சிறுமை 'கிளை-உறவு' எனப் பொருள் உணர்த்துவதுடன் கைக்குட்டை, கையேடு போன்ற சான்றுகள் காட்டி வழக்கின் அடிப்படையில் தம் பொருளை நிலை நாட்டுகின்றார்.

பொருள் கூறிய பின் பயன் யாது எனவும், கேட்டு உரிப்பொருளே திணையென உணர்த்துவராயின் முதற்பொருளும், கருப்பொருளும், திணையாதல் தோன்றாதாம். அவையெல்லாம், அடங்குதற் பொருட்டு, முல்லை, குறிஞ்சி, பாலை,மருதம், நெய்தல் என்பது எனப்பயன் உணர்த்துகிறார்.

உரைகூறும் திறன்

அகத்திணையை அடுத்துவரும் இயல்களில் முறை வைப்பைக் கூறி, முடிவாக விரித்துக்கூறிய பொருள் காமப்பகுதியும், வீரப்பகுதியும் என உரைத்து இன்பங்காரணமாகப் பொருள் தேடும் ஆகலானும், பொருளானே அறம் செய்யும் ஆகலானும் இன்பமும் பொருளும் ஏற்றம் என்த் தொல்காப்பியரின் உள்ளத்தையும் தெளிவுபடுத்துகிறார்.

இயல் உணர்த்துவதைக் கூறிப் பின் நூற்பாவை அமைத்து அதன் கீழ் அதன் கருத்தை முதலில் புலப்படுத்துகிறார். நூற்பாவின் பொருளை தொகுத்துத்தருகிறார். தொடர்ந்து நூற்பாவில் காணப்பெறும் சொற்கள் தொடர்களுக்குரிய விளக்கங்களையும், இலக்கணக் குறிப்புகளையும் பொருள் நன்கு விளங்க, இலக்கண நூற்பாக்களையும், இலக்கியச் செய்யுள்களையும் முழுமையாகவும், பகுதியாகவும், எடுத்துக்காட்டுவார்.

சூத்திரஅமைப்பும் உரைப்போக்கும்

இளம்பூரணர் இரண்டு சூத்திரங்களாக அமைத்தவற்றைப் பின்வந்தோர் ஒன்றாகவே எழுதி உரை கண்டனர். ஒன்றாகக் கொண்டதைப் பிரித்து இரண்டாக்கியதும் உண்டு.

'எழுத்ததிகாரம் பிறப்பியலுள் (19–20)

'எல்லா எழுத்தும் என்றும் அஃதிவண் நுவலாது' என்றும் தனித்தனியே இளம்பூரணர் பிரித்து உரைகண்டவற்றை நச்சினார்க்கினியர் ஒரே சூத்திரமாக்கி உரை எழுதுகின்றார்.

Koviloor Digital Library


இத்தகைய எடுத்துக்காட்டுகள் பலவற்றைத் தரலாம். பல சூத்திரங்களை அடுத்து அடுத்து எழுதிக்கொண்டு 'இவை, உரை இயைபு நோக்கி ஒன்றாய் எழுதப்பெற்றன, என்று இளம்பூரணர் எழுதிச்சொல்லுவதும் உண்டு (சொல். 173-76, 223, 224, 337, 338) மரபியலில் (35) போன்ற நூற்பாக்களைக் கூறலாம்.

**பாடவேறுபாடுகள் கருத்து வேறுபாடுகள்**

இளம்பூரணர் தொல்காப்பியத்தின் முதல் உரையாசிரியர் ஆதலின், இவர்கொண்ட சிலபாடங்கள், மிகப்பழமையானவை, அப்பாடங்களே சிறந்தவை,

சில சொற்களில் இரண்டொரு எழுத்துக்கள் மாறிவிடுவதால் சூத்திரங்களின் பொருளே பெரிதும் வேறுபட்டு விடுகின்றது. எனவே பாடவேறுபாடுகளில் கருத்துச் செலுத்தி உண்மையான பாடத்தைத் துணியும் கடமை நமக்கு ஏற்பட்டுள்ளது.

பாடவேறுபாடுகள், பொருளதிகாரத்தில் மிகுதியாகப் பொருளை வேறுபடுத்திவிடுகின்றன.

**புறத்திணையியலில் (4)**

'மறங்கடைக் கூட்டிய குடிநிலை சிறந்த
கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே' (தொல்–1005)

என்பது இளம்பூரணர் கொண்ட பாடம் இதற்கு.

**நச்சினார்க்கினியர்**

'மறங்கடைக் கூட்டிய துடிநிலை (புறம். 4)

என்று வேறுபாடம் கொள்கிறார்.

**பொருளியலுள் நச்சினார்க்கினியர்**

'இறைச்சி தானே பொருட்புறத்ததுவே' (தொல்–1175)

என்ற பாடம் கொண்டுள்ளார். இதுவே இன்று பெருவழக்காய் உள்ளது. இளம்பூரணர் உரிப்புறத்ததுவே' என்று பாடங்கொண்டுள்ளார்.

**உவமைகள்**

இளம்பூரணர் தம் உரையில் மிகச் சில உவமைகளையே எடுத்தாண்டுள்ளார். அவ்வுவமைகள் கூறக்கருதிய பொருளை இனிது விளக்குகின்றன.

எழுத்ததிகாரத்தில் (2) சந்தனக்கோல் குறுகின விடத்தும் பிரப்பங்கோல் ஆகாது. அதுபோல, இகர உகரங்கள் குறுகின விடத்தும் அவை உயிர் ஆகற் பாலன' என்று தக்க உவமை கூறி விளக்குகின்றார்.

செய்யுளியலில் (79) 'துள்ளலோசை கலிப்பாவிற்காய் என்றவாறு. துள்ளுதலாவது, ஒழுகு நடத்தன்றி இடையிடை உயர்ந்து வருதல், கன்று துள்ளிற்று என்றாற் போலக் கொள்க' என்ற பகுதியில் உவமை இடம் பெற்றுள்ளது.

Koviloor Digital Library



*தொல்காப்பியர் வரலாற்றுக்குப் புதிய ஒளி*

இளம்பூரணர் தொல்காப்பியரைப் பற்றிக் கூறும் கருத்துக்கள் வரலாற்றுக்குப் புதிய ஒளி தரவல்லவை.

அகத்தியர் சூத்திரங்கள் என்று சிலவற்றை இளம்பூரணர் சிலவிடங்களில் காட்டி இருப்பினும் அகத்தியரையும் தொல்காப்பியரையும் இணைத்து எந்தக்கதையும் புனைந்துரைக்கவில்லை. 'தொல்காப்பியர் அகத்தியரின் பன்னிரு மாணாக்கருள் ஒருவர். பன்னிரு மாணாக்கர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு இயலாக இயற்றித்தொகுத்த நூல் 'பன்னிருபடலம்' என்னும் புறப்பொருள் இலக்கண நூல். அத்தொகுப்பு நூலுள் முதல் படலமாகிய வெட்சிப் படலத்தை இயற்றியவர் தொல்காப்பியர் என்னும் கதையை இளம்பூரணர் நம்பவில்லை.

மேலும், தொல்காப்பியர் இயற்றியதாகக் கூறப்பெறும் வெட்சிப்படலம், தொல்காப்பியர் புறத்திணை இயலோடு முரண்படுவதையும் காட்டி 'பன்னிரு படலத்துள் வெட்சிப்படலம் தொல்காப்பியர் கூறினார் என்றால் பொருந்தாது (புறத். 2) என்று தெளிவுபடுத்துகிறார்.

*கருத்துக்கொடை*

இளம்பூரணர் உரையில் கூறியுள்ள கருத்துக்கள் பலவற்றை அவருக்குப்பின் தோன்றிய இலக்கண ஆசிரியர்கள் மேற்கொண்டு நூற்பாக்களை உருவாக்க முடியும் என்பதற்கு இளம்பூரணரே சிறந்த சான்றாகும்.

*தொல்காப்பியர் கற்பியலில்*

'பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்
நீத்தகன் றுறையார் என்மனார் புலவர் . . ? (கற்பி.. 46)

என்று கூறுகிறார். இதற்கு உரை எழுதிய இளம்பூரணர், இதனாற் பயன் என்னவெனின் அது கருத்தோன்றும் காலம் என்க என்ற கருத்தை எழுதுகிறார்.

*தொல்காப்பியர் உடன்படுமெய் பற்றி*

'எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே
உடம்படு மெய்யின் உருபுகொளல் வரையார்' (எழுத். 141)

என்று கூறினார். இளம்பூரணர் இச்சூத்திரத்திற்கு உரை எழுதியபின், 'உரையிற் கோடல் என்பதால் உடம்படு மெய்யாவன யகரமும் வகரமும் எனக் கொள்க.

இகர ஈறும் ஈகார ஈறும், ஐகார ஈறும், யகர உடம்படுமெய் கொள்வன. அல்லன வெல்லாம் வகரமெய் கொள்வன என்று உரைதந்துள்ளார்.

Koviloor Digital Library



*தொல்காப்பியர் சொல்லதிகாரத்தில்*

'எப்பொரு ளாயினும் அல்லது இல் எனின்
அப்பொருள் அல்லாப் பிறிது பொருள் கூறல் (சொல். 35)

எனக் கூறிய சூத்திரத்திற்கு இளம்பூரணர் பின்வருமாறு உரையும் விளக்கமும் தருகின்றார். எவ்வகைப்பட்ட பொருளாயினும், தன்னுழை உள்ளது அல்லதனை இல்லை எனலுறுமே எனின், அவன் கூறிய பொருளல்லா பிறிது பொருள் கூறி இல்லை என்க' என்கிறார்.

*இளம்பூரணருக்கு முன்*

தொல்காப்பியத்திற்கு முதன் முதலில் உரை கண்டவர் இளம்பூரணர் என்று போற்றப்படுகின்றார். ஆனால் அவர்தமக்கு முன் சில உரைகள் தொல்காப்பியத்திற்கு இருந்ததைப் பலப் பல இடங்களில் சுட்டிக் காட்டுகிறார். என்ப ஒரு சாரர் ஆசிரியர் (44, 57) ஒருவன் சொல்லுவது (4, 18, 25, 38, 44) ஒரு திறந்தார் கூறுப (1, 56, 58) என்பாடும் உளர். (30, 33) என்பது ஒரு கருத்து (66, 44) ஒருதிறத்தான் ஆசிரியர் உரைப்பர். (122, 421) என்று இளம்பூரணர் பிறர் கருத்துக்களைக் குறிப்பிடுகின்றார்.

மேலும், இவர் சுட்டப்பெற்றது தொல்காப்பியத்திற்கு வாய் மொழியாக வழங்கி வந்திருக்கலாம். அவற்றைக் கேட்டு தம் உரையில் அவற்றைவிடாது குறிக்கப்பெற்றிருக்கலாம். என்பது கருதத்தக்கது.

*இளம்பூரணருக்குப் பின்*

இளம்பூரணர் உரை செல்வாக்கு இழந்து, தொல்காப்பியம் கற்பவர் பார்வையிலிருந்து விலகிப் பின்தங்கி விட்டதற்குக் காரணம் சில உண்டு. 1. இளம்பூரணருக்குப்பின் உரைகண்டோர் அவரது கருத்துக்கள் பலவற்றையும் எடுத்துத் தம் உரைகளுள் பெய்து கொண்டு தம் தம் காலத்திற்கு ஏற்ப புதிய விளக்கங்கள் தந்து அந்த உரையை விரிவுப்படுத்தினர். 2. எளியநடையே நல்லநடை என்ற கொள்கை இளம்பூரணருக்குப்பின் மெல்ல மெல்ல மறைந்துவிட்டது. அதனால் எளியநடையில் எழுதப்பெற்ற இளம்பூரணர் உரை ஒதுங்கியது. பல்முறை கற்று உணரும் நுட்பம் வாய்ந்தது. எதுகை மோனைகள் அமைத்து பல்வேறு வகையான இனிய உவமைகள் விரவி இன்னோசை பொருந்திய பிற்கால உரைகள் செல்வாக்குப் பெற்றுப் பரவின.

3. இளம்பூரணர் சமணத்துறவி ஆதலின் பிற சமயத்தவர் இவர் உரையைப் புறக்கணித்து, புதுஉரைகண்டு தம் உரையைப் பரப்பினர்.

மேலும், தமிழ்மொழிக்குத் தமிழ் மரபு அறிந்து எழுதிய உரையே சிறந்தது என்று எண்ணுபவரும், மற்றும் தமிழ் ஆர்வலர் பலரும் இளம்பூரணர் உரையைப் போற்றிக் கற்று வருகின்றனர்.

Koviloor Digital Library



### தொல்காப்பியரும் இளம்பூரணரும்

தொல்காப்பியர் தான் உணர்த்த வந்த கருத்துக்கள் அனைத்தையும் மிக்க நேர்த்தியாக இளம்பூரணர் படம் பிடித்துக் காட்டுகின்றார். தொல்காப்பியர் தான் கூறத்துணிந்த கருத்துக்களை உரையாசிரியரான இளம்பூரணர் எடுத்துக்காட்டுகின்றார்.

புறத்திணையியல் முழுவதும் புறப்பொருள் வெண்பா மாலை,யைத் தவறாது எடுத்து விளக்குகிறார். இன்று இல்லாது போன பன்னிரு படலத்தையும் பலமுறை தருகின்றார். மேலும் தொல்காப்பியச் சூத்திரத்திற்குத் தாம் கூறும் விளக்கம் ஒவ்வொன்றுக்கும் இயன்றவரை முன்னூல் ஆதாரம் காட்டிக் கொண்டே செல்கின்றார்.

தொல்காப்பியர் தம் நூற்பாக்களில் கூறிய கருத்துக்கள் இளம்பூரணர் எளிமையாகவும், தெளிவாகவும் தொல்காப்பியருடைய கருத்தை மட்டும் விளக்கிக் கொண்டு செல்வது இவர் உரையின் இயல்பு. தம்முடைய கல்விப்பெருக்கைக் காட்ட இவர் எண்ணவில்லை. விரிவாகவோ, கேட்போர் வியக்கும்படியோ சொல்லும் நோக்கத்தை இவர் கொள்ளவில்லை. பிறரை மதித்து எழுதுவதும் கருத்து வேறுபாடு வந்தபோது மறுப்புத் தெரிவிக்காமல் சொல்லிக்கொண்டு செல்வதும் இவருக்கு அமைந்த தன்மைகள் ஆகும். மேலும், இவர் உரை சுருங்கக்கூறி விளக்க வைக்கும் தன்மையுடையது.

### முடிவுரை

பழம்பெரும் இலக்கண நூலான தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர் தாமே கற்றுணர்ந்து உரை எழுதும் காரணத்தால் இவருக்குச் சிறிது தயக்கம் எங்கும் இருக்கிறது. தொல்காப்பியர் கூறிய சூத்திரங்களுக்கு பல இடங்களில் நன்கு தெளிவுபட இவர் கூறி இருப்பினும் சில இடங்களில் ஐயத்தோடு கூறுகின்றார். பகட்டில்லாத தொல்காப்பிய நூற்பாக்களுக்கு இளம்பூரணர் தம் பேரறிவால் பட்டொளி வீசி உரையாசிரியர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

### துணைநின்ற நூல்கள்

1. சிவஞானமுனிவர், தொல்காப்பியர், பாயிரம் விருத்தி. ப13
2. தொல்காப்பியம், பொருளதிகாரம், முன்னுரை- ப. 6
3. மேலது- பக். 12
4. ஆராய்ச்சிக்குத் தொகுதி (1948) பக். 398-99

Koviloor Digital Library

## 8. தொல்காப்பியம் - சேனாவரையர் கதைகள்

க.ஆ.இராமசாமி
சேரன்மாதேவி

*முன்னுரை*

இலக்கணம்- "இரும்புக்கடலை"; அஃது என் சிறுசெவி நுழையாச் செக்கு உலக்கை" என்றால்லாம்அஞ்சுவர். இத்தகைய அச்சம் தவிர்க்கும் வகையில் சேனாவரையர் தம் உரையில் கூறியுள்ள சில சுவையான கதைகளை இக்கட்டுரையில் காண்போம்.

பவளக் கோட்டு நீலயானை

யானைகள் நாமறிந்த விலங்கு. வாழும் விலங்குகளுள் உருவத்தால் மிகப் பெரியது. கரிய நிறம் அமைந்த உடலை உடையது. வாய்க்குள்ளிருந்து இரண்டு நீண்ட கோடுகள் முன்னோக்கி வளர்ந்திருக்கும் அதனால், கோட்டுமா என்ற காரணப் பெயர் பெற்ற விலங்கு. நம் நாட்டிலும், இலங்கையிலும் ஆப்பிரிக்கக் காடுகளிலும் உள்ள யானைகள் அனைத்தும் கரிய நிறம் கொண்டவையே. மியான்மாரில் வெள்ளை நிற யானைகள் உண்டு எனச்சிலர் கூறுவர். இந்திரனிடம் வெள்ளை யானை உண்டு. அதன்பெயர் "ஐராவதம்" அதற்கு நான்கு கோடுகள்- கொம்புகள் - உண்டு என்றும் கூறுவர். ஆனால் நாம் காணும் யானைகள், எந்த நாட்டில் இருந்தாலும், எவ்வளவு வளர்ந்திருந்தாலும் அவற்றின் நிறம் கருமையே அவற்றின் கோடுகள் இரண்டின் நிறம் வெண்மையே.

*விக்கிரமன்*

இது திருவள்ளுவர் ஆண்டு 2035-கிரித்து ஆண்டு 2004. விக்கிரமார்க்கன், விக்கிரமாதித்தன் எனப்படும் விக்கிரமன் ஆண்டு 2060. சாலிவாகனன், எனப்படும் சாதவாகனன் ஆண்டு- 1926. விக்கிரமார்க்கன் எனப்படும் விக்கிரமாதித்தன் சம்பல் நதிக்கரையிலுள்ள, உச்சயினியைத் தலைநகர் ஆகக்கொண்டு ஆயிரம் ஆண்டுகள் ஆண்ட ஆற்றல் மிக்க அரசன். உச்சயினி மாகாளி அருளால் ஈராயிரம் ஆண்டுகள் வாழ்ந்தவன். அவனைப் பற்றிய கதைகளின்தாக்கம், தமிழகத்தின் தென்கோடியிலுள்ள

Koviloor Digital Library



திருநெல்வேலி மாவட்டம் வரை பரவி, இன்றளவும் நிலைத்துள்ளது. பலஊர்களில் உச்சயினி மாகாளி அம்மன் கோயில்கள் உண்டு. உச்சினி மாகாளி, உச்சிமாகாளி, என்ற பெயர்கள், ஆடவர்க்கும் மகளிர்க்கும் உண்டு.

**கால்வழியினர்.**

விக்கிரமார்க்கனுக்கு ஒரு மகள் இருந்தாள். மணப்பருவ மெய்திய அப்பெண்மணி திருமணத்துக்கு முன்னரே கருவுற்றாள் - மானமழிந்ததால் விக்கிரமன் மனம் வருந்தினான். எனினும் கருவுற்ற பெண்ணைக் கொல்லக் கூடாதென்பதால், நாட்டைவிட்டு வெளியேற்றினான். அவள் காட்டுப் பகுதியில் அலைந்து திரிந்தாள். இரவு நேரத்தில் ஒரு விளக்கு ஒளிதெரிவதைப் பின்பற்றி அந்த இடத்தை நோக்கிச் சென்றாள். அது மண்பாண்டங்களும் 'பொய்மெய்களும் உருவாக்கும் ஒரு குயவர் இல்லம். அங்குள்ளோர் அவளை வரவேற்றுக் காத்தனர்.

**சாலிவாகனன்**

குயவர் வீட்டில் அடைக்கலம் பெற்ற இளவரசி, தன்னை யாரென்று கூறாமலே வாழ்ந்து வந்தாள், உரிய பொழுதில் ஆண் மகவு ஈன்றாள். இருவரும் அங்கேயே வாழ்ந்தனர். மகனுக்குச் சாலிவாகனன் எனப் பெயரிட்டாள். சாலிவாகனன் வாழ்ந்த சூழ்நிலைக்கு ஏற்ப மண்ணால் "பொய்மெய்" நாள்தோறும் உண்டாக்கினான். ஆனால் அவளது குருதியில் ஊறிச் சிந்தனையில் வளர்ந்த மரபுநிலைக் கூறுகளால், அவன் செய்த பதுமைகள், யானை, தேர், குதிரை, வீரர்கள், படைக்கலன்களாகவே இருந்தன. அவனும் வீரர்க்குரிய போர்ப்பயிற்சிகள் செய்வதையே விளையாட்டாகக் கொண்டிருந்தான். தான் உண்டாக்கிய பதுமைகளுக்குப் பல்வேறு வகை வண்ணங்களையும் தீட்டிக்கண்டு விளையாடி மகிழ்ந்தான்.

**வினாவும் விடையும்**

காளைப் பருவம் பெற்ற சாலிவாகனனுக்குத் தானும் தன் தாயும், அங்குள்ள ஏனையோரிடை, வேற்றுமையாக இருப்பதை அறிந்தான். தாயிடம் வினவினான். பழங்கதையை அவள் கூறினாள். பாட்டன் உச்சயினிமாகாளி அருளால் இரண்டாயிரம் ஆண்டு வாழவும், ஆறுமாதம் நாட்டிலும் ஆறுமாதம் காட்டிலும் இருந்ததால், ஆயிரமாண்டுக்காலம் அரசாட்சி செய்யவும் அருள் பெற்றதை அறிந்தான். அதே உச்சயினி மாகாளியிடம் சென்று சாலிவாகனனும் தவமிருந்தான். காளி அவனுக்கும் வரம் தந்தாள். சாலிவாகனன் தன் வீடு சென்றான்.

***"பார் சிறுத்தலின் படை பெருததோ?"***

வீட்டுக்கு வந்த சாலிவாகனன் தன் பதுமைகள் அனைத்தையும் அணிவகுத்து நிறுத்தினான். வேறுவேறு

Koviloor Digital Library



வண்ணங்களில், பொன்னும், சிவப்பும் பச்சையும், வெள்ளையும், கருப்பும் எனப் பல்வேறு வண்ணங்களில் யானைகள் இருந்தன. அவற்றின் கூரிய கோடுகள், வெள்ளையும், கருப்பும், நீலமும், பச்சையும் எனப்பற்பல வண்ணங்கள். தேர்கள் உச்சியிலே கொடிமுதல் கீழே உருளைகள் வரை ஒவ்வோர் உறுப்பும் வெவ்வேறு வண்ணங்கள். குதிரைகளும் பற்பல நிறம். வீரர்தம் உடையும் படையும் எண்ணிலடங்கா வண்ணங்கள் இத்துணை ஆண்டு அவன் தீட்டிய வண்ணங்கள், மண்ணாற்செய்த பொய்மெய்களை ஒளியேற்றின. அவன் உச்சயினி மாகாளியை உருகி வேண்டினான். அவை உயிர் பெற்றன. அவன் படைத்தலைமை ஏற்றான். படை நடத்தினான்.

**பெயரனிடம் தோற்ற பாட்டன்**

முனைமுகத்து நின்ற இளைஞன் யாரென அறிந்தான் விக்கிரமன். கடுமையான போர் நிகழ்ந்தது. இறுதிவெற்றி பெயரனுக்கே! சாலிவாகனன் வென்றான். விக்கிரமாதித்தன் தோற்றான். இருவரும் உடன்படிக்கை செய்து கொண்டனர். நர்மதை ஆற்றுக்கு வடக்கில், விக்கிரமாதித்தனும், தெற்கில் சாலிவாகனனும் ஆட்சி செய்து வந்தனர். இருவர் பெயராலும் காலக் கணக்கீடு தோன்றின. விக்கிரம, சாலிவாகன - சகாப்தம்.

**களிற்றியானை நிரை**

வெற்றிக் களிப்போடு சாலிவாகனன் தன்படைப் பிரிவுகளைச் சென்று கண்டான். அவற்றின் வண்ணங்களில் தன் கைவண்ணம் இருப்பதை எண்ணி மகிழ்ந்தான். இயல்பாகக் கரிய உடல் பெற்றதால்.'கரி' என்ற காரணப் பெயர் பெற்ற யானை பெற்ற பல வண்ணங்களும் அதன் வெண்கோடுகளிலிருந்த பல வண்ணங்களும் கண்டு மகிழ்ந்தான். ஆனால், அங்கு, "சாதவாகனன் (சாலிவாகனன்) கோயிலுள்ளும், பவளக்கோட்டு நீல யானை இல்லை" இந்த யானைகளிலும் அவற்றின் கொம்புகளிலும் நீல நிறமும் பவள நிறமும் இல்லை.

"மன்னாப் பொருளும் அன்ன இயற்றே" (கிளவியாக்கம்–34)

"மன்னாப் பொருள் என்றால் என்ன?"

"உலகத்தில் நிலைக்காத பொருள்"

"அன்ன இயற்றே" –என்றால், என்ன இயற்று?"

"முன்நூற்பாவில் இத்தகை என வரையறை செய்த சினையைச் சுட்டும் சொற்களையும் முதற்பொருளைச் சுட்டும் சொற்களையும் தொழிலோடு கூட்டிச் சொல்லும் போது"உம்'மை சேர்த்துச் சொல்ல வேண்டும். கையிரண்டும் ஒடிந்தன' என்பது போல. இந்த நூற்பாவில் உலகில் நிலைக்காத பொருள்களை, இடம் முதலியவற்றோடு சேர்த்துச் சொல்லும்போது "உம்" சேர்த்துச் சொல்லவேண்டும்.

Koviloor Digital Library



"பவளக் கோட்டு நீல யானை உண்டா?"

"பவளக் கோட்டு நீல யானை இல்லை"

"சாதவாகனன் கோயிலில் பலவண்ண யானைகள் உள்ளனவே! பவளக் கோட்டு நீல யானை சாதவாகனன் கோயிலுள்ளும் இல்லையா?"

"இல்லை; பவளக்கோட்டு நீல யானை சாதவாகனன் கோயிலுள்ளும் இல்லை'.

முதலில் இடத்தொடு தொடர்பு படுத்தாத-மன்னாப்பொருள் உம்மை பெறாமல் வந்தது. சாதவாகனன் கோயில் என்ற இடத்தொடு தொடர்பு படுத்தியவழி, மன்னாப்பொருள் - உம்மை பெற்று முடிந்தது.

"கூடிவருவழக்கின் ஆடியற் பெயர்"

சிறுவர்கள், இரண்டு தலைவர்களை அமைத்துக் கொள்ளுவார்கள், விளையாட, இவ்விருவரையும் அணித் தலைவர்களாக ஏற்பார்கள். மற்றவர்கள் இரண்டிரண்டு பேராக அணிசேர்ந்து கொண்டு தனியே சென்று பிறர் அறியாமல் தங்களுக்கு ஒவ்வொரு புனை பெயர் சூட்டிக் கொண்டு தலைவர் இருவரிடமும் வருவார்கள் இருவரது புனை பெயரையும், ஒருவன் கூறுவான். இரண்டுபெயர்களுள் ஒருபெயரை ஒரு தலைவன் அழைப்பான். அழைக்கப்பட்டவன் அவன் அணியில் இணைவான். அடுத்தவன்அடுத்த அணியிற்சேர்வான். இதைப் போலவே அடுத்த இணை தேர்வுக்கு வந்தவுடன், இரண்டாவது தலைவன், முதல் வாய்ப்புப் பெற்றுச் தேர்ந்து கொள்வான். விளையாட்டில் வெற்றியே முதன்மை ஆதலால் "ஆடியல் பெயர்களிலும் அறிவாற்றலும் உடல் திறனும் அமைந்த பெயர்களையே தமக்குச் சூட்டிக்கொள்வார்கள். "'வானத்தை வில்லாக வளைத்தவன் வேண்டுமா? மணலைக் கயிறாகத் திரித்தவன் வேண்டுமா?" என இக்காலத்து ஆடியற்பெயர்கள் அமையும்.

கங்கை மாத்திரர்

விளையாட்டின் பொருட்டு இணை சேர்ந்து பின் இரு அணிகளில் பிரிந்து கொள்வோர் இணைசேரும் தமக்குத்தாமே வைத்துக்கொள்ளும் பெயரே, "கூடிவரு வழக்கின் ஆடியற் பெயராகும்" அப்பெயர்கள் அவர்கள் அணியிற் சேர்ந்தவுட னேயே, தாமாக மறைந்து விடுகின்றன. அதன் பின்னர் அப் பெயர்களால் யாரும் அவர்களை அழைப்பதில்லை. ஆகவே இவை, குழுவின்பெயரில் அடங்கா, சேனாவரையர் காலத்தில் "பட்டி புத்திரர், கங்கை மாத்திரர்' என்ற இரண்டு ஆடியற்பெயர்கள் வழக்கில் இருந்துள்ளன.

Koviloor Digital Library



பட்டிபுத்திரர்

உச்சயினி மாநகரை ஆண்ட பேரரசன் விக்கிரமாகித்தன். அவன் உச்சயினி மாகாளியை வழிபட்டு ஆயிரம் ஆண்டுகள் அரசனாக அரியணையில் வீற்றிருந்து அரசாள்வதற்கு வரம் பெற்றான். அவன் தனது தம்பியும், அமைச்சனுமாகிய பட்டியிடம் தான் பெற்ற வரத்தைக் கூறினான். பட்டி, தானும் அத்தகைய வரம் பெற்று வருவதாக அரசனிடம் கூறிச் சென்று காளியை நோக்கித் தவமிருந்தான். அவள் அவனுக்கு அருள் செய்ய வந்தாள். "இரண்டாயிரம் ஆண்டுகள் நான் வாழ வேண்டும் என வரம்பெற்றான். அரசன் விக்கிரமாதித்தனிடம் செய்தியைச் சொன்னான். இருவரும் இன்னும் இரண்டாயிரம் ஆண்டு வாழப்பட்டி திட்டமிட்டான். தான் ஈராயிரம் ஆண்டு வாழ வரம்பெற்றிருப்பதைபோல அரசன் விக்கிரமாதித்தன் ஆயிரம் ஆண்டுகள் உச்சயினி அரியணையில் அரசனாக இருந்து ஆளும் வரம் பெற்றிருந்தான். ஆகவே, பட்டி ஓர் ஆண்டை இரண்டாகப் பிரித்தான். ஆறு மாதங்கள் நாட்டில் இருந்து ஆண்டனர். ஆறுதிங்கள் முடிந்தவுடன் காடுசென்று, வேறு பல நாடுகள் கண்டு ஆறுமாதம் கழித்தனர். இந்த வாய்ப்பு அவர்களது வாழ்வை உயர்த்தியது. விக்கிரமாதித் தனது வாள் ஆற்றலும் பட்டியின் அறிவு ஆற்றலும், இன்னும், தமிழ்நாட்டிலும், உலகத்திலும் புகழ் மிக்க கதைகளாகப் பேசப்படுகின்றன. "தந்தை அறிவு மகன் அறிவு" என்பதால் பட்டியைப் போலவே அவனது மகனும் அறிவாற்றல் அமைந்தவனாக இருப்பான் என்பதால் விளையாட்டில் அணிபிரிந்து விளையாடுவோர் தமக்கு ஆடியற் பெயராகப் பட்டிபுத்திரர் என ஒருவர் புனை பெயர்சூடிக்கொண்டார்.

கங்கை மாத்திரர்

கோடைக்காலத்தில், காசி நகரத்தில் கங்கைக் கரையில் ஐம்பது, அறுபது படிக்கட்டுக்களுக்குக் கீழே ஆழத்தில் இன்னும் ஆழமாக நீர் ஓடிக் கொண்டிருக்கும் மாரிக்காலத்தில் பத்துஆள் உயரத்துக்கு நீர் ஓடிக் கொண்டிருக்கும். ஆற்றின் அகலம் ஆயிரம் முழம் இருக்கலாம். நீரின் வேகம், நல்ல உடல் வலிமை உடைய நீச்சல் காரரும் கூடச் சில முழத்தூரம் கூட எதிர் நீச்சல் போடமுடியாது. 'சாண் ஏறினால் முழம் சறுக்கும்" ஆக, ஆழம், அகலம், வேகம் மூன்றிலும் மிக அதிகமாகவுள்ள கங்கையில், ஒருவன் ஆழங் கண்டான். எளிதாக இருகரையையும் தொட்டுத்திரும்பினான். ஒருகல் தொலைவு நடு ஆற்றில் வேகத்துக்கு ஈடு கொடுத்து எதிர்நீச்சல் நீந்தினான் என்றால்- அவன் கங்கையை அளந்தவன்' கங்கா மாத்திரன் என்ற பட்டம் பெறும் தகுதி பெறுவான். மாத்திரம் அளவு.

Koviloor Digital Library



சேனாவரையருடைய காலத்திலும், அதற்கு முன்னரும், அறிவாற்றலில் சிறந்த இளைஞர்களைப் பட்டிபுத்திரர் எனவும், உடலாற்றலை சிறந்தவர்களைக் கங்கை மாத்திரர், கங்கையை அளந்தவர் எனவும் பெயரிட்டுப் பாராட்டும் வழக்கம் இருந்தது போலும். சேனாவரையர் மட்டும் அன்றி, நச்சினார்க்கினியரும், இப்பெயர்களைக் கூறுகின்றார்.

மனிதர்க்குப் பல நிலைகளில் புனைபெயர் இட்டுவழங்குதல் உண்டு.

"நிலப்பெயர், குடிப்பெயர், குழுவின் பெயரே
வினைப்பெயர், உடைப்பெயர், பண்புகொள் பெயரே,
பல்லோர்க் குறித்த முறை நிலைப் பெயரே,
பல்லோர் குறித்த சினை நிலைப்பெயரே
பல்லோர்க் குறித்த திணைநிலைப் பெயரே,
கூடிவரு வழக்கின் ஆடியற் பெயரே,
இன்றிவர் என்னும் எண்ணியற் பெயரே
அன்றி அனைத்தும் அவற்றுஇயல் பினவே"

"கூடி வரு வழக்கின் ஆடியற்பெயர்" (164–பெயரியல் 11)

அணிகளில் என்றால் என்ன?

"விளையாடச் செல்லும் இரு இளையோர், இரண்டு அணிகளில் சேர்ந்து கொள்வதற்காகத் தமக்குத்தாமே வைத்துக்கொள்ளும் புனை பெயர்கள்" "இதனைக் குழுவின் பெயருள் அடக்கியிருக்கலாமே?" "இல்லை; இயலாது, குழுவின் பெயர் மற்றவர்களால் இடப்பெற்றுப் பலதலைமுறைகளுக்கும் மாறாமல் தொடரும் பெயர் ஆனால் விளையாட்டுக்காக மட்டுமே, இருவர் இணையும்போது தமக்குத் தாமே இட்டுக் கொண்டு, அணித்தலைவர்களிடம் அப்பெயரைக் கூறி அவர்கள் அணியிற் சேர்த்துக்கொண்ட அடுத்த கணமே பயன் அற்றுப் போகின்ற பெயர்களே, "கூடிவரு வழக்கின் ஆடியற்பெயர்" - ஆகும்.

## "கால மயக்கம்"

"இக்காட்டு வழியிலா போகப்போகிறாய்? வேட்டி பறி போயிற்று! துண்டும் பறிபோகின்றது!"

"என்னய்யா, இனிமேல், எதிர்காலத்தில்தானே காட்டுக்குள்ளே போகப் போகிறேன். அதற்குள்ளாக, வேட்டி போயிற்று என்று இறந்த காலத்திலும், துண்டுபோகின்றது' என நிகழ்காலத்திலும் சொல்லி அச்சுறுத்துகிறாயே?".

இந்தக் காட்டின் "இயற்கை"யை நன்கு உணர்ந்தவர், எதிர்-காலத்தில் நடக்க இருப்பதை, இறந்தகால நிகழ்கால வினையால் கூறுவர். காட்டு வழியில் செல்வோர், காட்டகத்தே

Koviloor Digital Library



திரியும், "ஆறு அலைகள்வர்" துன்புறுத்துவதால், இருக்கும் பொருளனைத்தையும் இழந்து புறம் செல்வார்கள், இஃது இக்காட்டின் இயற்கை. மனிதர்களான ஆறு அலைகள்வர் பறித்துக் கொள்வதால், காட்டுட் செல்வோர் கூறை கோட்படுவார்கள். கூறை-ஆடை காட்டு மனிதரால் மட்டுமன்று பல காலமாக வழங்கி வரும் நளன் கதையில், தனக்கும் தன்மனைவி தமயந்திக்கும் உணவுக்காகப் பறவை பிடிக்கத் தன் வேட்டியை அவற்றின் மேல் வீசினான் நளன். பறவைகள் வேட்டியையும் தூக்கிக் கொண்டு பறந்துவிட்டன.

இந்தக் காட்டுள் நுழைந்தால் இதுதான் நிகழும் என்று அக்காட்டின் தன்மை (பெற்றி) உணரப்படுவதால், இயற்கை ஆயிற்று.

"தெளிவு" என்பது நூல் தெளிவால் வருவது -தெளிவு காரணமாகவும், எதிர் காலத்து நிகழ்வனவற்றை, இறந்தகால, நிகழ்கால வினைகளால் கூறுதல் உண்டு.

"சிறுகுடி" என்றொரு சிற்றூர். அங்கு பண்ணன் என்னும் வேளாளன் வாழ்ந்தான். ஈதலும் அதனால் வரும் உவகையும் இன்பமும் அறிந்தவன் - அவனது ஈகையின் சிறப்பை அறிந்து பல ஊர்களிலுமிருந்து பழுத்த மரத்தை நாடிவரும் பறவைகளைப் போல இரவலர் வந்தனர். - எதிரில் வருவோரிடம் "பசிப்பிணி மருத்துவன் பண்ணன் வீடு எங்குள்ளது?" எனக்கேட்டனர்.

"எறும்புகள், விரைவில் மழை வரும் என்பதைத் தமது நுண்உணர்வால் அறிந்து, தமது சேமக்கிடங்கிலிருந்து ஓர் அரிசியைக் கௌவிக்கொண்டு வரிசையாகப் புதிய இடம் தேடி மேட்டுநிலம்நோக்கிச் செல்வதைப் போல் எங்கள் ஊர்ச் சிறுவர்கள், கையில் சோற்று உருண்டையோடு "வீறுவீறு" என விரைந்து செல்வதைப் பாருங்கள் அதைப் பார்த்த பிறகும் பண்ணன்வீடு, அணித்தோ? சேய்த்தோ? நீங்களே சொல்லுங்கள்", என்றனர் "சிறுகுடி" மக்கள் மனிதர்க்கு இல்லாத சில நுண்ணுர்வுகள், சிற்றுயிர்கட்கு உண்டு. எறும்புகளின் சேமிப்பு, உரிய பொழுதில் உணவுக்கிடங்கை இடம் மாற்றுதல், இவையெல்லாம் நமக்குப் படிப்பினைகள்.

நன்றாக, வெயில்காய்ந்து கொண்டிருக்கும் - "மழை பெய்தது, மழை பெய்கிறது. ஏனென்றால் எறும்புகள், வாயில் ஒருமணி அரிசியோடு வரிசையாக மேட்டுநிலம் செல்கின்றன. "எறும்பு முட்டை (அரிசி) கொண்டு தெற்றி ஏறியவழி மழை பெய்தல் நூலால் தெளிந்தான், அவை முட்டை கொண்டு தெற்றி ஏறிய வழி மழை பெய்யா முன்னும், மழை பெய்தது, மழை பெய்கிறது என்றும், ஆண்டு எதிர்காலத்துக்குரிய பொருள், இறந்த

Koviloor Digital Library



காலத்தானும், நிகழ் காலத்தானும் வந்தவாறு கண்டுகொள்க" என்பர் சேனாவரையர். இது கால வழு அமைத்தவாறு கண்டு கொள்க என்பார்.

"வாராக் காலத்து வினைச் சொற் கிளவி
இறப்பினும், நிகழ்வினும், சிறப்பத் தோன்றும்
இயற்கையும், தெளிவும் கிளக்கும் காலை" (வினை இயல் 48)

## "தொன்னெறி மொழி"

வணிகர் பலர் பொருள் ஈட்டுவதற்காக வேற்று நாட்டுக்குச் சென்றனர். அவருள் ஒருவன் தனியே பிரிந்து பல காவதம் சென்றான். அங்கு ஏராளமான எருமைகளை விலைக்கு வாங்கினான். தன் நாட்டுக்கு அவற்றை ஓட்டிவந்தான். வழியில் காட்டாறு குறுக்கிட்டது. அங்கு அவ்வெருமைகள் நீர் அருந்தின. களைப்பு நீங்கின.

எருமைகளை அகன்ற ஆற்றின் குறுக்கே வணிகன் ஓட்டிவந்தான். நடு ஆற்றில் வந்து கொண்டிருந்தபோது காலமல்லாத காலத்தில் எங்கோ பெய்த மழையால் பெருவெள்ளம், திடீரென வந்தது. அவ்வெள்ளத்தின் வேகத்தில் தப்ப முடியாமல் எருமைகள் எல்லாம், இழுத்துச் செல்லப்பட்டன. இறந்த நிலையில் அந்தக் காட்டாற்றின் போக்கிலேயே சென்றன. வெள்ளம் குறைந்த நிலையில் ஒரூர்ப் புறத்தே ஆற்றிலேயே எருமைப் பிணங்கள் கிடந்தன. எல்லாரும் வந்தார்கள், பார்த்தார்கள், சென்றார்கள்- ஓரிரு நாளில் எருமைப் பிணங்கள் நாறத் தொடங்கின". அவற்றை இழுத்துச் சென்று குழி வெட்டிப் புதைக்க வேண்டும்" என்று எல்லாரும் சொன்னார்கள், யாரும் செய்ய முன் வரவில்லை. ஒரு பெரியவர் சொன்னார்" இதைப் போன்று எதிர்பாராத நிகழ்ச்சிகள் நிகழ்ந்தால் என்ன தீர்வு என்று நமது ஊரின் ''கணக்கு அடங்கல்'' சுவடியில் இருக்கும். கணக்கனிடம் கேட்கலாம்" என்றார். கணக்கன் வந்தான். "நான் அடங்கல்சுவடி பார்த்து வந்து சொல்கிறேன்'' என்று வீடு திரும்பினான். வரும் வழியிலேயே திட்டமிட்டான் - வீட்டுக்கு வந்தான். புதிய ஓலை ஒன்றை எடுத்தான். ஒரு பாடலைப் படைத்தான். புழுங்கல் அரிசி குற்றுவதற்காக, நெல்வேக வைத்துக்கொண்டு இருந்தனர். ஆவிபறக்கும் அந்த நெல்லுக்கு நடுவே புதிய ஓலையைச் செருகினான். புதிய ஓலை சிறிதுநேரத்தில் பழைய ஏடு போலாயிற்று. அதனைக் கொண்டு வந்து அடங்கல் சுவடியில் நடுக்கணக்கில் இணைத்துக் கொண்டான். ஊரார் கூடியுள்ள இடத்துக்கு வந்தான். எல்லார் முன்னிலையில் சுவடிக் கட்டை அவிழ்த்தான். ஒவ்வொர் ஏடாகத் தள்ளிக் கொண்டே வந்தான். அந்த ஏடு வந்தது."குயக்காணம்"

Koviloor Digital Library



என்று அரசனுக்கு ஊர்க்குயவர்கள், ஆண்டு தோறும் இறை செலுத்துவர் அப்போதெல்லாம் கணக்கனுக்கு நன்கொடையும் கொடுப்பார்கள். இந்த ஆண்டு நன்கொடை வழங்க மறுத்துவிட்டனர். “கணக்கனைப் பகைத்தவன் காணி இழந்தான்” என்ற முதுமொழிக்கு ஏற்பக்கொடைதராத குயவரைப் பழி தீர்க்கக் கணக்கன் படைத்த புதிய ஓலை பழைய சுவடியின் பக்கங்களில் தோன்றியது. கணக்கன் படித்தான்.

“காட்டெரு முட்டை பொறுக்கி
மட்கலம் சுட்ட புகையான்
மேற்கே மேகந் தோன்றி
மின்னியிடித்து மழை பொழிந்து
யாற்றில் நீத்தம் பெருகி
அடித்துக்கொல்லும் எருமைகளை
ஈர்த்துக் கொணர்ந்து கரைபேற்றல்
இவ்வூர்க்கு குயவர்க்கு என்றுங் கடனே..”

என்று ஓலையிற்கண்ட விதிப்படி எருமைப்பிணங்களை ஈர்த்துக்கரை சேர்த்து ஊர் நாற்றம் தீர எரிப்பதோ, புதைப்பதோ குயவர்க்குக் கடமை ஆயிற்று, ஊர்ப்பெரியார் பலரும், குயவன் சுள்ளையில் எழுந்த புகையே எருமைசாவுக்குக் காரணம் என்று கூறினர். அன்று முதல், “யாற்றுட் செத்த எருமையை ஈர்த்தல் ஊர்க் குயவர்க்குக் கடன்” என்ற முதுமொழி தோன்றியது.

தொல்காப்பியம் சொல்லதிகாரம் எச்சவியல் 53ஆம் நூற்பாவில், “தொன்னெறி மொழிவயின் ஆஅகுநவும்” - என்ற அடிக்குப்பொருள் கூறிய சேனாவரையர், “முதுசொல் ஆகிய செய்யுள் வேறு பாட்டின் கண் இயைபு இல்லன இயைந்தனவாய் வருவனவும் என்றவாறு. அவை யாற்றுட் செத்த எருமையை ஈர்த்தல் ஊர்க் குயவர்க்குக் கடன் என்பது முதலாயின! என்றனர்.

இதனைக் குறிப்பிடும்போது, ‘அது முதுசொல்லாயிருத்த லோடு, செய்யுள் வேறுபாடுடையதாயிருத்தல் வேண்டுமெனவும் ஆணை தந்துள்ளார். நம் தமிழ்நாட்டின் கண் பண்டைக் காலந்தொட்டுப் பரவை வழக்கின்கண் அடிப்பட்ட சான்றோரால், நெறிப்பட வழங்கிவரும் இம் முதுமொழி பொருத்தம் உடையதாகக் காணக் கிடக்கின்றது” என்பர் தேவநேயப் பாவாணர். (எச்சவியல் - 53 - பாவாணர் அடிக்குறிப்பு)

நச்சினார்க்கினியர் "தொன்னெறி மொழிவயின் ஆஅகுநவும்" என்பதற்குச் சொல்லிடத்துப் பழைய நெறியான் ஆய்வரும் சொல்லும் என உரை கூறி முதுமொழி' - பொருள் உள்ளனவும், பொருள் இல்லனவும் என இருவகைப்படும்- அவை “யாட்டுளான் இன்னுரை தாரான்” என்றது இடையன் எழுத்தொடு புணராது

Koviloor Digital Library



பொருள் அறிவிக்கும் மொழியைக் கூறுதலன்றி, எழுத்தொடு பொருள் அறிவிக்கும் மொழியைக் கூறான் என்னும் பொருள் தந்து நின்றது. "யாற்றுட் செத்த எருமையை ஈர்த்தல் ஊர்க் குயவர்க்குக் கடன்" என்பது குயவனைச் சுள்ளையான் எழுந்த புகையான் ஆய மேகம் தந்தநீரான், எருமை சாகின் அதனை ஈர்த்தல் குயவர்க்குக் கடன் ஆயிற்று என ஒரு காரணம் உளது போலக் கூறுகின்றது - உண்மைப் பொருளன்றி, ஒருவன் இயைபு இன்றிக் கூறிய சொற்கு எடுத்துக் காட்டாகக் கூறப்படுதலின், பொருள் உணர்த்தாது ஆயிற்று எனவும், இலக்கண விளக்க நூலாசிரியர், "தொன்னெறி மொழிவயின் ஆஅகுநவும்" என்பது அடிப்பட்ட நெறியான் வழங்குதலுடைய இம்முதுமொழியாகிய செய்யுள் வேறுபாட்டின்கண் இயையாது என இயைந்தவாய் வருவன அவை, "யாற்றுட் செத்த எருமை ஊர்க் குயவர்க்கு இழுத்தல் கடன்" என்றது- முதலாயின - குயவன் சுள்ளையான் எழுந்த புகையான் ஆகிய மேகம் தந்த நீரான் எருமை சாதலின் குயவர்க்கு ஈர்த்தல் கடனாயிற்று என்க. ஒரு காரணம் உள்ளது போலக் கூறுகின்றது. உண்மைப் பொருளன்றி ஒருவன் இயைபு இன்றிக் கூறிய சொற்கு, எடுத்துக் காட்டாகக் கூறப்படுதலின், இயையாதன இயைந்தவாய் வருதலாயிற்று எனவும் கூறியிருந்தலின், இது நன்கு விளங்கும்.

இலக்கணம் இனியது - உரைகள் இனியவை - மறுப்பும், தடைவிடைகள் எல்லாம் கடந்து, சேனாவரையரையர் உரையும் இனியது எளிது. சிறிய கதைகள் கொண்டது. படித்து மகிழலாம் என்ற துணிவும் தந்தது இக்கட்டுரை எனில், எழுதிய நோக்கம் வென்றது - மகிழ்வோம்.

பேராசிரியர் கதைகள்

முதுமொழி என்பதை, "நுண்மையும் சுருக்கமும் ஒளியும் உடைமையும் மென்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக் குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம் ஏது நுதலிய முதுமொழி என்ப". என்று தொல்காப்பியம் கூறுகின்றது.

பழமொழி சுருக்கமாவும், தெளிவாகவும் மென்மையாகவும் இருக்கும் என்பது தொல்காப்பியர் கருத்து. இதற்கு உரைகாணவந்த பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் ஒருவெண்பாவை எடுத்துக் காட்டுகின்றனர்.

ஓர் ஊரில் நிலத்தை உழுது உழுந்து விதைத்து இருந்தார்கள். பயிர் நன்றாக வளர்ந்து நிலந் தெரியாத அளவுக்குப்பரந்து காணப்பட்டது. ஒருநாள் இரவில் ஊர்க்கன்று வந்து வயிறார மேய்ந்து சென்றது. பழங்காலத்தில் திடமான காளைக் கன்றுகளை உயர்ந்த பசுக்கன்றுகளை உருவாக்கி இனப்பெருக்கம்

Koviloor Digital Library



செய்வதற்காக ஆண்மை நீக்கம் செய்யாமல் விட்டு விடுவார்கள். அதுவே ஊக்கன்று எனப்படும். அவ்வூர்க் கோவில் இறைவன் பெயரை அக்காளைக்கு இட்டிருப்பார்கள் ஊரார் யாரும். அதைக் கண்டிக்க மாட்டார்கள். ஆகவே துணிச்சலோடு ஊர் எல்லாம் சென்று மேயும். வீடு தோறும் அதற்கு அகத்திக்கீரை, வாழைப்பழம் முதலியன கொடுத்து விருந்தோம்புவார்கள். சிறு குழந்தைகளுக்கும் அது தீங்கு செய்யாது. பெரிய பார வண்டிகளைக் கூட அதன் ஆரைக்கால்களில் கொம்பால் குத்திச் சாய்த்து விடுகின்ற வலிமை வாய்ந்தது.

அதிகாலையில் திருக்கோயில் வாயிலில் "சிவனே" என்று படுத்து அசைபோட்டுக்கொண்டு இருந்தது. உழவன் கோயிலையும், கோயிற் காளையையும் சேர்த்து வணங்கிவிட்டு வயலுக்குப் போனான். வயல் அருகிற் சென்றவுடனேயே உழுத்தஞ் செடிகளெல்லாம் அழிந்துபோய் இருப்பதைப் பார்த்தான். மிகுந்த வயிற்றெரிச்சலொடு விரைந்து சென்று பார்த்தான். அவன் மனம் வேதனையால் துடித்தது. தன்வயலை அடுத்த களர்நிலத்தில் புல் மேய்ந்து கொண்டிருந்த கழுதையைப் பார்த்தான் வேகமாக ஓடிச் சென்று தன் கையில் இருந்த கயிற்றால் அதைக் கட்டினான். காலில் தளையப் பட்டிருந்த கழுதை கனைத்துக்கொண்டு தாவி, தாவிச் சென்றது. வெகுண்ட உழவனது வீர உரையும், கழுதையினது கனைப்பும் ஊரையே கூட்டி விட்டன. வந்தவர்கள். கழுதையைப் பார்த்தனர். அவன் காட்டிய உழுத்தஞ் செய் (வயல்)யையும் பார்த்தனர். உழவனைக் கேட்டனர். எல்லாரும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்தனர்.

ஊரில் பல கழுதைகள் இருந்தாலும் எந்தக் கழுதையையும் செய்யாத கொடுமையை இந்தக் கழுதை செய்திருக்கிறது. இதற்கு ஓர் அடையாளம் இருந்தால்தான் வேறு வயல்களில் இந்தக் கழுதை புகுவதைப் பார்த்தால் இதை விரட்டி அடிக்க முடியுமென்று அனைவரும் ஒரு மனதாக முடிவு செய்தனர். கழுதையைப் பலர் சேர்ந்து பற்றிக் கொண்டு அதனுடைய நீண்ட காதுகளைப் பாதியாக அறுத்தெறிந்தனர். நெடுஞ்செவியன் குறுஞ் செவியனானான். ஒரு குற்றத்திற்கு நல்ல தீர்ப்பு வழங்கிய மகிழ்ச்சியில் ஊர் மக்கள் கழுதையை விரட்டி விட்டுக் கலைந்து சென்றார்கள். இத்தனை நிகழ்ச்சிகளையும் இரவில் உழுத்தம் பயிர் மேய்ந்த ஊர்க்கன்று கோயில் வாசலில் படுத்து இரவு உண்ட இரையை அசைபோட்டுக்கொண்டே பார்த்துக்கொண்டிருந்தது.

ஒரு பெண், வழுதி தேரில் ஏறி ஊர்வலம் போவதைப் பார்த்தாள். அவன் அழகிலும், அணியிலும், ஆண்மையிலும்

Koviloor Digital Library



மெய்ம் மறந்தாள். தன் நெஞ்சை அவனிடம் பறி கொடுத்தாள். அவன் அவளைப் பார்க்கவில்லை யெனினும் அவள் அவனையே நினைந்து கொண்டிருந்தாள். அவள் தோள்கள் மெலிந்தன. அவள் நினைத்துப்பார்க்கிறாள். வழுதியைப் பார்த்து அவன் பால் காதல் கொண்டதாலேயே என் தோள்கள் வாடின. வளை கழன்றன. கண்ணைப் பார்க்கிறாள். கண் மெலியவில்லை. மீண்டும் தோளைப் பார்க்கிறாள். தோள் இயல்பானநிறம் மாறிப்பசலை பாய்ந்திருப்பதைக் காண்கிறாள். இரவில் தூக்கமின்மையால் ஊர்க்கன்று உழுத்தஞ் செய் மேய்ந்ததும் அவளுக்குத் தெரியும் கழுதை செவி அரிந்ததும் அவளுக்குத் தெரியும் அவளுடைய மனம் வெண்பாவாக வெளிப்படுகிறது.

"உழுத உழுத்தஞ் செய் ஊர்க்கன்று மேயக்
கழுதை செவியரிந் தற்றே – வழுதியைக்
கண்ட கருங்கண் இருப்பப் பெரும்பணைத்தோள்
கொண்டன மன்னோ பசப்பு"

"சிவலிங்கனார், "வழுதியைக் கண்ட கண்ணை விட்டு விட்டு பசப்பானது தோளில் பரவியது என்பதைக் கூறும் தலைவி, "வயல் உளுந்தை ஊர்க்கன்று மேயக் கழுதைக் காதை அறுத்தானாம்" என்ற பழமொழியைக் கூறுவதாக இப்பாடலைப் பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் காட்டுவர். இது பெரும்பாலும் வேற்றுப் பொருள் வைப்பணியும் இதன்பாற் சாரும் என்பர்.

மந்திரம்

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப"

என்பது தொல்காப்பியம். "நிறைமொழி மாந்தர் என்பது சொல்லிய சொல்லின் பொருண்மை யாண்டும் குறைவின்றிப் பயக்கச் சொல்லும் ஆற்றலுடையார் ஆவார், ஆணையாற் கிளக்கப்பட்டுப் புறத்தார்க்கு புலன் ஆகாமன் மறைத்துச் சொல்லும் சொற்றொடர் எல்லாம் மந்திரம் எனப்படும்.

மதுரைச் திருக்கோயிலுள் தெற்கண் வாயில் திறவாத பட்டி மண்டபத்தார் பொருட்டு நக்கிரர் ஒருவன் வாழவும் ஒருவன் சாவவும் பாடிய மந்திரம் அங்கதப் பாட்டு ஆயின. மேல்" பாட்டு உரை நூல்" என்புழி அங்கதம் என்று ஓதினான். இன்ன மந்திரத்தை. இஃது, ஒருவனை இன்னவாற்றாற் பெரும்பான்மையும் சபித்தற் பொருட்டு ஆதலின் அப்பெயராயிற்று-

மதுரை நகரில் மண் கலங்கள் செய்யும் கொண்டான் என்ற பெயருடைய குயவன் ஒருவன் இருந்தான். அவன் தமிழ்ப்புலவன் ஆயினும் பூடமொழியின் மீது அளவு கடந்த பற்றுக் கொண்டிருந்தான். தமிழைவிட வடமொழியே உயர்ந்தது என்று

Koviloor Digital Library



எல்லாம் இடத்திலும் எல்லார் முன்னிலையிலும் கூறிவந்தான். மதுரை திருக்கோயிலுள்ள சங்கத்தார் கோயிலிலும் ஆரியம் நன்று, தமிழ்தீது" என்று சென்று முழங்கினான். உடனே திருக்கோயிலின் தெற்கண் உள்ள திண்ணிலைக்கதவம் திறவாது அடைத்துக் கொண்டது. குயக் கொண்டானால்தான் திருக்கோயில் கதவம் அடைத்துக் கொண்டது. சங்கத்தார் அனைவரும் சினங்கொண்டு அவனைக் காய்ந்தனர்.

தமிழ்ச் சங்கத்தின் தலைமைப்புலவராகிய நக்கீரர் தாள முடியாத சிற்றத்தோடு அவனை நோக்கி ஒருவெண்பாப் பாடினார். நக்கீரர் நிறைமொழி மாந்தர் ஆனதால் அவர் அருளிக் கூறினும், வெகுண்டு கூறினும், அவ்வப் பயன்களைப் பயந்தே விடும் மறைமொழியாகிய மந்திரச் சொற்களாகும்.

"முரணில் பொதியில் முதற்புத்தேள் வாழி
பரண கபிலரும் வாழி – யரணிய
லானந்த வேட்கையான் வேட்கோக் குயக்கோட
னானந்தஞ் சேர்க சுவா"

என்று நக்கீரர் பாடி அருளினார். முதற்சங்கத்துத்தலைவராக இருந்த முழு முதற் கடவுளாகிய சிவபெருமான் வாழ்க. புலமை நலம் சான்ற பரணர், கபிலர் போன்ற பெரும்புலவர்களும் வாழ்க ஆனந்தம் என்னும் மரணவேட்கையுடையவனாகிய மண்பானை செய்யும் குயவர் தலைவனாகிய குயக் கோடன் "ஆனந்தம் சேர்க சுவாகா" என்று பாடினார். ஆனந்தம் என்பது சாவு புலவர் பெருமானாகிய நக்கீரர் வெகுண்டு கூறிய மந்திரம் அவனை உடனே கொன்றது. இது அவருடைய மந்திர மொழியின் ஆற்றல்.

குயக்கோடன் இறந்து வீழ்ந்ததும் அவனுடைய உற்றார், உறவினார்களும், தமிழ்ச் சங்கத்தாரும், நக்கீரரிடம் வேண்டினர். "குயக்கோடன் தன் அறியாமையால் தமிழைப் பழித்தான். ஆனால் தாங்கள் தமிழ் முழுதும் அறிந்த பெருமகனார். தங்களாலும் தங்கள் தமிழ் ஆற்றலாலும் ஒருவன் இறந்தான் என்ற பழிச்சொல் நேரக்கூடாது. தாங்கள் அவனைப் பொறுத்து அருள வேண்டுகிறோம். தாங்கள் அவனை மன்னித்து உயிர் கொடுத்து நல்லவனாக வாழ்வதற்கு அருள் செய்யவேண்டும் என்று வேண்டினார்கள். உடனே நக்கீரர் மீண்டும் ஒருவெண்பாப் பாடினார்.

'ஆரிய நன்று தமிழ்தீ தெனவுரைத்த
காரியத்தாற் காலக்கோட் பட்டானைச் –சீரிய
வந்தண் பொதியி லகத்தியனா ராணையாற்
செந்தமிழே தீர்க்க சுவா"

வீழ்ந்து இறந்துகிடந்த குயக்கோடன் 'ஆரியம் நன்று, தமிழ்த்தீது எனவுரைத்தான். அதனால் காலனால்

Koviloor Digital Library



கொள்ளப்பட்டான். இறந்தவரை எழுப்புவது எளிய செயலன்று, அழகிய குளிர்ந்த பொதிய மலையில் சிவனருளால் தங்கியிருந்து தமிழ் வளர்க்கும் அகத்திய முனிவரது ஆணையால் செந்தமிழே, குயக்கோடனுடைய பிழைகளை யெல்லாம் நீ பொறுத்து அவனுக்கு உயிர் கொடுத்து அருள்வாய்'' என்று நக்கீரர் வேண்டிக்கொண்டார்.

ஓர் உயிரைப்போக்கவும், மீண்டும் ஆக்கவும் தமிழ் மந்திரத்தால் இயலும் என்பது நிறைமொழி மாந்தராகிய நக்கீரரால் மெய்ப்பிக்கப்பெற்றது.

முடிவுரை

கதைகள் சொல்லுவதிலும், கேட்பதிலும் உலகம் முழுவதிலும் உள்ள எல்லா மக்களுக்கும் விருப்பம் அதிகம். குழந்தைகள் முதல் பெரியவர் வரை எல்லாருமே கதை கேட்பதை விரும்புவார்கள் தமிழ்நாட்டில் தொன்று தொட்டே கதைகள் சொல்லப்பட்டு வந்துள்ளன. அரபுக்கதைகள், ஈசாப்கதைகள், உருசிய நாடோடிக்கதைகள், பஞ்சதந்திரக்கதைகள், விக்கிரமாதித்தன் கதைகள் என்பவை பல காலத்துக்கு முன்தோன்றி இன்றுவரை நின்று நிலைத்து உள்ளன. இதற்கு நேர் முரணனானது. இலக்கணம். கதைகள் தேன் என்றால் இலக்கணம் கசப்பு மருந்து மருந்து தேனில் குழைக்கப்படும்போது உண்ணுபவன் தேனின் சுவையையும் ம்ருந்தின் பயனையும் ஒருங்கே பெறுகிறான்.

இலக்கண நூலாசிரியர்களும் இன்சுவை மருந்தைத் தருகின்றனர். உரையாசிரியர்கள் அதற்கு மேலும் இனிமையைத் தருகின்றனர். அந்த வகையில் தொல்காப்பியத்துக்கு உரை வகுத்த சேனாவரையரும், பேராசிரியரும் அவரை அடியொற்றிவந்த நச்சினார்க்கினியரும் வழங்கிய கதைகளை இக்கட்டுரையில் பார்த்தோம். கதைகளைப் படிப்போம். இலக்கணத்தை அறிவோம் தமிழை வளர்ப்போம்.

## பயன் பட்டநூல்கள்

1. தொல்காப்பியம் தெளிவுரை - ச.வே. சு
2. தொல்காப்பியம் - சேனாவரையர் உரை - தேவநேயப் பாவாணர்-அடிக்குறிப்புடன்
3. கலைக்களஞ்சியம் - தமிழ் வெளியீட்டுக் கழகம்
4, அபிதான சிந்தாமணி
5. சிலப்பதிகாரம் - ச.வேசு-உரை,
6, விக்கிரமாதித்தன் கதைகள்,
7. புறநானூறு
8. நளவெண்பா.

Koviloor Digital Library

Alagappa university
Central Library
64545

# 9. தொல்காப்பியமும் இராமாயணமும்

## 'வஞ்சினம்'

பி. ஜானகி
சென்னை

தொல்காப்பியம் காலத்தில் மிக முற்பட்டது (கி.மு. 5-2) இராமாயணம் அதற்குப் பின்பு சுமார் 15 நூற்றாண்டுகளுக்குப் பின் தோன்றியது/ ஆனாலும் தொல்காப்பியக் கருத்துக்கள் பலவற்றுடன் இயைந்து செல்வதைக் காணலாம். இக்கருத்திதை 'வஞ்சினம்' எனும் கூறுகொண்டு இக்கட்டுரை நிறுவ முயல்கிறது.

**வஞ்சினம்**

தமிழ்ப் பேரகராதி வஞ்சினம் என்பதற்குச் சூளுறவு கடுங்கோபம் எனப் பொருளுரைக்கின்றது. (3466) சூள் என்பதற்குச் சபதம் என்றும் (1572) சூளுறவு என்பதற்கு ஆணையிடுகை என்றும் பொருளுறைக்கிறது. (1573) க்ரியாவின் தற்காலத் தமிழகராதி. சூளுரை என்பதற்குச் சபதம் செய்தல், சபதம் எனப் பொருள் கூறுகிறது, (466). இவற்றை இணைத்துப் பார்க்கும் பொழுது வஞ்சினம் என்பதற்குக் கொடிய சினம், மிகுதியான கோபம் காரணமாகக் கொள்ளும் சபதம் என்பது தெளிவாகிறது.

**தொல்காப்பியத்தில் வஞ்சினம்**

தொல்காப்பியம் புறத்திணையில் காஞ்சித்திணையில் ஒரு துறைஆக வஞ்சினம் அமைகிறது. அதற்கு,

"இன்னது பிழைப்பின் இதுவா கியர்எனத்
துன்னரும் சிறப்பின் வஞ்சினத் தானும். (தொல். 1025. 8-9)

என்று இலக்கணம் கூறப்படுகிறது. இதைச் செய்வேன் செய்யத்தவறினால் இப்படி ஆவேன் என்பது இதன் பொருள். இளம்பூரணர், நச்சினார்க்கினியர் முதலானவர்களின் கருத்துக்களில் 'வஞ்சினம்' என்பதற்கு மிகுந்த வேறுபாடு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

**இராமாயணத்தில் வஞ்சினம்**

'சூள்' என்பது (சபதம்) வஞ்சினத்தைக் குறிக்க இங்குப் பயன்படுகிறது. இவ் வஞ்சினம் இராமாயணத்துள் இடம்

Koviloor Digital Library



பெற்றுள்ள, முறைமையை இனிக்காணலாம். (பின்னிணப்பு காண்க) இராமாயணத்தில் வஞ்சினம் அட்டவணை இராமாயணத்தில் ஆண், பெண் என்று இரு பாலர் வஞ்சினமும் காணப்படுகிறது. இதில் ஆண்களின் வஞ்சினமாக 1. அனுமன், 2.அதிகாயன், 3. இந்திரசித் 4. இராமன், 5. இராவணன், 6. இலக்குவன், 7. பரதன் ஆகிய எழுவரின் வஞ்சினமும், பெண் வஞ்சினமாக, கரன் மனைவியின் வஞ்சினமும் இடம் பெற்றுள்ளன.

### வஞ்சினத்தின் இயல்பு

வஞ்சினம் உரைப்போர், கேட்போர் என்று இருவருக்கிடையே அமைவது 1.அது நேருக்கு நேர் உரைப்பது 2. வேண்டிய பிறரிடம் உரைப்பது என இரு நிலை காட்டுகிறது. நேருக்கு நேர் உரைப்பது என்பது வஞ்சினம் உரைப்போர் தாமே யாரிடம் உரைக்கிறாரோ அவரிடமே நேர் நின்று, மொழிவது ஆகும். அனுமன் இராவணனிடம், இராமன், - கும்பகருணனிடம் உரைக்கும் வஞ்சினமும் சான்றுகளாகும். குறிப்பிட்ட வஞ்சின மொழியைத் தனக்கு வேண்டி பிறரிடம் கூறுவது வேண்டிய பிறரிடம் உரைப்பதாகும். அதிகாயன், இந்திரசித் இராவணனிடமும், இலக்குவன் இராமனிடமும் மொழிவன சான்றுகளாகும். ஒருவர் கூறியதற்கு மாற்றாக அதில் தொடர்புடையோர் வஞ்சின முரைத்தலும் இராமாயணத்துள் காணப்படுகிறது. அதனை எதிர் வஞ்சினம் எனக் கொள்ளலாம். இதற்குச் சான்றாக இந்திரசித்தின் வஞ்சினத்தை எதிர்த்து இலக்குவனின் வஞ்சினமும், அனுமனை எதிர்த்து இராவணன் வஞ்சினமும் அமைந்துள்ளன.

### வஞ்சின வகைகள்

வஞ்சினத்தின் வகைகளாக அக நிலை வஞ்சினம், புறநிலை வஞ்சினம், தனிமனித ஒழுக்கம் பற்றிய வஞ்சினம் என்பனவற்றை இராமாயணத்தில் காணமுடிகின்றது.

### அகநிலை வஞ்சினம்

தலைவன் தலைவியரின் அகவாழ்வோடு தொடர்புடைய நிலையில் அமைவதை இங்குக் கருதலாம்.

கரனின் மனைவியின் வஞ்சினம் அகநிலை வஞ்சினமாகக் கொள்ளப்படுகின்றது. இவ்வஞ்சினம் மகரக்கண்ணன் வாயிலாக இராவணனிடம் கூறுவதாக அமைந்துள்ளது.

"அருந் துயர்க் கடலுள்ளாள் என் அம்மனை, அழுத கண்ணள்,
பெருந் திருக் கழித்தல் ஆற்றாள் கணவனைக் கொன்று
போந்தோன்.
கருந் தலைக் கலத்தின் அல்லால், கடனது கழியேன்" என்றாள்.
பருந்தினுக்கு இனிய வேலாய்! இன் அருள் பணித்தி என்றான்
(8407)

ALAGAPPA UNIVERSITY, KARAIKUDI
CENTRAL LIBRARY
Accession No. 64545
Date of purchases:
Call Number: 494.8045 T pt.

Koviloor Digital Library



வேதனையுடன் கடல் போன்று அழுத கண்ணீருடன் தன் கணவன் இறந்தபின்பும் உரிய சடங்குகளை ஏற்காமல் என் தாய்இருக்கிறாள். அதற்குக் காரணம் கரனைக் கொன்றவர்களைக் கொன்று பின் அக்குருதியில், உரிய சடங்குகளை ஏற்க வேண்டும் என்பதினால் இங்குத் தாயின் துயரைக் களைவது மகனின் கடமை என்பதினால் தனக்கு ஆணையிடும்படி இராவணனிடம் மகரக்கண்ணன் கேட்கிறான். இதில் தாயின் வஞ்சின மொழிகளை மகன் கூறுவதாக இருந்தாலும் வஞ்சினம் உரைத்தது. கரனின் மனைவி என்பதினால் பெண் வஞ்சினமாக அமைகின்றது.

காப்பியத்தில் வஞ்சினம் உரைப்பது என்பதில் ஆண்களே அதிகமாக இருப்பது மரபாக அமைகிறது. சில இடங்களில் பெண்களின் வஞ்சினமும் இடம் பெறுகின்றது. காட்டாக சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் வஞ்சினமும், அமைந்து இருப்பது காணமுடிகிறன்றது.

காதல் கணவனைக் காண்பனே, இது ஒன்று,
காதல் கணவனைக் கண்டால் அவன் வாயில்
தீதறு நல்லுரை கேட்பனே ஈதுஒன்று
தீதறு நல்லுரை கேளாது ஒழிவனேல்
நோதக்க செய்தாள் என்று எள்ளல் ஈதுஒன்று (19;4–14)

இங்கு வஞ்சினம் பேசுகிறாள். கோவலன் இறந்து விட்டான். அவனை நான் காண்பேன். அவன் வழி நல்ல சொற்களைக் கேட்பேன். அவ்வாறு கேட்காவிட்டால் என்னை வருந்தத் தக்கதைச் செய்தாள் என்று எள்ளி நகையாடுங்கள் என்பது வஞ்சின உரையாக அமைகின்றது. (தொல். -குறள்-சிலம்பு ப.179) பெண்கள் வஞ்சினம் உரைப்பது வேதனையின் உச்சமாக தங்கள் வாழ்க்கை அழியும் நிலைக்கு ஆளாகும் பொழுது அமைவதை உணரமுடிகிறது. அத்தகு நிலையில் கரனின் மனைவியின் வஞ்சினம் அமைந்துள்ளது.

**புறநிலை வஞ்சினம்**

புறவாழ்க்கைச் சூழலில் எழும் வஞ்சினங்கள் இதன் பாற்படுகின்றன.

இராமன், அதிகாயன், இந்திரசித், இலக்குவன் அனுமன், முதலானோரின் வஞ்சினங்கள் புறநிலை வஞ்சினமாக அமைகின்றன.

**இராமன் வஞ்சினம்**

இராமன் கும்பகருணனிடம் உரைத்ததாக அமைகின்றது.

இராமன் யானுடை
இன் துணை ஒருவனை எடுத்த தோள் எனும்,

CENTRAL LIBRARY
Accession No. ...
Date of purchase:

Koviloor Digital Library


குன்றினை அரிந்து யான் குறைக்கிலேன் எனின்,
பின்றினென் உனக்கு, வில் பிடிக்கிலேன் என்றான். (7557)

சுக்கிரீவனைத் தூக்கிச் சென்ற தோள் என்னும் குன்றினை வெட்டி வீழ்த்துவேன். அப்படி வெட்டி வீழ்த்த முடியாவிட்டால் கும்பகருணனிடம் தோற்றவன் ஆவேன், அதன் பின்பு வில்லையும் பிடிக்கமாட்டேன் என்கிறான். வஞ்சினம் உரைப்பவர். தான் மிகவும் நேசித்ததையும், பெருமையாக எண்ணுவதையும் வஞ்சினத்தில் முன்வைப்பர். அந்நிலையில் இராமனுடன் பெருமையாகப் பேசப்படுவது வில். அதை பிடிக்கமாட்டேன் என்று கூறுவதும் மேலும் தோற்றவன் ஆவேன் என்று உரைப்பதும் இராமன் திருமாலின் அவதாரமாக மனிதக் காப்பியத்தில் இடம் பெறுவதின் இயல்பு நோக்கி அமைக்கப்பட்டதாகிறது. மேலும் சுக்கிரீவன். இராமன் நட்பின் ஆழம் வெளிப்படுவதும் இங்கு உணர்த்தப்படுகின்றது.

அதிகாயன் வஞ்சினம்

இராவணன் தம்பி கும்பகருணன் இராமனால் அழிவுற்ற வேதனையின் காரணமாக அரற்றும் பொழுது அதிகாயன் அவனை அமைதிப்படுத்த வஞ்சினமுரைக்கிறான்.

"உம்பிக்கு உயிர் ஈறு செய்தான் ஒருவன்
தம்பிக்கு உயிர் ஈறு சமைத்து, அவனைக்
கம்பிப்பது ஒருவன் துயர் கண்டிலனேல்,
நம்பிக்கு ஒரு நன் மகனோ, இனி நான்? (7737)

இராவனனின் தம்பி கும்பகருணனை அழித்த இராமனின் தம்பியை (இலக்குவனை) அழிப்பேன். அவ்வாறு அழிக்க. முடியாவிட்டால் இராவணனுக்கு நல்ல மகன் இல்லை என்கின்றான் அதிகாயன். இங்குத் தந்தையின் மன வேதனையைக் களைய வேண்டும், என்பது பாசத்தின் காரணமாக அமைகின்றது. மேலும், இராவணனின் தம்பி கும்பகருணனைக் கொன்ற இராமனின் தம்பி இலக்குவனைக் கொல்வேன் என்பதில் மூலம் பழிக்குபழி என்ற எண்ணம் வெளிப்படுவது புலனாகிறது. இதன் காரணமாக எழுந்த சொற்கள் வஞ்சினமாகின்றன.

இந்திரசித்தின் வஞ்சினம்

அதியகான் இறந்ததை அறிந்த இந்திரசித் இராவணனிடம்

'என், இன்று நினைந்தும், இயம்பியும், எண்ணியும் தான்?
கொன் நின்ற படைக்கலத்து எம்பியைக் கொன்றுளானை,
அந் நின்ற நிலத்து அவன் ஆக்கையை நீக்கி அல்லால்,
மண் நின்ற நகர்க்கு இனி வாரெலன்; வாழ்வும் வேண்டேன்(8010)

என உரைக்கிறான். நடந்ததை நினைத்துப் பயன் இல்லை. படைக்கலங்கள் பல சுமந்த தம்பியைக் கொன்றவனை அந்தப்

Koviloor Digital Library



போர்க்களத்திலேயே கொன்றுவிடுவேன். அப்படிக்கொல்ல முடியாவிட்டால் இந்த இலங்கை நகருக்கு வரமாட்டேன். உயிர் வாழவும் விரும்பவில்லை என்பது அவன் வஞ்சின மொழி பொருள். இதில் அடுத்து செய்யவேண்டியதை மட்டும் நினைக்கவேண்டும். என்பதுடன் தன் தம்பியின் (அதிகாயன்) பெருமையினையும் எடுத்துரைக்கிறான். இந்திரசித் அன்புக்குரியவர்கள் நிரந்தரமாகப் பிரியும் பொழுது அவர்களின் பெருமைகளையும் சொல்லி வருந்துவது உலக மக்களிடம் காணப்படும் குணங்களில் ஒன்று. அக்குணம் அரக்ககுணம் படைத்த மக்களிடமும் உண்டு என்பது புலனாகின்றது. அதே சமயத்தில் வஞ்சினம் நிறைவேற்றாவிட்டால் எவ்வளவு கீழ்மைப்படுத்தப்படுவோம் என்று இந்திரசித் முன்பே எண்ணியதால் இனி நகருக்கு திரும்பி வரமாட்டேன் என்றும் உயிர் வாழவும் விரும்பவில்லை என்றும் உரைப்பதாகவும் கொள்ளலாம்.

இலக்குவன் வஞ்சினம்

இந்திரசித் நாகபாசத்தாலும் பிரமாத்திரத்தாலும் இலக்குவனை வீழ்த்துகிறான். இதன் காரணமாக உலக மக்களின் பழிச் சொல்லுக்கு ஆளாகிவிட்டோமே என்ற வேதனையும் அந்தப் பழிச்சொல்லைக் களைந்தெறிய வேண்டும். என்ற மன வேகத்தின் காரணமாகவும் எழுந்த சினம் வஞ்சினமாக மாறுகின்றது. அதனை இராமனிடம் வெளிப்படுத்துகிறான். இதனை உலக நியதிகள் ஒன்பதினை எடுத்துக் கூறி இறுதியில் வஞ்சினத்தில் உச்சக்கட்டமாக இந்திரசித்தை வீழ்த்தாவிட்டால் தன் அண்ணன் இராமனுக்குச் செய்யும் அடிமையின் பயனும் தன்னைவிட்டு நீங்கட்டும் என்று உரைக்கின்றான்.

"இந்திரன் பகை எனும் இவனை, என்சரம்
அந்தரத்து அருந்தலை, அறுக்கலாது எனின்,
வெந் தொழிற் செய்கையன் விருந்தும் ஆய், நெடு
மைந்தரில் கடை எனப் படுவேன், வாழியாய்! (8481)

இந்திரனுக்குப் பகைவன் எனப் பேசப்படும் இவ் இந்திரசித்தனை என் அம்பு கொண்டு தலையை அறுத்து அழிப்பேன். இவ்வாறு அழிக்க முடியாவிட்டால் கொல்லும் தொழில் உடைய கூற்றுவனுக்கு விருந்தினன் ஆகி இவ்வுலகில் பெருமையாகப் பேசப்படும் வீரர்களின் கடை எனப்படும் படி இழித்துக் கூறப் படுவேன் என்கிறான் என்பது பொருள். இதில் இலக்குவன் தோற்றால் உயிர் வாழவிரும்பவில்லை, என்று கூறுகின்றான். அதனுடன் பகைவன் என்று தெரிந்து இந்திரசித்தின் பெருமைக்கும் புகழுக்கும் காரணமாகச் சொல்லப்படும் இந்திரனை வென்றவன் (இந்திரன் பகை) என்ற சிறப்பையும் எடுத்து

Koviloor Digital Library



இயம்புகின்றான். இதில் இலக்குவனின் பெருமித குணமும், அதே சமயத்தில் அத்தகு வீரம் உடையவனை நிச்சயமாக வெல்ல வேண்டும் என்ற மன உறுதியும் வெளிப்படுகின்றது. மன எழுச்சியின் உச்சமாகவும் சொற்கள் வெளிவருகின்றது.

"கடிதினில் உலகு எலாம் கண்ட நிற்க, என்
சுடு சுரம் இவன் தலை துணிக்கலாது எனின்,
முடிய ஒன்று உணர்த்துவென், உனக்கு நான் முயல்
அடிமையின் பயன் இகந்து அறுக ஆழியாய்! (8483)

இந்த உலகம் பார்த்துக் கொண்டு இருக்கும் பொழுதே இந்திரசித்தின் தலையை, அம்பு கொண்டு வீழ்த்துவேன். அப்படி வீழ்த்த முடியாவிட்டால் இராமனுக்குச் செய்யும் அடிமையின் பயன் முழுவதும் தன்னை விட்டு நீங்கட்டும் என்கிறான். இதில் இலக்குவனின் எண்ணமும், செயலும் இராமனைப் பாதுகாத்தலே என்பது மட்டும் குறிக்கோளாகிறது. மேலும், உலகம் முழுவதும் பார்த்துக்கொண்டு இருக்க இந்திரசித்தின் தலையை கொய்வேன் என்றது தன்னை இந்திரசித் வீழ்த்தியதற்கும் உலக மக்களின் பழிச் சொல்லுக்கும் சரியான செயலை நிறுவி தன்னை நிலை நிறுத்த வேண்டும் என்று நிலையில் அமைகின்றது.

அனுமன் வஞ்சினம்

முதல் நாள் போரில்

அனுமன் இராவணனிடம் கூறியதாக இவ்வஞ்சினம் அமைகின்றது.

"என் தோள் வலிஅதனால் எடுத்து யான் எற்றவும் இறவா–
நின்றாய் எனின், நீ பின் எனை, நின் கைத் தலநிரையால்
குன்றே புரை தோளாய்! மிடல் கொடு குத்துதி; குத்தப்
பொன்றேன் எனின் நின்னோடு எதிர் பொருகின்றிலன் என்றான்.
(7182)

அனுமன் இராவணனின் மார்பில் குத்திய பின்பும் இராவணன் உயிருடன் இருந்தால் இராவணன் தன் இருபது கைகள் கொண்டு குத்தட்டும் அவ்வாறு குத்திய பின்பு அனுமன் உயிருடன் இருந்தால் போர் புரிய மாட்டேன் என்பது அவன் வஞ்சினமாகிறது. இங்கு அனுமனின் மன வலிமை தெரியவருகின்றது. தன் இரண்டு கைகளினால் இராவணனை வீழ்த்த முடியும் என்ற நம்பிக்கையும் மேலும் இராவணன் இருபது கைகள் கொண்டு குத்தினாலும் தன் உடல் வலிமை அவனை அழிக்கும் என்ற எண்ணமும் வெளிப்படுத்துகின்றது.

காப்பியத்துள் இடம் பெறும் இவ்வஞ்சினத்தில் வஞ்சினம் உரைப்போர் சொல் வெற்றிபெறவில்லை. காரணம் இராவணனை இராமன் வென்றாக வேண்டும். காப்பியத்தின் முக்கிய நோக்கம்

Koviloor Digital Library



நிறைவேறவேண்டும். எனவே இங்கு அனுமன் தோற்றாக வேண்டிய கட்டாய மெழுகிறது. அனுமன்" இனி இராவணனுடன் போர் புரிய மாட்டேன்" என்ற தன் சொல்லை இறுதிவரை காப்பாற்றுவதும் கூறத்தக்கது.

**தனி மனித ஒழுக்கம் பற்றிய வஞ்சினம்**

பரதனின் வஞ்சினம் தனிமனித ஒழுக்கம் பற்றிய வஞ்சினமாக அமைகிறது. இராமன் வனம் சென்றதற்கான முக்கிய பங்கு பரதனிடம் இருக்குமோ என்று கோசலை. ஐயமுற்று பரதனிடம் கேட்டதினால். மனம் வருந்திய பரதன் தன் உள்ளத் தூய்மையை வலியுறுத்த வஞ்சினம் உரைக்கின்றான்.

"தாள் உறு குரிசில் அத்தாய் சொல் கேட்டலும்,
கோள் உறு மடங்கலின் குமுறி விம்முவான்,
நாள் உறு நல் அறம் நடுங்க நாவினால்
சூளுறு கட்டுரை சொல்லல் மேயினான் (2198)

சூளுறு கட்டுரை என்பதே இதன் நீட்சியை விளக்குகிறது. பரதனின் சூளுரை இருபது பாடல்கள் வரை சுட்டப்படுகிறது. இங்கு உலகில் பேசப்படும் அறமற்ற செயல்கள் எல்லாவற்றையும் பரதன் முன் நிறுத்தி சூளுரைக்கின்றான்.

'தாய் பசி உழந்து உயிர் தளர, தான் தனி,
பாய் பெரும் பாழ் வயிறு அளிக்கும் பாவியும்,
நாயகன் பட நடந்தவனும், நண்ணும் அத்
தீ எரி நரகத்துக் கடிது செல்க யான் (2202)

தாய் பசியால் வாட தன் வயிரை நிறைத்துக் கொண்டவன், அரசன் போர்க்களத்தில் இருக்க தன் உயிரைப்பாது காக்கும் பொருட்டு போருக்குச் சொல்லாதவன், செல்லும் நரகத்துக்கு நானும் (பரதன்) செல்வேனாக. என்கிறான். இதில் தாயின் பசியைக் களைய வேண்டியது, மகனின் கடமை, அரசனோடு சேர்ந்து போரிடல் வேண்டும், அதுவும் ஒரு வீரனின் செயல். இரண்டும் செய்யப்படாமல் இருத்தல் நகரத்திற்குச் சமம், அத்தகைய நகரத்திற்கு யான் செல்வேனாக என்பதின் மூலமும் தான் ஒழுக்கமும் தீவிரமும் நிறைந்தவன். என்பதனை நிலை நாட்டவும் தன் மனம் எத்தகையது. என்பதை வெளிப்படுத்தவும். அமைகின்றது. மேலும். பல அறமற்ற குணங்கள் பற்றி பரதன் எடுத்துக் கூறுவதின் மூலமாகத் தனிமனித ஒழுக்கம் சிறப்புறும் வழியைக் கம்பர் விளக்குகிறார் எனலாம்.

**வஞ்சினத்திற்கு எதிர் வஞ்சினம்**

போர்க்களத்தில இந்திரசித் வஞ்சினம் உரைத்ததைக் கேட்ட இலக்குவன் எதிர் வஞ்சினம் உரைக்கின்றான்.

Koviloor Digital Library


'முன் பிறந்த உன் தம்முனை முறைதவிர்த்து உனக்குப்
பின்பு பிறந்தவன் ஆக்குவேன், பின் பிறந்தோயை
முன்பு இறந்தவன் ஆக்குவேன், இது முடியேனேல்
என் பிறந்ததனால் பயன் இராவணற்கு? என்றான். (8503)

இராமனுக்குப் பின்னால் பிறந்த இலக்குவனைக் கொன்று இராமன் வருந்தும்படி செய்வேன். இவ்வாறு செய்யா விட்டால் நான் இராவணனுக்குப் பிறந்ததினால் என்ன பயன் என்று இந்திரசித் வினவுகின்றான் இது கும்பகருணனையும் அதிகாயனையும் இழந்து மனம் வெதும்பும் தந்தையை நினைத்துக் கூறுவதாக அமைகின்றது. கும்பகருணனை இழந்தது போன்று இராமன் இலக்குவனை இழக்க வேண்டும். என்பதும் அதிகாயனை அழித்த இலக்குவனை அழிக்க வேண்டியது/ தனது கடமை என்பதின் காரணமாக எழுந்த கோப மொழிகள் வஞ்சினமாக மாறி பழிக்குபழி வாங்க வேண்டும் என்ற உள்மன உணர்வுடன் வெளிவந்துள்ளது.

இதனைக் கேட்டவுடன் இலக்குவன் எதிர் உரைத்தது எதிர் வஞ்சினமாகிறது.

"வாளின்,திண் சிலைத் தொழிலினின், மல்லினின் மற்றை
ஆளுற்று எண்ணிய படைக்கலம் எவற்றினும், அமரில்
கோளுற்று, உன்னொடு குறித்து, அமர் செய்து, உயிர் கொள்வான்
சூளுற்றேன் இது சரதம் என்று இலக்குவன் சொன்னான். (8504)

வால் வில் மற்போர் படைக் கலங்கள் கொண்டு இந்திரசித்தின் நேர் நின்று அவனைக் கொல்வேன் எனச் சிறுகிறான். இந்திரசித்து இலக்குவனை நாகபாசப் படையாலும், பிரம்மாத்திரப்படையாலும் வீழ்த்தினான். அதைப் போன்று இலக்குவன் தன்னுடைய வாள், வில் கொண்டு இந்திரசித்தை வீழ்த்த வேண்டும் என்பதும் நேர் நின்று என்று கூறுவதின் நோக்கம், இந்திரசித் போன்று மறைந்து நின்று மாயப்போர் செய்ய விரும்பவில்லை என்பதும் ஆகும். மேலும். இந்திரசித் இலக்குவனை மறைந்து இருந்து பிணித்தது போருக்குரிய செயலும் இல்லை, ஆண் மகனுக்குரிய அழகும், இல்லாதது என்பதையும் வெளிப்படுத்துகிறான். இதில் இலக்குவனின் வஞ்சினமொழிகள் ஏற்கனவே தான் இராமனிடம் கூறியதைப் பகைவனிடம் மீண்டும் எடுத்துக் கூறியதாக அமைகின்றது.

இராவணன் அனுமன்

முதல் நாட்போரில் அனுமன் உரைத்தற்கு மாற்றாக இராவணன் உரைப்பதும் இதன் பாற்படுவதாகும்.

Koviloor Digital Library



'ஒன்று உண்டு இனி உரை நேர்குவது; உன் மார்பின்,என்ஒருகை,
குன்றின்மிசை கடைநாள் விழும் உரும்ஏறு எனக் குத்த,
நின்று, உன் நிலை தருவாய் எனின், நின்நேர் பிறர் உளரோ?
இன்றும் உளை; என்றும் உளை; இலை, ஒர் பகை' என்றான்.(7198)

இப்போது உன்னிடம் நான் உரைக்க வேண்டியது ஒன்று உள்ளது. உனது மார்பில் பேர் இடி போன்று இராவணன் குத்திய பின்பும் அனுமன் உயிருடன் இருந்தால் உன்னைத் தவிர உலகில் நிலைத்து நிற்பவர் எவரும் இல்லை. இது போன்று நீ. இன்றும், என்றும் இருப்பாய். உனக்கு பகையில்லை என்று கூறுகிறான். இதில் இராவணன் எதிர் வஞ்சினம் என்ற நிலையில் மறைமுகமாக வெளிப்படுகின்றது. இராவணன் குத்தில் அனுமன் அழிவான் என்று நம்புகிறான். அது நடக்காவிட்டால் நீ நிலைத்து இருப்பாய் என்று வாழ்த்து நிலையில் அமைந்து வஞ்சினத்திற்கும் புதுப்பாதை தருகிறார். இங்கு இராவணன் எதிர் நிலை பாத்திரமாக அமைந்து இருந்தும். தனக்கு பகைவன் என்று இருக்கும் அனுமனை வாழ்த்தும் குணம் தென்படுகின்றது. அரக்ககுணம் படைத்தவர்களிடம் மனித குணம் வெளிப்படுவது அறியமுடிகின்றது.

## வஞ்சினத்தின் பயன்கள்

### 1. பண்பு நலன் காட்டல்

வஞ்சினம் உரைக்கும் கதை மாந்தர்களின் பண்புகள் அவர்களின் வஞ்சின மொழியின் வழியாக வெளிவருவது தெரியவருகிறது. காட்டாக ஒன்று மட்டும். இராமன் சுக்கிரீவனுக்காக கும்பகருணனை வீழ்த்துவது நட்பின் ஆழத்தையும் பண்பையும் காட்டுகிறது.

### 2. காப்பிய இன்பம் பெறுதல்

இராமாயணத்தை முழுவதைம் படிக்கும் பொழுது அதன் முழுச் சுவையையும் உணரலாம். அதில் வஞ்சினம் என்பதை மட்டும் பார்க்கும் பொழுது அதன் மூலமும் காப்பிய இன்பத்தை நுகரலாம் என்பதைப் பல இடங்களில் சுட்டிச் செல்கிறார் ஆசிரியர் காட்டாக இந்திரசித் இலக்குவணனை வீழ்த்துவேன் இவ்வாறு இலக்குவனை வீழ்த்த முடியாவிட்டால் சிவந்த கண்களையுடைய திருமாலை முதலாகக் கொண்ட தேவர்கள் என்னைப் பார்த்து சிரிக்கட்டும் என்கின்றான். இதில் செங்கண் திருமாலின் அவதாரமாக தோன்றியவன் இராமன் இராமன் இராவணனுக்குப் பகைவன் என்பதினால் இந்திரசித்திற்கும் பகைவன் ஆகிறான். எனவே, பகைவர்களும் என்னைப் பார்த்துச் சிரிக்கும்படியாக கீழ்மைப்படுத்தப்படுவேன் என்கிறான். இதில் திருமாலின் அவதாரம் வெளிப்படுகிறது. இதன் மூலம் காப்பிய இன்பமும் நோக்கமும் அறிய முடிகின்றது.

Koviloor Digital Library



**3. உயர்வு தாழ்வு அறிதல்**

உலகில் உயர்வாக எண்ணப்படுவதையும், தாழ்வாக நினைப்பதையும் பரதன் வஞ்சினத்தின் மூலம் எடுத்துக் கூறி இருக்கிறார், ஆசிரியர். இதன் நோக்கம் சமுதாயத்தில் இரண்டும் உண்டு. அதைப் பின் பற்றுபவரின் மனமும் செயலும் எப்படியெல்லாம் அமையும் அதன் மூலம் கிடைக்கும் பயன்கள் என்ன என்பதை தெளிவுறுத்துகிறார், கம்பர்

காட்டாக, பரதன் வஞ்சினத்தின் மூலம் அறமற்ற செயல்கள் பல எடுத்துரைக்கப்படுகின்றது. தஞ்சம் என்று வந்தவர்களைக் காப்பாற்றாமல் தன் உயிருக்கு பயந்து அவர்களைக் காட்டிக் கொடுத்தவன் மீளமுடியாத நரகம், செல்வார்கள் (2203) என்கிறான். இதன்மூலம் தாழ்வானவற்றை எடுத்துரைத்து உயர்ந்ததையே, கடைப்பிடித்தல் வேண்டும் என்பதைப் புலப்படுத்துகிறார் ஆசிரியர்.

**தொல்காப்பியமும் இராமாயணமும்**

தொல்காப்பியர் கூறியதை அடியொற்றியே கம்பரும் இராமாயணத்தில் வஞ்சினத்தைப் படைத்துள்ளார். தொல்காப்பியம். 'வஞ்சினம்' என்ற சொல்லைப் பயன்படுத்த 'சூள்' என்ற சொல்லைக் கம்பராமாணம் பயன்படுத்துகிறது.

வஞ்சினம். எழும் சூழல் பற்றியகுறிப்பு தொல்காப்பியத்தில் இல்லை எனினும் பொதுவாக அமையும் அவ் விளக்கத்திற்குக் கம்பர் பல சூழல்களைத் தம் கதையுள் அமைத்துக் காட்டுகிறார். "காப்பியத் தலைவர் மட்டுமன்றிப் பிற ஆடவரும் பெண்டிரும் அகப்புற வாழ்வுகளில் வஞ்சினம் மொழிதலைப் பயன் கொள்வதனைக் காப்பியங்கள் காட்டுகின்றன எனும் கருத்து. இங்குச் சுட்டத்தக்கது (காப்பிய புனைதிறன். 252).

**முடிவுரை**

சினத்தின் சீற்றம் குறையாமல் இருப்பதற்கு வஞ்சினமும் ஒரு காரணமாக இருப்பது தெரிய வருகின்றது.

வஞ்சினத்தின் மூலமாக அந்தந்த பாத்திரங்களின் பண்புகளும், குணங்களும் வெளிப்படுவது அறிய முடிகின்றது.

இராமாயணத்தில் நட்பு, தாய்ப்பாசம், உடன்பிறப்பு நேயம் ஆகியவற்றின் காரணமாக வஞ்சினங்கள் தோன்றுகின்றன. ஆயினும், உடன் பிறப்பு நேயத்தின் காரணமாக எழுந்த வஞ்சினங்களே அதிகமாக இடம் பெற்றுள்ளன.

வேந்தரும் மற்றவர்களும் நினைத்ததை நினைத்தபடி செயல்படுத்துவதற்கு வஞ்சினம் பயன்பட்டுள்ளது புலனாகின்றது.

காப்பியச் சுவை பெருக்கிற்கும் இவை துணை செய்கின்றன.

Koviloor Digital Library



## பயன்பட்ட நூல்கள்

1. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, க்ரியா, பதிப்பகம் மே 2001.
2. கம்பராமாயணம், அச. ஞானசம்பந்தன் (ப.ஆ) கம்பன் அறநிலை, கோயமுத்தூர், இரண்டாம் பதிப்பு - 2004
3. காப்பியப் புனைதிறன், ச.வேசுப்பிரமணியன் உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, முதற்பதிப்பு-1979
4. தொல்காப்பியம் உரைவளம் பொருளதிகாரம் அ. சிவலிங்கனார் (ப.ஆ) உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை - முதற்பதிப்பு-1996.
5. தொல்காப்பியம் திருக்குறள் சிலப்பதிகாரம், ச.வேசுப்பிரமணியன், மணிவாசகர் பதிப்பகம் சென்னை- முதற்பதிப்பு டிசம்பர் - 1998.
6. Tamil Lexicon, Vol-III, Vol -VI University of Madras, Chennai - 5. Reprint, 1982.

Koviloor Digital Library

## 10. தொல்காப்பியமும் தற்கால மரபுக்கவிதையும்

ச.சிவகாமி
சென்னை

எண்ணத்தேரில் ஏறி உளம் எங்கும் திரிந்து நாளெல்லாம்
மண்ணில் மனிதர் உறுகின்ற மறுக்கம் முழுதும் நேர்ந்தறிவு
விண்ணை அளந்து விஞ்சு மெழில் வியப்பைச் சொல்லில்
வடிவாக்கிக்
கண்ணின் முன்னே தருவதுவே கவிதை என்னும் பெருவிஞ்சை
(அ.சீநிவாசராகவன், வெள்ளைப்பறவை, ப.1)

தமிழின் தொன்மைக்குத் தனிப்பெரும் சான்றாய்த் திகழ்வது தொல்காப்பியம். செய்யுளின் உள்ளடக்கம், வெளியீடு, வடிவம் மற்றும்சில பொதுப்பண்புகளைப் பொருளதிகாரத்துள் இது விளக்கம் செய்துள்ளது. தொல்காப்பிய விதிமுறைகள் தற்கால மரபுக் கவிதைகளில் எவ்விதம் போற்றப்படுகின்றன, அல்லது மீறப்படுகின்றன, என்பதைக் காண்பது, தற்கால இலக்கியப் போக்கினை உணர்தற்குரிய வழியாக அமைகிறது. தமிழின் வளர்ச்சியை அல்லது தளர்ச்சியை அளவிடற்கும் துணையாகிறது. மரபு எனும் அடை, கவிதையுடன் இணையும் பொழுது அது எங்ஙனம் மரபிற்கு உட்பட்டு அமைகிறது, அதற்குரிய மரபு எது என்பனவும் எண்ணப்பட வேண்டியனவாகின்றன. இவற்றிற்கு விடையாகத் தொல்காப்பியச் சிந்தனைகளைத் தற்காலக் கவிதைகளோடு ஒப்பிட்டுக் காணும் முயற்சி இங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

*மரபுக்கவிதை*

காலம் காலமாகத் தொடர்ந்து பின்பற்றப்பட்டும் பயின்றும் வரும் எண்ணங்கள், சொல், செயல், பொருள் . . . . எதுவாயினும் மாறாது அமைவது பற்றி மரபு எனச் சுட்டத் தக்கது. ஏற்கெனவே நிலவிவரும் கொள்கைகள், கோட்பாடுகள், முறைகள் மரபு எனப்படுவதால் மாறாமையே மரபு எனத் தோன்றும். ஆயின் அடிப்படை மாறாது இருக்க, அதனில் வேரூன்றிய வளர்ச்சியும் விரிவும் கூட மரபில் புதுமை சேர்க்கலாம். எனவே பழங்காலந் தொட்டு அமைவதனைப் பழமரபு எனவும் அதில் மாறிவரும்

Koviloor Digital Library


புதுமையினைப் புதுமரபு எனவும் மரபுமாற்றம் எனவும் கூறலாம். மாறுவது மரபல்ல எனத் தோன்றினும், அம்மாற்றம் பயிற்சியும் ஆட்சியும் செல்வாக்கும் பெற்று விளங்கும் போது அதுவும் மரபாக உருவாகுதல் உண்டு. (ச.வேசுப்பிரமணியன், அன்னிதாமசு, எண்பதில் மரபுக்கவிதை', எண்பதில் தமிழ்? உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1982, ப. 675).

பொருள், வடிவம், வெளியீடு ஆகிய முக்கூறுகளால் கவிதை உருவாகும் என்பதால் மரபு எனப்படும் பொழுது இம்மூன்று நிலைகளிலும் உள்ள மரபுநிலை, மரபுத் தொடர்ச்சிப் பாங்கு கருதப்படல் வேண்டும் என நினைக்கலாம் என்பர் (மேற்படி.) இம்முறையை இக்கட்டுரை யேற்று பின்பற்றுகிறது.

"மரபு என்பது தேக்கம் அன்று? இடையறாது ஓடும் ஓர் இயக்கத்தின் ஒரு பகுதி. தன்னைத்தானே அழித்துக் கொண்டு இலையும் தளிருமாகப் பரிணாமம் கொள்ளும் விதையைப் போலவும் வருங்காலத்துக்கு உரமாகின்ற வண்டலைப் போலவும் உருக்கி வார்த்து உபயோகித்துக் கொள்ள வாய்ந்த ஆய்வுக்கூடம் போலவும் அனுபவங்கள் பழுத்த அன்பார்ந்த தோழனைப் போலவும் மரபு நம்மோடு உறவாடுகிறது. மரபு மரணத்தின் தூதுவன் அல்ல. ஜீவிதத்தின் தொடர் ஓட்டப்பந்தயத்தின் ஒரு அடுத்த தலைமுறையினைத் தூண்டிவிடுகிற கிரியா ஊக்கி.

எனினும், மரபு என்ற குறியீடு இன்று. யாப்பிலக்கணம், அதன் இறுகிய கட்டுப்பாடு வரையறுக்கப்பட்ட வடிவமைப்பு, நிச்சயிக்கப்பட்ட பாடுபொருள், காலத்தின் கட்டளையை மறுதலிக்கும் பிற்போக்கு? பழமையை நிரந்தரப்படுத்தும் சர்வாதிகாரம் என்ற கண்ணோட்டத்தில் கையாளப்படுகிறது. இலக்கியத்தின் வடிவத்தை உள்ளடக்கமே நிர்ணயிக்கிறது. உள்ளடக்கத்தைச் சமுதாய அமைப்பும் அதன் சிக்கலான பிரச்சனைகளும் முரண்பாடுகளும் தீர்மானிக்கின்றன. அதன் கலைத்திறனைப் படைப்பாளியின் அனுபவச் செழுமையும் கூர்மையும் (The writers creative individuality) பக்குவப்படுத்துகின்றன என்ற விளக்கமும் (சிற்பி பாலசுப்பிரமணியம், மரபுக்கவிதை, தமிழில் இலக்கிய வடிவங்கள், தமிழ்த்துறை, அரசினர் கல்லூரி, சித்தூர். பாலக்காடு 1978, ப.72) அறிதற்பாலது.

இவற்றினின்றும் காலம் காலமாகத் தொடர்ந்து வருவது, மாற்றங்களுக்கும் இடனளிப்பது, அதன் ஆணிவேர் அல்லது அடிச்சுல் எவ்வகை மாற்றத்திற்கு இடனளித்தாலும் தன்னில் வலிமை குன்றாது, பயன்பாட்டில் தளராது உறுதியுடன் திகழ்வது என மரபிற்கு விளக்கமளிக்கலாம். மரபுக்கவிதை யெனும் பொழுது அதனுள் சிறப்பாக அதன் பொருள், வடிவம் வெளியீடு என்பன கருதப்படுகின்றன. கவிதை மரபின் தொடர்ச்சியாக அதனை அடியொற்றி எழும் படைப்புகள் மரபுச்கவிதையாகின்றன.

Koviloor Digital Library



எவ்வகை மாற்றங்களுக்கும் எவ்வளவு மாற்றங்களுக்கும் உட்பட்டாலும் இலக்கியம் என இனங்காண்பதன் அடிப்படைக் கூறுகள் நெகிழ்வு காட்டினும் மாறாது இலக்கிய மரபு- இலக்கிய இயல்பு போற்றப்படுகிறது. இருபதாம் நூற்றாண்டிலும் மரபுக்கவிதை மங்காது ஒளிவிடற்கும் பாராட்டப்படுதற்கும். இது காரணமாகிறது.

## தமிழ் இலக்கியப் போக்கு

தொல்காப்பியத்திற்கும் தற்கால மரபுக்கவிதைகளுக்கும் இடையே குறைந்தது இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகால இடைவெளி உள்ளது. இவ்விடைப்பட்ட காலத்தே நிலவிய தமிழ் இலக்கியப் போக்கினை அறிந்து கொள்வது, தற்கால மரபுக் கவிதைகளின் இயல்பிற்கான அடித்தளத்தை அறிந்து கொள்வதற்குத் துணை செய்யும். தொல்காப்பியத்துடன் தற்கால மரபுக்கவிதைகளை ஒப்பிடும்பொழுது அறியப்படும் மரபுமீறல்களுக்கான பின்புலத்தையும் இது உணர்த்தும். எனவே முதற்கண், தமிழிலக்கியப் பரப்பின் மீது மிக மேலோட்டமான பார்வை இங்குத் தரப்படுகின்றது.

ஒன்றின் இயக்கமே அது உயிருடன் இருப்பதை உணர்த்துகிறது. அஃறிணைப் பொருட்களில் அவற்றின் இயக்கத்தை அவற்றுள் தோன்றும் மாற்றம் உறுதிப் படுத்துகிறது. இம்மாற்றம் புதிய கூறின் இணைவாகவோ, இருப்பதன் வளர்ச்சியாகவோ, ஏதேனுமொரு கூறின் மறைவாகவோ, அமையலாம். இவற்றை, இச்செயற்பாட்டை, 'போக்கு' எனக்குறிக்கலாம். இந்நிகழ்வுகள் காலந்தோறும் இடைவிடாது, நிகழ்ந்து கொண்டேயிருப்பதாலும் பலராலும் பின்பற்றப்படு வதாலும் அல்லது ஏற்றுக் கொள்ளப்படுவதாலும் வரலாற்றில் ஏற்றம் பெறுகின்றன. இலக்கியத்துள்ளும் இப்போக்கினை அதன் பொருள், வடிவம், வெளியீடு எனும் முக்கோணங்களிலும் காணமுடிகிறது.

அகப்பாடல், புறப்பாடல் என்றிருந்த சங்ககாலப் போக்கு இவற்றின் இணைவில் காப்பியம் காண வகை செய்தது. அகவற்பாவிற்குச் சிறப்பளித்த நிலை அறப்பொருண்மைக்கு மாற்றங் கண்டபொழுது வெண்பாவிற்கு முதன்மையளித்தது. சமூகச் சூழல் பக்தியியக்கத்தை இலக்கியத்தின் வழிநடத்திய பொழுது பாவினங்கள் சிறப்புறலாயின. தனிப்பாடல் தொடர்நிலைச் செய்யுளாக வளர்ந்தநிலை மாறிச் சிற்றிலக்கியங்கள் ஆட்சி செய்யத் தொடங்கின. அன்னிய ஆட்சி, முறையான கல்வி, பிற நாடுகளுடனான நெருங்கிய தொடர்பு என்பன உரைநடையிலக்கியத்திற்குத் தோற்றுவாயாயின. புதிய வகைமைகள் புத்தொளியுடன் படரலாயின. அகம், புறம்

Koviloor Digital Library



எனும்பொருள் சுருக்கநிலை விரிவடைந்து எதனையும் பாடலாம் என்ற போக்கு உருவாயிற்று.பாடற்பொருண்மைகளின் பெருக்கம், யாப்பின், இன்றியமையாமையை இல்லை யெனவாக்கியது. இன்று மரபுக்கவிதை ஆலமரத்தின் அடிமரமாக, புதுக்கவிதை அதன் ஆயிரமாயிரம் விழுதுகளாகப் பல்கிப் படர்ந்துள்ளது. ஹைகூவாகக் கனியத் தொடங்கியுள்ளது. திரையிசைப் பாடலாய்ப் பட்டினமுதல் பட்டிதொட்டிவரை படித்தோர் முதல் பொதுமக்கள் வரை அனைவரையும் ஈர்த்து நிற்கிறது.

தொல்காப்பியம் தொட்டுத் தொடர்ந்து வரும் இலக்கியப் படைப்புகள் தற்கால மரபுக்கவிதைகளுக்கு முன்னோடி களாகின்றன. தொல்காப்பியத்திற்கும் இவற்றிற்கும் இடையே காணும் ஒப்பியல் உறவு பொருள், வெளியீடு, வடிவம் எனும் முக்கூறுகளாக இக்கட்டுரையில் நோக்கப்படுகிறது.

பொருள்

கவிஞன் எதனை முன்னிறுத்தித் தன் கவிதையின் பாடுபொருளாக உள்ளடக்கக் கூறாகக் கொண்டுள்ளானோ அது பொருளாக (Content) இங்குக் குறிப்பிட்டுள்ளது. தொல்காப்பியர் சிறப்பித்துள்ள அகப்பாடல்கள் இன்று காதல் பாடல்களாக மலர்ந்துள்ளன. மரபுமாற்றம் அதிகமாகக் காணப்படினும் மரபுத் தொடர்சி யமைதலும் சுட்டத்தக்கது. அகப்பாடல்கள் தலைவன் தலைவியரின் இயற்பெயரின்றி அமைதல் வேண்டும் என்ற நெறியை ஏற்றுப் பாடலே பரவலாகக் காணப் படினும் அருகிய நிலையில் இயற்பெயர் சுட்டலும் அமைகிறது.

தொல்காப்பியம் காதலுக்கு அளித்துள்ள விளக்கம்.

வேட்கை ஒருதலை உள்ளுதல் மெலிதல்
ஆக்கம் செப்பல் நாணுவரை இறத்தல்
நோக்குவ எல்லாம் அவையே போறல்
மறத்தல் மயக்கம் சாக்காடு என்று அச்
சிறப்புடை மரபின் அவைகளவு என மொழிப (1046)

என்பதாகும். குறையாத விருப்பம், இடைவிடாது. நினைத்தல், உடல் இளைத்தல், ஆவதற்குரியதைக் கூறல், தன் நாண எல்லையை மீறுதல், காண்பன அனைத்தும் தான்விரும்பியதைப் போன்றிருப்பதாகத் தோன்றல், தன் செயல்களை மறத்தல் சொல்லிலும் செயலிலும் தெளிவின்மை, சாதல்நினைவு என்பன களவினில் சிக்கிக் கொண்டோரின், காதல் வயப்பட்டோன் இயல்பாக அமைகின்றன. இது இன்றைய காதல்பாடல்களிலும் எதிரொலிக்கக் காணலாம்.

மானுடர்க்கு மானிடரை
மயக்கிப் பிணைத்து, வைக்கும்

Koviloor Digital Library



தானப் பொருளல்ல, அது
தந்து பெறுவதல்ல
– தானே பொதுவில்
மோனப் பிரேமையில் முகிழ்த்தும்
முடிவில்லாப் பாசத்தில் மிளிர்ந்தும்
தானாக உணர்வில் கலந்தும் என்றும்
தனியாகி இயங்கும் ஓர் தத்துவமே
(சக்தீ பால ஐயா, கவிதைகள், ப.43)

என இக்காலக் கவிதையும் காதலுக்கு உயர்வளிக்கிறது.

பெண் தன் காதலுள்ளத்தைக் குறிப்பாகவும் மறை பொருளாகவும் உணர்த்தலாமேயன்றி, நேரிடையாக வெளிப்படுத்தல் கூடாது எனத் தொல்காப்பியம்,

காமத் திணையில் கண்ணின்று வரூஉம்
நாணும் மடனும் பெண்மையை ஆதலின்
குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை
நெறிப்பட வாரா அவள் வயினான (1054)

எனும் நூற்பாவில் வலியுறுத்துகிறது. பெண்ணின் ஒருதலைக் காமம் அல்லது தன் காதலுள்ளத்தைப் பிறரிடத்துத் தானே கூறுதல் என்பது.

கண்ணால் கூடப் பேசாமல் – நான்
காதல் கொண்டேன்! வெட்கமடி
பெண்ணாய்ப் பிறந்த நானின்று –காதல்
பைத்திய மானேன்! உண்மையடி
அவரிடம் எனக்கு இடமுண்டா–என
அவரிடம் கேட்கத் துணிவில்லை
அவரிடம் எனது மனமிழந்தேன் –நினைத்து
அழுவதைத் தவிர வழியில்லை
சொல்லடி சொல்லு வழி சொல்லு(கந்ததாசன்,சுதந்திரத்திருநாள்.ப.101)

என்பது போன்ற பாடல்களிலமைந்து மரபு மாற்றத்தைச் சுட்டுகின்றன. தலைவனின் பொருள்வயிற்பிரிவும் (மேற்படி. ப.111) கல்வியிற் பிரிவு (மேற்படி. ப.106) கூட பாடப்பட்டுள்ளன. தலைமகளைக் கண்டு தலைவன் அவளுடைய அழகிய தோற்றத்தைப் பாராட்டும் நன்னயம் உரைத்தல், அவள் காரணமாகத் தனக்கு ஏற்பட்டுள்ள உடல்மெலிவினைச் சுட்டுதல், அவள் மீது தான் கொண்டுள்ள காதலின் நிலை கூறுதல் (1047) என்பன தற்காலக் கவிதைகளில் தலைவிக்குமாகப் பொருந்துகிறது.

பழியேதும் காணாத நடையழகன் – நல்ல
பால்போலும் நிறமான உடையழகன்

Koviloor Digital Library



மொழியாலே போராடும் படையழகன் –பகைவர்
முகம்நாண உரையாடும் விடையழகன் (பாடுங்குயில் – ப.121)

புனலாட மனமில்லை துயிலாட வழியில்லை
புலந்தாட அவரில்லை புகுந்தாட மகிழ்வில்லை
கனலாடும் நிலவுண்டு கனலாடும் இரவுண்டு
கடுகேனும் உணவுண்ணக் கருதாத வயிறுண்டு
(பாடுங்குயில்.ப.120)

என்பன சான்றுகள் காதலன் காதலியரின் பிரிவுத்துயர் பாடல்கள் தற்காலக் கவிதைகளில் பரவலாகத் தென்படுகின்றன. ஞாயிறு, திங்கள், அறிவே, நாணே . . . அவையல பிறவும் நுதலிய நெறியால் சொல்லுந போலவும் கேட்குந போலவும், சொல்லியாங்கு அமையும் என்மனார் புலவர் (1456) என்பது தொல்காப்பியம். . அஃறிணைப் பொருட்கள் தன்னிடம் பேசுபவரின் பேச்சைக் கேட்பது போலவும், அவ்வாறு பேசுபவர் பிறரிடம் கூறச் சொல்லும் சொற்களைக் கூறக்கூடியனவாகவும் கருதிக் கவிதைபடைக்கும் இம்மரபு தற்காலக் கவிதைகளில் காணப்படுகிறது. (கந்ததாசன், முன்சுட்டியது, பக். 111-112)

அகப்பொருள், புறப்பொருள் என இரண்டினை முதன்மைப் படுத்தித் தொல்காப்பியம் இலக்கணம் வகுப்பினும் அவர் காலத்திலேயே அதனுள்ளேயே பொருள் விரிவு அமைவதை அறம், பொருள், இன்பம் எனும் முப்பிரிவில் (1363) காணலாம். மற்றும் 'விருந்தே தானே புதுவது புனைந்த யாப்பின் மேற்றே (1495) என்பதும் இதனை வலியுறுத்தும். காலத்திற்கேற்ப பாடுபொருளில் ஏற்பட்ட மாற்றம் இருபதில் பல்கிப் பெருக்கிப் பொருள் விரிவு காலமாக அமையக்காணலாம். தொல்காப்பியர் தரும் துறைப்பொருட் கூறுகள் பலவும் இம்மரபுக் கவிதைகளில் இடம் பெறுகின்றன.

பாங்கரும் சிறப்பின் பல்லாற்றானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே (1024)

எனும் நிலைமை எண்ணம் வாழ்வியலை உணர்த்தும் கவிதைகளில் இடம் பெறுகின்றது. எனினும் பக்தியியக்கக் காலத்தில் பரவிநின்றநிலை அமையாது அருகியே காணப்படுகிறது. பின்வரும் பாடலை எடுத்துக்காட்டலாம்.

இதயத்தை எண்ணம் வெல்லும்
இளமையை முதுமை வெல்லும்
அதிகமாய்த் தோன்றும் நெஞ்சில்
ஆசையைக் காலம் வெல்லும்

Koviloor Digital Library



மதியினை விதியே வெல்லும்
வாழ்க்கையைக் கனவே வெல்லும்
வதைப்பட்ட நிலையில் இந்த
மனிதனை மரணம் வெல்லும்
(கண்ணதாசன் கவிதைகள். தொகுதி. 4. ப.152)

தம்மை ஆதரித்த வள்ளல்களின் மறைவு குறித்துப் புலவோர் பாடிய கையறுநிலைப் பாடல் (1025) இன்றும் தொடர்கின்றது. இரங்கற்பா, சரமகவி எனவும் இது அழைக்கப்படுகின்றது. அரசியல் தலைவர், பொதுநலத் தொண்டர், உறவினர், தனக்கு மிகவும் வேண்டியவர், நட்பினர் எனப்பல தரப்பினரும் இதில் இடம் பெறுகின்றனர். பால் வேறுபாடற்ற நிலையும் நிலவுவதை 'வன்முறை மிதித்த உரோசாமலர்' எனும் கவிதை வழி உணர்த்தலாம். (வா.மு.சேதுராமன், பிறந்த போதினிலே, பிறந்த கவிமகளே, பக். 190-192).

'காமப்பகுதி கடவுளும் வரையார்' (1029) எனச் சமயப் பாடல்களுக்குத் தோற்றுவாய் அமைத்தது தொல்காப்பியம். கி.பி. ஐந்து முதல் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதிவரை சமயவிலக்கியமே இலக்கிய வரலாற்றில் ஆட்சி செலுத்தியது. இன்று அதனிடத்தைச் சமுதாயம் ஏற்றுள்ள போதிலும் சமயப் பாடல்களும் ஆங்காங்கே குறிப்பிடத்தக்க அளவு இடம் பெற்றுள்ளன. க.பெருமாளின் 'அருள் வெள்ளம்' முழுமையும் பக்திப்பாடல்களாக அமைதல் கூறத்தக்கது. சமய எதிர்ப்பு இலக்கியங்களின் தாக்கம் காணப்படினும் கடவுள்வாழ்த்தினை நூலின் தொடக்கத்தில் அமைக்கும் இலக்கிய மரபினை ஒட்டிப் பலமரபுக்கவிஞர் தம் நூலுள் முதலில் இறைவணக்கப் பாடல்களை அமைத்திருப்பதும் (வா.மு.சேதுராமன், சந்தித்தேன் சித்தித்தேன்) நவிலற்பாலது. ஆழ்வார், நாயகன்மார் பாடல்களில் இடம் பெற்ற நாயன்நாயகி பாவமும் இவற்றில் இடம் பெறுகின்றன.

இன்பெலாம் காட்டி, என்னை
இடர்க்குளே பூட்டி, எல்லாத்
துன்பமும் தந்துவிட்டுத்
தொலைவில் நீ சென்றுவிட்டால்
அன்பெனும்அதுவென் ஆகும்?
அறமெனும் அதுவென் ஆகும்?
மன்பதைக் கிருக்கும் கற்பு
மாண்பெனும் அதுவென் ஆகும்? (க.பெருமாள்,அருள்வெள்ளம், ப.115)

எனும் இப்பாடல் இறைவியாகிய காதலியின், பிரிவுக்கு ஆற்றாமல் பாடப்பட்டதாகும். தலந்தோறும் சென்று அல்லது தாங்கள் மேற்கொள்ளும் தலயாத்திரையின் போது வழிபட்ட கடவுளர்

Koviloor Digital Library



மீது பாடல் இயற்றும் மரபும் தொடர்ச்சி காட்டுவதைச் சில கவிஞரிடையே காணலாம். (சக்தி பால ஐயா கவிதைகள்.)

பாடப்படுகிற ஆண்மகனின் வீரத்தையும் ஈரத்தையும் பேசும் பாடாண்திணையை இன்று, தம் விருப்பத் தலைவர்கள் மீது பாடப்படும் புகழ்ப்பூக்களுடன் இணைந்து நோக்கலாம். இதுவும் அரசியல் என்ற எல்லை தாண்டி, எத்துறையாயினும், அதில் சாதனை படைத்தோரைச் சிறப்பிப்பதாக உள்ளதும் குறிப்பிடத்தக்கது. இங்கு அரசியல் தலைவர்களும் பொதுநலத் தொண்டர்களும் அதிகமாகப் பாராட்டப்படுகின்றனர். அன்றைய சமூகம் ஆணினத்தை முன்னிறுத்தி இயங்கியதால் பாடாண்திணை அமைந்தது. ஆனால் இன்று பல்வேறு துறைகளில் பெண்டிரும் பெருமை பெற்றுள்ள நிலையில் அவர்களும் இப்புகழ்ப்பூக்களுக்கு உரியராகின்றனர். அன்னை தெரசா, இந்திராகாந்தி, ஆகியோர் மீது எழுந்துள்ள பாடல்களை இதற்குச் சான்றாக்கலாம்.

வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
வேம்பும் கடுவும் போல வெஞ்சொல்
தாங்குதல் இன்றி வழிநனி பயக்கும் என்று
ஓம்படைக் கிளவியின் வலியுறுத்தற்றே (1369)

எனும் நூற்பா அக,புறப் பொருண்மைகளைத் தொடர்ந்து வெற்றி பெற்ற அறநூல்களுக்கு வழிகாட்டுகிறது. வாழ்க்கையை நல்வழி நடத்தி, பெற்ற பிறவியைப் பிறர் நலன் காக்கும் பெற்றியதாக்கும் பண்பில் அறநூல்கள் முன்னிற்பதாலும், சமுதாயச் சீர்மை இலக்கியக் கோட்பாட்டு நோக்கங்களுள் ஒன்றாக அமைவதாலும் எவ்வகையிலேனும் இவை இடையறாது தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன. அறிவுரை கேட்போருக்கு வேம்பு, கடுக்காய் போன்று கசப்பாய் இருந்தாலும் அதனை ஏற்றுக் கொண்டு பின்பற்றினால் வாழ்க்கை இன்பமானதாக, பாதுகாப்பானதாக அமையும் எனும் தொல்காப்பியக் கருத்து அறிவுடையோரால் போற்றப்படுதலை அறநூல்கள் காட்டுகின்றன.

வாழ்வியல் பொதுவறங்கள் பெரும்பாலும் மாற்றமுறாது தொடரினும் மாற்றங்கண்டுள்ளனவும் உண்டு. சான்றாக ஈகையைச் சுட்டலாம். (ச. சிவகாமி, தமிழர் வாழ்வியல், மாதவி பதிப்பகம், சென்னை, -1998, பக்.88-100). இது சோம்பேறித் தனத்தை வளர்ப்பதனால் தவிர்க்கப்பட வேண்டியதாக இன்று (புதுக்குறள். 37:2) கருதப்படுகின்றது. அதே வேளையில் குருதித் தானம், கண்தானம், என்பன (புதுமைக்குறள் 882-889) வேண்டப்படுகின்றன.

Koviloor Digital Library



பொதுநிலையில் அனைவரையும் முன்னிறுத்திப் பாடப் பட்ட அறப்பொருள் பண்பு இன்று குறிப்பிட்டோரைச் சுட்டி அமைதலும் உண்டு.

அண்டவெளியல் அற்புதம் புரியும்
அறிவியில் மேதைகளே – கண்
கண்ட உலகில் காணும் துன்பம்
கருதிப் பாருங்களேன்
விண்ணில் ஏறிக்கோள்களைக் கண்டே
வெற்றி சேர்க்கின்றீர் – இந்த
மண்ணை வாட்டும் வறுமையை ஏனோ
மறந்து வாழ்கின்றீர் (கந்ததாசன், முன்சுட்டியது. ப. 95)

என்பது இதனை உணர்த்தும். அன்றைய அறநூல்கள் மனிதப் பண்பினை மேம்படுத்தி வாழும் நெறி சிரியதாக அமைய வழி காட்டின. இன்றைய மரபுக்கவிதைகள் அதனின்றும் வளர்ச்சி பெற்றதன்மையில் தற்காலச் சமூகச் சிக்கல்களை முன்னிறுத்தி அவற்றின் தீர்விற்கு முனைய வேண்டுகின்றன.

முயற்சியோடு மக்கள் சக்தி
திரள வேண்டுமே– ஒழுக்கம்
வளர வேண்டுமே – எயிட்ஸ்
மூளுவதால் தோன்றும் கேட்டை
விளக்க வேண்டுமே –நித்தம்
விளக்க வேண்டுமே.
(வலசை ப.கணேசன், மறுமலர்ச்சிக் கவிதைகள். ப.6)

என்று இன்றைய ஆட்கொல்லி நோயான எயிட்ஸ்க்கு எதிர் நடவடிக்கையின் தேவை வலியுறுத்தப்படுகிறது. உழைப்பு, குடும்பக் கட்டுப்பாடு போல்வன மிகுதியாகப் பேசப்படும் கூறுகளுள் சில வாழ்வின் வறுமை நீக்கத்திற்கு,

கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள்
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்
எத்தொழில் எதுவும் தெரியாமல்
இருந்திடல் உனக்கே சரியாமோ
(நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை கவிதைகள்)

என வழிகாட்டும் போக்கும் அமைகிறது.

ஒருவரையொருவர் வாழ்த்துதல் என்பது தொன்று தொட்டுவரும் தமிழ்மரபு. தொல்காப்பியமும் 'சிறந்த நாளணி செற்றம் நீக்கிப் பிறந்தநாள் வயின் பெரு மங்கலம்" எனப் (1037) பிறந்தநாள் வாழ்த்தும், 'வழிபடு தெய்வம் நின்புறம் காப்பப் பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து பொலிமின்' எனப் (1367)

Koviloor Digital Library



பொதுநிலை வாழ்த்தும் அமைவதைச் சுட்டுகின்றது. இவை இன்று பலவாறாகப் பெருகியுள்ள வாழ்த்துப் பாக்களுக்கு அடித்தளமாகின்றன. மணிவிழா, மணவிழா, மனைவிழா என இவை பரந்து அமைகின்றன. வாழ்த்துக் கவிஞர் என வாழ்த்துமளவிற்குக் கவிமணி பல வாழ்த்துப்பா பாடியுள்ளார், பாரதி, பாரதிதாசன், கண்ணதாசன், என மரபு தொடர்கிறது. அரு. சோமசுந்தரனின் 'கவிதை ஆற்றில்' எனும் நூல் முழுமையும் இத்தகு வாழ்த்துக்களால் நிறைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

தனியொருவர் அல்லது ஒரு குடும்பத்திற்கான சிறப்பு நாட்களுக்கான வாழ்த்துக்களுடன் அனைவருக்கும் பொதுவான விழாக்களுக்கமான வாழ்த்துக்களும் இப்பொழுது மிகுந்த வரவு காட்டுகின்றன. தீபாவளி, விடுதலை நாள் முதலானவற்றிற்கும் வாழ்த்து வழங்கப்படினும் பொங்கல் விழா சிறப்பாகப் பலராலும் பாராட்டப்படுகின்றது. தமிழர் திருநாளாக இது போற்றப்படுதலால் இச்சிறப்பமைகிறது. இவ்வாழ்த்திலும் சமூக உணர்வு முன்னிறுத்தப் படுவதை,

போகியே! குளிர் மூட்டத்தைப்
பொசுக்கிடும் நெருப்புநாளே!
ஆகாத பொருளை யெல்லாம்
அழிக்கின்றாய் நன்றி இன்னும்
போகாத சாதிப் பேயை
பொல்லாங்கை, மடமை நோயை
ஆகுதி ஆக்கும் அந்த
அரியநாள் வந்திடாதா?

(கா.வேழவேந்தன், ஏக்கங்களின் தாக்கங்கள், ப.35)

என்பதில் காணலாம்.

எதையும் பாடலாம் என்று அவரவர் விருப்பத்திற்குத் தொல்காப்பியர் அனுமதியளித்த போதிலும், அவற்றில் சமூக உணர்வு முன்னிற்க வேண்டும் என்ற எச்சரிக்கையை,

அறக்கழிவு உடையன பொருள்பயன்பட வரின்
வழக்கென வழக்கலும் பழித்தன்று என்ப. (1164)

எனும் நூற்பாவில் பெறலாம். வாழ்வியல், சமூக, அரசியல் அறங்கள் பிழைபடாது அல்லது அவற்றின் சீர்மைக்குக் குறைவு நேராது இலக்கியம் எழுதல் வேண்டும் எனும் விதி எக்காலத்தும் பொருந்தும் பொதுவிதியாய் நிற்றல் குறிப்பிடற்பாலது. சமூக அக்கறையுள்ள எக்கவிஞனும் இவ்விதியை உடைக்க விழைவதில்லை. இன்றைய புதுக்கவிதைகளில் இது இன்று மிக அருகி முறிக்கப்படுவதைக் காணினும் மரபுக்கவிஞர் மாற்றம் காட்டாது அரணாகவே நிற்பது நவிலத்தக்கது.

Koviloor Digital Library



*வெளியீடு*

கவிஞன் தான் பாடவிரும்பும் பொருளை வெளிப்படுத்தும் முறைமையிலும் சிலவரையறைகளைத் தொல்காப்பியம் தருகிறது. அவற்றுள்.

உயர்ந்தோர் கிளவியும் வழக்கொடு புணர்தலின்
வழக்கு வழிப்படுத்தல் செய்யுட்குக் கடனே. (1163)

என்பதொன்றாகும். இலக்கியத்திற்கும் அதன் தோற்றக்களனான சமூகத்திற்கும் இடையே இடைவெளியின்றி வழக்கில் உள்ளனவே இலக்கிய ஏற்றம் பெறல் இங்கு வேண்டப்படுகிறது. இவ்வழக்கு பாடுபொருள், அதனை வெளிப்படுத்தும் சொற்கள் என இரண்டினையும் உள்ளடக்கியதாகும். இங்கு உயர்ந்தோர் என்பதனை இன்றைய சூழலுக்கு ஏற்ப, சமுதாய நலனில் அக்கறை கொள்வோர் எனப் பொருள் கொள்வதில் தடையில்லை. உயர்வுநவிற்சியற்ற இயல்பு வழிப்பட்ட தன்மையே இலக்கியத்தை அணி செய்வதாகக் கருதலாம் இந்நிலை இன்றைய மரபுக் கவிதைகளிலும் சிறப்பாகப் பின்பற்றப்படுகிறது.

புற்றீசல் போலிங்கே கட்சி தோன்றப்
புதைந்தே தான் போனதிங்கே நாகரிகம்
வெற்றுச் சொல் வெறும் பயல்கள் பேச்சின் மேலே
விரும்பித்தான்கொண்டார்கள் அடிமை மோகம்
குற்றங்களே தீர்ப்பெழுதும் காலம் நாட்டைக்
குட்டிச் சுவராக்குகின்ற கோலம் இன்னும்
அற்புதங்கள் பல இங்கே மக்கள் முன்பாய்
அன்றாடம் அரங்கேற்றம் ஆகுதய்யா!!

எனும் கவிதையைச் (இராம இராகவேந்திரன், வணக்கத்திற்குரிய, ப.18) சான்றாக்கலாம். நடப்பியல் இங்குப் பாடுபொருளாகியுள்ளது. புற்றீசல், வெற்றுச்சொல், வெறும் பயல்கள், குட்டிச் சுவர் என்னும் வழக்குச் சொற்கள் மிக இயல்பாகப் பொருந்திக் கவிதையின் வெகுளி மெய்ப்பாட்டிற்கு மிகுந்த அழுத்தம் தரக்காணலாம். ஆற்றாமையால் வெடித்த வெகுளி இறுதியில் இரங்கலாய் உருமாறி நடப்பியலைக் காட்சிப்படுத்தியுள்ளது.

கவிஞன்தான் கூறவிழைந்த கருத்தைப் புலப்படுத்தற்கோர் நெறியாக உவமையைத் தொல்காப்பியர் எடுத்துரைக்கிறார். பின்னாட்களில் செய்யுளை அழகு செய்யும், உறுப்பாக, அணியாக விளக்கம் பெறினும் கருத்து விளக்கப்பயன்பாட்டுக் கூறாக உவமையைக் கொள்ளலே பொருத்தமாகத் தோன்றுகிறது. இலக்கியம் கற்றோர் அவைக்கு மட்டுமல்ல, பொது மக்களுக்கும் சென்றடைதல் வேண்டும் என்ற இன்றைய கோட்பாட்டுச் சூழலில்

Koviloor Digital Library



கவிதையில் எளிமை வேண்டப்படுகிறது. மரபுக்கவிதையை மீறிய புதுக்கவிதையின் வெற்றிக்கு இவ்வெண்ணமும் ஓர் காரணமாகும். இங்கு மரபுக் கவிதையில் பயன்படுத்தப்படும் உவமைகள் மிகுதியும் கூறவந்த கருத்தினைத் தெளிவுறுத்த, அதன் முழுப்பொருளையும் உணர்த்தவே எழுந்துள்ளன.

வினை பயன் மெய் உரு என்ற நான்கே
வகை பெற வந்த உவமத் தோற்றம் (1222)
விரவியும் வரூஉம் மரபின என்ப (1223)

என்ற தன்மையில் மாற்றம் இன்றியே மரபுக் கவிதைகளும் அமைகின்றன. செய்யும் தொழில், அதனால் பெறும் பயன், வடிவம், நிறம், என்பனவற்றுள் ஒன்றோ, சிலவோ உவமைக்கும் உவமிக்கப்படும் பொருளுக்கும் ஒப்புமை காட்டிப் பொருளைத் தெளிவுபடுத்துகின்றன.

உயர்ந்த பொருள்களே உவமமாக அமைதல் வேண்டும் எனும் தொல்காப்பிய எண்ணம், 'உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை (1224) என்பதில் வெளிப்படுகிறது- ஆனால் இவ்வரையறை இன்று மீறப்பட்ட தொன்றாகக் காணப்படுகிறது. 'சாவுக்கு முன்னாடி ஊதிச் செல்லும் தாரையைப் போல் குழல் பெற்றே இதழ் விரித்தாய்' என அஞ்சுமணிப் பூவை வருணித்தல் (பூவை அமுதன், உள்ளக்கடலின் உணர்வலைகள்) சான்றாகும்.

ஆனால், கால மாற்றத்திற்கேற்ப புதிய புதிய உவமைகள் மரபுக் கவிதைகளில் இடம் பெறுதல் பாராட்டத்தக்கதாகும், சான்றாக;

ஏடனிலே சைபீரிய மண்ணிலெங்கோ
இருந்து வரும் பறவையெலாம் கூட, எங்கள்
வேடந்தாங்கல் ஏரிவந்து தங்கி
விவாதிக்கும் ஐ.நா. போல் கூடக் கண்டோம்.
(கா.வேழவேந்தன், ஏக்கங்களின் தாக்கங்கள்)

ஆண்டவன் மூலப்பொருள்ஆயினும்
அவன்சக்தி மின் கருவி போலுருவே
வேண்டுதல் கேட்டு நாம் பெறுவதற்கு
வேதவழி சரியாக விளங்குவதே.
(தமிழன்னைதாசன், ஏழிசைப் பாடல்கள், ப.96)

என்பனவற்றைக் காட்டலாம். மரபுக்கவிதை இத்தகு உவமைகளின் ஆட்சியால் புதுக்கவிதையினின்றும் விலகி நிற்பது அறியத்தக்கது. உவமையில் 'அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே" (1254) எனத் தொல்காப்பியம் வேண்ட அதனை மறுத்து மரபுக்கவிதைகள் அடுக்குவமையைப் பரவலாகத் தந்துள்ளன. வாழவேண்டிய முறையினைக் கண்ணதாசன்,

Koviloor Digital Library



வானுறு மதியம் போலும்
வளர் பொன்னிநதியும் போலும்
கானுறு தருவைப் போலும்
கம்பன் சொற்கவிதை போலும்
தீ நறுந்தேன் சேர்க்கின்ற
தென்பாங்குத் தேனீ போலும்

என்று பாடுவதை எடுத்துக்காட்டாக்கலாம்.

யார், யார் எப்படிப்பட்ட உவமைகளைப் பேச வேண்டும் என்ற விதிமுறைகள் இன்றைய இலக்கியச் சூழலுக்கு ஏற்புடைமையின்மையின் அவை இங்குக்கருதப் படவேண்டியன ஆகா. இருபதாம் நூற்றாண்டுக் கவிதைகளின் உவமைகளை ஆராய்ந்த ஆய்வாளர், 'அனைத்துக் கவிஞர்களும் இயற்கைப் பொருள்களையே மிகுதியாக உவமையாகக் கொண்டுள்ளனர். இயற்கைப்பொருள்களில் நிலவினை மட்டும் மிகுதியாகப் பாடுபொருளாக்கியிருப்பது, குறிப்பிடத்தக்கது. கவிஞர் பெருமக்கள் பெரும்பாலும் உவமைகளை விட உருவகங்களை மிகவும் அருகிய நிலையில் படைத்துள்ளனர். உவமையின் வாயிலாகவே கருத்துக்களை எளிமையாக உணர்த்த முடியும் என்று கருதியே இக்கவிஞர்கள் உருவகங்களை மிகுதியாகப் படைக்கவில்லை எனத்தோன்றுகிறது என்பர் (சு.மாரியப்பன், இருபதாம் நூற்றாண்டுக் கவிதைகளில் உவமைகள், நிர்மலா பதிப்பகம், செங்கல்பட்டு, 1994 பக். 593-595). இக்கூற்று ஏற்புடையதே. அருகிய நிலையில் தென்படும் உருவகக் கவிதைக்கு,

பிச்சைக் காரனைப் பிடித்து வந்து
பந்தி பரிமாற வைக்கின்றார்களே
தச்சுக் கலையின் தகுதி பெற்றவர்க்கு
விறகு வெட்டியா விரிவுரை செய்வது?
எச்சில் இலைகள்
கோபுர உச்சியில் ஏறிக் கொண்டதால்
என்னமாய் மதிப்பில் உயர்ந்து விட்டன.
அவற்றைச் சொல்லிக் குற்றமில்லை
படித்த எருமைகள்
அறிவை எங்கே அடகு வைத்தன.

(தங்கப்பா, கள்ளும் மொந்தையும். ப.54)

எனும் பட்டமளிப்புக் கவிதையை எடுத்துக்காட்டலாம்.

மரபிலக்கணப் பார்வையில் இன்றைய மரபுக் கவிதைகளை அணுகும் பொழுது மற்றொரு கருத்தும் சுட்டப்பட வேண்டியதாகிறது. தொல்காப்பியர் மரபியலில் நூலின்

Koviloor Digital Library



தொடக்கத்தில் குற்றங்களாகப் பட்டியலிடப்படுவனவற்றுள். (1608) மாறு கொளக் கூறல், பொருள் இல மொழிதல், மயங்கக் கூறல், கேட்போர்க்கு இன்னா, யாப்பிற்று ஆதல், பழித்த மொழியால், இழுக்கம் கூறல், தன்னான் ஒரு பொருள் கருதிக் கூறல் என்பன இம்மரபுக் கவிதைகளில் இடம் பெறுதல் சுட்டப்படவேண்டிய அக்கருத்தாகும்.

வடிவம்

தனது கருத்துள் விளைந்த எண்ணம் சொல்லாகப் பெருக்கெடுத்து வெளிப்படும் பொழுது அதற்கு ஓர் வடிவம் அளித்து ஒழுங்குபடுத்திக் கவிதையாக்குகிறான் கவிஞன். அவ்வடிவம் தனிப்பாடல், நெடும் பாட்டு, பிள்ளைத்தமிழ், உலா என இலக்கியம் வகைமையாக அமைகிறது- மற்றும் வெண்பா விருத்தம் என யாப்பு மரபுக்கவிதைகளில் வடிவெடுக்கிறது. ஒரு கவிதையின் அகமாகப் பொருளைக் கொண்டால் அதன் புறமாக வடிவம் அமைகிறது. கவிதையின் வெற்றிக்கு இவையும் இன்றியமையாதன ஆகின்றன.

தற்கால மரபுக்கவிதைகளில் தொல்காப்பியர் தரும் ஆற்றுப்படை, தூது போன்றனவும் சுட்டும் பிள்ளைத் தமிழ், உலா போன்றனவும் குறிக்கத்தக்க இடம் பெற்றுள்ளன. இக்கட்டுரை தனிப்பாடல்களை மட்டுமே ஆய்வுக்களமாகக் கொண்டுள்ளது. இத்தகு சிற்றிலக்கியங்களையும் தொல்காப்பியச் சிந்தனைகளுடன் தனித்து ஒப்பிட்டுக் காணவியலும், எனவே. இவை பற்றிய எண்ணங்கள் இங்குக் கருதப்படவில்லை.

தொல்காப்பியர் உணர்த்தும் வெண்பா, ஆசிரியம் என்பன காணப்படினும் விருத்தப்பாக்களே தற்கால மரபுக் கவிதைகளில் அதிகமாக இடம் பெற்றுள்ளன. வஞ்சிப்பா, (மீகாசுமான் கனவோ நினைவோ) போன்று மிகச் சிலரிடமே அமைகிறது. க.பெருமாள் மட்டுமே கலிப்பாவில் கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார். அந்தாதி அமைப்பு (பெருமாள். முனைப்பறுதல் - அருள் வெள்ளம்) மகுட அமைப்பு (க.இறைவன், ஓ. கண்ணதாசன் இதழ்க்கவிதைகள்) போன்றனவும் அருகி அமைகின்றன. விருத்தப்பா அமைப்பால் ஓசைநயம் சிறக்கும் பாடல்கள் மிகுந்துள்ளன. பொது நிலையில் தற்கால மரபுக்கவிதைகளில் யாப்பு ஆய்வு ஆழங்கால்படின் புதியப்புதிய வடிவங்களை, கொள்கைகளைக் காணவியலும்.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் மரபுக் கவிதைகளின் யாப்பியலை ஆராய்ந்த இரா. சம்பத் (இருபதாம் நுற்றாண்டுத் தமிழ் மரபுக் கவிதை யாப்பியல் மரபும் நெகிழ்வும், புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி, 1998. பக். 153-283).

Koviloor Digital Library


'பாடுபொருளும் பாடுதற்குரிய சூழலும் மாறுகின்ற பொழுது பாடல் வடிவமும் தவிர்க்க முடியாதபடி மாற்றமுறுகின்றது. அந்த வடிவ மாற்றம் பழைய மரபை ஒட்டியதாகவே அமைகிறது. . . தமிழ்க்கவிதை உலகில் இடைக்காலம் தொட்டு இக்காலம் வரை ஆசிரிய விருத்தத்தின் செல்வாக்கு மிகுந்துள்ளது. விருத்தப்பா வடிவம் பாடுவதற்கு ஏற்ற எளிய இலக்கண அமைதி கொண்டிருப்பது அதன் செல்வாக்கிற்குக் காரணமாகிறது. மரபுக் கவிஞர்களின் படைப்புகளில் யாப்பியல் நெகிழ்வு ஏற்பட்டுள்ளது. இந்நெகிழ்வு அருகியே உள்ளது. பெருகிய அளவில் இல்லை.

கவிமணி பாடிய வெண்பா 326., கடவுளைப் பாடுவதற்கும் வாழ்த்துப்பா பாடுவதற்கும் பயன் கொண்டுள்ளார், முடியரசன், எண்சீர் விருத்தங்கள் பாடியவர். யாப்பு விதிகளையே முதலாகக் கொண்டு விடாமல், சுதந்திரமாகக் கவிதைபாடும் இயல்பினர் கண்ணதாசன், என்பன போன்ற பல கருத்துக்களைத் தந்துள்ளார்.

கவிதை உருவாக்கத்திற்கு யாப்பு ஒரு தடையில்லை என்பதையே, புதுக்கவிதை கோலோச்சும் இன்றும் எழுத்து கொண்டிருக்கும் மரபுக்கவிதை நூல்கள் உணர்த்துகின்றன.

தொகுப்புரை

கல்வியின் பெருக்கம், அறிவியலின் வளர்ச்சி தகவல் தொடர்பு கருவிகளின் ஆதிக்கம் என்பன மக்கட் சமூகத்தில் மட்டுமின்றி, அதனைப் பிறப்பிடமாகக் களனாகக் கொண்டுள்ள இலக்கியத்துள்ளும் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. விதிமுறைகளுக்குட்படாது தன் விருப்பத்தை முன்னிறுத்தி எதையும் பாடுபொருளாக்கலாம். எப்படி வேண்டுமாயினும் வெளிப்படுத்தலாம். ஆனால் சமூகச் சிந்தனை, சீர்திருத்தம், விழிப் புணர்வு கட்டாயமாக இடம் பெறவேண்டும் என்ற உணர்வு இன்றைய இலக்கியங்களின் போக்காகக் கருத முடிகிறது.

இருபதாம் நூற்றாண்டுக் கவிதைகளில் தான் இயற்கைப் பொருள்களைப் சமுதாய நோக்கோடு அணுகிப் பார்க்கின்ற ஒரு புதிய பார்வை உருவாகியுள்ளது. பாரதி வழிகாட்ட பாரதிதாசன் பின்பற்றினார். மற்ற கவிஞர்களும் சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களையே முதன்மையாகக் கொண்டுள்ளனர் என்பர். (சு.மாரியப்பன், முன் சுட்டியது.).

"முல்லைச் சுரம், தமிழ்ப்பணி, கவிதை முதலான சிறிய இதழ்களில் வெளியிடப் பெறும் மரபுக்கவிதைகள் யாவும் பொறுப்புணர்ச்சியுடன் எழுதப்படாதன போன்று காணப்படுகின்றன. இவ்விதழ்கள் மரபுக்கவிதைகளுக்கு ஊக்கம் தருவதாக இருப்பினும் அவற்றில் சுடர்விட்டு ஒளிவிடும்

Koviloor Digital Library


பாடல்களைக் காணமுடியவில்லை. . . பழைய புலவர்கள் சிலர் திருமண வாழ்த்து எழுதுவதிலும் இரங்கள் பா இயற்றுவதிலும் மரபுக் கவிதைகளைப் பயன்படுத்துகின்றனர். பலர் மரபுக் கவிதை எனத் தொடங்கி இரண்டடிகளுக்குப் பின்னர் உரைநடையாக வடிப்பதும் காணப்படுகின்றது. முற்போக்கு, மொழிவளர்ச்சி இனமானப் பாவலர்கள் சிலர் இயற்றும் பாக்கள் வெற்றுக் கொள்கை முழக்கங்களாக உள்ளன'' எனும் கூற்று (மு.இளங்கோவலன் இலக்கியம் அன்றும் இன்றும், இராஜேஸ்வரி புத்தக நிலையம், சென்னை, 1997, ப. 18) மிகைப்படுத்தப்பட்ட தொன்றாக அமையினும் முற்றிலுமாக புறக்கணித்தற்கில்லை.

தொல்காப்பியத்தைத் தற்கால மரபுக்கவிதைகளோடு இணைத்து நோக்கும்போது, பொதுவான கண்ணோட்டத்தில்.

1. இரு காலத்திய சமுதாயத்திற்கும் இடையே மிகப் பெரிய வேறுபாடு காணப்படுகிறது.

2. மொழிப்பற்று, நாட்டுப்பற்று, போன்ற புதிய பொருண்மைகள் இன்று வளம் பெறுகின்றன.

3. சமூக இயக்கங்களின் கொள்கைகள் பாடுபொருளாவதுடன், அவற்றின் அடிப்படையில் நிகழ்வுகள் கவிதைகளில் விமர்ச்சிக்கப்படுகின்றன.

4. கல்வி, அரசியல், பொருளாதாரம் என இவற்றில் உயர்ந்தோர் மட்டுமன்றித் தாழ்ந்தோரும் பாட்டுடைத் தலைவராதல் போற்றப்படுகின்றது.

5. புலமையாளரை, பாடல் நெறிமுறை அல்லது பர்டல் விதி எனும் சிறைக்குள் அடைத்தல் கூடாது என்பது மட்டுமின்றி இயலாது என்பதையும் தற்காலக் கவிதைகள் பறைசாற்றுகின்றன.

6. பொருண்மையையும், வெளியீட்டையும் உறுதிப்படுத்துவது அவ்வவ்கால அரசியல், பொருளியல், சமூகச் சூழல்களேயன்றி இலக்கண விதிமுறைகள் அல்ல என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது.

7. உவமையின் செல்வாக்கு இங்கும் சிறப்புப் பெறுதல் சுட்டத்தக்கது.

8. எளிமையும், நடப்பியலும் கவிதை வெளியீட்டில் இன்று பெரிதும் வேண்டப்படுகின்றன.

இவ்வாய்வு மேலும் பரந்து, விரிந்து காண்பதற்கு வாய்ப்புடையதாகும். அகம்,புறம், போன்ற சில கூறுகள் தனியாய்விற்கும் இடந்தருவனவாகும்.

Koviloor Digital Library

## 11. தொல்காப்பியரும் பாரதிதாசனும்

இரா. பழனியம்மாள்

தமிழியப் பிழிவான தொல்காப்பிய அகப்பொருட் கூறுகள், தமிழுணர்ச்சி மிக்குடைய புரட்சிக்கவிஞன் பாடல்களில் எந்த அளவு கலந்திருக்கின்றன என்பதும், எப்படி மரபுகள் மாற்றம் பெற்றிருக்கின்றன என்பதும் இக்கட்டுரையில் காணலாம்.

புதுமையை வரவேற்றுப் புத்தெழுச்சி யூட்டியவன் பாரதிதாசன், என்றாலும் பழைமையில் நல்லதிருப்பின் அதனைப் பாராட்டிப் பின்பற்றியவன்.

பழமையில் இங்குள அன்புறு காதற்
பயனுறும் அகப்பொருள் காப்போம்'

என்றும்,

'வையகம் வியக்கும் வண்ணம்
அகப்பொருள் வளர்ந்த நாட்டில்'

என்றும் கூறுவான்.

மரபுவழியில்

'நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்தற்குக்
கூட்டி யுரைக்கும் குறிப்புரை யாகும்' (தொல்–1042)

என்று கண்ணின் பெருமை பேசும் தொல்காப்பிய வழியில்

'மாற்றிச் சுவைக்கும் நான்குவிழிகள் தம்மிற்
பிரியாமற் நீராடின'

என்றும்,

'என்விழி அங்கொரு பொன்மலர் நோக்கி
விரைந்து –பின் – அது மீளவில்லை
பின்னர் அவள் விழி என்னைக் கொன்றது
என்னுளம் அவளுளம் இரண்டும் பின்னின்'

என்றும், இன்னும் பலவிடங்களில் விழி மொழியை விளக்குவார் பாரதிதாசன்.

ஐயம்

காட்சி நடந்தபின் ஐயம் ஏற்படும். தலைவி ஐயப்படக் கூடாது என்பது மரபு.

Koviloor Digital Library



'ஈண்டுக் குறையின்றித் திருத்திய சித்திரமோ'
எனத் தலைவியும்,
'தமிழ்வாணர் கற்பனையோ, மலர்க் கூட்டமோ'
எனத் தலைவனும் ஒருவரை ஒருவர் ஐயப்படுகின்றனர்.
'சிறந்துழி ஐயஞ் சிறந்த தென்ப' —(தொல்–1040)
'ஐயக் கிளவி ஆடுஉக் குரித்தே'
என்ற நூற்பாக்களில் முன்னதன் வழியிலும் பின்னதை மீறியும் கருத்து இருப்பதைக் காணலாம்.

தொல்காப்பியப்படி தலைவன் காணத் தலைவி நகை மூலம் வகை செய்வாள் காதல் வளர்ச்சிக்கு. ஆனால் பாரதிதாசனில், தலைவியே காணுகிறாள். அவளே நகை விடையும் நவில்கின்றாள்.

'கன்னியனுப்பும் புதுப் பார்வை– அதன்
கட்டுடல்மீதிலும் தோளிலும் சென்று
மின்னலின் மீண்டது கட்டழகன் தந்த
விண்ணப்பம் ஒப்பினள் புன்னகையால்

கூடத்தில் படித்துக் கொண்டிருக்கிற இளைஞனைத் தனியிருந்து காணுகிறாள் தலைவி. அவன் ஏறெடுத்துப் பார்க்கிறபோது இருவர் மாட்டும் ஏற்படும் மாற்றங்களைச் சொல்கிறான் கவிஞன்.

கூடத்திலே மனப்பாடத்திலே – விழி
கூடிக் கிடந்திடும் ஆணழகை
ஓடைக் குளிர்மலர்ப் பார்வையினால் – அவள்
உண்ணத் தலைப்படு நேரத்திலே
பாடம் படித்து நிமிர்ந்தவிழி– தனிற்
பட்டுத் தெறித்தது மானின் விழி
ஆடைதிருத்தி நின்றாள் அவள்தான்– இவன்
ஆயிரம் ஏடு திருப்புகின்றான்.'

'மறைந்தவற் காண்டல்' (தொல்-1057) என்ற நூற்பாவிற்கும் 'அணிந்தவை திருத்தல்' (தொல்-1209) என்ற நூற்பாவிற்கும் மேற்சொன்னவை பொருந்தும்.

'காஞ்சிக் கீழ் செய்தேங்குறி' என்று முல்லைத் தலைவி சொல்வது போல, காலையில் மாமரத் தோப்பிற்கு வருவேன் என்றும், நெல்லி மரமிரண்டின் நடுவுள்ள பொது மன்றுக்குள் வருவேன் என்றும், மாலையில் ஊர்ப்புறத் தனியிடங்களில் வருவேன் என்றும், புன்னையருகில் இருப்பேன் என்றும் தலைவியர் பகற்குறி இரவுக்குறி உரைக்கின்றார்கள்.

தலைவிப் பண்புகுறித்து 'மறைந்தவற் காண்டல் தற்காட்டுறுதல், நிறைந்த காதலிற் சொல்லெதிர் மழுங்கல், என்னும் தொல்காப்பியம்.

Koviloor Digital Library



'என்னையே தனியிருந்து
நோக்குவாள், யான் நோக்குங்கால்
தன்னுளம் எனக்கீவாள் போல்
தாமரை முகங்கவிழ்த்துப்
புன்னகை புரிவாள்.'

என்று பகுதியோடு ஒப்பிடலாம்.

காதல் கொண்ட தலைவிக்குப் பாலுங் கசந்து படுக்கையும் நோகிறது. அப்படிப்பட்ட நேரத்தில்.

'சின்ன இடுப்பு நெளிவதென்ன
சித்திரப் புழுப் போலே
கன்னி உனக்குக் கசந்ததுவோ
காய்ச்சிய பசும்பாலே'

என்றும்,

'உன்நெஞ்சம் இளைத்த உடற்கு மருந்தும்
பின்னாள் விரும்புமுன் பெருவாழ்வின் நோக்கமும்
தன்னுளம் நாட்டுக்குந்தந்த தலைவன் பால்
சொல்லெனில் சொல்வேன்'

என்றும் தோழி உரையாற்றுகிறாள். இதனை 'நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமு முடியுஞ், செய்வினை மறைப்பினும் செலவினும் பயில்வினும் புணர்ச்சியெதிர்ப் பாடுள்ளுறுத்து வருஉ முணர்ச்சி யேழினும் உணர்ந்த பின்றைத் தோழி உரை நிகழ்த்துவாள்' எனத் தொல்காப்பியம் சுட்டும் (தொல்.-1060)

களவில் கூட்டம் முடி-ந்த பின்னர், தலைவன் தலைவியர் காணும் பொருளிலெல்லாம் காதலுறுப்புகளையே காணுவர். வட்ட மதியில் முகத்தையும் வானம்பாடியின் இசையில் அவள் சொற்களையும் ஒரு தலைவனும், தாமரையிலும் ஆம்பலிலும் தலைவியின் முகத்தையும் விழியையும் இன்னொரு தலைவனும், அருவியில் கூந்தலையும் தளிரில் மேனியையும் உதய குமாரனும், புனலிலும் காற்றிலும் பொழிலிலும் அவளுருவையே இன்னொரு தலைவனும் காணும்போது நோக்குவ எல்லாம் அவையே போறல்' என்ற (தொல்-. களவு-97) நூற்பாவிற்கு மேற்காட்டியவை சான்றுகளாகும்.

தலைவன் சடையை யிழுத்துக் கன்னத்தைக் கிள்ளித் தன் கைக்கு முத்தங்கொடுத்த பாங்கினைத் தலைவி எண்ணிப் பார்த்தல் 'உள்ளுதல்' (களவு 97) என்ற பிரிவில் அடங்கும்.

களவில் தலைவியைச் சந்திக்க அடங்கா வேட்கையோடு அடங்கும் ஆண்மை காத்துநிற்கும். குறித்தபடி தலைவி வரத் தவறியபோது எண்ணாதனவெல்லாம் எண்ணிக் கலங்குவான் தலைவன் புன்னையின் கீழ்த் திண்ணையிலே காத்திருந்த தலைவனும், காதல் நினைவுகள் தலைவன் வேட்கை மீதுர கையாரத் தழுவுவதற்கும், பொற்றொடியாள் தழுவிய புத்தின்பம்

Koviloor Digital Library



கூட்டுவதற்கும் வரவில்லையே என்று புலம்புவார்கள். 'இரு வகைக் குறி பிழைப்பாகிய இடத்தும் தானகம் புகா அள் பெயர்தலின்மையிற் காட்சியாசையில் களம்புக்குக் கலங்கி வேட்கையின் மயங்கிக் கையறு பொழுதினும்' (தொல்-1053) தலைவன் உரை நிகழ்த்துவான் என்பதற்கு இவை எடுத்துக் காட்டுகளாகும்.

எதிர்பார்த்தபடி தலைவி வந்துவிட்டாலும் தலைவன் முன் அவள் வாய்திறவாள். ஆசையிருக்கும் ஆனாலும் கூடக் கொஞ்சம் அச்சமிருக்கும், இந்நிலையில் தலைவன் உரை நிகழ்த்துவான். காமக் குறிப்புடைய தலைமகன் வேட்கையால் சார நினைத்த வழி தலைமகளும் வேட்கைக் குறிப்புடையள் ஆயினும் குலத்தின் வழிவந்த இயற்கையின்மையால் நாணமும் அச்சமும் மீதூர அக்குறிப்பில்லாத வளைப்போல நின்றவழி அவளை முன்னிலைப் படுத்திச் சில கூறுதல்' என்று பேராசிரியர் விளக்குவார்.

'நாணப்படுவ திங்கு நாணய மில்லையடி – இளந்தையலே
காணப்படும் நிலவைக் கரம் பொத்தி விடுவதால்
ஆணழகன் சகித்தம் அருமை அருமையடி
மணிக்கொடி விலக்கடி மதிமுகம் மறைத்தகரம் இளந்தையலே
இலக்குத் தவறுதடி என்முகம் உன்முகம்
இணைத்திணைத் திழுத்திழுத் தணைத்தணைத்தழுதளி'

என்கிறான் தலைவன், இயற்கைப் புணர்ச்சியில் 'முன்னிலையாக்கல், சொல்வழிப்படுத்தல்' (தொல்-1047) என்ற நூற்பாவில் இக்கவிதையை அடக்கலாம்.

புணர்ந்து நீங்கிய காதலி தான் பெற்ற இன்பத்தைப் பாராட்டுவது இயல்பே. தலைமகற்கும் இத்தன்மை ஒக்கும் என்பர் பேராசிரியர். பாராட்டெடுத்தல் (தொல்-1210) என்ற நூற்பாபடி

'விண்ணீலம் கார்குழலோ காணும் எழிலெல்லாம்
மெல்லியன்வாய்க் கள்வெறியோ அல்லிமலர்த் தேனின்
வண்டின்ஒலி அன்னவளின் தண்டமிழ்த்தாய் மொழியோ'

என்கிறான் பாரதிதாசன். தலைவன், மெய்தொட்டுப் பயின்ற தலைவன் அவ்வின்பத்தை நினைத்துப் பார்த்து இரங்குவதை' நீடு நினைந்திரங்கல்' என்று சுட்டும் தொல்காப்பியம். பாரதிதாசன் கவிதையில்,

'செந்தேனோ தமிழோ அவளுதவிய சுகம்
குளிர் சோலையில் முழுநிலவில் கொண்ட
காதல்மிக இதழ்குவிய முகமிரண்டும்
ஒன்றாக உடலிணைய இருவர் ஒருவராகி
முத்தமிட்டு அரை நிமிடமும் விலகாச்
சுகம் அமுதமொழியாள் சுகுணாலயம்'

என்று தலைவன் நினைந்துருகுகிறான்.

Koviloor Digital Library



களவில் கூடியின்புற்ற தலைவன், தலைவி வாடிய நலிய வராமலே இருந்து விடுவதுண்டு, அப்போது பிரிவாற்றாமையால் இயற்கைப் பொருள்கள் துன்புறுத்த வருந்துவாள் தலைவி.

'தென்ற லென்ற புலிசீறல் தாளேன்
சீதநிலவே தீதாய் விளைந்திடுதே'

என்ற தலைவி கூற்றை 'எஞ்சியோர்க்கும் எஞ்சுதலிலவே' என்ற (தொல்-988) நூற்பாவில் அடக்கலாம்.

பிரிவில் துயில்மகனும் தழுவப் பெறாமல் வருந்துவாள். தலைவி. புணர்ச்சியை எதிர்ப்பார்த்து இரவில் காத்திருந்து தலைவன் வரும்போது குரைத்துத் தொலைக்குமே நாயென்று சிணுங்கிய தலைவியைப் போல் அல்லாது காலையில் தலைவனை வரச்சொல்லி இருந்தமையால் கோழியின்னும் கூவத் தொடங்கவில்லையே என்று வருந்துகிறாள், தாசனின் தலைவி.

'சேவலுக்கும் இன்னுமென்ன தூக்கம்' இந்தத்
தெருவார்க்கும் பொழுது விடிந் திட்டசேதி
தேவையில்லை போலும் இதை நான் என் தாய்க்கு
செப்புவதும் சரியில்லை என்ன கஷ்டம்?'

இப்பகுதி தலைவியின் நாணப் பண்பையும் அவள் படும் துன்ப வேதனையையும் தெள்ளிதின் விளக்கும் கண்துயில் மறுத்தலுக்கு எடுத்துக்காட்டாகும்.

களவில் தலைவன் பிரிந்தான் தலைவியின் மலர்மேனி விதிர்விதிர்த்து வியர்த்தது. இதயம் வெடிக்கும் நிலையுற்றது. செந்நீரைக் கண்ணால் பெய்தாள், உடைந்து விழுந்தாள், அழுதாள், உயிரே நீர் பிரிந்திரா என்று ஆவி சோர்ந்தாள், கடல் நீரில் சுறாப்போல் படுக்கை தன்னில் துள்ளிக் கள்ளீயும் பாளைபோலக் கண்ணீருக்குத்தாள். இவை 'துன்பத்துப் புலம்பலுக்குத்' தகுந்த சான்றாகும்.

கற்பிலும் தலைவி பிரிவால் வருந்துவதுண்டு. இதனை,

'எனை அவள் பிரிந்ததை எவ்வாறு பொறுப்பேன்?
வான நிலவும் விண்புனல் தென்றலும்
ஊனையும் உயிரையும் உருக்கின இந்தக்
கிளப்பேச் சோளனில் கிழித்தது க்காதையே
புளித்தது பாலும் பூநெடி நாற்றம்'

என்ற பகுதி 'தெய்வ மஞ்சல்' நூற்பாவில் பிரிவாற்றாமைப் பகுதியில் வைக்கலாம்.

கற்புக்காலத்தில் பிரிந்த தலைவன் வரும் வரைக்கும் அவனிடமுள்ள குறைபாடுகளை எண்ணிப் பார்ப்பதும், வந்த பின் அவற்றை மறந்துவிடுவதும். தமிழ்ப்பெண்மை, 'எழுதுங் கால் கோல் காணாக் கண்' என்று விளக்கும் குறள்,

Koviloor Digital Library



'வரட்டும் அவ் வஞ்சநெஞ்சர்
வரவேற்குமோ என்தோள்கள்
ஒருபேச்சுப் பேசுமோ இவ்
வொண்டொடி செவ்வாம்பல்வாய்
சிரிக்கட்டும், கெஞ்சிடட்டும்
செந்தமிழ்க் காதற்பாட்டை
வருத்தட்டும் எனைப் பன்னாள்கள்
மறந்தானை நானாஏற்பேன்'

என்று நெஞ்சிடமும்,

'சுனைப் புனலும் நானல்லேன் நாவறண்டு
துள்ளுமான் எண்ணமெலாம் செல்லாதிங்கே'

என்று தோழியிடமும் உரை நிகழ்த்துகிறாள். தலைவி அவனறிவற்ற அறியுமாகலின் ஆவயின் உருஉம் பல்வேறு நிலை' என்பதில் வகைப்படுத்தலாம் இப்பாடலை.

தலைவனின் பரத்தமை யொழுக்கம் கண்டவழி தலைவியின் மடைமையைக் கூறி அவன் கொடுமையை இடித்துக் காட்டுவாள் தோழி தலைவி உண்ணாமல் உறங்காமல் உம்மை யெண்ணித் துடிக்கிறாள். அகத்தன்பை விடுத்து மனவிருப்பப்படி நடக்கலாமா?

'தொடலின்றிக் கைபிரிந்தால் துன்பம் தாளாத்
தோகையினை நீர் பிரிந்தால் அந்தத் தோகை
விடல் தகுமோ'

என்று எடுத்துரைக்கிறாள் - கடல் நடுவில் கையோய்ந்து போன காதற்கரும்பைக் கரையேற்ற வாரீர் என அழைக்கிறாள். இதனைப் பரத்தமை மறுத்தல் வேண்டியும் கிழவி மடத்தகு கிழமை உடைமையானு மன்பிலை கொடியை என்றலுமுரியள்' என்ற நூற்பாவில் அடக்கலாம்.

காமஞ்சான்ற கடைக்கோட்காலை ஏமஞ்சான்ற மக்களொடு துவன்றி அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும் சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே' என்பதன் விளக்க மாக்க குடும்ப விளக்கின் முதியவர்கள் காட்சி தருகிறார்கள். அன்புடல் அறத்தால் தோய்ந்த ஆயிரம் பிறைமுதாட்டி என்றும் மைந்தர்க்குக் கல்வி சேர்த்தோம் மகன் மார்க்கும் அவ்வாறேயாம், எமதகக் கடன் முடித்தோம் இனிதாக வாழுகின்றோம்' என்றும் தாசன் விளக்குவான்.

"இல்லற வெற்றிபெற்றீர்
மக்களைப் பெற்றீர், வைய
வாழ்வெலாம் பெற்றீர்,
'அதிர்ந்திடும் இளமை தன்னில்
ஆவன அறங்கள் செய்து

Koviloor Digital Library



முதிர்ந்திடும் பருவந்தன்னில்
மக்கட்கு முடியைச் சூட்டி
எதிர்ந்திடும் துன்பமேதும்
இல்லாமல் மக்கள் பேரர்
வதிந்திடக் கண்டு நெஞ்சு
மகிழ்வதே வாழ்வின்வீடு'

என்று இலக்கியம் காட்டுவான்.

காமஞ்சான்ற இளமையவளைக் கண்டு நெஞ்சிடம் சொல்லி யின்புறுகிறான் ஓர் இளைஞன், அவள் விழிகள் சேலென்றும், முகம் நிலவென்றும், குழல் மேகமென்றும், நடையில் அன்னமென்றும், சாயலில் மயிலென்றும் இன்னவாறு சொல்லியின்புற்ற தலைவன்,

'மதுவோடையை மொண்டுண வாக்கு நல்காளோ
மாமயலெனும் ஓர் அனலிடையே அனதுளம் நோயடைவதை
மாதிவளறியான் இதை எவர் போயவளிடமே புகலுவர்'

என்று வருந்துகிறான்.

'அவள்தனி, ஒப்பவில்லை
அவன் அவள் வருந்தும் வண்ணம்
தவறிழைக் கின்றான் இந்தத்
தகாச் செயல் தன்னை, அன்பு
தவழ்கின்ற புறாக்கள் தம்மில்
ஒருசில தறுதலைகள்
கவலைசேர் மக்களின் பால்
கற்றுக் கொண் டிருத்தல் கூடும்'

என்று தமிழகத்தில் நீண்டுவரும் (மறையோர் தேயத்து மன்றல்களுள் ஒன்றாகிய) இராக்கதக் காமத்தை நயமாகப் புலப்படுத்துகிறான். பாரதிதாசன் எண்வகை மெய்ப்பாடுகள் அமைத்தும் கவிதை புனைந்துள்ளார்.

*முடிவுரை*

'தமிழ் ஒழுக்க வேரிருக்கும் வரை தமிழ்ச்சீர்
தடங்கினையும் அடிமரமும் இருக்கும் இந்நாள்
தமிழ்ஒழுக்க வேரழிந்தால் தமிழர்வாழ்வு
தலைகவிழும்.'

என்ற கனகசுப்புரத்தினம் பெருமளவு ஒழுக்கத்தை மேம்படுத்தும் முறையிலும் சிறுபான்மை தான் ஒழுக்கமென்று நம்பியதையும் கவிதையாக்குகின்றான்.

தொல்காப்பியம் சுட்டும் எந்நாளும் மாறாத அடிப்படையான அகக் கூறுகளோடு காலச் சூழலுக்கேற்பக் காதல் வாழ்வில் புதுமை புகுத்திக் கவிதை முழங்கியவன் புரட்சிக் குயில் என முடிவு செய்யலாம்.

Koviloor Digital Library

## 12. தொல்காப்பியமும் அகப்பொருள் விளக்கமும்

தி. ராஜரெத்தினம்
திருவனந்தபுரம்

*முன்னுரை*

தொல்காப்பியம்- தமிழில் இன்றுகிடைக்கும் முதன்மையான இலக்கண நூலாகும். இந்நூல் பிற்கால இலக்கண, இலக்கியங்களுக்குத் தோற்றுவாயாக அமைந்து விளங்கி வருவதை உணர முடிகிறது. தொல்காப்பியப் பொருளதிகாரம் பிற்காலப் பல சிற்றிலக்கியங்களின் தோற்ற விதிகளை உள்ளடக்கி உள்ளமையை நாம் அறியலாம். தொல்காப்பியத்தை அடிப்படையாகக் . கொண்டு நேமிநாதம். . நன்னூல் அகப்பொருள்விளக்கம், தண்டியலங்காரம், யாப்பருங்கலம், காரிகை, போன்ற பல இலக்கண நூல்கள் தோன்றியுள்ளன. இலக்கணங்களுக்கிடையிலான ஒப்பீட்டுக் கல்வி, அவைகளுக்கிடையிலான உறவை வெளிக்கொணரும், எனவே, இவண் தொல்காப்பியத்தையும், அகப்பொருள் விளக்கத்தையும் ஒப்பிட்டு அவற்றிடையே உள்ள உறவைக் காணமுயல்வோம்.

தொல்காப்பியமும் அகப்பொருள் விளக்கமும்

*1. காலம்.*

தொல்காப்பியத்தின் காலம். கி.மு. 4ஆம் நூற்றாண்டுப் பகுதியாகும். அகப்பொருள் விளக்கத்தின் காலம். கி.பி. 13ம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியாகும். சுமார் 1000 ஆண்டுகள் கால இடைவெளியுடைய இரு இலக்கணங்களை ஒப்பிட்டுக் காண்பது, பலசிந்தனைகளுக்கு வழிகோலும்.

*2. பொதுவான இயல்கள்*

தொல், அகப்பொருள் விளக்கம் இரண்டிற்கும் பொதுவான இயல்கள். 1. அகத்திணையியல் 2. களவியல், 3. கற்பியல் என மூன்று இயல்களாகும். அகப். வி. வரைவியல், ஒழிபியல் என்ற மேலும் இரு இயல்களையும் சேர்த்து ஐந்து இயல்களை மொழிகிறது. ஒழிபியலில் கூறப்படும் செய்திகள் தொல்காப்பியத் தின் பிற இயல்களான செய்யுளியல், மரபியல், மெய்ப்பாட்டியல், பொருளியல் போன்றவற்றில் விரவிக் காணப்படுகின்றன.

Koviloor Digital Library


தொல்காப்பியச் செய்திகள்

அகப்பொருள் தொடர்பான தொல்காப்பியச் செய்திகளாவன.

1. அன்பின் ஐந்திணை, கைக்கிளை, பெருந்திணை பற்றிப் பேசுகிறது.

2. முதல், கரு, உரி மற்றும் நிமித்தத்தோடு கூடிய உரிப்பொருள் பற்றிப் பேசுகிறது.

3. திணை நிலப்பெயர்கள், கைக்கிளை, பெருந்திணைக்கு உரியவராகக் கருதப்படும் அடியோர், வினைவலர்ப் பாங்கினையும், ஏவல் மரபின் ஏனோரும் பற்றிக் கூறியுள்ளார்.

4. பிரிவுகள் ஓதல், பகை, தூது, பொருள், நற்றாய், தோழி, கண்டோர், தலைமகள் முதலியோர் கூற்று வகையும் உள்ளுறை உவமம், வெளிப்படை உவமம் பற்றியும், நாடக வழக்கு உலகியல் வழக்கு புலனெறி வழக்கு பற்றியும் பேசியுள்ளார்.

5. மகளிர் மடலேறாமை பற்றியும், சுட்டி ஒருவர் பெயர் கொள்ளப் பெறாமை போன்றவையும் விளக்கப்படுகின்றன.

அகப்பொருள் விளக்கச் செய்திகள்.

1. கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை பற்றிக் கூறியுள்ளார். நம்பி.

2. புனைந்துரை உலகியல் திறங்கள் வழாமல் தொன்மை சொல்லப்படவேண்டும். முதல், கரு, உரிப்பொருட்களும், கருப் பொருள் விரிவும் கூறப்பட்டுள்ளன.

3. களவு, கற்பு-கைகோள் விளக்கம் உள்ளது.

4.களவுப்புணர்ச்சி வகையுள் புணச்சிக்குரியாரையும் களவிடங்களையும் குறி-இரவு, பகல், களவுப் பிரிவுகளையும் ஒருவழிதணத்தல், வரைவிடைவைத்துப் பிரிதல்,களவு வெளிப்பட்ட முன்னும், பின்னும் வரைதலாகிய நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுகிறார்.

5. அறத்தோடு நிற்றல் தலைவி-பாங்கி பாங்கி, செவிலி,செவிலி-நற்றாய், நற்றாய்- தந்தை தன்னையர்க்கும்.

6.களவின் வழிவந்த கற்பும், களவின் வழிவாராக் கற்பும், கற்புகாலப் பிரிவுகளுள் பேசப்பட்டுள்ளன.

7. அயன் மனைப் பிரிவும் காமக்கிழத்தி அயற்சேரிப் பிரிவும் (பரத்தை) புறநகர்ப்பிரிவும் (விருந்தியற் பரத்தை) பரத்தையர் பிரிவின் வகைளாகச் சொல்லப்பட்டுள்ளன.

8. வாயில்கள் பாணன் பாடினி, கூத்தன், இளையர், கண்டோர். பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

9. இல்லத்தழுங்கல், இடைச்சுரத்தழுங்கல், தலைவி தன்னையும், தன்மனம் தன்னையும் ஆற்றுதல் பொருட்டு பற்றி உரைத்துள்ளார்.

Koviloor Digital Library



10. இல்லற வாழ்வை இனிது நடத்திய தலைவனும் தலைவியும் இல்லறம் விட்டுத் துறவறம் மேற்கொள்ளும் செய்தியும் கூறப்பட்டுள்ளது.

தொல்கப்பியத்தின் வழிநூல் அகப்பொருள் விளக்கம்

அகப்.வி. தொல்காப்பியத்தின் வழிவந்தது என்பது "தொல்காப்பியனருள் ஒல்காப்பெரும்பொருள் அகப் பொருளிலக்கண மகப்படத் தழீஇ". .என்ற அ.வி. பாயிர வரிகளால் அறியப்படும். தொல்காப்பியத்தோடு மட்டுமின்றி பிற இலக்கியங்களையும் உற்று நோக்கி எழுதப்பட்டது என்பதை இகப்பருஞ்சான்றோரிலக்கியம் நோக்கி தொகுத்து முறை நிறிஇச் சூத்திரம் வகுத்தாங்கு என்ற பாயிர அடிகளால் உணரலாம்.

அகப்பொருள் விளக்கத்தில் தொல்காப்பியச் செய்திகள் வேறுபாடு

1. தொல்காப்பியர் உரிப்பொருள் அல்லன மயங்கும் என்கிறார். முத்திறப் பொருளும் தத்தம் திணையோடு மயங்கும் என்பது நம்பி கூற்று

2. பெயர்,வினை, திணை, நிலைப்பெயர் என்று தொல்காப்பியர் கூறியதை நம்பி, நிலப்பெயர், வினைப்பெயர், பண்புப்பெயர், குலப்பெயர், இயற்பெயர், என்று விரித்துக்கூறுவார், சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறார் என்பதை மீறி இயற்பெயர் கூறுப்பாட்டுடைத்தலைவர்க்கு (247) இயற்பெயர் கிளவித் தலைவற்கிசையார். (248) என அகப்பொருளில் கூறப்பட்டுள்ளது.

3. பெருந்திணை கைக்கிளையை அகத்திணை என்று தொல்காப்பியம் கூற, நம்பியோ அகப்புறத்திணை என்பார்.

4. உள்ளுறை உவமம், ஏனை உவமம் பற்றி தொல் அகத்திணையியலில் கூற, பின்னவரோ ஒழிபியலில் கூறி உள்ளார்.

5. தொல்கப்பியர் 'வழக்கம்' (53) என்று கூறிய சொல்லாட்சியை 'புனைந்துரைத்திறம்' என்று நம்பி கூறுகிறார்.

6. திணை, நிலங்களை சுரம், புறவு, பழனம், திரை (9) என்றும், தெய்வத்தை ஆரணங்கு என்றும் நம்பி குறிப்பார்.

7. களவுப் புணர்ச்சி என்று தொல்காப்பியர் கூறுவதை கள்ளப்புணர்ச்சி என்று அகப்பொருள் கூறுகிறது.

8. முறை வைப்பிலும் வேறுபட்டுள்ளனர். "முல்லை, குறிஞ்சி, மருதம் நெய்தலெனச் சொல்லிய முறையாற் சொல்லவும், படுமே" என்று தொல். கூறியதை, நம்பி,

"குறிஞ்சி பாலை, முல்லை மருதம் நெய்தல்
ஐந்திணைக் செய்திய பெயரே"

என்று கூறுகிறார்.

Koviloor Digital Library



9, கருப்பொருள் பற்றித் தொல்காப்பியர் எண்ணிக்கையுடன் (8) மேலும் ஆறு கூறுகளைக் கூட்டி பதினான்காக்கிக் கூறுவார். நம்பி.

"ஆரணங் குயர்ந்தோக்ரல்லோர் புள்விலங்கு
ஊர் நீர் பூ மர முணாப்பறை யாழ்பண்
தொழிலெனக் கருவிரெழு வகைத்தாகும். (19)

தொல்காப்பியக் கருப்பொருள் நூற்பாவுக்கு உரையாசிரியர்களே சான்றுசொல்ல நம்பி, தாமே திணைக் கருப்பொருள்களைக் விளக்கமாக ஐந்திணைக்கும் (20-24) கூறியுள்ளார்.

மேற்கண்ட மாற்றங்கள் ஏற்படக் காரணங்கள் என்ன? கால, சமூகச் சூழல் மாற்றம் தான் இதற்குக் காரணம். எனவே, கால, சமூக மாற்ற அடிப்படையில் இதற்கு விளக்கம் கூற முற்படுவது அகப்பொருள் விளக்கத்தின் இலக்கண உருவாக்க மரபை அறிந்து கொள்ள உதவும்.

தொல்காப்பியர் காலத்தில் சமணம் நன்னிலையில் இருந்திருக்கலாம். ஆனால், களப்பிரர் காலம், பக்தி இயக்க காலம் இவற்றைத் தாண்டி சமண சமயம் இலக்கண, இலக்கியங்காடையே அமைதி பெற வேண்டியதாயிற்று. சில சமூகக் கருத்தாக்கங் களையும் மரபுகளையும் ஏற்று இலக்கணம் செய்யும் நிலை நம்பிக்கு ஏற்பட்டுள்ளது அதன் பயனாகத்தான்.

1. உரிப்பொருளும் மயங்கும் என்று நம்பி கூறுவது தொல். கூறும் அக இலக்கிய மரபு ஆணிவேரே நம்பியில் ஆட்டங்கண்டுள்ளது. "சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறார்" என்பதும் இப்படியே மாற்றம் கண்டுள்ளது. பக்தி இலக்கியத்தின் வளர்ச்சியால் ஏற்பட்ட மாற்றம் இது.

2. தொல்காப்பியர் பெயர், வினை, திணை, நிலைப்பெயர் மட்டும் குறிப்பிட, நம்பி நிலப்பெயர், வினைப்பெயர், பண்புப் பெயர், குலப்பெயர், இயற்பெயர் என பல பெயர்களைக் குறிப்பிடுகிறார். மனிதனை முக்கியத்துவப் படுத்தியது தொல்காப்பியர், காலம். வருணப் பாகுபாடுகளையும், தெய்வத்தையும் முக்கியத்துவப் படுத்திய காலத்தைக் கடந்து வந்த காலம் நம்பி காலம் எனவே தான் அவர், குலப்பெயரையும், இயற்பெயரையும், சுட்டிச் செல்கிறார். இவை, வருணப் பாகுபாட்டில் முக்கியத்துவம் பெறுவன. கருப்பொருளைப் பற்றி விரிக்குமிடத்துத் தொல்காப்பியரினின்றும் வேறுபட்டு, உயர்ந்தோர் அல்லோர் ஊர், தொழில் இவற்றைச் சேர்த்துக் கூறுவது வருணப்பாகுபாட்டில் மிகச்சிறந்த பங்கை வகிப்பன.

Koviloor Digital Library



இது போன்றே இன்னும் பல செய்திகளையும் விளக்கிக் கூற முடியும்.

நம்பியும் இளம்பூரணரும்

தொல்காப்பிய உரையாசிரியர்களில் இளம்பூரணர் மட்டுமே நம்பியின் காலத்தவர். தொல்காப்பிய உரைக்கருத்துக்கள் நம்பி அகப்பொருளில் இடம் பெற்றுள்ளன. நம்பி இலக்கணம் செய்யும் போது தொல்கப்பியத்தோடு இளம்பூரணர் உரையையும் நன்கு படித்திருக்கவேண்டும் என்றே தோன்றுகிறது.

சான்றாக.

"ஒண்டொடி மாதர் கிழவன் கிழத்தியொடு
கண்டோர் மொழிதல் கண்ட தென்ப (தொல். 1149)

என்ற நூற்பாவிற்குப் பொருள் எழுதும் போது; இளம்பூரணர் 'ஒண்டொடி' என்பதற்கு நற்றாயும், தோழியும், செவிலியும், என்று பொருள் எழுதுகிறார்.

நம்பி தம் நூற்பாவில் தொல்காப்பியத்தின் விரிவாக- உரை போன்று, இளம்பூரணரைப் பின்பற்றி.

"தாயார், பாங்கியர் தலைவன் தலைவியோடு
ஏயுமென்ப கண்டோர் கூற்றே" (அ.வி. 221)

பிற உரையாசிரியர் தாக்கம் நம்பியில் இல்லை. அகப்பொருள் விளக்கத்தைப் பார்க்கும் போது, தொல்காப்பியமும் இளம்பூரணமும் கலந்து செய்த கலவை" என்று எண்ணத் தோன்றுகிறது.

நூற்பா அமைப்பில் கூட இளம்பூரணர் தாக்கம் இருக்கலாம் என்பதை அறியமுடிகிறது-

"இடைச்சுர மருங்கிற் கிழவன் கிழத்தியொடு
வழக்கிய லாணையிற் கிளத்தற்கு முரியன்" (தொல்–1450)

என்ற தலைவன் கூற்றுக்கு மரபுணர்த்தும் நூற்பாவிற்கு இளம்பூரணர் தலைமகளை உடன்கொண்டு போகும் இடைச்சுரத்தின் கண் தலைமகன், தலைமகளோடு வழக்கு நெறி ஆணையானே கூறுதற்கும் உரியன் என்றவாறு என்று உரையெழுதிவிட்டு.

"நீ விளை யாடுக சிறிதே யானே
மழகளி றுரிஞ்சிய பராரை வேங்கை
மணலிடு மருங்கி னிரும்புறம் பொருந்தி
அமர்வரி னஞ்சேன் பெயர்க்குவென்
நுமர்வரின் மறைகுவென் மாஅ யோளே"

என்ற நற் . 362 ஆம் பாடலை மேற்கோள் காட்டுவார். நம்பி தொல்காப்பியரையும், இளம்பூரணரையும் உள்வாங்கி கொண்டு சங்க இலக்கியப் பாடலில் தாக்கத்தோடு.

Koviloor Digital Library



"தமர்வரி னிடைச்சுருந் தன்னிற் கிழத்தியோ
டமர்தரு கிழவோனாணையுங் கூறும். (216)

என்று எழுதுகிறார். இந்நூற்பா சங்கப் பாடலின் அமர்வரின், நுமர்வரின் என்ற எதுகையோடு ஒத்திருப்பதை உணரலாம். இது சங்க இலக்கியத் தாக்கம் என்பதை விட. இளம்பூரணர் உரைத்தாக்கமே ஆகும்.

இதன் மூலம் தொல்காப்பியத்தின் வழி இளம்பூரணருக்கும் நம்பிக்கும் உள்ள உறவு உணரமுடிகிறது.

**கூற்றுக்கோட்பாடு தொல்காப்பியமும் அகப்பொருள் விளக்கமும்**

தொல்காப்பியர் செய்யுளியலில் செய்யுள் உறுப்புகள் 34 ஐக் குறிப்பிடுகிறார். அவற்றுள் கீழ்க்கண்டவை அகப்பாட்டிற்கே சிறப்பானவை யாகும்.

1. திணை, 2. கைகோள், 3. கூற்றுவகை 4. கேட்போர் 5. களன் 6. காலவகை. 7. பயன் 8. மெய்ப்பாடு, 9. எச்சவகை, 10. முன்னம். 11. பொருள்வகை, 12. துறை என்பனவாகும். இதையே நம்பியகப்பொருள், ஒழிபியலின் கண் 211-ஆம் சூத்திரத்தில்.

"திணையே கைகோள் கூற்றே கேட்போர்
இடனே காலம் பயனே முன்னம்
மெய்ப்பாடு எச்சம் பொருள் வகை துறையென்று
அப்பால் ஆயிரண்டு அகப்பாட்டு உறுப்பே"

என்று கூறுகிறார்.

இவ்வுறுப்புகளில் திணையென்பது கூற்று நிகழும் திணையையும், கைகோள் என்பது கூற்று நிகழும் கைகோளையும், கேட்போர், களன், காலம், பயன், முன்னம், மெய்ப்பாடு, எச்சம், பொருள்வகை, துறை என்று அனைத்துமே கூற்றினை அடிப்படையாகக் கொண்டவை. இதன் மூலம் கூற்றின் இன்றியமையாமை விளங்கும். அக இலக்கண இலக்கியத்தை வழிநடத்தும் உத்தியாகக் கூற்று விளங்குவதை உணர முடிகிறது. தொல்காப்பியம் இறையனார் அகப்பொருள் நம்பியகப்பொருள் போன்ற இலக்கணங்கள், சங்க இலக்கியங்கள், தனிநிலைச்செய்யுட்கள் பிற்கால கோவை இலக்கியங்கள் அனைத்தையும் வழிநடத்துவன கூற்றுவகையே ஆகும்.

அகஇலக்கணங்கள் இயல் அமைப்புகளிலும் கூற்று அடிப்படையையே பின்பற்றி உள்ளன.

**கூற்று நிகழ்த்துவோர்**

கூற்று நிகழ்த்துவோரென தொல்காப்பியர் 12 பேரைக்குறிப்பிடுகிறார். அவர்களை இருவகைப்படுத்துகிறார். 1. களவிற்கும் கற்பிக்கும் உரியர் (1.பார்ப்பான், 2. பாங்கன். 3. தோழி, 4. செவிலி, 5. கிழவன், 6. கிழத்தி) 2. கற்பிற்கும் மட்டும் உரியர். (7. பாணன் 8. கூத்தன், 9. விறலி, 10. பரத்தை, 11. அறிஞர் 12. கண்டோர். (தொல் 1445, 1446)

Koviloor Digital Library



நம்பி

"தலைவன் தலைவி பார்ப்பான் பாங்கன்
பாங்கி செவிலியென்று ஈங்கு இவ்வறுவரும்
சாற்றிய களவில் கூற்றிற்கு உரியர் (ந.அ. 213)
"நற்றாய் கண்டோர் பாணன் கூத்தர்
விறலி,பரத்தை அறிவர் என்று எழுவரும்
அறுவர் என்று அவரும் ஆகிய அனைவரும்
குறைவறு கற்பிற் கூற்றிற்கு உரியர். (ந.அ. 214)

என்று 13ஐக் கூறுகிறார். தொல். 1448 நூற்பாவில் நற்றாய்க்குச் சிறப்பு விதி கூறிச் செல்கிறார்.

மேற்கண்டவை மூலம் தொல்காப்பியத்திற்கும் அகப்பொருள் விளக்கத்திற்கும் இடையான தொடர்பை, கூற்று என்ற அகப்பாட்டுறுப்பு மூலம் அறியலாம்.

முடிவுரை

தொல்காப்பியத்தையும் அகப்பொருள் விளக்கத்தையும் ஒப்பிட்டு நோக்கும்போது, அகப்பொருள் விளக்கம் தொல்காப்பியத்தினை அடியொற்றி எழுந்துள்ளதையும் காலமாற்றத்தை உட்கொண்டுள்ளதையும் இளம்பூரணரோடு இயைந்துள்ளதையும் கூற்று என்ற அகப்பாட்டுறுப்பின் மூலம் ஒன்று பட்டு நிற்பதையும் நாம் காணலாம்.

## துணை நூற்பட்டியல்


1. அகப்பொருள் விளக்க வுரை 1962 - சரசுவதி மகால் நூலகம்- தஞ்சை.
2. இலக்கண வரலாறு. இரா. இளங்குமரன், 1999 மணிவாசகர் பதிப்பகம் சென்னை- 108
3. உரையாசிரியர்கள் மு. வை. அரவிந்தன். மறுபதிப்பு, 1995, மணிவாசகர் பதிப்பகம், சென்னை- 108
4. சைனரின்தமிழிலக்கண நன்கொடை - சைன இளைஞர் மன்றம், . சென்னை -17
5. தமிழிலக்கண மரபுகள் . இரா. சீனிவாசன். தி.பார்க்கர், இராயபேட்டை- சென்னை14.
6. தமிழ் இலக்கிய வரலாறு- மு. அருணாசலம்- (14-நூற்) 1969 காந்தி வித்யாலயம்,மாயூரம், தஞ்சை.
7. தமிழ் இலக்கியத்தில் அகப்பொருள் மரபுகள் - ஒரு வரலாற்றுப் பாாவை. த. வசந்தாள்.,1990. முதல் பதிப்பு. சென்னைப்பல்கலைக்கழகம்- சென்னை.
8. தொல்கப்பியச் சிந்தனைகள். 1978. அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
9. Literary theroies in Tamil (Special referenceto Tolkappiam) -Indra Manuel 1997, First Edition Pondicherry Institute of Linguisties and Cuttuon.

Koviloor Digital Library

## 13. தொல்காப்பியத்தில் சமூக உறவுமுறை

முனைவர்.அ.ஆறுமுகம்

### முன்னுரை

தமிழ்நூல்களுள் காலத்தால் முந்தியது என ஏற்றுக் கொள்ளப்பெற்றது தொல்காப்பியம். எழுத்து, சொல், பொருள் என்னும் முப்பகுப்புகளைக் கொண்ட இலக்கண நூலாகும். இலக்கண நூலாயினும்இதில் இடம் பெற்றுள்ள நூற்பாக்களிலிருந்து பல்வேறு சமூகவியல் செய்திகளையும் தெரிந்து கொள்ள இயலும். அவற்றுள் சமூக உறவு முறைபற்றி மட்டும் இக்கட்டுரையில் காண்போம்

### சமூகம்

ஒவ்வொரு மனிதனும் ஏனைய மனிதர்களுடன் கொண்டிருக்கின்ற சிக்கலான சமூக உறவு முறைத் தொடர்புகளைத்தான் சமூகம் என்கிறோம். இச்சமூகத்தின் அடிப்படை அலகாய் இலங்குவது குடும்பம். தாயும்தந்தையும் குடும்பத்தின் அடிப்படை உறவுகள். இவ்வுறவிலிருந்தே மகன், மகள், தம்முன் தமையன், தம்பின் தம்பி, தங்கை, தமக்கை போன்ற குடும்ப உறவுப் பெயர்கள் கிளைக்கின்றன. இக்குடும்ப உறவுக்கிளைகளிலிருந்தே காதலன், காதலி, தோழன், தோழியென்ற நட்புறவுப் பெயர்கள் அரும்புகின்றன. இவ்வாறு உறவு மரம் பல்கி வளர்ந்து கிளைப்பெயர்களாகவும், குழுப்பெயர்களாவும், குடிப்பெயர்களாகவும், திணைப்பெயர்களாகவும், பரந்து சமூகத் தோப்பாக்கி ஊர்களாகவும், நாடுகளாகவும், விளங்குதலைத் தொல்காப்பியத்தில் காணலாம். இவற்றைப் பகுத்துப்பார்ப்போம்.

### முறைப்பெயர்

தொல்காப்பியர் முறைப்பெயர்களைப் பெண்மை முறைப்பெயர், ஆண்மை முறைப்பெயர் என இயக்கப்படுத்து கிறார். (தொல்-661) முறைப்பெயரை முதலில் தோற்றுவிப்பவள் பெண். எனவேதான் பெண்மை முறைப்பெயரை முதலில்

Koviloor Digital Library



வைத்துள்ளார். தாய் என்னும் பெண்மை முறைப்பெயர் நற்றாய் (தொல்-1448) அன்னை (தொல்-1192), செவிலி (தொல்-1061) எனவும் தாயர் (தொல்-1093) எனப் பன்மையிலும் இடம் பெற்றுள்ளது. தாய் என்ற பெயரினின்று தோன்றும் மகன், மகள் (தொல்-648) மக்கள் (தொல்-1000) என்னும் பெயர்களையும் குறிப்பிட்டுள்ளார். மேலும் தோழி (தொல்-985) மனைவி (தொல்-1025) மகடூஉ (தொல்-271) இழத்தி (தொல்-1039) காதலி (தொர்லு.1025) கிழவோள் (தொல்-1094) ஆகிய பெண்மை முறைப்பெயர்களும் இடம் பெற்றுள்ளன.

ஆண்மை முறைப்பெயரில் முதலில் இடம் பெறுவது தந்தை எந்தை, நுந்தை என சுட்டுப் பெயராக வழங்கிய நிலைகளையும் ஆந்தை, பூந்தை என இயற்பெயருடன் இணைந்துவடிங்கிய நிலைகளையும் தொல்காப்பியம் தெளிவுபடுத்துகிறது. (எழுத்து. 67, 348, 349) பல்லோர் குறிக்கும் தந்தையர் என்ற பெயரைத் தந்தையர் ஒப்பர் மக்கள் எனக்குறிப்பிடுகிறார். (தொல்-1093). தன்னை - (தொல்-1083) கணவ்ன், காதலன், புதல்வன் (தொல்-1025), கிழவன் (தொல்-1039) போன்ற பெயர்களும் இடம்பெற்றுள்ளன. சமூகம் வளர்ந்துபண்பட்ட நிலையில் மகன், மகள், மக்கள் என்பவை முறைமை சுட்டாய் பெயர்களாகவும் வழங்கி வந்துள்ளன. (தொல்-648).

மகன் பருவமுற்றபின் காதலனாகவும் தலைவனாகவும், கணவனாகவும், கிழவனாகவும் (உரிமை, உடையவன்,) ஆகிறான். மகள் பருவமுற்றபின் காதலியாகவும், தலைவியாகவும், மனைவியாகவும், கிழவியாகவும் (உரிமை உடையவள்) ஆகிறாள். கிழவன்,கிழத்தி என்ற பெயர்கள் குடும்பத்தின் முறைமை நிலையுடன் உரிமை நிலையுடன் சுட்டி நிற்கின்றன. முறைமை பெருகும் போது கிளைகள் தோன்றுகின்றன.

**கிளைப்பெயர்**

குடும்பத்தினின்று கிளைத்துத் தொழிலால் இணைந்து நிற்கும் குழுப்பெயரே கிளைப்பெயராகும். நெய்தல் நிலத்தினின்று உப்பை வண்டியில் கொண்டு சென்று விற்கும் உமணரும், குறிஞ்சிநிலமக்களில் வேட்டை மேற்செல்லும் வேட்டுவரும் கிளைப்பெயருக்கு எடுத்துக்காட்டுகளாம். இன்றும் சிற்றூர்களில் வழங்கும் கொத்து என்னும் சொல் கிளைப்பெயருக்குச் சான்றாகி நிற்கிறது.

**குழுப்பெயர்**

குருதித் தொடர்பின்றிக் கூடும் கூட்டம் குழுப்பெயரில் அடங்கும் தொல்-650 குழுப்பெயருக்கு எடுத்துக்காட்டுகளாக உரையாசிரியர் அவையத்தார், அத்திகோசத்தார் ஆகியவற்றை

Koviloor Digital Library



எடுத்துக் காட்டுகிறார். குழுப்பெயரில் அவையும் ஒன்று என்பதை இவ்வெடுத்துக் காட்டும் உணர்த்துகிறது. அவையில் சொல்லத் தகாதவைகளை அவையல்கிளவி (தொல்-925) எனக்குறிக்கிறது. சூதர், பாணர் கூத்தர், பொருநர், (தொல்-1037) முனைஞர் (தொல்-1003) போன்ற குழுப்பெயர்களும் தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளன.

**குடிப்பெயர்**

குடிப்பெயர் குடும்பத்தின் அடிப்படையில் தோன்றுவது என்பதனை நாடும் ஊரும் இல்லும் குடியும் (தொல்-1060) என்ற தொடர் மெய்ப்பிக்கிறது. குடி, இல், ஊர், நாடு, என விரிவு பெற்ற பின் தலைமை பெற்றவர்களே சேரர், சேழர், பாண்டியர் போன்றோர் தொல்காப்பியர் கூறும் குடிப்பெயருக்கு (தொல்-650) மலையமான், சேரமான் ஆகிய சொற்களை உரையாசிரியர் எடுத்துக்காட்டுகிறார். திருவள்ளுவரும் குடிமையில் பழங்குடி பண்பின் சிறப்பைக் கூறுகிறார். (குறள். 955) இன்றும் சிற்றூர்களில் அய்யாவீடு, பெரிய வீடு என வீட்டுப்பெயராலேயே குடிப்பெயர் இடம் பெறுதலை அறியலாம்.

**திணைநிலைப்பெயர்**

பெயரர்லும், தொழிலாலும் திணைநிலைப் பெயர்தோன்றும் என்பது தொல்காப்பியம், (தொல்-967) ஆயர், ஆய்ச்சியர், குறவன், குறத்தியர், எயினர், எயிற்றியர், உழவர், உழத்தியா, நுளையர், நுளைச்சியர், ஆகியவை திணைநிலைபெயர்களாம். இவர்களில் உரிமை பெற்றோர் வெற்பன், விடலை, ஊரன், துறைவன், பொதுவன் என்று பெயர் பெற்றனர். இவை நிலத்தினடிப்படையில் தோன்றியவைகளாம்.

**உடைமைப்பெயர்**

குடிப்பெயர், நிலப்பெயராகி, நிலப்பெயர் உடைமைப் பெயராகும் போது உரிமையும் தலைமையும் ஒருங்கிணைந்து விடுகிறது. கிழவன், கிழத்தி, கிழவோன், கிழவோள், என்னும் பெயர்களே உடைமைப் பெயராகவும் உரிமைப்பெயராகவும் அமைந்துள்ளன வேலன் (தொல்-1006) ஏரோர், தேரோர் (தொல்-1022) போன்ற உடைமைப் பெயர்களும் தொல்காப்பியத்தில் இடம் பெற்றுள்ளன.

**ஆடியற்பெயர்**

கூடிவரு வழக்கின் ஆடியற்பெயர் தொல்-650 எனத் தொல்காப்பியம் குறிக்கிறது. கூடி விளையாடல் பொழுதைக்குத் தாமே இட்டுக் கொண்ட பெயர் என்பர் நச்சினார்க்கினியர். இன்றும் சிற்றூர்களில் விளையாடுவதற்கு இரு பிரிவை அமைத்துக் கொள்ள இருவர் இருவராக உத்தி குறித்துக்

Koviloor Digital Library



கொண்டுவந்து கட்சித் தலைவனிடம் வானத்தை வில்லாக வளைத்தவன் வேண்மா?, மணலைக் கயிறாகத் திரித்தவன் வேண்டுமா? என வினவுந் தலைவன் கேட்கும் பெயருடையவன் அவன் அணியிலும், மற்றவன், எதிர் அணியிலும் சேர்ந்துகொள்வர்.இவ்வாறு தங்கள் தங்கள் விருப்பத்துக்கேற்பப் பெயரை அப்போதைக்கு மட்டும் அமைத்துக் கொண்டு ஆடுவர். தொல்காப்பியர்காலச் சமுதாயத்தின் பொழுது போக்கு நிலையை இதனால் அறியலாம். உவகை என்னும் மெய்ப்பாடு தோன்றுவதற்கு விளையாட்டும் ஒருகாரணம் என்று தொல்காப்பியம் கூறுவது இங்கு கருதத்தக்கது.

**வினைப்பெயர்.**

செய்யுந்தொழிலால் பெயர் பெறுவது வினைப்பெயராகும். (தொல்-650) அடியோர், வினைவலர், ஏவல்மரபின் ஏனோர் (தொல்-969, 970) கூத்தர் (தொல்-1037) தூதுவர் அறிவர் (182), வாயிற்காவலர் (பொருள். 87) போன்ற பெயர்களும் வினைப்பெயர்களாக இடம் பெற்றுள்ளன. சமூக உறவில் இவர்தம் பங்கும் சிறப்பிடம் பெறுவதாகும்.

**எண்ணியற் பெயர்.**

எண்ணினடிப்படையில் தொகையாக வழங்கும் பெயர் எண்ணியற்பெயராகும். (சொல். 165) தொல்காப்பியத்தில் இருவர் (பொருள். 144) மூவர் (பொருள். 142, 384) நால்வர் பொருள் (31, 187, 188, 220) ஆகிய எண்ணியற்பெயர்கள் இடம் பெற்றுள்ளன. இவ்வெண்ணியற் பெயர்களுள் நால்வர் பற்றிய உரையாசிரியர் கூறும் பொருள் பொருத்தமானதா? என்பது இன்னும் ஆய்வுக்குரியது.

**பண்புகொள்பெயர்.**

பண்பினடிப்படையில் தோன்றம் பெயர்களைப் பண்பு கொள்பெயர் (சொல். 165) எனக்குறிப்பிடுகிறார். உயர்ந்தோர் (பொருள். 28) இழிந்தோர் (பொருள் 629) மேலோர் கீழோர் (பொருள். 142) கொடுப்போர் கொடார் (பொருள் 87), கொடியோர், நயந்தோர் (பொருள். 145) பெரியோர் (பொருள். 148) இளையோர் (பொருள் 168) வல்லோர் (பொருள் 319), புரையோர் (பொருள் 419) போன்ற பண்பு கொள் பெயர்கள் அக்காலச் சமுதாயத்தின் ஏற்றத்தாழ்வுகளையும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

பார்ப்பனப்பக்கம் (பொருள் 74) பார்ப்பான் (பொருள். 198) ஆகிய சொற்கள் ஆரியத்தொடர் கால்கொண்டிருந்த நிலையைத் தெளிவுபடுத்துகிறது.

Koviloor Digital Library



*மறையோர்*

மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்

துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே (தொல்-1038)

என்ற நூற்பாவில் குறிக்கப்பெறும் மறையோர் யார் என்பது ஆய்வுக்குரியதாகும். அருமறை இனத்தல் செவிலியின் செயல் (பொருள்.122) நிறைமொழிமாந்தர் மறைமொழியே மந்திரம் (தொல்-1434) போன்றவை குறிப்பாகவும், காப்பாகவும், கூறும் மொழிகள் மறைமொழிகள் என்பதை மெய்ப்பிக்கின்றன. இவை இக்காலப் பொன்மொழிகளுக்கு ஈடானவை இத்தகையோர் மறையோர்எனப் பட்டனர். எனவே, மறைமொழி மொழி, மறையோர், ஐயர், அந்தணர் ஆகிய சொற்கள் தமிழர்களையே குறிப்பதாகும்.

தமிழர் திருமணம் பற்றி ஆய்வு செய்த டாக்டர் சசி வல்லி 'களவுப்புர்ச்சியில் உரிமை கொண்ட தலைவனும் தலைவியும் உலகத்தார் அறிமிய இல்லறம் நடத்த உரிமை செய்தளிக்கும் செயல் முறையே பண்டைத் தமிழரின் திருமணச் சடங்கு' என்றும், தொல்காப்பியருக்கு முன்னரே சான்றோர் கரணம் அமைந்திருப்பதால் அதற்குமுன் வாழ்ந்த தமிழர்களவும் கற்புமாகிய வாழக்கை நெறியைக் கடைப்பிடித்து வந்தமை புலனாகும் என்றும் கூறுகிறார். தமிழர் திருமணம் பக். 28, 29 மேலும் மறையோர் குறிப்பிடும் எண்வகை மன்றல் 1. களவுமணம், 2. மரபு மணம், 3. பரிசணம், 4. சேவைமணம், 5.திணைக்கலப்புமணம், 6. ஏறுதழுவுமணம், 7.மடலேறுமணம், 8.போர்மணம் எனக்குறிப்பிட்டு இவற்றுக்கான சான்றுகளையும் சங்க இலக்கியங்களிலிருந்து தந்துள்ளார்.

தொல்காப்பியர் காலத் திருமணச் சடங்குகள் தலைமைபெற்ற தமிழர் ஐயர்களால் உருவாக்கப்பட்டவை. வாலிழைமகளிர் நால்வர் கூடி நடத்திவைத்தவை.

எனவே, தொல்காப்பிய காலச்சமூக உறவுமுறையில் தமிழர்களே மிகுதியும் இடம் பெற்றிருந்தனர் என்பது தெளிவாகும்.

*நிறைவுரை*

இன்னும் பல்வேறு கோணங்களில் தமிழர் சமூக உறவு முறையை ஆராய்ந்தால் பல உண்மைகளை வெளிக்கொணர இயலும், இத்தகைய ஆய்வின் வழி தொல்காப்பியச் சமூக உறவு முறைகளை ஒளிபெறச் செய்ய வேண்டுவது ஆய்வறிஞர் பணியாகும்.

Koviloor Digital Library

## 14: தொல்காப்பியமும் திருக்குர் ஆனும்

ஆ.பீ.யூ அப்துல் காதர்
மேலப்பாளையம்

தமிழ்மொழியின் தொன்மை வாய்ந்த இலக்கண நூலாகிய ஒல்காப்பெரும் புகழ்த் தொல்காப்பியத்தில் கூறப்படும் இறைச்சி உலக முஸ்லிம்களால் ஒப்பற்ற மறைநூல் என நம்பப்படும் தூய திருக்குர்ஆனில் காணப்படுகிறது. மேலும். தொல்காப்பியர் கூறும் மெய்ப்பாடுகள் திருக்குர்ஆன் கூறும் வரலாற்றுப் பாத்திரங்களில் காணப்படுகின்றன. இவற்றை எடுத்து விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

### தொல்காப்பியத்தில் இறைச்சி

ஒல்காப்பெரும்புகழ்த் தொல்காப்பியனார் இறைச்சி பற்றிக் கூறும் நூற்பாக்களின் கருத்துக்களைச் சுருக்கமாகக் காண்போம்.

உள்ளுறையும், இறைச்சியும் நுட்பமாகவே உணரும் திறத்தன என்பதும், இப்பொருளைக் கொள்வதற்குக் கூர்த்த அறிவும், நுட்பமான உணர்வும் பொருளில் துணிவும் தேவை என்பது உணரத்தக்கது. எனவே; இவை எல்லார்க்கும் எளிதில் விளங்கும் திறத்தன என்று கூற இயலாது என்று பேராசிரியா டாக்டர் ரா. சீனிவாசன் அவர்கள் சங்க இலக்கியத்தில் உவமைகள் எனும் தம் ஆய்வு நூலில் பக்கம் 226-இல் கூறுகிறார்.

இறைச்சி என்பது கருப்பொருளின் புறத்தாகவே பெறப்படும் குறிப்புப் பொருள் என்பது பொதுவாக நிலவும் கருத்தாகும். இதற்குத் துணை செய்வது இறைச்சி தானே பொருள் புறத்ததுவே எனும் சூத்திரமாகும். (அதே நூல் பக்கம். 229)

உவமை வழியாக அமையும் இறைச்சிக்கும் உள்ளுறைக்கும் உள்ள வேறுபாடு மிக நுட்பமானதாகும். உள்ளுறையில் உவமும் உண்டு இறைச்சியும் (குறிப்புப்பொருளும்.) உண்டு. இறைச்சியில் குறிப்புப்பொருளும் உண்டு, உவமும் உண்டு. இவை இரண்டிற்கும் உள்ள ஒற்றுமைப் பண்புகளாகும். இவற்றை உள்ளுறை என்றோ,

Koviloor Digital Library



இறைச்சி என்றோ கொள்வது கொள்வோரின் மனநிலையைப் பற்றியதாகும். உவமைக்குத் தலைமையும் சிறப்பும் கொடுத்தால் அவை உள்ளுறை உவமம் எனக் கொள்ளப்படுகின்றன. குறிப்புப் பொருளுக்குத் தலைமையும் சிறப்பும் கொடுத்தால் அவைஇறைச்சி எனக் கொள்ளப்படுகின்றன. இவையே இவ்விரண்டிற்குமுள்ள அடிப்படை வேறுபாடுகள் எனலாம். (அதே நூல் பக்கம். 229-230)

"பொருள் புறத்தனவாக அமையும் இறைச்சிக்கும் உவமை வழி அமையும் இறைச்சிக்கும் வேறுபாடு உள்ளது. முன்னதில் உவமையே அமைவது இல்லை. பின்னதில் உவமை அடிப்படையாக நிற்கும் (சங்க இலக்கியத்தில் உவமை பக்கம். 234).

"உள்ளறை உவமத்தில் குறிப்புப் பொருள் தலைசிறந்து நிற்குமானால் அஃது இறைச்சியாகக் கொள்ளப்பட்டது என்பது கீழ்வரும் நற்றிணை உரைக்குறிப்பால் தெரியவருகிறது. சிறைப்புறம் என்றதால் அவனறியும் ஆற்றானே கூறினள் ஆதலின் இவ்வாறு உள்ளுறையும் இறைச்சி கொள்ளலாயிற்று. நற்றிணை 372/10-13 உரை எனவே உள்ளுறையே இறைச்சியாகும். என்பது தெரிகிறது. (சங்க இலக்கியத்தில் உவமைகள் பக்கம். 240)

"உள்ளுறை இறைச்சி என்பன கூறிய கருத்திலிருந்து கூறாத கருத்தை உய்த்துணர வைக்கும் குறிப்பு முறை வெளியீட்டு நெறிகளாகும்." என்பர் டாக்டர் அர. சிங்கார வடிவேலன். (சங்க இலக்கியத்தில் உவமைகள் பக்கம். 128)

### உள்ளுறையும் இறைச்சியும் இலக்கியங்களில் இடம்பெறுவதன் நோக்கம்

உள்ளுறையும்இறைச்சியும் பழந்தமிழர் இயற்கையைப் புரிந்துகொண்ட முறையையும் பயன்கொண்ட முறையையும் காட்டுவன ஆகும். இயற்கையை ஆழ்ந்து நோக்கிப் புரிந்து கொண்டு அதனைத் தம் வாழ்வின் துணக்கருவியாகப்பயன் படுத்தியதமிழர் சால்பைச் சங்க இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன. (டாக்டர். அர. சிங்கார வடிவேலன்.. சங்க இலக்கியத்தில் உவமைகள். பக்கம். 130).

தன் வாழ்வில் இயற்கையைப் பயன்கொண்ட தமிழினம் இலக்கியத்திலும் அதனைப் பயன்படுத்தியது. இயற்கையைப் பின்னிலமாக அமைத்து வாழ்க்கை நிகழ்ச்சிகளைச் சங்கப் புலவர்கள் புனைந்தனர். பாடும் இயற்கையை ஒரு பயன்கருதியே பாடவேண்டும் என்ற விதியை இலக்கியங்களில் யாண்டும் மறவாது பின்பற்றினர். அத்தகைய நெறிகளுள் ஒன்றே உள்ளுறை இறைச்சிகளை அமைக்கும் முறையுமாம். எனவே, உள்ளறை இறைச்சிகளின் நோக்கம், இயற்கை வாயிலாக வாழ்வைக்

Koviloor Digital Library



செம்மைப்படுத்துவதே என்பது அறியத்தக்கது- (அதே நூல் பக்கம்130-131).

ஒப்பிலக்கிய நோக்கில் படிமம்

ஒப்பிலக்கிய அறிஞர்கள் படிமம் (SYMBOL) என்று கூறுவதனைக் காண்போம்.

படிமம் என்பது குறியீடு கருத்துக் கூட்டை, இணைவைக் குறிக்கும். காலப்போக்கில் அதன் ஒரு பகுதியைக் கண்ட அளவில் முழுவதையும் குறிக்குமளவும், ஒன்று மற்றொன்றிற்குக் குறியீடாவதே படிமமாம். இலக்கியத்தில் பருப்பொருளாய்க் காட்டப்பட்ட ஒன்று, கருத்துத் தொடர்பு காரணமாக, கூடுதலாக அல்லது பிறிதொன்றாக நுண்பொருள் ஒன்றைக் குறிப்பதே படிமம் ஆகும். அஃதாவது பருப்பொருள் நுண்பொருளைக் காட்ட இது முயல்கிறது. உவமை போல வருவது கொண்டு, பொருளை அது விளக்கும். எடுத்துக்காட்டாக, மாடிப்படி ஏறுதல்' என்பது தன்னைத்தானே ஒருவன் உயர்த்திககொள்வதைக் குறிக்கக்கூடும்.

(ஒப்பிலக்கிய அறிமுகம் -தமிழண்ணல்- பக். 1 73-174)

"படிமப்படைப்பு (SYMBOLISM) என்பது இலக்கியம் தோன்றிய நாள் தொட்டு வளர்ந்து வரும் பண்பேயாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் அது பிரெஞ்சு நாட்டில் கால் கொண்டது. ஆங்கிலக் கவிஞர் ஈட்சு (W.B.YEATS) இப்படைப்பில் பேருக்கம் செலுத்தித் தம் கவிதைகள் அனைத்திலுமே படிமங்களை நிரப்பினார். நாற்பெரும் பூதங்களையும் அவர் படிமங்களாக ஆண்டார். நெருப்பு அன்பின் சின்னமாகவும், வசந்தத்தின் குறியீடாகவும் தூய்மையின் உருவமாகவும் மனித ஆன்மாவாகவும் அவர் கவிதைகளில் படிமப் பொருளில் ஆளப்பட்டுள்ளது. நீர், அவரது பாடல்களில் குருதி, பால் உணர்வு, புலன் உணர்வு, அமைதி, கண்ணீர், துன்பம், இறப்புப் போன்ற பொருள் தரும் படிமமாக ஆளப்பட்டது. பூமியை இருள், உறக்கம், மனித உடல் ஆகியவற்றின் குறியீடுகளாக்கியும் காற்றை உயிர்ப்பு, வாழ்வு, அறிவு, ஒளி, நம்பிக்கை போன்றவற்றின் சின்னங்களாக்கியும் அவர் ஆண்டுள்ள இடங்கள் பலவாகும். இதைப்போல அவர் வெவ்வேறு வண்ணங்கள், வேறுபட்ட பல கருத்துக்களைப் படிமங்களாக் கியிருப்பதை அறிஞர்கள் எடுத்துக்காட்டி மகிழ்கின்றனர்.

தமிழில் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்பன ஐந்து நிலம் சார்ந்த வெவ்வேறு கற்பனை மரபுகளுக்கு அடிப்படையாகியுள்ளன. முல்லைக்கு கற்புப்பொருள் வந்ததன்

Koviloor Digital Library


சிறப்பை அறிவார்க்கு இதிலுள்ள சீர்மை புலனாகிறது. (அதே நூல் ப. 176)

திருக்குர் ஆன் கூறும் இலக்கிய நெறி

மேலே கூறியபடி உள்ளுறை, இறைச்சி, படிமம் ஆகிவற்றின் பண்புகளைத் தன்னகத்தே கொண்டு திருக்குர்ஆனும் இயற்கைப் பொருள்களைப் பருப்பொருளாகக் காட்டி, நுண்பொருளைப் பெறவைக்கும் இலக்கிய நெறியைக் கொண்டுள்ளது. அதனைக் காண்போம். அதில், சூரியன், சந்திரன், பகல், இரவு, வானம், பூமி ஆகியவை சான்றுகளாகக் கூறப்படுகின்றன. அடுத்து, மனிதனது நல்ல ஆன்மா சான்றாகக் காட்டப்படுகிறது. பிறகு தீய ஆன்மாபற்றிக் கூறப்பட்டு ஸமூது சமுதாயம் பற்றிய ஒரு வரலாற்றுச் சம்பவம் கூறப்படுகிறது. அந்தச் சமுதாய மக்கள் ஒரு நல்ல மனிதரை மறுத்து அவர் பயணம் செய்யும் ஒட்டகத்தை மேய விடாமலும், நீர் அருந்த விடாமலும் தடுத்து, அதன் கால்களைத் துண்டித்தனர். மனித நேயமின்றி, வரம்பு கடந்து தீய வழியில் வாழ்ந்த அம்மக்கள் இறைவனால் அழிக்கப்பட்டனர். என்று திருக்குர்ஆன் கூறுகிறது.

திருகுர் ஆன் 91வது அதிகாரம் "அஷ்ஷம்ஸ்"

1. அளவற்ற அருளாளனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாகிய இறைவனின் பெயரால்
2. சூரியனையும் அதன் ஒளியையும் சான்றாகக் காட்டுகிறேன்.
3. அதனைப் பின் தொடர்ந்து வரும் சந்திரனையும்.
4. அதனை வெளிப்படுத்தும் பகலையும்.
5. அதனைத் திரையிடும் இரவையும்.
6. வானத்தையும் அது உருவாக்கப்பட்டிருப்பதையும்.
7. பூமியையும் அது விரிவுபடுத்தப்பட்டிருப்பதையும்.
8. மனித ஆன்மாவையும், அது குறையின்றி முழுமையாக்கப்பட்டிருப் பதையும் சான்றாகக் காட்டுகிறேன்.
9. அவன் இறைவன் அதற்கு எது தவறு என்பதையும் எது சரி என்பதையும் தெளிவாகத் தெரிவித்து விட்டான்.
10. எனவே அதனை ஆன்மா தூய்மைப்படுத்துபவன் நிச்சயமாக வெற்றிபெறுகின்றான்.
11. அதனைத்தவற்றில் அமுக்கிவிடுபவன், முற்றிலும் அழிந்துவிடுகிறான்.
12. ஸமூது இனத்தினர் தங்களுடைய வரம்பு மீறுதலின் காரணமாக இறைத்தூதரைப் பொய்ப்படுத்தினர்.
13. அவர்களுள் மகப்பேறிழந்த ஒருவன் அத்தூதரை எதிர்க்க எழுந்த போது.
14. இறைவனின் தூதர் (ஸாலிவஹ்ற நபி தம் இனத்திடம்) நீங்கள் இறைவனின், பெண் ஒட்டகத்தைத் தனியாக விட்டுவிடுங்கள்

Koviloor Digital Library



அது தண்ணீர் அருந்துவதற்கு அனுமதி அளியுங்கள் என்று அவர்களிடம் கூறினார்.

15. ஆனால், அவர்கள் அவரைப் பொய்யாக்கி, அதன் காலைத் துண்டித்து விட்டனர். எனவே, அவர்களின் இறைவன், அவர்களது பாவத்தின் காரணமாக அவர்களை முற்றாக அழித்து, அவர்களைத் தரைமட்டமாக்கி விட்டான்.

16. அவன் அவர்களின் முடிவுக்காகக் கவலைப்படவில்லை.

திருக்குர் ஆனின் அஷ்ஷம்ஸ்எனும் இந்த அதிகாரத்தில் இறைச்சிப் பொருள் பொதிந்து கிடப்பதை நாம் உணரலாம். இதனைக் கீழே விளக்கியுள்ளேன்.

ஒருவன் இறைவன். அவனுக்குத் தந்த கல்வி, அறிவு, இறைஞானம், செல்வம், வசதிவாய்ப்பு, போன்றவற்றிலிருந்து ஏனைய மக்களுக்கும் பிற உயிர்களுக்கும்அவரவர்களின் நிலைக்கு ஏற்றவாறு உரிய பங்கினைக் கொடுக்கிறான். சூரியனைப் போல் தன் ஒளியை முழு மனிதகுலத்தின் மீதும் பிற உயிரினங்கள் பயிரினங்கள் மீது பரவச் செய்கிறான். இவைனிடமிருந்து அருட்கொடைகளையும் பெரும் பேறுகளையும் பெற்று சந்திரனைப் போல் பிறருக்குக் கொடுத்து உதவுகிறான். அவன் பகலைப் போல் ஒளி தந்து நன்மை நேர்மை ஆகியவற்றின் வழிகளை மக்களுக்குக் காண்பித்துக் கொடுக்கிறான். அவன் இரவைப் போல் பலவீனர்களடைய குறைகளையும் இயலாமைகளையும் மறைப்பதுடன் உழைத்துக் களைத்துச் சோர்ந்தவர்களுக்கு ஒய்வும் சுகமும், ,அமைதியும், அளிக்கிறான். துன்பங்களிலும் துயரங்களிலும் சிக்கித் தவிப்போர்க்கு வானத்தைப்போல் தன் நிழலின் கீழ் அடைக்கலம் தந்து உரிய காலத்தில் அருளாகிய மழையைப் பொழிகிறான். பூமியைப் போல் மிகவும் பணிவுடன் மற்றவர்களின் சுகத்திற்காகத் தன்னை ஒரு தளமாக்கி, தாழ்மைக் குணத்தைக் கைக்கொண்டு தன் பாதுகாப்பில் அவர்களுக்கு இடமளித்து பல்வேறு கனிகளையும் காய்களையும் மற்றும் உணவுகளையும் கொடுக்கின்றான்.

இவ்வாறு ஒரு மனிதன், இறைவன் தனக்குத் தந்த எல்லா அருள்களையும் அவனது படைப்பினத்தின் நன்மைக்காக, சூரியன், சந்திரன்,பகல், இரவு வானம், பூமி ஆகியவை போன்ற பயன்பட வாழ்கிறான்.

இவ்வாறு யார் தன் ஆன்மாவில் சூரியன் சந்திரன், பகல், இரவு, வானம், பூமி ஆகியவற்றின் இயல்புகளைக் கொண்டு வாழ்கிறாரோ அவர் தூயவர், அவர் வெற்றி அடைந்தார்விட்டார் எவர் இத்தகுபண்புகளைத் தன் ஆத்மாவில் கொள்ளவில்லையோ, அவர் இழிந்தவர் அழிந்தவர்.

Koviloor Digital Library



தூய ஆன்மா என்பது இறைவனது ஒட்டகம் ஆகும். இறைவன் பயணம் செய்யும் ஒட்டகம் போன்றது. அதாவது நல்ல பண்புகள் கொண்ட தூய உள்ளத்தில் இறைவன் குடியிருக்கிறான்.

தீய இயல்புகள் கொண்ட உள்ளம் என்பது இறைஞானமும்,இறையன்பும் இல்லாத, ஸமூது சமுதாய மக்களால் உணவு நீரும் உண்ணவிடாமல் கால் துண்டிக்கப்பட்ட ஒட்டகம் போன்றது ஸமூது சமுதாயம் அழிந்தது போன்று அத்தகு தீய இல்பு கொண்டவரும் அழிவது உறுதி.

திருக்குர் ஆன் 23–1–15 வசனங்களில்

1. அளவற்ற அருளாளனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாகிய இறைவனின்
2. நம்பிக்கையாளர்கள் நிச்சயமாக வெற்றி பெற்றனர்.
3. அவர்கள் தங்கள் தொழுகைகளின் பணிவுடன் உள்ளனர்.
4. மேலும் அவர்கள் வீணானவற்றிலிருந்து விலகியிருக்கின்றனர்.
5. மேலும் அவர்கள் ஸகாத்தை (வருமானம்,சொத்து வரியைத் தவறாமல்) செலுத்துகின்றனர்.
6. மேலும் அவர்கள் தங்கள் கற்பைக் காத்துக் கொள்கின்றனர்.
7 மேலும் அவர்கள் தம்மிடம் நம்பி ஒப்படைக்கப்பட்ட பொருள்களையும் தம் உடன்படிக்கைகளையும் பேணிக் காப்பார்கள்.
8. மேலும் அவர்கள் தம் தொகுகை நிறைவேற்றுவதைத் தளராமல் காக்கின்றனர்.
9. இவர்களே அந்த உண்மையான வாரிசுகள்.
10. இவர்களே சுவர்க்கத்தை உரிமையாக்கிக் கொள்பவர்கள், இவர்கள் அதில் என்றென்றும் வாழ்வார்கள்
11. நிச்சயமமாக நாம் மனிதனைக் களிமண் சத்திலிருந்து படைத்தோம்.
12. பின்னர் அவனை ஒரு பாதுகாப்பான தங்குமிடத்தில் விந்தாக வைத்தோம்.
13. இதன் பிறகு அந்த விந்தை ஒட்டுகின்ற ஒரு பொருளாக உருவாக்கினோம். அடுத்து அந்த ஒட்டுகிற பொருளைச் சதைக்கட்டியாக உருவாக்கினோம். பின்னர் அந்தச் சதைக்கட்டியை எலும்புகளாக உருவாக்கினோம். பிறகு அந்த எலும்புகளுக்குச் சதையை அணிவித்தோம். பின்னர் அதனை மற்றொரு படைப்பாக வளர்ச்சியடையச் செய்தோம்.

மேலே உள்ள வசனங்களில் ஒரு நம்பிக்கையாளரின் ஆறு பண்புகள் கூறப்பட்டுள்ளன. அவை.

1 தொழுகையில் பணிவுடன் ஈடுபடுதல்
2. வீண்பேச்சு, செயல்களிலிருந்து விலகிவிடுதல்.

Koviloor Digital Library



3. ஸகாத் எனும் வருமானவரி, சொத்துவரியை மார்க்கத்திற்குச் செலுத்துதல்,
4. கற்பொழுக்கம் உடையவராக விளங்குதல்.
5. தம்மிடம் நம்பி ஒப்படைக்கப்பட்ட பொருள்களையும் உடன்படிக்கைகளையும் பாதுகாத்தல்.
6. தொழுகைகளைத் தளராமல் நிறைவேற்றல்.

இந்த ஆறு பண்புகளையும் கொண்டவர்களே நம்பிக்கையாளர்களின் வாரிசுகள் என்றும் சுவர்க்கத்திற்கு உரியவர்கள் என்றும் கூறப்படுகிறது.

பின்னர் தொடர்ந்து மனிதன் மண்ணின் இயல்பைக் கொண்டவன் என்று கூறி கருவில் மனிதனின் படிப்படியான வளர்ச்சிகளை ஆறு நிலைகளாகக் கூறுகிறது. அவை,

1. விந்தின் நிலை
2. ஒட்டுகின்ற பொருள்
3. பின்னர் ஒரு தசைக்கட்டியாக வளர்தல்
4. பின்னர் எலும்புகளாக உருவாதல்
5. எலும்புகளும் தசையை அணிவித்தல்
6. பின்னர் மனிதக் குழந்தையாக மாறுதல் ஆகும்.

நாம் நுட்பமாகச் சிந்திக்கும்போது ஒரு மனிதன் நல்ல நம்பிக்கையாளனாக வளர்ச்சி பெறும். ஆறு பண்புகளுக்கும், கருவில் உருவாகும் மனிதக் குழந்தையின் படிப்படியான ஆறு வளர்ச்சி நிலைகளுக்கும் இடையே வியக்கத்தக்க தொடர்பு இருப்பதைக் காணமுடிகிறது.

இவ்வாறு பருப்பொருளைக் காட்டி நுண்பொருளை விளக்கும் அழகைக் காணமுடிகிறது. தொல்காப்பியர் கூறும் இறைச்சிப்பண்பு இதில் இடம் பெற்று இருப்பதைக் காணமுடிகிறது.

### இறைவனுக்கு உவமை இல்லை

தெய்வத்தை வைத்து உள்ளுறை அமைவது இல்லை என்பர் ஆசிரியர் தொல்காப்பியனார். (தொல். அகத்திணையியல் சூ.47) புள்ளும் விலங்கும் செடி கொடிகளும் உவமைக்கு இடமாதல் போல தெய்வங்கள் உவமைக்கு இடனாக அமைவதில்லை. தெய்வத்தின்பால் அவர்கள் கொண்டிருந்த மதிப்பும் உயர்வும் இதனால் புலப்படுகின்றன. உவமையில் வைத்துப் பேசக்கூடிய எளிய பொருள்களாக அவர்கள் தெய்வத்தைக் கருதவில்லை என்பது தெரிகிறது. தெய்வத்தைப் பற்றிய செய்திகளைக் கொண்டு பெறப்படும் உவமச் செய்திகளை உள்ளுறை உவமமாகக் கொண்டிலர் என்பதும், அவற்றை இறைச்சியாகக் கொண்டனர் என்பதும் நற்றிணை உரையாசிரியர் தரும் குறிப்பால் விளங்குகிறது

Koviloor Digital Library



அதனால் உள்ளுறையினின்று வழுவி வரும் உவமப் பகுதிகளெல்லாம் இறைச்சியாகக் கொள்ளப்பட்டன என்பதும் தெரிகிறது. நற்றிணை உரையாசிரியர் தரும் குறிப்புகள் பின் வருமாறு.

சூரரமகள் எனத் தெய்வத்தை இடையிட்டு
உரைத்தமையின் உள்ளுறை அன்மை உணர்க'
(சங்க இலக்கியத்தில் உவமைகள் ப. 240 நற்றிணை 4–1–5உரை)

இதுபோன்றே திருக்குர்ஆனும் பல இடங்களில் கூறுகிறது.

"இறைவனுக்கு உவமை கூறாதீர்கள்" (16;74)
"அவனைப் போன்றது எதுவும் இல்லை" (42;11)
"அவனுக்கு இணை எதுவும் இல்லை" (112;4)

மேலே உள்ள வசனங்கள்இறைவனுக்கு உவமை கூறக்கூடாது என்ற சொற்பொருளைத் தருகிறது. ஆனால் அது தரும்பொருள், ஆழமானது, அதாவது இறைவன் படைத்ததைப் போன்று ஒரு மனிதர் படைத்தார் என்றோ, இறைவன் உயிர் கொடுப்பதைப் போன்று ஒருவர் உயிர் கொடுக்கிறார் என்றோ, இறைவனுக்கு மட்டும் உரிய பண்புகளும் செயல்களும் மற்றவரிடத்தும் உள்ளன என்று கூறுதலே இறைவனுக்கு உவமை கூறுதல் ஆகும். அவ்வாறு இறைவனுக்கு உவமையாக யாரையும் காட்டக்கூடாது என்பதே அதன் பொருளாகும்.

இவ்வாறு திருக்குர்ஆன் இறைவனின் இணையில்லாத, நிகரற்ற, ஈடுஇணையற்ற, தனித்தன்மையாகிய ஏகத்துவத்தைப் போற்றிப் பாதுகாக்கிறது.

**திருக்குர்ஆனில் மெய்ப்பாடுகள்.**

தொல்காப்பியர் கூறும் மெய்ப்பாடுகளுக்குத் திருக்குர்ஆனில் எடுத்துக்காட்டுகள் உள்ளன. எண் வகை மெய்ப்பாடுகளுள் நகையென்பது எள்ளல், இளமை, பேதைமை, மடன் என்ற இந்நான்கும் பற்றி உண்டாகும் என்பர் தொல்காப்பியர். இவற்றுள் எள்ளல் பொருளாக நகை பிறந்ததனைத் திருக்குர்ஆனில் காண்போம். (27;18-19) சுலைமான் நபியிடம் ஜின்கள், மனிதர்கள், பறவைகள் ஆகியவற்றிலிருந்து, அவரது படைகள் ஒன்று திரட்டப்பட்டன. அவை (வெவ்வேறு) வகுப்புகளாக அமைந்திருந்தன.

இறுதியாக அவர்கள் நம்ல் பள்ளத்தாக்கிற்கு வந்த போது, நம்ல் சமுதாயத்திலிருந்து ஒருவர் நம்ல் சமுதாயமே! சுலைமானும் அவரது படைகளும் (உங்கள் நிலைமை) அறியாமல் உங்களை நசுக்கி விடாதிருப்பதற்காக நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் சென்று விடுங்கள் என்றார். அவர் கூறியதைக் கேட்டு (சுலைமான்) புன்னகை செய்தார்.

Koviloor Digital Library



இராணுவம் ஒன்று மக்கள் வாழும்பகுதியைக் கடந்து சென்றால், அவர்கள் ஆடு, மாடு கோழி போன்றவற்றையும் பெண்களையும் பிடித்துச் சென்று விடுவர். இது போன்று பிற தீய விளைவுகளும் நேரலாம் என்று அஞ்சி அச்சமுதாயத் தலைவர் மக்களிடம் கூறியதைக் கேட்டு சுலைமான் நபி நகைக்கிறார். காரணம், பிற மன்னர்களையும் அவர்களது இராணுவத்தையும் போன்று நபியாகிய தன்னையும், கட்டுப்பாடும் ஒழுக்கமும் மிக்க தன்படைகளையும் அந்த சமுதாயத் தலைவர் மதித்து விட்டதனைக் கண்டு எள்ளல் பொருளில் நகைக்கிறார் எள்ளல் என்றால் இகழ்ச்சி.

மேலும், அந்த சமுதாயத் தலைவரின், பேதமையும், மடனும் காரணங்களாகவும் சுலைமான் நபியிடம் எள்ளல் தோன்றியிருக்கலாம்.

நம்ல் சமுதாயத் தலைவரிடம் அச்சம் எனும் மெய்ப்பாடு தோன்றியதாகக் கொண்டால்.

அணங்கே விலங்கே கள்வர்தம் இறைஎனப்
பிணங்கல் சாலா அச்சம் நான்கே!

எனும் நூற்பாவின் படி அரசனையும் அவன் படைகளையும் கண்டு ஏதும் துன்பம் நேருமோ என்ற அஞ்சி அவ்வாறு கூறியிருக்கலாம்.

அழுகை

இம்மெய்ப்பாடு இழிவு, இழவு, தளர்வு, வறுமை என்னும் நான்கு பொருள்கள் காரணமாகத் தோன்றும் என்பர் தொல்காப்பியனார். இதுபற்றித் திருக்குர்ஆனில் 19;24 வசனம் கூறுவதாவது.

பின்னர் (மரியம், மேரி) பிரசவ வலி அவரை ஒரு பேரீத்த மரத்தடியில் கொண்டு போய்ச் சேர்த்தது. அந்தோ! நான் இதற்கு முன்னரே மரணமடைந்து, முற்றிலும் மறக்கப்பட்டவளாக ஆகியிருக்கக் கூடாதா என்று அவர் கூறினார்.

பிரசவ வலியின் காரணமாக மரியம் அவர்களுக்கு அழுகை ஏற்பட்டு, தான் மரணம் அடைந்திருக்கக் கூடாதா என்று கூறினாலும், அதன் பின்னணியில், அழுகை எனும் மெய்ப்பாட்டின் பொருள்களாகிய, இழிவு, இழவு தளர்வு போன்றவை அடங்கியுள்ளன.

கன்னிப்பெண் ஒருத்தி கருக்கொண்டு பிள்ளையைப் பெற்றதால் பிறர் தன்னை எளியளாக்கி இகழ்தலையும், சமுதாயத்தில் தன்னுடைய நற்பெயரை இழந்து விட்டதையும், முன்னைய நிலையிலிருந்து தான் தாழ்ந்து விட்டதையும் (தளர்வு) எண்ணி மரியம் அழுதார்கள் எனலாம்.

Koviloor Digital Library



மருட்கை

இம்மெய்ப்பாடு புதுமை, பெருமை, சிறுமை ஆக்கம் என்னும் காரணங்களால் தோன்றும். மருட்கை என்பது வியப்பு.

புதுமையாவது எவ்விடத்திலும் எக்காலத்திலும் காணப்படாததோர் பொருளைக் கண்டவிடத்து வியத்தல்.

பெருமையாவது, இதுவரை காணாத பெரிய பொருளைக்கண்டு வியத்தல்.

சிறுமையாவது நுண்ணியபொருளைக் கொண்டு வியத்தல்.

ஆக்கம் என்பது ஒன்று தன்னளவின்றி யாதானும் ஓர்சார்பால் மிகப்பெரிதாயிருத்தல்.

வறியவன் பிறர் அறியாவகையில் பெருஞ்செல்வன் ஆதல் வியப்பைத்தரும்.

இம்மெய்பாடு திருக்குர்ஆனில் காணப்படுகிறது.

*(19;8-10) "சகரிய்யாவே! நாம் உமக்கு ஒரு மகனைக் குறித்து நற்செய்தியை வழங்குகின்றோம். அவர் பெயர் எஹ்யா ஆகும்".*

*அவர் கூறினார். என் இறைவா! என் மனைவி மலடியாகவும் நான் முதுமையின் இறுதி எல்லையை அடைந்தவனாகவும் இருக்கின்ற நிலையில் எனக்கு எவ்வாறு மகன் பிறப்பான்.*

*(வானவர்) கூறினார் அவ்வாறே நிகழும், உம் இறைவன் இது தனக்கு மிக எளிதானது என்றும்,நிச்சயமாக அவன் இதற்கு முன்னர் உம்மை, ஒன்றும் அற்ற நிலையிலிருந்து படைத்தேன் என்றும் கூறினான்" என்று வானவர் கூறினார்.*

இவ்வசனங்களில் புதுமை, ஆக்கம், சிறுமை, பெருமை ஆகிய காரணங்கள் காணப்படுகின்றன. சகரிய்யாவுக்கு நரையும் திரையும் தோன்றி, எலும்புகள் பலவீனம் அடைந்து, முதுமை முழுமை பெறும் நிலை. அவர் மனைவியோ மலடி. இவ்விருவருக்கும் குழந்தைப்பேறு என்பது புதுமையாவது.

ஒன்றும் அற்ற நிலையிலிருந்து மனிதனைப் படைத்தது ஆக்கம்.

குழந்தை ஒரு துளி விந்தில் தோன்றுதல் சிறுமை. குழந்தையாகப் பிறத்தல் பெருமை.

பன்னெடுங்காலம் கணவனும் மனைவியும் குழந்தைப்பேறு இல்லாதிருந்தது குழந்தைப்பேறு அடைதல் ஆக்கம் எனலாம்.

அச்சம்

அணங்கே விலங்கே கள்வர்தம் இறையெனப்
பிணங்கல் சாலா அச்சம் நான்கே என்பது.

தொல்காப்பியம் தெய்வமும் விலங்கும், கள்வரும் தம் அரசராயினரும் என நான்கு காரணங்களால் அச்சம் தோன்றும்.

திருக்குர்ஆனில் அச்சம் எனும் மெய்ப்பாடு தோன்றும் இடத்தைக் காண்போம். திருக்குர்ஆனில் 12 வது அத்தியாயம்

Koviloor Digital Library



"யூசுப்" ஆகும். அதில், 5வது வசனத்தில் யூசுப் தன் தந்தையிடம், "என் தந்தையே! நான் பதினொன்று நட்சத்திரங்களையும் சூரியனையும் சந்திரனையும் (கனவில்) கண்டேன். அவை எனக்குச் சிரம்பணிந்தன" என்று கூறினார்.

அவர் (தந்தை) கூறினார். "என்அன்பு மகனே! உன் கனவை உன் சகோதர்களிடம் தெரிவிக்க வேண்டாம். ஏனென்றால் அவர்கள் உமக்கு எதிராக ஏதெனும் சூழ்ச்சி செய்வார்கள்.

இந்நிகழ்ச்சி சகோதரர்களால் அச்சம் தோன்றியது எனலாம்.

14வது வசனத்தில் யூசுபின் 11 சகோதர்களும் யூசபை தம்முடன் காட்டுக்கு அனுப்புமாறு தந்தையிடம் கேட்கின்றனர். அதற்கு அவர் நீங்கள் அவரை அழைத்துச் செல்வது நிச்சயாக என்னைக் கவலைக்குள்ளாக்குகிறது. நீங்கள் அவரைக் குறித்து கவனமற்றவர்களாயிருக்கும் நிலையில் ஏதாவது ஒரு ஓநாய் அவரைத் தின்றுவிடக்கூடாதே என்று நான் அஞ்சுகிறேன் என்றார்.

இவ்வசனத்தில் விலங்கின் காரணமாக அச்சம் ஏற்படுகிறது.

**24 வது வசனம்**

எவருடைய வீட்டில் அவர் (யூசுப்) பணியாளராக இருந்தாரோ அவள் அவரை அவரது விருப்பத்திற்கு மாற்றமான செயலில் ஈடுபடுத்த விரும்பினாள். அவள் எல்லாக் கதவுகளையும் அடைத்து விட்டு என்னிடம் வாரும் என்றாள் அவர், அல்லாஹ்விடம் பாதுகாப்பு தேடுகிறேன் என்றார்.

இதில் இறைவன் காரணமாக அச்சம் ஏற்படுகிறது.

**பெருமிதம்**

ஒருவன் எந்தத் துறையில் பயிற்சி பெற்றவனாயினும் அதில் வல்லவனாய் அத்துறையிலுள்ள பிறரைக் காட்டிலும் மேம்பட்டவனாய் விளங்குங்கால் பிறக்கும் மகிழ்ச்சியே பெருமிதமாகும். பெருமிதம் வெறுப்புக்குரிய செருக்கன்று. வீறுதரும் செருக்காரும் என்பர். நாவலர். ச.சோமசுந்தர பாரதியார். இம்மெய்ப்பாடு கல்வி, தறுகண், புகழ், கொடை என்னும் நான்கு காரணங்களால் தோன்றும்.

**கல்வியினால் தோன்றும் பெருமிதம்**

இதனைப் பற்றித் திருக்குர்ஆன் 18வது அதிகாரம் 66-67 வசனங்களில் கூறப்பட்டுள்ளது. அப்போது அவர்கள் (மூஸாவும் வாலிபரும்) எம் அடியார்களுள் மகத்தான ஓர் அடியாரைக் கண்டனர். நாம் அவர்க்கு எம்மிடமிருந்து அருளை வழங்கியிருந்தோம். நாம் அவர்க்கு எம்மிடமிருந்து கல்வி ஞானத்தை அளித்திருந்தோம்.

மூஸா நபி அவரிடம் தங்களுக்குக் கற்றுக் கொடுக்கப்பட நேர்வழியிலிருந்து எனக்கும் நீங்கள் கற்றுக்கொடுப்பதற்காக நான் உங்களைப் பின்தொடர்ந்து வரலாமா என்றார்.

Koviloor Digital Library



அவர் என்னுடன் பொறுமையாக இருக்க உம்மால் ஒரு போதும் முடியாது என்று கூறினார்.

இதில் கல்வியினால் தோன்றும் பெருமிதத்தைக் காணலாம்.

புகழ்

இது பற்றித் திருக்குர்ஆன் 12;32 வசனத்தில் நாம் காண்கிறோம்.

யூசுபு நபியை அந்த வீட்டின் தலைவி தீய செயலுக்கு அழைத்த செய்தி ஊரில் பரவியது. பெண்கள் பலர் இது பற்றித் தமக்குள் பேசியதைக் கேள்விப்பட்ட அப்பெண் அவர்களை எல்லாம் விருந்துக்கு அழைத்து, விருந்தின் போது ஒவ்வொருத்திக்கும் (பழம், வெட்டும்) கத்தியையும் கொடுத்து யூசுபை அவர்கள் கண்முன் நடந்து செல்லுமாறு கூறுகிறாள்.

அவர்கள் அவரைக் கண்டபோது பெரும் மகிமைக்குரிய மனிதராகவே அவரை மதித்தனர். (அவரைக் கண்களால் கண்ட போது) அவர்கள் தம் கைகளை அறுத்துக் கொண்டனர். இவர் தீய செயலைச் செய்ய இறைவனுக்கு அஞ்சுகிறார். இவர் மனிதர் அல்லர். இவர் கண்ணியமிகு ஒரு வானவர் என்று அந்நகரப் பெண்கள் கூறினர்.

இது நகரப் பெண்டிர் யூசுப்பைப் புகழ்ந்ததின் காரணமாக ஏற்பட்ட பெருமிதம் எனலாம்.

தறுகண்

தறுகண் என்றால் அஞ்சாமை. இது பற்றி குர்ஆனில் (20;46-48) காணப்படுகிறது.இறைத்தூதர்களாகிய மூஸாநபியையும், ஹரூன் நபியையும் இறைவன் எகிப்தியப் பேரரசனிடம்சென்று இஸ்ராயீல் மக்களை விடுதலை செய்யும்படிக் கூறுங்கள் என்று அனுப்புகிறான்.

அவ்விருவரும் என் இறைவா! அவன் எங்களுக்கு மிக அதிகமாக அநீதியிழைத்து விடலாம் அல்லது அளவு கடந்து எங்களைக்கொடுமைப்படுத்தலாம் என்று நாங்கள்அஞ்சுகின்றோம். என்றனர். நீங்கள் இருவரும் அஞ்சவேண்டாம் நான் உங்களுடன் இருக்கிறேன் என்றுஇறைவன் கூற, அவ்விருவரும் அந்தக் கொடுங்கோல் அரசனிடம் அஞ்சாமல் சென்று நாங்கள்இருவரும் உன் இறைவனின் தூதர்கள். எனவே, நீ இஸ்ராயீல் மக்களை எங்களுடன் அனுப்பிவிடு" என்று கூறுகின்றனர்.

வெகுளி

உறுப்பறை குடிகோள் அலை கொலை என்ற வெறுப்ப வந்த வெகுளி நான்கே, என்பதில் கூறப்பட்ட நான்கு காரணங்களால் வெகுளி என்னும் மெய்ப்பாடு தோன்றும். உறுப்பறை என்பது

Koviloor Digital Library



கை, கால், கண் முதலிய உறுப்புகளைக் குறைத்தல். குடிகோள் என்பது மனைவி மக்களுக்குக் கேடு சூழ்தல். அலை என்பது வைதும் புடைத்தும் அலைத்தல். கொலை என்பது அறிவு, புகழ் முதலியவற்றையும் உயிர்களையும் கொலை செய்ய ஒருப்படுதல்.

இந்த வெகுளி என்னும் மெய்ப்பாட்டைப் பற்றித்திருக்குர் ஆனில் கீழ்வரும் வசனங்களில் நாம் காண்கிறோம். (20;72).

மூஸா நபிக்கும், எகிப்தியக் கொடுங்கோல் அரசன் பிர்அவுனின் மாயவித்தைக்காரர்களுக்கும் இடையே நடந்த போட்டியில் மூஸா வென்று விடுகிறார். இதைக்கண்ட அரசனின் மந்திரவாதிகள் இறைவன் மீது, மூஸாவை நபி என்னும் நம்பிக்கை கொள்கின்றனர். இதைக்கண்ட பிர்அவுன். நான் உங்களுக்கு அனுமதியளிக்கும் முன்னரே நீங்கள் அவர் மீது நம்பிக்கை கொண்டு விட்டீர்களா? நிச்சயமாக, அவர்தான், உங்களுக்கு இம்மாய வித்தையைக் கற்றுத்தந்த உங்கள் தலைவர் (என்று தெரிந்துவிட்டது) ஆகவே நான் உங்கள் கைகளையும் உங்கள் கால்களையும் (நீங்கள் எனக்கு) மாறு செய்ததினால் துண்டித்து உங்களைப் பேரீச்ச மரத்தின் அடிப்பகுதியில் பிணைத்துச் சிலுவை! தண்டனை அளிப்பேன் என்று கூறுகிறான்.

இவ்வசனத்தில் எகிப்திய மன்னன், மந்திரவாதிகளுக்கு கை, கால்களை வெட்டி சிலுவைத் தண்டனை கொடுக்கிறான். எனவே உறுப்பறை, கொலை ஆகிய காரணங்களால் வெகுளி எனும் மெய்ப்பாடு தோன்றுகிறது.

*திருக்குர்ஆன் 2.50 வசனத்தில்*

உங்கள் ஆண்மக்களைக் கொன்றும், பெண் மக்களை உயிருடன் (வாழ) விட்டும் உங்களுக்குக் கொடிய துன்பத்தைக் கொடுத்துவந்த பிர் அவுனின் சமுதாயத்திடமிருந்து நாம் உங்களை (இஸ்வவேலர்களை) விடுவித்ததை (நினைவு கூர்க).

இதில், ஆண் மக்களைக் கொல்வதனால் கொலை காரணமாகவும், பெண்மக்களை உயிருடன் விட்டு பலவந்தம் செய்து பாலியல் கொடுமைக்கு ஆளாக்கியதனால், அலையின் காரணமாகவும் வெகுளி தோன்றியது காண்க.

**உவகை**

இம்மெய்ப்பாடு செல்வ நுகர்ச்சியாலும் ஐம்புலன்களால் நுகர்தலாலும், மகளிரோடு மகிழ்தலாலும், சோலையும் ஆறும் புகுந்துவிளையாடும் விளையாட்டினாலும் தோன்றும். உவகை என்பது மகிழ்ச்சியாகும். செல்வம் புலனே புணர்வு விளையாட்டெனா அல்லல் நீத்த உவகை நான்கே.

Koviloor Digital Library



இது பற்றித்திருக்குர்ஆன் கூறுவதைக் காண்போம். (36;56–59)

"நிச்சயமாக அந்நாளில் சுவர்க்கத்திற்குரியவர்கள், (இன்பத்தில்) மூழ்கி மகிழ்வார்கள். அவர்களும் அவர்களின் இணைகளும் (சுவர்க்க) நிழலில், மஞ்சங்களில் சாய்ந்து அமர்ந்திருப்பார்கள்.

அதில் அவர்களுக்குப் பழங்கள் உண்டு. அவர்கள் கேட்பதெல்லாம் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

மேலும், மேலும்கருணைகாட்டும் இறைவனிடமிருந்து வாழ்த்தாக அவர்களுக்குச் சாந்தி சாமாதானம் கூறப்படும்.

மேலே உள்ள வசனத்தில் சுவர்க்கத்தில் வாழ்பவர்களுக்கு கேட்பதெல்லாம் கிடைக்கும் என்பதால், செல்வம், புலன், விளையாட்டு சம்பந்தமாக அனைத்தையும் அவர்களும் அவர்களது இணைகளும் துய்த்து இன்புறுவர் எனத் தெரிகிறது.

நிறைவுரை

தொல்காப்பியத்தையும் திருக்குர்ஆனையும் ஒப்புநோக்கி ஆய்ந்தால் எண்ணிலடங்காக் கருத்துக்களைக் கண்டறியலாம். மேலே காட்டப்பட்டவை சில துளிகளே. காலம், இடம், ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இத்துடன் நிறைவு செய்கிறேன்.

Koviloor Digital Library

## 15. தொல்காப்பியர் உள்ளம்

ஆ. முத்துராமலிங்கம்
தச்சநல்லூர்.

### தமிழனின் காலக் கண்ணாடி

தமிழில் கிடைத்துள்ள தொன்மையான முதனூல் தொல்காப்பியம். முதன்மையான இலக்கணநூல் வடவேங்கடம் தென்குமரியிடையே உள்ள தமிழ் கூறும் நல்லுலகத்தின் உலக வழக்கும், செய்யுள் வழக்கும் பற்றிய ஒப்பற்ற காலக்கண்ணாடி இந்நூல். குறையிலா நிறைவு, கொழித்துச் செழிக்கும் செறிவு, குலுங்கித் ததும்பும் வளமை, கொள்கையை வரையறுக்கும் வரம்புடைமை, கோட்பாட்டினை விளக்கும் வனப்பு உலகப் பேரிலக்கியமாக ஓர் இலக்கண நூல் விளங்குவது வியப்பினும் வியப்பே. கழிந்தகாலத்தையே கடந்தநிலை,நிகழ்காலத்தே கனிந்த நிலை எதிர்காலத்தே கவர்ந்தநிலை இந்நூலின் சிறப்பாகும்.

எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்றும் மூன்று பெரும் பிரிவுகள். ஒவ்வோரதிகாரமும் ஒன்பது ஒன்பது இயல்களாகப்பகுக்கப்பட்ட 1610 நூற்பாக்கள்.

எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று இலக்கணமாகவும், யாப்புடன்நான்காகவும் அணியுடன் ஐந்தாகவும் தமிழிலக்கணம் வளர்ந்தமையை இந்நூலில் காணலாம்.

என்ப-என்மனார் புலவர்- மொழிப-யாப்பென மொழிப யாப்பறிபுலவர் என என்ப, என்மனார், புலமையோர், புலவர், புலவராறு, மொழிப என இவர்தம் முன்னோரை 372 இடங்களில் குறிப்பிடுகிறார்.

நிலந்தருதிருவின் பாண்டியன் அவையத்தில் பேரறிஞராகிய அதங்கோட்டாசான் முன்னிலையில் அரங்கேற்றப் பட்ட தொல்காப்பியம் உலகில் வேறு எம்மொழியிலும் காணப்பெறாத அகம், புறம் என்று பொருளதிகாரத்தை எழுதியதன் மூலம் தமிழனின் என்றுமுள தென்தமிழின் பெருமையை முழக்கும் முரசாகத்திகழ்கிறது.

Koviloor Digital Library



ஒலிக்கணங்களை நுணுகி ஆய்ந்து இன்ன ஒலிக்குப் பின் இன்ன ஒலிதான் வரும் என்ற மரபுகளை அறிந்து இலக்கணம் எழுதியுள்ளார்.

மெய்ப்பாடு, நோக்கு, முன்னம் என வருவனவும் தமிழுக்கேயுரிய உள்ளுறை இறைச்சி போன்ற நுட்பங்களையும் எழுதிக் காட்டியுள்ளார் இவர். தமிழ் இலக்கிய இலக்கணம் என்ற இரண்டிற்கும் தலையூற்றாக அமைந்தது தொல்காப்பியரின் தொல்காப்பியமாகும்.

வடமொழி போன்ற பிற மொழிகளின் வல்லாண்மையின்றி தமிழே எல்லாம் என்றிருந்த காலத்தில் சிறப்புறத் தோன்றிய இந்நூல் சமணத்தைச் சார்ந்தது என்று ஒரு சாராரும், எவ்வகைக்கும் பொருந்தாத வேதநெறியினது என்று வலிந்து பிறிதொரு சாராரும் உரிமை கொண்டாடும் இந்நூலில் சிவணிய சைவ சமயக்கருத்துக்களை மிகுதியும் ஒத்திலங்குகிறது என்பது இக்கட்டுரையின் நோக்கமாகும். அவர் காலத்தேயிருந்த வழிபாட்டு மொழி நம் காலத்தில் தமிழாக வேண்டுமென்பது நம் உண்மையான பேராசையாகும்.

**பெயர் வந்தது எப்படி?**

வாய்ப்பியன் எழுதியது வாய்ப்பியம். பன்பாரனார் எழுதியது பனம்பாரனம். நற்றத்தன் எழுதியது நத்தத்தம். காக்கைப்பாடினியார் பாடியது காக்கைப் பாடினியம் அவிநயன் பாடியது அவிநயம் எனப்பட்டதைப் போல் தொல்காப்பியம் என்ற நூலை எழுதியவர் பெயர் தொல்காப்பியர் என ஆகி இருக்கவேண்டும். பாயிரத்தில் தொல்காப்பியன் எனத்தன் பெயர் தோற்றி' என்பதால் அறியலாம். தொல்காப்பியன் எழுதியதால் தொல்காப்பியம் என மறுதலையாகச் சிந்திப்பாருமுண்டு.

**மறைமலையார் பேசுகிறார்**

இப்போது கிடைத்திருக்கும் பழந்தமிழ் நூல்களுள் மிகப்பழமையது தொல்காப்பியம் ஒன்றேயாம் அதன்கட் கூறப்பட்ட பெயர்கள் சேயோன், மாயோன், கொற்றவை என்பவைகளாகும். சேயோன் என்பது சிவந்த நிறத்தினனாக முருகப்பிரானைக் குறிக்கின்றது. மாயோன் என்பது கரிய அல்லது நீலநிறத்தினான திருமாலைக் குறிக்கின்றது. கொற்றவை என்பது வெற்றி பெற்ற திரிபுரசுந்தரி அல்லது முப்புரம் எரிசெய்த அம்மையைக் குறிக்கின்றது. கொற்றவை என்னுஞ்சொல் வெற்றியைக் குறிக்கும். திரிபுரம் எரித்த அம்மையைக் கொற்றவை என்று தொல்காப்பியம் கூறினமையால் அவ்வம்மையை ஒருபாலுடையனாய்த் திரிபுரம் எரித்த அப்பனுக்குக் கொற்றன்' என்னும் அக்காலத்தே வழங்கப்பட்டமை உய்த்துணரப்படும்

Koviloor Digital Library



(தமிழ்மதம் என்னும் நூலின் பக்கம். 139) நிறைகலைப்புலமை மறைமலையடிகளார் கடவுள் வணக்கம், பாயிரமும் கூறுதல் தொல்காப்பியர் காலத்து வழக்கு இல்லை எனத் தெரிகின்றது. தொல்காப்பியத்தில் பாயிரம் கூறவேண்டிய தேவையைப் பற்றி எங்கும் கூறப்படவில்லை. இறையனார் களவியலுரையில் தான் முதன் முதலாகக் குறிப்பிடக்காண்கிறோம்.

பாணினியும் தொல்காப்பியரும்

வேதமொழியைக் கீழ்வானம்' என்றும் இலக்கணத்துக்குரிய புது மொழியைப் பாஷா' என்றும் வடமொழியாளர் குறிப்பிடுவர். பாணினியின் 'பாஷா சமஸ்கிருதத்தின் தாய்மொழியான ஒரு பாகத மொழியியே என்பர். பணினியின் காலம் கி.மு-நான்காம்நூற்றாண்டு என்பர். ஐந்திரம் வந்தபின் பாணினி தன் பெருமையிழந்து விட்டது. பாணினியின் பலநூற்றாண்டுகளுக்கு முந்தையவர் தொல்காப்பியர். எனவே பாணீனியம், ஐந்திரம் போன்ற நூல்களைக் கற்றவர் தொல்காப்பியர் எனப் பேசுவதெல்லாம் காலவேறுபாடு தெரியாத அறியாமையும், நூல் உள்ளீடு பற்றிய மெய்ம்மை உணராத பொய்மையுமே என்பதைத்தமிழுலகம் அறிய வேண்டும். பொருளிலக்கணம் பாணினியத்திலும், ஐந்திரத்திலும் உண்டா என்று வினவுங்கள், விடைகிடைக்காது.

தொல்காப்பியத்தின் சிறப்புப் பாயிரம் அவருடன் பயின்ற ஒருசாலை மாணாக்கரான பனம்பாரனாரால் இயற்றப்பட்டதாக அறிகிறோம். அது ஆசிரியர் பெயர், காலம் முதலிய உண்மைகளை தருகின்றது.

தொல்காப்பியர் ஐந்திரம் நிறைந்தவர், அவர் கால அரசன் நிலந்திரு திருவிற்பாண்டியன், அவ்வரசன் அவைக்களத்திியிலே தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்ட அவைக்களத்தில் தலைவராயிருந்து அதைக் கேட்டவர். அறம் கரை நாவின் நான்மறை முற்றிய அதங்கோட்டாசான்.

அதங்கோடு திருவாங்கூர்த் தமிழகத்தில் நாஞ்சில் மாவட்டத்தில் நாகர்கோவிலையடுத்து படந்தாலுமூடு என்னும் ஊருக்குஅருகே அமைந்துள்ளது. ஆங்கு ஓர் சிலையுடன் நினைவு போற்றப்படுவதை இன்றும் காணலாம். அதங்கோட்டாசான் குடி இன்றும் ஒரு மருத்துவக் குடியாய் உள்ளது. இது பற்றிய ஆய்வு தொடராதது வருந்தத்தக்கது.

ஆரியரா?

தொல்காப்பிய ஆசிரியர் ஓர் ஆரியர் என்பதற்கோர் ஆரிய முனிவர் என்பதற்கோ, அவர் ஒரு முனிவரும் மாணாக்கர் என்பதற்கோ, அகத்தியரின் வரிசையில் வந்தவர் என்பதற்கோ,

Koviloor Digital Library



அவர் திருண தூமாக்கினி என்ற ஆரிய மறுபெயர் கொண்டவர் என்பதற்கோ இட்டுக்கட்டிய கதை தவிர வேறு ஆதாரம் இல்லை. அந்த இட்டுக்கட்டிய கதையும் பொருத்தமான, திறமையாக இட்டுக்கட்டப்பட்ட கதையுமன்று? என மறைமலையடிகளாரின் முடிவாகப் (பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையர், தென்மொழி. பக். 202-204) கூறுகிறார்.

*ஐந்திரம் நிறைந்தவர்*

தொல்காப்பியரை ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் எனப்பாயிரம் கூறுதலான் ஐந்திரம் என்பதனை ஐந்திறம் என்று கொண்டு எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்தின் தன்மைகளைக் கற்றுத்துறைபோகிய தொல்காப்பியர் என்று கூறுவர். தொல்காப்பியர் காலத்தே எழுத்து, சொல், பொருள் என்றும் முப்பிரிவுகளைக் கொண்டனர் என்பது எழுத்தும், சொல்லும், பொருளும், நாடி என்ற சிறப்புப்பாயிரத் தொடராலும், தொல்கப்பியம் முப்பிரிவுகளைக் கொண்டிருத்தலாலும் பொருந்தாதென்க. பொருளில் யாப்பியலும், அணியியலும் இருப்பதை நோக்க ஐந்திறம் என்பதை ஐந்திரமாக்கிப் பார்க்கலாம். என்பாருமுண்டு, பாயிரமும், கடவுள் வாழ்த்தும் பிற்காலத்தே தோன்றிய வகைப்பாடு கருதி பாயிரத்தை மறுப்பாரும் உண்டு.

"ஐந்திரம் நோக்கித் தொகுத்தாரெனின் தமிழ்மொழிப் புணர்ச்சிக்கண்படும் செய்கைகளும், குறியீடுகளும், வினைக்குறிப்பு, வினைத்தொகை முதலிய சொல் இலக்கணங்களும், உயர்திணை, அஃறிணை முதலிய சொற்பாகுபாடுகளும் அகம்-புறம் என்னும் பொருட்பாகுபாடுகளும், குறிஞ்சி வெட்சி முதலிய திணைப்பாகுபாடுகளும் அவற்றின் பகுதிகளும் வெண்பா முதலிய செய்யுள் இலக்கணமும் இன்னோரன்ன பிறவும் வடமொழியிற் பெறப்படாமையானும் இவை எல்லாம் தாமே படைத்துக் கொண்டு செய்தாரெனின் முந்துநூல் கண்டு என்பதனோடு முரணுதலானும் முற்காலத்து முதனூல் அகத்தியம் என்பதும் அதன் வழித்தாய தொல்காப்பியம் அதன்வழிநூல் என்பதும் துணியப்படும் என்க' . சிவஞானமுனிவரின் மறுப்புரை வடமொழிக்கு உயர்வு கற்பிக்கத் தமிழை இழிவுபடுத்தும் புன்மைச் செயலைக்கண்டித்ததாம். அம்மட்டோ? பொருளிலக்கணம் தமிழுக்கேயுரிய ஒப்பற்ற பேரிலக்கணம் என்பதையும் ஓர்க. அகத்தியம் இருந்ததா என்றோர் ஆய்வு முண்டு.

Koviloor Digital Library



நானிலம்–கடவுள் கோட்பாடு

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே" (தொல்.951)

தொல்காப்பியர் கூறும் நான்கு நிலத்து மக்களும் நான்கு தனித்தனித் தெய்வங்களை வணங்கி வந்தனர். முல்லை நிலத்தினர் திருமாலை வணங்கினர். குறிஞ்சி நிலத்தினர் முருகனை வணங்கினர். மருதநிலத்தினர் இந்திரனை வணங்கினர். நெய்தல் நிலத்தினர் வருணனை வணங்கினர்.

உலக நாடுகளெல்லாம் அந்நிலப்பகுதியில் சிறப்பாகக் கிடைக்கும் விளைபொருள்களையோ செய்பொருள்களையோ எடுத்து மொழிவதுதான் இயல்பு. ஆனால், ஆசிரியர் தொல்காப்பியர் அந்நிலத்து மக்களால் வழிப்படப்படும் கடவுளினைச் சிறப்பாக எடுத்து மொழிகின்றார்.

ஒரு பெயர் ஒருருவம் ஒன்றுமில்லாக் கடவுளுக்குப் பல பெயர்களிட்டுப்பல வழியாக வழிபடுதல் தமிழர் இயல்பு. கடவுள் ஒருவரே என்ற உணர்வு தமிழர்க்கு என்றும் உண்டு. இந்நூற்பாவில் கூறப்பட்டுள்ள மாயோன், சேயோன், வேந்தன், வருணன் முதலியனவும் ஒரு கடவுளைச் சுட்டுவனவே. மாயோன் என்றால் அழியாதவன், சேயோன் என்றால் சேய்மையிலுள்ளவன், அறிவுக்கு எட்டாதவன், வேந்தன் என்றால் தலைவன், விரும்புதற்குரியவன் வருணன் என்றால் நிறங்களுக்குரியவன் என்று பொருள் கொள்ளுதல் வேண்டும்" என்று திரு. சி. இலக்குவனார் தம் தொல்காப்பிய ஆராய்ச்சி என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

இதற்குக்கிடைத்துள்ள உரைகள் இந்நூல் தோன்றிப் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின் எடுத்தவை. அவற்றைக் கொண்டு உண்மைக் கருத்தோர்தல் அரிதாகும்.

ஒகப்பயிற்சியாலும், உள்ளத்தூய்மையாலும் எண்ணத் திண்மையாலும் இறைப்பற்றாலும் நுண்மை, பருமை, நொய்ம்மை, கனதி, கருதியது பெறுதல், கருதியவிடஞ்செல்லுதல், கருதிய வடிவெடுத்தல், கூடுவிட்டு கூடுபாய்தல் ஆகிய எண்வகைப் பெற்றிகளைப் பெற்ற பெற்றியர் சித்தர் இருபெருந்தேவ மதத்திற்கும் பொதுவான கடவுள் மதத்தைக் கண்டனர்.

குமரிநாட்டுத்தமிழர் நெற்றியில் பெற்றிருந்த ஒருவகை அறிவுக்கண் என்றும் நெடுங்காலம் பயன்படுத்தாமையால் அதை இழந்துவிட்டனர், என்றும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

Koviloor Digital Library



இது, பாவாணர் தமிழிலக்கிய வரலாற்றில் குறிக்கும் செய்தியாகும். நால்வகை நிலத்தைப் பகுத்து நானிலம் நால்வகைத் தெய்வங்களாகக் காட்சியைப் பெற்றனர்.

*முத்தீ வழிபாடு*

கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே – (தொல்–1034)

இந்நூற்பாவிற்குக் கொடிபோல் பின்னியெழுந்து முகில்களாக மறைத்து நின்ற மறைப்பை நீக்கிக் கண்டவித்து நிறைபெறத் தோன்றிய தெய்வம் கொடிநிலை' என்றும், ஒரு சார்புமின்றிப் பற்றற்ற பரம்பொருளாக விளங்கிய தெய்வம் கந்தழி' என்றும், வண்மைப்பண்பாக விளங்கிய தெய்வம் 'வள்ளி' என்றும் தமிழுலகம் போற்றிய, கொடிநிலையைக் கீழ்த்திசையில் தோன்றும் ஞாயிறு எனவும், 'கந்தழி' என்பதைப் பற்றுக் கோட்டினை அழிக்கும் 'தீ' எனவும், வள்ளி என்பதைத் தண்ணொளி வழங்கும் தியாகிய 'நிலவு' எனவும் கெண்டு முச்சுடர்ப் பொருள்களையும் வழிபடும் வழக்கமும் தொல்காப்பியம் எடுத்துக் காட்டும் வழிபாட்டுமுறையாகும்.

கதிர், தீ,நிலா, இம்மூன்றை வாழ்த்துவதும் கடவுள் வாழ்த்துப்போலவே எண்ணப்பட்டு வரும் என்பது தான் இதன்பொருள். கொடிநிலை சூரியன் கொடி-உச்சி, நிலை-நிற்பது, உச்சியில் நிற்பது சூரியன் கந்தழி-நெருப்பு, கந்து -பற்றுக்கோடு அழி -அழிப்பது பற்றுக்கோட்டை அழிப்பது தீ வள்ளி -குளிர்ச்சியைத் தருவது சந்திரன்.

தொல்காப்பியர் இந்நூற்பாவில் கொடிநிலை கந்தழி வள்ளி என்ற மூன்றும் கடவுள் வாழ்த்தொடு வரும்" என்றார். நான்கனுள் எது உயர்ந்ததோ அது முன்னே வரும். அதனொடு ஏனைய மூன்றும் முறையே தொடர்ந்து வரும். கொடிநிலை முதலிய மூன்றும் கடவுள் வாழ்த்தொடு வரும் என்றதனால் கடவுள்வாழ்த்தே உயர்ந்தது முதன்மையானது.

கொடிநிலை என்பது கொடி போன்ற மின்னல் நிலைபெற்ற மேகத்தைக் குறிக்கும். எனவே, மேகத்தின் சிறப்பை வான்சிறப்பு அதிகாரமாக இரண்டாமிடத்தில் வைத்தனர்.

கந்து-பற்று அழி-அழிவு-கந்தழி பற்றினை அழித்தல் பற்றினை அழித்தவர் நீத்தார். பெருமை மூன்றாம் அதிகாரமாகக் குறளில் இடம்பெறுகிறது.

வள்ளி-வள்ளல் தன்மை அறம்புரிதல் அறஞ்செய்வோர் வள்ளியோர் எனப்படுவர். எனவே, அறத்தை அறன் வலியுறுத்தல், அதிகாரமாகக் கூறினார் வள்ளுவர். கடவுள்வாழ்த்து வான்சிறப்பு,

Koviloor Digital Library



நீத்தார்பெருமை, அறன் வலியுறுத்தல் என நான்கு அதிகாரங்களும் தொல்காப்பியத்தின் விரிவே. கொடிநிலை, கந்தழி, வள்ளி, கடவுள், வாழ்த்தொடு எனக்குறிக்கப்படுவதாக விளக்குவாரும் உளர்.

ஆரியர் 'தீ' வழிபாடு செய்தனர். அது தமிழரின் கோட்பாட்டிலிருந்து வேறு பட்டதாகும். காலையில், தீ மூட்டி எரித்து குளிர்காய்ந்து அதன் பக்கத்தே நின்று கடவுளைத் துதித்தனர். வடக்கே குளிர் மிகுதி என்பதால் கொடிநிலை-அரி அரன் அயன் என்ற மூவர் கொடிகளுள் ஒன்றனோடு உவமித்துத்தன் அரசன் கொடியைப் புகழ்தல் கந்தழி-திருமால் வாணாசுரனது சோ நகரத்து அரணை அழித்த வெற்றியினைச்சிறப்பித்தல் வள்ளி- முருகக் கடவுள் பொருட்டுப் பெண்டிர் வெறியெடுத்து ஆடுவது என்றார் ஐயனாரிதனார். இளம்பூரணர் கருத்தும் இதுவே. கொடியது நிலை-கொடியது தன்மை; கந்தழி- செருவிற்றெட்ப முடைமை; வள்ளி முருகவேள் என்றார். வீரசோழிய உரைகாரர்.

கொடிநிலை-கீழ்த்திசையில் தோன்றும் சூரியன், கந்தழி- ஒரு பற்றுக் கோடுமின்றி அருவாகித் தானே நிற்கும் தத்துவம் கடந்த பொருள் வள்ளி-சந்திரன் என்று பொருள் கூறுவார். நச்சினார்க்கினியர்.

கடவுள் வாழ்த்து என்பது மன்னனை வாழ்த்தும் வாழ்த்து-கொடிநிலை, கந்தழி, வள்ளி என்ற முதலன மூன்றும் மன்னனொடு தொடர்புடையன. இவற்றுள் மன்னனின் கொடிச் சிறப்பைப்பாடுவது கொடிநிலை, பிறமன்னர்களுக்குப் பற்றுக் கோடான கோட்டை, படை, முடி போன்றவற்றை அழிக்கும் மன்னனின் ஆற்றலைப் பாடுவது கந்தழி, மன்னனின் வள்ளன் மையைப் பாடுவது வள்ளி-என்பார்- கு.மோகனராசு. தமிழர்களின் முத்தீவேட்டல் வழிபாட்டினையே தொல்காப்பியம் காட்டுவதாகக் கருதுவாருமுளர்.

அரசன் இறந்தால் அவன் ஞாயிறாக மாறுகிறான் என்றொரு நம்பிக்கையுண்டு. சீனநாட்டின் மன்னன் ஞாயிற்றின் புதல்வன் எனப்படுகிறான். மருதநிலமக்களின் வேந்தன் வழிபாடு ஞாயிறு வழிபாடே என்பது சில ஆய்வர் கருத்து.

தொல்காப்பியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள இலக்கணக் குறியீட்டுச் சொற்கள் வாழ்வியலில் மெய்யியற் கோட்பாட்டை விளக்குவதாக அமைந்துள்ளது வியக்கத்தக்கதாகும்.

1. எழுத்துக்களுக்கு உயிர் என்றும் மெய் என்றும் உயிர் மெய் என்றும் ஆய்தம் என்றும் வாழ்க்கையில் போற்றப்படும் உடல் உயிர் முதலானவற்றைக் குறிப்பனவாக விளக்குகின்றன.

Koviloor Digital Library



உயிர் மெய்யல்லன மொழி முதலாகா-இந்நூற்பா அழிந்துபடும் உடம்பின் இழிதவை உணர்ந்துவதாக உள்ளது. உடம்பை விட்டு உயிர்நீங்குவிடுமாயின் அது தனக்குரிய முழு நிறைவான இயல்புகளை எய்தும் என்பதால் மெய்யுயிர் நீங்கில் தன்னுருபாகும் என்னும் நூற்பா விளக்கெலும், உடலின் சேர்க்கையன்றி உயிர்கள் வினைப்பயன்கள் நுகராது என்பதை உணர்த்தும். புள்ளி ஈற்று முன் உயிர் தனித்து இயலாது மெய்யொடு சிவணும் அவ்வியல் கெடுத்தே என்ற நூற்பா உணர்த்துவதும் உணரத்தக்கதாகும்.

உயிரும் உயிரும் எப்படிச்சேரும்? உடல் இன்றியமையாதது என்பதை

"எல்லா மொழிக்கும் உயிர் வருவழியே உடம்படுமெய்யின் உருபு கொளல்வரையார்"

2. எல்லா உயிர்க்கும் இன்ப மென்பது
தானமர்ந்து வரூஉ மேவற்றாகும் (தொல்–1169)

உயிர்கள் பல என்பதன் மூலம் பலபிறவியை எடுத்துக் காட்டுகிறார். சிவனியத்திற்கு பிறவி உடன்பாடே.

3. மேலோர் மூவர்க்கும் புணர்ந்த கரணம்
கீழோர்க் காகிய காலமுண்டே (தொல்–1090)

இதன்மூலம் நான்கு குலம் உடன் பட்டார் என்பார். மேலோர் என்பது இரு பிறப்பாளர் என்னும் பிறப்புயர்வு பற்றி என்றும் பேசுவர்.

களவியல் கற்பியல் போன்ற பாகுபாடுகள் வேத நெறிக்கு முற்றிலும் முரண்பட்டது வருணம் எனப்படும் பாகுபாடு இங்கில்லை. நான்கு என்பது வெவ்வேறு தொழிற்குரிப்பேயன்றி சாதியிலை பிறப்பொக்கும் - என்பதே தமிழர் உள்ளமாகும்.

4. அருளொடு புணர்ந்த வகற்சி - இது துறவு நிலையைக் குறித்தது என்பர்.

சிவனியத்திற்கும் இதுவே கோட்பாடாகும்.

5. பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்.
ஐயர் யாத்தனர்கரணம் என்ப.. ..(தொல்–1091) ஐயர் என்ற

சொல் சாதிப்பெயராக இப்போது சுட்டப்படுகிறது. ஐ, ஐயன், ஐயர், இச்சொற்கள் சங்க நூல்களில் அண்ணன், தந்தை, பெரியவன் என்ற பொதுப் பொருளினதே, அரச குடும்பத்தைச் சார்ந்தவர்களையும், சுட்டியுள்ளன எ-டு. ஐயன் ஆரிதன் இவ்விளக்கத்தந்தவர் அறிஞர் மயிலை சீனி, வேங்கடசாமியாவார்.

மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையாற்
பிழைத்தது பிழையா தாகல் வேண்டியும்

Koviloor Digital Library



இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே (தொல்-1091)

என்ற நூற்பாவில் குறிக்கப்பெறும் படிமைக்கு பூசை, விழா, நடத்துவதன்மூலம் கடவுளின் திருவுருவ வழி பாட்டினையே தொல்காப்பியர் வலியுறுத்துகிறார் என அறியலாம்.

7. காரும் மாலையும் முல்லை- என்ற நூற்பாவிற்கு கால உரிமை எய்திய ஞாயிற்றுக்குரிய கற்கடக வோரை ஆடி ஈறாக வந்து முடிவதே ஓராண்டாகும். இம்முறை 7000 ஆண்டுகட்டு முன்பே இருந்ததென வானநூல் ஆராய்ச்சியாளர் கருதுவர். மேழம் சித்திரை தொடங்குவது வடவர் முறையென்றுணர்க.

8. இல்லொடு கிளப்பின் இயற்கையாகும். ஆம் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே திருக்கோயில்கள் இருந்தன என்பதே இதன் குறிப்பாகும். அக்கோயில்கள் தமிழர் தமக்குரிய சிவனிய மாலியக் கோட்பாட்டுக்குரிய கோவில்களாகவே இருந்தன என்பதும் இதன் மூலம் அறியலாம். அதற்குத்தான் விழாவும், பூசையும்! அக்காலத்தே ஆரியரும் வரவில்லை. அவர்தம் மொழி வல்லாண்மையும் இங்கு புகவில்லை.

9. 'அகர உயிர் இன்றேல் அக்கரங்கள் இன்றாம்'. சிவவோதி நுகற்சி (சிவஞானபோதம்)

அகர உயிர்போல அறிவாகி எங்கும்
நிகரில் இறை நிற்கும் நிறைந்து– திருவருட்பயன்
அகாமுதல எழுத்தெல்லாம் – திருக்குறள்

எனத் தமிழ்நூல்கள் விளக்கும் அருமைப்பாட்டினை 'மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்' என்ற நூற்பா விளக்குவது இன்புறத்தக்கதாகும். எல்லாத் திணைக்கண்ணும் இறைவன் நிறைந்திருப்பது. போல அகரமும் உயிர்க்கண்ணும் தனி மெய்க்கண்ணும் கலந்து நிற்கும் என்பதும் தொல்காப்பியர் துணிபு.

10. வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழிச் சிறந்து
பொலிமின் என்னும்புறநிலை வாழ்த்தே.

என்ற நூற்பா தரும் கோட்பாட்டின் படி வழிபடு தெய்வம் என்பதன்மூலம் வழிவழியாக மக்கள், உறவினர் யாவரும் இனிய வாழ்வு எய்துவர் என்று கூறுதல் இனிமைபயப்பதாகும்.

கொடிநிலை, கந்தழி, வள்ளி- என்பதன் வாயிலாக கடவுள் வாழ்த்தொடு முத்தி வழிபாட்டை விளக்குவதும் இனிமை பயப்பதாகும் இது ஆரியரின் வேறான வழிபாடாகும்.

ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றியுயர்ந்த பாலது ஆணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோன் ஆயினும் கடிவரை யின்றே

Koviloor Digital Library



இந்நூற்பா இறையருளாணையாகிய பால்வரைத்தெய்வம் வகுத்தான் வகுத்தவகை விளக்கப்படுவது எண்ணப்பார்க்கத்தக்க தொன்றாம்.

13. 'நிலம் தீ நீர்வளி விசும்பொடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்'
ஓ! தொல்காப்பியம் காட்டும்தமிழ்மக்களின்

மெய்யியல் பெருமையை விளக்குவதாகும். கலந்தமயக்கம் கலந்த- தாமாகக் கலப்பவையல்ல, அறிவுடையோன் கலக்க கலக்க என்ற சொற்களுக்குத்தாம் எத்தனை வளமான பொருட்செறிவு! இறைக் கோட்பாட்டைச்சுட்டிக்காட்டும் அரிய நூற்பா.

14. 'உயிர்திணை' என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவர்அல பிறவே'
ஆயிரு திணையின் இசைக்கு மன சொல்லே

மக்களை மட்டுமின்றி மக்கட் சுட்டையும் உயர்திணை என்ற அரிய கருத்தின்மூலம் இவர் என்தந்தை- என்று தந்தையைச்சுட்டும்போது உயிர்திணை, என்தந்தை படத்தைச் சுட்டிக் காட்டி -இவர் என் தந்தை- என்னும் போது - . . படமாகிய அஃறினையைச் சுட்டும்போதும். உயர்திணையே யாடும் என்பதால் உயர்திணைமக்கள் என்னாமல் "மக்கட்சுட்டே' என்பதன்வாயிலாக உயிர்க் கூட்டத்தின் மெய்யியல் இதில் துலங்குகிறது.

15. அம்மை வழிபாடு
இயற்கை வழிபாடு
முருகன் வழிபாடு
சிவ வழிபாடு
மால் வழிபாடு
கதிரவ வழிபாடு

என அறுவகை வழிபாடுகள் தமிழகத்தில் இருந்தன அதனைப் பூசனை புரிவோரே.

'அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம்' என்பார் தொல்காப்பியர்.

பார்ப்பனன் என்ற சொல் தமிழ்ப்பூசைகரைக் குறிக்கும் என்பது பாவாணர் போன்றோரின் கருத்தாகும்.

16. வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல் நூல் ஆகும்.

என்ற நூற்பாவில் இறைவன் சிறப்பினைத் தெள்ளத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார் என்பார் ந.இரா. முருகவேள்.

17. மெய்யின் வழியது உயிர் தோன்று நிலையே–தொல்–நூன்மரபு. 18

வினை என்றது ஒரு செயலை அல்லது தொழிலை உணர்த்துவது உயிர் அல்லது அதன் ஆன்மா செயற்படுவதை மெய்ப்பொருளியலார் வினையென்றே அழைப்பர்.

Koviloor Digital Library



18. 'தொல்காப்பியம் சிவமயம்' என்ற நூலொன்றிருந்ததாகத் தெரிகின்றது. இக்காலத்தே அது கிடைக்கப்பெறவில்லை. மறைஞானசம்பந்தர் செய்த பதிபசுபாசப்பனுவல் என்ற 337 குறள்வெண்பா நூலின் சிறப்புப்பாயிரம். அகவற்பா.

திருந்து தொல்காப்பியம் சிவமயம் செய்தோன்
நண்ணிய தவமறை ஞானசம்பந்தன் என்று

குறிப்பிடுவதைக் காண்க.

சிவஞான சித்தியாருக்கும் உரையெழுதிய அறுவருள் ஒருவரான மறைஞானதேசிகர் தொல்காப்பியத்தை ஒரு பட்டாங்கு (பிரமாண நூலாக)த் தோன்றியங்களோடு (ஆகமம்) ஒத்த நிலையில் கையாள்வதைக் காணலாம்.

'இறப்பே நிகழ்வே எதிர தென்னும்
திறத்தியல் மருங்கில் தெரிந்தனர் உணரப்
பொருள்நிகழ் உரைப்பது காலம் ஆகும்'. தொல்.செய்யு. 194

என்றார் தொல்காப்பியர் எனத் தோன்றியத்தோடு ஒத்தநிலையில் தொல்காப்பியத்தை எடுத்துக் காட்டுவதைக் காண்க, இதை எடுத்துக்காட்டியவர் கு. கோதண்டபாணியார்.

நான்மறை அதங்கோட்டாசான் என்பதை விளக்க வந்த உரையாசிரியர் நச்சினார்க்கினியர் "நான்கு கூறுமாய் மறைந்த பொருளும் உடைமையின் நான்மறை என்றார். அவைதைத் திரியமும், பௌடிகமும், தலவகாரமும், சாமவேதமுமாம், இனி இருக்குவும், யசுவும், சாமமும், அதர்வணமும் என்பாரும் உளர். அது பொருந்தாது என்று நான்கு வேதங்கள் வேறாக இருந்தன என்பதைக் குறிப்பிடுகின்றார்.

இலக்கணம் மாறாதது வாழ்வியல்
இலக்கணம் மாறினால் மரபுமீறல்

என உணர்ந்து நாம் செயல்படவேண்டும். அது வழிபாட்டில் எப்படி?

### தமிழில் வழிபாடு

ஆலய வழிபாட்டில் அன்னை தமிழ் இல்லாததைக் கருதி இதோ பாவேந்தர்,

உயிர்போன் உங்கள் தமிழ் கடவுளுக்கே உவப்பாதல் –இல்லைபோலும்
உயிர் போன்ற உங்கள் தமிழ் உரைத்தக்கால்கடவுளதைஒப்பார்போலும்
பயிரழிக்கும் விட்டிலெனத் தமிழ்மொழியைப்படுத்த வந்த
வடமறைதான்
செயிர்தீர வாழ்த்துதற்கும் தேவையினைச் சொல்லுதற்கும்உதவுபோலும்
காற்செருப்பைப் பிறனொருவன் கழிவிடத்தில் தள்ளிடினும்–
பொறாதஉள்ளம்

Koviloor Digital Library


மேம்படுத்தும் எவற்றுக்கும்மேம்பட்ட தன்மொழியைத் தமிழைத்தீயோர்
போற்றுவதற் குரியதொரு பொதுவினின்று
நீக்கிவைத்தால்பொறுப்பதுண்டோ?
வேற்றுவரின் வடமொழியை வேரறுப்பீர் கோயிலிலே! மேவிடாமே!
சொற்கோவின் நற்போற்றித் திருஅகவல் செந்தமிழில்இருக்கும்போது
கற்கோயில் உட்புறத்தில் கால்வைத்ததெவ்வாறு—சகஸ்ரநாமம்?
நெற்கோதும் தேவாரம் திருவாய்நன்மொழியான தேனிருக்கச்
செக்காடும் இரைச்சலென வேதபாராயணமேன்—திருக்கோயில்பால்

*சொற்கோ என்றது மணிவாசகப் பெருமானை!*

தமிழ்ச்சங்கம் கண்டபெருமானே!
வேண்டத்தக்கது அறிவோய் நீ!
வேண்டமுழுதும் தருவோய் நீ—

உன் முன்னே எம்செந்தமிழ் வழிபாடு நடைபெறத் துணைபுரிவாய் என்பது தமிழ் நெஞ்சங்களில் ஏக்கம் இது தொல்காப்பியமரபைத்துலக்கிய பெருமைசேர்க்கும் பண்பு துலங்கும், அறம் விளங்கும், என் தாய்த்தமிழின் இழிவு துடைக்கப்படும் அங்கு இனிமை கோலோச்சம்.

Koviloor Digital Library

## 16. பொருளிலக்கண ஆராய்ச்சி

கு.வெ. பாலசுப்பிரமணியன்
தஞ்சாவூர்

இரண்டாயிரம் ஆண்டுகாலம் இலக்கண வரலாறு தமிழ்க்கு உண்டெனினும், ஆராய்ச்சி என்ற வகையில் தமிழில் அச்சுப்பொறிகள் தோன்றிய பின்னும், தொல்காப்பினுயம் நன்னூல் முதலான இலக்கண நூல்கள் அச்சியற்றப் பெற்ற பின்னுமே நூல்களும், கட்டுரைகளும் வெளிவந்தன. தொல்காப்பியப் பொருதிகாரத்திற்கு நச்சினார்க்கினியர் உரையையும், பேராசிரியர் உரையையும் 1885இல் சி.வை. தாமோரம் பிள்ளையவர்கள் சென்னையில் வெளியிட்டார்கள். இளம்பூரணர் உரையுடன் முதல் இரண்டு இயல்களை காநமச்சிவாய முதலியார் 1290. ஆம் ஆண்டிலும் பிற இயல்களை வ.உ. சிதம்பரம்பிள்ளை, ச.வையாபுரிப் பிள்ளை ஆகியோர் 1933, 1936 ஆம் ஆண்டுகளில் சென்னையில் வெளியிட்டனர். சி.வை. தாமோதரம்பிள்ளை பேராசிரியர் உரையையும் நச்சினார்க்கினியர் உரை என்றே கருதி அச்சிட்டனர். ரா. ராகவையங்கார் அதனைப் பேராசிரியர் உரையெனத் தெளிவுறுத்திய பின் மறுபதிப்புப் பேராசிரியர் உரையென வெளிவந்தது.

### ஐம்பது ஆண்டுகளுக்கு முன்

நூலுக்கு உரை எழுதுவதே ஆராய்ச்சியின் சிறந்த படிவமாகக் கருதப்பட்ட காலத்தில் தொல்காப்பியத்தின் பாயிரம், முதற் சூத்திரம் ஆகியவற்றுக்குத் தனி நூல்களே எழுந்தன. சிவஞானமுனிவர் தம் பல்வகைத் திறனும் தோன்றத் தொல்காப்பியப் பாயிரம் விருத்தி, முதற்சூத்திர விருத்தி எழுதியுள்ளமை எண்ணத்க்கதாகும். இவ்வரிசையில் அரசஞ்சண்முகனாரும் எண்ணத்தக்கவர். நன்னூலுக்குக் காண்டிகை உரை வரைந்த யாழ்ப்பாணம் ஆறுமுகநாவலர், நன்னூல், யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம் ஆகிய மூன்றுக்கும் விருத்தியுரை எழுதிய சந்திரசேகர கவிராச பண்டிதர்,

Koviloor Digital Library



நம்பியகப்பொருளுக்கு உரை அருளிய வல்லை வைத்தியலிங்கம்பிள்ளை, நன்னூலுக்குக் காண்டிகை உரை பயந்த இராமானுசக் கவிராயர், யாப்பருங்கல காரிகை, அகப்பொருள் விளக்கம், தண்டியலங்காரம் ஆகியவற்றுக்கு உரை வழங்கிய யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர், ஆகியோர் பொருளிலக்கண நூல்கட்குப் பிற்காலத்தில் உரை வரைந்தவருள் குறிப்பிடத்தக்கவராவர்.

மேற்சுட்டிய உரைப்பணிகளில் பாட்வேறுபாடுகளும், மாற்று உரைகளும் இடம்பெற்றன. ஆனால், இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் பொருளதிகார ஆராய்ச்சி, மூலபாடம், உரை ஆகியவற்றின் ஆராய்ச்சியிலிருந்து நூற்பாக்கள் உணர்த்தும் பொருண்மை நிலையில் மிகக் கருத்து வேறுபாடுகளை திறனாய்வுகளைக் கண்டது. 1905இல் மு. இராகவய்யங்கார் தொல்காப்பியப்பொருளதிகாரம் குறித்து எழுதிய கட்டுரையில் 'நெஞ்ச தளையவிழ்ந்த புணர்ச்சி' என்ற அகத்துறைக்கு 'மதியும் கந்தர்வரும் அங்கியும் தலைமகளைப் புணர்ந்தபின் தலைவன் புணரும் புணர்ச்சி'. என்றெழுதினர். 'யாமோர் கூட்டம்' என்ற அக்கட்டுரையில், சுசுவதகேது என்ற அறிவு சான்ற இளைஞனைக் கண்ட பிராமணன் ஒருவன் அவனைப் போலவே தனக்கொரு மகன் வேண்டுமென்று அவாவிச் சுவேதகேதுவின் தாயை அணுகித் தனக்கும் சுவேதகேதுவைப் போல மகனொருவனைப் பெற்றுத்தரும் வகையில் உடம்பட வேண்டுகிறான். சுவேதகேது இதனைக் கேட்டுக் கொதித்தெழ அவன் தந்தை உத்தாலகன் இஃது இயற்கைதான். திருமண நெறி தோன்றுதற்கு முன் இவ்வழக்கமாக இருந்தது. என்கிறான்.பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணம் என்ப' என்ற நூற்பாவிற்கு மு. இராகவையங்கார் இவ்விளக்கத்தைத் தருகிறார். மேலும், கீழோர் என்பதற்குத் தமிழர் என்றும் அவர் உரையெழுதுகின்றார். இந்தக் கட்டுரையை மிக்ச்சிறந்த கட்டுரை என்று பாராட்டி இலங்கைத் தமிழ்ச் செல்வர் ஒருவர் பரிசு வழங்கியிருக்கிறார். மு. இராகவையங்காரின் 'தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி' 1922 இல் வெளிவந்தது. இவருடைய கட்டுரைக்கும், நூலுக்கும் பலர் அவ்வப்போது தமிழ்ப்பொழில், செந்தமிழ்ச் செல்வி ஆகியவற்றில் மறுப்பெழுதின், 22. 7. 1915. இல் மு. இராகவையங்காரின் ஆராய்ச்சித் தொகுதியைப் பெற்றுக் கொண்டு நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் என் அறிவிக்கு மாறாகத் தோன்றியமையால் நான் இது குறித்து எழுதவில்லை, கொள்கையை மறுத்தெழுதிய காரணத்தால் நான் தங்களிடம் அன்பிலேன் என்று கருத வேண்டா' என்ற எழுதியுள்ளார். 15.7.1938

Koviloor Digital Library



இல் மு. இராகவையங்காரின் 'ஆராய்ச்சித் தொகுதி' வெளியிடப்பட்டது. 1942. இல் நாவலர் ச.சோமசுந்தர பாரதியாரின் அகத்திணையில், புறத்திணையில், மெய்ப்பாட்டியல் புத்துரைகள் வெளிவந்தன. இவ்வுரைகள் தமிழ்நெறி தழுவியவை. மெய்ப்பாட்டியல் உரைக்கண்,

> இன்னும் அகப்புறப் பொருட்டுறை யனைத்திற்கும் உரிய இயற்றமிழ்ச் சான்றோர் செய்யுளுறுப்பாவன மெய்ப் பாடென்பதை மறந்து, அவை 'நாடகமகளிர் ஆடலும் பாடலும் கண்டும் கேட்டும் காம நுகரும் இன்ப விளை யாட்டினுள் தோன்றி முப்பத்திரண்டு பொருளும்' எனப் பேராசிரியரும் 'ஈண்டுச் சொல்லப்படுகின்ற பொருளும் கற்று நல்லொழுக்க ஒழுகும் அறிவுடையார் அவைக்கண் தோனற்றாமையான் பண்ணைத் தோன்றிய என்றார். என இளம்பூரணரும் மயக்கக் கூறினர். மேலும் உரைகாரர் கூறும் ஆரியக்கூத்நூற் குறிப்புக்களே தொல்காப்பியர் இதில் கூறக் கருதின் அவற்றை எனைத்தளவும் குறியால் வாளா எண்ணான்கு பொருளும் நானான்கென்ப எனக் குன்றக் கூறிக் கற்பவர் பொருளறியாமல் மயங்க வைப்பாரா"

என்று கூறுகிறார். புறத்திணை உரையில் இவர் 'அமரர்' என்பதற்கு ஏனை உரையாசிரியர் தேவர் என்று கொண்ட பொருளை மறுத்துப் போர்வீரர் எனக் கூறியது பலராலும் ஏற்றுக்கொள்ளப்பெற்றது. பெருந்திணை என்பது மங்கலவாழ்த்து என்று இவர் குறித்ததை வ.சுப. மாணிக்கம் மறுத்துள்ளார். ச. சோ. பாரதி, மெய்ப்பாட்டியல் புத்துரை, ப. 229.

ஐம்பது ஆண்டுகளில்

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த பொருளதிகாரம் ஆராய்ச்சியின் தொடர்ச்சியாக, உரைத்திறன்களும், தனி நூல்களுக்கும் கட்டுரைகளக்கும் ஐம்பதுக்குப் பின்னும் வெளிவந்துள்ளன. இவற்றின் குறிக்கத்தக்கனவற்றை ஈண்டு ஆராயலாம்.

ச.சோமசுந்தர பாரதியாரைத் தொடர்ந்து புலவர் குழந்தை, சு.வெள்ளைவாரணர், மு. அருணாசலம்பிள்ளை, ஆ. சிவலிங்கனார், பாவலர் ச. பாலசுந்தரம் ஆகியோர் உரைவழித் திறனாய்வு செய்துள்ளனர்.

புலவர் குழந்தை பொருளியல் என்பதைப் பொதுவியல் என மாற்றினார். அகத்திணையில், பொதுவியல், களவியல், கற்பியல், மெய்ப்பாட்டியல், புறத்திணையில் என்பது இவர் கொண்ட இயல் வைப்பு முறையாகும். இதனைக் குறிக்கும் வ.சுப. மாணிக்கம்,

Koviloor Digital Library



இவ்வைப்புமுறை வன்கண்மையது மட்டுமன்று, தொல்காப்பிய நூற்பா அமைப்புத் தொடர்ச்சிக்குக் கீழறையுமாம். அகத்திணையியல் முடிந்தபின் புறத்திணையில் தொடங்கினாற்றான்,

அகத்திணை மருங்கின் அரில்தவ உணர்ந்தோர்
புறத்தினை இலக்கணம் திறப்படக் கிளப்பின்

என்ற நற்பாவுக்குத் தெளிவும் இயைபும் உண்டு. இவ்வாற்றின் வேறு ஐந்து இயல்களை இடைவைத்துப் புறத்திணையியலைக் கடை வைத்தால் என்ன விளக்கத் தொடர்பு உண்டு" 1. வ.சுப. மாணிக்கம் தொல்காப்பியத் திறன், ப. 5

என வினவுவர். புலவர்கள் குழந்தையுரை ஆரியச் சார்பான விளக்கங்கட்டு. ஓர் எதிர்ப்பாக எழுந்ததன்றி வேறு குறிக்கத்தக்கனவும் ஏற்கத்தக்கனவுமான பொருண்மை வேறுபாடுகளைப் பயக்கவில்லை. அமைந்தவை கீழ்வருவன.

1. அகத்திணை ஏழெனக் கொண்டமை
2. முதல் கரு உரிப்பொருள்களில் திணைக்கடிப்படை
3. கைக்கிளை பெருந்திணை விளக்கம்
4. அடியோர் வினைவலர் காதற்குத் திணையுரிமை
5. மேலோர் கீழோர் யாவர்
7. பார்ப்பன வாகை முதலிய நான்கு
8. மகட்பாற்காஞ்சி, மகள் மறுத்து மொழிதல்
9. பாடாண் எட்டு.
10. கொடிநிலை கந்தழி வள்ளி
11. புறக்கைக்கிளை
12. எண்வகை மணம்
13. உள்ளுறை இறைச்சி
14. மெய்ப்பாடுகளும் ஒன்பான் சுவைகளும்
15. நோக்கு
16. எண்வகை வனப்புகள்
17. வருண வேறுபாடு தொல்காப்பியர்க்கு உடன்பாடா?

இப்பதினேழு தலைப்புகள் குறித்த ஆராய்ச்சியில் இரு சார்புகள் புலப்படுகின்றன. 1. ஆரியநெறி தமிழ்நெறியினும் சிறந்தது, தமிழ்நெறியோடு, ஒப்பிக்கத்தக்கது. தமிழ்நெறிக்கு முன்னோடியாக அமைந்தது என்ற சார்புநிலை, 2. தமிழ்நெறி ஆரியநெறிக்கு முற்பட்டது. ஒப்பிக்கத்தக்கது, தூய்மையானது என்ற சார்புநிலை, இவையிரண்டுக்கும் ஆட்படாமல் பொருளதிகார ஆராய்ச்சி மேற்கொண்ட முயற்சிகள் சிலவே. தொல்காப்பியர் காலத்தைக் கி.பி. ஐந்துக்குத் தள்ளும். ச.வையாபுரிப்பிள்ளையின் முயற்சியும். கி.மு. 3000க்குக் கொண்டுபோகும் க.வெள்ளை வாரணரின் கருத்து தூர

Koviloor Digital Library



துருவங்களாக இருத்தல்போலவே ஆராய்ச்சி முடிவுகளும் இருவேறு எல்லைகளில் நிற்கின்றன.

ஆராய்ச்சி நெறிகள்

தமிழ் தொன்மைநெறி அகத்திணை, ஏழு புறத்திணை ஏழுச் சுட்டுகின்றது. எனினும், மு.அருணாசலம்பிள்ளை தொல்காப்பியர் தமக்கு மு. அமைந்த பன்னிரு புறத்திணைகளை ஏழாகத் தொகுத்துள்ளார் என்கிறார். பன்னிருபடலத்தின் தொகுப்பே புறத்திணையியல் என்பது அவர் கருத்தாகும். பன்னிருபடலமும் தொல்கப்பியப் புறத்திணையியலும் பல இடங்களில் வேறுபடுவதை இளம்பூரணர் காட்டுவர். பன்னிருபடலம் பிற்கால நூல் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. சிலப்பதிகாரத்தில் புறத்திணைக் கருத்து தொல்காப்பியத்திற்கு மாறுபட வந்துள்ளமையை நினைந்து இக்கட்டுரை எழுதப்பெற்றுள்ளது. எனினும் இது சிக்கலைத் தீர்க்வில்லை.

கைக்கிளை என்பது காதலின் குறுங்கரு என்றும், பருவம் எய்தும் அண்மையில் இருப்பாளைப் பருவம் எய்தினாள் என நினைந்து பேசிய சொல்லெதிர் பெறாக் கிளவி எனவும் வ.சுப. மாணிக்கம் கருதுவர். வ.சுப. மாணிக்கம், தமிழ்க்காதல்.ப. பெருந்திணை என்பது சற்று அளவில் வேறுபட்ட காமவெளிப்பாடு என்றும் அவர் கருதுவர். பெருந்திணை என்பது பெரும்பான்மையான மக்கள் கொண்ட ஏற்பாட்டு மணநெறி என க.வெள்ளைவாரணர் கூறுவர். 3. க.வெள்ளைவாரணர், சங்கஇலக்கியத்தமிழ் மக்கள், ப. 173. இவற்றில் வ.சுப. மாணிகனார் கருத்து ஒரு தெளிவைத் தந்துள்ளது. எனினும் கைக்கிளை என்பதற்குப் பருவ அணிமையில் இருப்பவள்பாற் காதல் என்பதிலும், உள்ளத்திற் காதற் குறிப்பு இல்லாதவள்பாற் காதல் எனக் கொள்வர் நேரிதாகும்.

மேலோர், கீழோர், நால்வருணம், உயர்ந்தோர்க்குரிய ஓத்து என்பவை ஆராய்ச்சி உலகைப் பெரிதும் கலக்கியிருக்கின்றன அறுவகைப்பட்ட பார்ப்பனப்பக்கம் என்பதற்குப் பாரதியார் ஆறுவகைப்பட்ட பார்ப்பனக் குடியினர் என்றார். புலவர் குழந்தை கற்பியலில் கூறப்பெறும் காமநிலையுரைத்தல் தேர்நிலையுரைத்தல் கிழவோன் குறிப்பெடுத்துரைத்தல் ஆவொடு பட்டநிமித்தம் கூறல் செலவுறுகிளவி செலவு அழுங்குவித்தல் ஆகிய ஆறுவகைக் கிளவிகளை யுடையவரென்பர். இருமூன்று மரபின் ஏனோர் என்பதற்குக் க.வெள்ளைவாரணர் பார்ப்பார் அறிவர் அரசர் தாபதர் பொருநர் கருத்துக்கள் இல்லை தொல்காப்பியர் காலத்தில் வருணப்பாகுபாடும் அதன் தாக்கமும் தமிழகத்திற்கு புலந்துவிட்டமையினை இந்நூற்பா காட்டுகிறது என

Koviloor Digital Library


கொள்வதே நேரிதாகும். தமக்கு உடன்பாடில்லாத மரபியல் நூற்பாக்களைக் க. வெள்ளைவாரணர், சில இலக்குவனார், அ சிதம்பரநாதனார் ஆகியோர் இடைச்செருகல் எனப் புறக்கணிப்பதும், ஆய்வுநெறிக்குரியன அல்ல. இனம், பண்பாடு என்ற தளங்களிலிருந்து நோக்குவதினும், இலக்கணம் என்னும் தளத்திலிருந்து நோக்குவதால் தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சிக்கு நிரம்பிய பயன் விளைக்கக்கூடும்.

பொருளிலக்கண ஆய்வு நூல்கள்

அகத்திணை ஆய்வு போலவும், அகத்திணைப் பனுவற்படைப்புப் போலவும் புறத்திணை விரிந்தநிலைக்குள்ளாக வில்லை. அகம், புறத்தினும் பாடுதற்குரிய வாய்புடையது என்பது அறிஞர் கருத்தாகும். பொருளிலக்கண மரபு வீரசோழியம், நம்பியகப்பொருள், புறப்பொருள் வெண்பாமாலை, இறையனார் களவியல், இலக்கணவிளக்கம், தமிழ்நெறிவிளக்கம், சுவாமிநாதம், தொன்னுல் விளக்கம், முத்துவீரியம், அறுவகை இலக்கணம் எனப் பல நூல்களால் எடுத்துரைக்கப்பெற்றுள்ளது. எனினும் தொல்காப்பியப் பொருளதிகாரம் போலப் பேராய்வுக்குப் பின்வந்த இலக்கண நூல்கள் உட்பட்டில தொல்காப்பியத்திற்குப் பின் நம்பியகப் பொருளும்,புறப்பொருள் வெண்பாமாலையுமே ஓரளவு ஆய்வுக்குட்பட்ட பொருளிலக்கண நூல்களாகும்.

முல்லை முதலாய ஐந்து அகத்திணை குறிக்கும் விரிவான ஆராய்ச்சி நூல்கள் வெளிவந்துள்ளன. இவற்றுட் பல சங்கப் பனுவல்களில் அவ்வத்திணைக் கருத்தை நோக்கியன. மு.வரதராசனார், முருகுசுந்தரம், ச. சாம்பசிவனார்,நா. செயராமன். நா. ஆறுமுகம் ஆகியோர் அகத்திணை குறித்த தனி நூல்கள் எழுதியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

புறத்திணைகள் ஏழையும் குறித்துப் புலவர் கா. கோவிந்தன் 'பண்டைத்தமிழர் போர்நெறி' என்ற நூலை எழுதியுள்ளார். இந்நூலில் துறைப்பொருண்மைகள் விரிவாக ஆராயப் பெற்றுள்ளன. ஆ. சினிவாசனின் 'புறத்திணை' என்னும் நூல் அரிய செய்திகளைத் தருகின்றது. கைக்கிளை பெருந்திணை குறித்து அவர் எழுதியுள்ள வினாக்கள் நம் சிந்தனைக்குரியன. சுந்தர மகாலிங்கத்தின் 'புறத்திணை விருந்து'' காலந்தோறும் துறைகள் வளர்ச்சியும் மாற்றமும் பெற்றுள்ளமை காட்டுகின்றது.

அ. ச. ஞானசம்பந்தத்தின் அகமும் புறமும்- அகம், அகமும் புறமும்- புறம், புலவர்கள் குழந்தையின் தொல்காப்பியர் காட்டும் வாழ்க்கை. ந. சுப்புரெட்டியாரின் தொல்காப்பிய காட்டும் வாழ்க்கை. க.வெள்ளைவாரணரின் தொல்காப்பிய தமிழிலக்கிய வரலாறு. ப. அருணாசலத்தின் தொல்காப்பியர், தமிழண்ணல்

Koviloor Digital Library



எழுதியுள்ள தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள் வரிசையில் நோக்கு, மெய்ப்பாடு உள்ளுறை இறைச்சி ஆகிய நூல்கள், ஆ.சிவலிங்கனாரின் தொல்காப்பியம் கூறும் உள்ளுறையும் இறைச்சியும் ஆகிய நூல்கள் பொருளதிகார ஆராய்ச்சியிற் குறிப்பிடத்தக்கன. ஆங்கில மொழி (Critical Idiom series) வெளியிட்டுள்ள திறனாய்வுநூல் வரிசையை யொத்ததாகத் தமிழண்ணலின் தொல்கப்பியரின் இலக்கியக் கொள்கை வரிசை இடம்பெறுகிறது. வ.சுப. மாணிக்கனாரின் தொல்காப்பியப் புதுமை, தொல்காப்பியக் கடல் தொல்காப்பியத்தின் திறன் ஆகியன பல கட்டுரைகளின் தொகுப்பு நூல்களாகும். பொருளதிகார ஆராய்ச்சி ஐம்பதாண்டுகளுக்கு முன் பொருளதிகாரம் பற்றிய கருத்துக்கள் அனைத்தையும் ஆராயும் நிலையிலிருந்தது. அந்நிலையிலிருந்து ஒரு நூற்பாவைக் குறித்தே ஒரு நூல் எழும் அளவு ஆராய்ச்சி ஆழம் பெற்றிருப்பதை ஐம்பது ஆண்டுக்காலப் பொருளதிகார ஆய்வு வரலாறு காட்டுகின்றது.

ஆய்வேடுகள்

தமிழில் முனைவர்பட்ட ஆய்வேடுகளில் முதல் ஆய்வேடான 'தமிழ் யாப்பியலில் உயராய்வு' என்ற அ. சிதம்பரநாதனாரின் நூல் யாப்பியலைக் குறித்தது. அதன்பின்வந்த மு.வ. வின். 'பழந்தமிழிலக்கியத்தில் இயற்கை', வ.சுப.மாணிக்கத்தின் 'தமிழ்க்காதல்', தனிநாயகத்தின் இயற்கையும் கவிதையும்' மரா.போ. குருசாமியின் 'தமிழ் நூல்களில் குறிப்புப் பொருள்' வி.டி. மாணிக்கத்தின் 'மருதம்', முத்துக்கண்ணப்பரின் 'சங்க இலக்கியத்தில் நெய்தல்திணை', ஆ. இராமகிருட்டினனின் அகத்தினை மாந்தர் -ஓர் ஆய்வு', கு.வெ. பாலசுப்பிரமணியத்தின் சங்க இலக்கியத்தில் புறப்பொருள் 'வாகைத் திணை, நா.செயராமனின் பாடாண்திணை கதிர் மகாதேவனின் பண்டைத் தமிழரின் வீரப் பண்பாடு' த.வசந்தாளின் தமிழிலக்கியத்தில் அகப்பொருள் மரபுகள்' க.கைலாசபதியின் ('Tamil Heroic Poetry' Tradition and Talent in cankam poetry') தமிழண்ணலின் கோ.சுந்தரமூர்த்தியின் 'பண்டைத் தமிழ் இலக்கியக் கொள்கைகள். மு. பொன்னுசாமியின் சங்க இலக்கியத்தில் காதல் மெய்ப்பாடுகள், இராம. சண்முகத்தின் வரைவு கடாதலும் அறத்தோடு நிற்றலும், க.ப. அறவாணனின் அற்றை நாட் காதலும் ஆகியன அகப்பொருள் புறப்பொருள் சார்ந்த ஆய்வேடுகளாகும்.

ஆய்வேடுகள் வழியாகப் பல புதிய முடிவுகள், தெளிந்த கருத்துக்கள், சிக்கல்களை நீக்கும் தீர்வுகள் பெறப்பட்டுள்ளன. எனினும் களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல் குறித்த பல ஆய்வுகள் வெளிவரவில்லை. தொல்கப்பியரின்

Koviloor Digital Library


அகப்பொருள் புறப்பொருள் கோட்பாடுகள் அனைத்தையும் ஒருசேரக் காட்டும் ஆராய்ச்சி நிகழவில்லை. அகத்திணையியலுக்கும் களவு கற்பியல்களுக்கும் உள்ள உறவுநிலை, அகத்திணை புறத்திணை இயைபு, உள்ளுறை வகை ஆகியன விரிவான ஆராய்ச்சிக்கு உட்படுத்தப் பெறவேண்டும்.

கட்டுரைகள்

இதழ்கள், ஆய்வுக்கோவைகள், மலர்கள், பிற தொகுப்புகளில் அகப்பொருள் புறப்பொருள் குறித்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல வெளிவந்துள்ளன. மதுரை, சென்னை, அண்ணாமலை, தமிழ்ப்பல்லைக்கழகங்களும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் நடத்தியுள்ள தொல்காப்பியக் கருத்தரங்கக் கட்டுரைகள் ஈண்டுக் குறிக்கத்தக்கன. கு. தாமோதரனின் 'தொல்காப்பியர் கருத்தில் அகமும் புறமும்' (5ஆவது ஆய்வுக்கோவை), தெ.பொ.மீனாட்சி சுந்தரனாரின் ('Two Tolkappiars') (5ஆவது க.ஆ.கோ) வ.சுப. மாணிக்கனாரின் 'பாடாண் எட்டு' (11ஆவது ஆ.கோ.) சே.வேங்கடராமச் செட்டியாரின் 'பாரியொடு மூவேந்தர் போர்' (செந். செல்வி. 29;8), இ. சுந்தரமூர்த்தியின் 'கூடலிழைத்தல்' (4வது ஆ.கோ.),நா. செயராமனின் 'பரிபாடலில் அகப்பொருள் மரபு' (11ஆவது ஆ.கோ.), அ.அ. மணவாளனின் 'அகப்பொருளிலக்கியத்தின் மறுமலர்ச்சிக் காலம்' (17ஆவது ஆ.கோ.), குளோறியா சுந்தரமதியின் 'அகப்பாடல்களில் உட்கூற்று அல்லது கொண்டுரைக்கும் முறை' (15ஆவது ஆ.கோ.), மு.மணிவேலின் 'தொல்காப்பியர் கருதும் கைக்கிளை மாந்தர்' (16ஆவது ஆ.கோ.), குமாரசாமி ஆச்சாரியரின் 'உள்ளுறை உவமமும் இறைச்சியும்' (செந்தமிழ் 48), சபார்த்தசாரதியின் 'தமிழர் பண்பாட்டில்இரவுப் போர்' (புலமை. 1975), கு.வெ. பாலசுப்பிரணியத்தின் 'பொருண்மொழிக் காஞ்சி'' (தமிழ்ப்பொழில் மே. 1992.).' கைக்கிளைப் பாடாண்' (தமிழ் இலக்கிய ஆ.கோ. 2), 'கைக்கிளை உளவியல்' (உலகத் தமிழ் மாநாட்டு மலர் 95), 'புறப்பொருளில் உள்ளுறை' (த.இ. ஆ.கோ.3) ச.வே.சுப்பிரமணியனாரின் (Studies in Tamilology') நூலில் ('Grammatical heritage of tha Tamil) என்ற கட்டுரை, க.கைலாசபதியின் ஒப்பியல் இலக்கியத்தின் 'பெரும்பெயர் உலகம்'' 'காதலும் கட்டுப்பாடும்' என்ற கட்டுரைகள் ஆகியவற்றில் குறிக்கத்தக்க செய்திகள் உள்ளன. இச் செய்திகள் எவ்வகையின? உரையாசிரியர்களிடையே தோன்றும் கருத்து வேறுபாடுகள், மூலநூல் ஆசிரியரிலிருந்து உரையாசிரியர்கள் வேறுபடத் தோன்றும் இடங்கள் பொருள் காணும் முறையில் முன்னோரோடு மாறுபடும் இடங்கள் ஒப்புமையால் தோன்றியன

Koviloor Digital Library



ஆகியவற்றால், மேற்கட்டுரைகளில் பல புதிய முடிவுகள் பெறப்பட்டிருக்கின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக மகட்பாற்காஞ்சித் துறைக் கருத்து நிலையில் விளைந்துள்ள ஆய்வைச் சுட்டலாம். மகட்பாற்காஞ்சி யென்பது சிறூர் மன்னரைப் புனைந்து பாடற்கெழுந்த இலக்கிய உத்தியே என நிறுவப்பட்டுள்ளது.

ஐம்பதாண்டுக்காலப் பொருளதிகார ஆராய்ச்சி ஒரு வளர்ச்சியைக் காட்டுதல் ஒருதலை. பொருளதிகாரத்தை வைதிக வண்ணமாகக் காணும் மு.இராகவய்யங்கார் நிலையிலிருந்தும், சைவ சித்தாந்தச் செறிவாகக் காணும் கா.சுப்பிரமணியபிள்ளை நோக்கிலிருந்தும், சமணக் கோட்பாட்டின் விளக்கமாகப் பார்க்கும். ப.அருணாசலத்தின் பார்வையிலிருந்தும், வடவாரிய நெறியில் எள்ளளவும் காணாதது எனக் கொள்ளும் புலவர் குழந்தையின் ஆய்விலிருந்தும் மிகவும் விலகித்தம் அரசியல், இன, பண்பாட்டு வட்டாரச் சார்புகளைவிட்டு நடுவுநிலை நோக்கோடு ஆராயும் பாங்கு இந்த ஐம்பதாண்டுகளில் வளர்ச்சி பெற்றுள்ளது.

அகத்திணை, புறத்திணைக் கோட்பாடுகள் சங்க காலத்தின் பின்அவ்வளவு விரிவான இல்லை. ஆணே அரிதாகக் கொள்ளும் மடல், பெண்ணுக்குரியதாகச் சமய பேசப்படுகிறது. உள்ளுறை இறைச்சி உத்திகள் மறைந்து விறலிவிடு தூது போக்கில் அகப்பொருள் புறப்பொருளாகி விடுகிறது. அகப்பொருள், புறப்பொருள் என்பவற்றின் மேல் அகப்புறப்பொருள் தோன்றி அவ்வரையறையோடு நில்லாமல் எல்லா நெறிகளையும் புறங்காணும் நிலை தோன்றிவிட்டது. நம்பியகப்பொருள், புறப்பொருள் வெண்பாமாலைக்குப் பின் தோன்றிய நூல்களில் அகப்பொருள், புறப்பொருள் வரையறைகள் செம்மையாக இல்லை. காலக்கோட்பட்ட தமிழர் வாழ்வியற் கண்ட பண்டை நெறிகள் தடங்காணாது புதைந்தன. இந்நிலையில் பழைய நிலைக்கட் பற்றுக் கொண்டாரும், நிகழ்விற் காணப்பெறும் எச்சங்களைப் பண்டைய நெறியிற் படைக்க விரும்பினாரும் அகப்பொருள், புறப்பொருள் நெறி நின்று இலக்கியமும் இலக்கணமும் வகுத்துள்ளனர். இத்திணைமரபு மாற்றங்களையும் அறிஞர் சிலர் ஆராய்ந்து காட்டியுள்ளனர் என்பது எண்ணத்தக்கதாகும்.

Koviloor Digital Library

# THE BOOK
## The qualities and methodologies of book writing

**Dr. S.Shanmugam**
**Thirunelveli**

**Introduction**: The world was formed millions of years ago are the scientific approach of the Twentieth and Twenty First Centuries. There are people who believe that there is a creator of the Universe and all living beings. Since human life which has been give the capacity to analyze about these things is very short compared to the Universal life which has already passed, it is possible to speculate and project some of the analytical thinking of intelligent human conclusions but is not possible to verify the above facts by anybody, at any point of time and by any means of human intelligence and this fact should be accepted by all. It is more of hope or possibilities even in scientific circle than that of natural acceptance due to non availability of irrevocable evidences available. In this scenario, the age of Tamil speaking people is considered as time immemorial and there are various theories put forth to project the view. But on thing is certain from the analysis of various scholars from the Western countries (there may be non acceptance if told by natives in this particular area of information) are that Tamil is one of the oldest languages of humanity, which cannot be disputed by any means and by anybody.

The great Tamil language has been enriched with literature of varieties, which any individual cannot master in one's lifetime even if the person is a Tamilian true to the nature and with dedication. Such is a vastness of the literature available in spite of there is conclusion that what we are having at hand are only a handful and lots were lost to sea

Koviloor Digital Library



and fire thousands of years ago.

The great Tamils have been guided for creating literature with knowledge and poems long ago, before most of the westerners could understand to create literature by the ever lasting Grammar of literature and social values namely the great book of Tamilians christened as "Tolkappiyam" for centuries. There is awakening about the value of Tolkappiyam and is all the more discussed and detailed now more than any other centuries because of the modern communication facilities. There are lots of books written about various types of thoughts through out the world now. But there is no fixed rule for the writing of books and about the qualities to be taken into consideration while writing a book being described in any of the languages. But Tolkappiyar in his Treatise has given the qualities of any book to be written and also the negative aspects to be avoided in a complete way using the last but not the least twenty two verses, some thousand of years ago. Starting from the creation of words to the good qualities of literature, a detailed work is to be seen to be believed.

There is a need for a separate book to highlight the very good presentation of a book writing methodology, thousands of years ago. The whole world will be surprised to note that some five thousand years ago, the treatise was written with clear cut views on the definitions, used and qualities of any book which will be useful for the humanity for years to come. The real knowledge available for analyzing and for cherishing is the one, which goes by the philosophy of the book writing, as discussed in Tolkappiyam. It is the duty of every good book writer to follow these principles to make the book everlasting as in the case of Tolkappiyam itself. with these few words, let us discuss in detail about the book creation and its qualities.

**How to choose the words for writing a book?**

While writing a book in any language, the most important things are three. One is basically words, second is thoughts or contents and third is methodology of presentation. In the verse 1589 of Tolkappiyam, he is trying to give a rule for the selection of the words. For that he describes the origin of the universe. The real information, which the

Koviloor Digital Library



author of this book wanted to convey in this verse, is as follows. The world or the universe is the place in which every living being lives. The formation of the living beings and non living beings of the world is due to proportionate mixture of the panchapoothas namely earth, five, water, air and the sky. So, the author is indirectly mentioning about the creation of universe due to the blending of the panchapoothas and it is for us to understand about the creation of universal materials. The Universe, in spite of the blend of five elements, the functioning of its is entirely unrelated to the five elements. So, the living and non livings are to be named as per the following methodology namely higher sensed organisms with six senses, lower sensed organisms other than the above and gender differences in the form of male and femal and the numbers namely single, many, one etc.

There should be separate words for each and every category of universal content and there should be no compromise between the two different types of classes namely human and non human in accordance with the usage and five categories among the above. That way, words should be selected while writing any book. By means of this verse he is trying to give a methodology for the basic unit to creativity in any language namely WORD and its importance and the selection appropriate words.

**The contents and messages of the book-conventions of society**

The verses 1590 and 1591 gives us some insight regarding the content of any book, which is the second and most important thing for a book. any book has got the goal or aim or duty of passing some message or information from the generation of author to the next generation and generations to come. So, the conventions of the particular society in which the book or the literary composition is written, should not be violated. The words should be selected as per the conventional usage. If not, the meanings of the words will be different and at times become meaningless or useless.

When the words thus selected are used for creating sentences to convey the information, there should also be certain rules to be fol-

Koviloor Digital Library



lowed. What is generally accepted, as the way of conventional presentation of sentences in creating literatures, should be adopted.

If the method of presentation of the sentence is not followed as per the conventions and usage, the meaning of the sentences and words will not convey the message, which the author of the book wanted to convey.

## The conventions and their origin

The conventions and usages of the society are formed out of the efforts of intellectual, honest and elderly or experienced people living in that society and accepted in the due course by the society as a whole considering the value and utility of them.

They are formed and implemented by the learned in that particular society. It is very much important to note that one society's conventions different from another and so the books of a particular society should represent the conventions of that society. This has been depicted in verse 1592.

## Types of treatise of books

The best books, which were written with out diversion from the basic conventions of the society, which were explained in detail, are of two kinds as per the learned ones of the society namely

1. Original or Creative work as like the book in discussion.
2. Derivatives or applied or secondary to the original books.

The verse 1593 mentions the classification of books.

## Original Works

The person who is learned and knowledgeable and his knowledge is one of detachment to the nature of the out come of the work undertaken (as mentioned in Bhagavad-Gita regarding the fruits of action namely not expecting any great reward for the writing of the treatise or book) and highly enlightened and wise due to his blending of knowledge and experiences of life, is the one who is eligible to write a creative treatise. The one written by such a luminary of scholarship and a person of impeccable personality can be called as original work or creative work. The reason is, that sort of book gives new information and ideas and messages to the society, which were not

Koviloor Digital Library



known previously. The great example can be Tolkappiyam itself. This is the verse 1594.

**Derivatives or secondary works**

The derivatives of any original work and the contents of that work are from any original work and making an attempt to give the common man better understanding about the original work can be called as secondary works. They can be classificed as four types namely

1. Condensed or abridged (comprised)
2. Explanatory or expanded (elaborated)
3. Combination of comprised and expanded
4. Translation.

All the above literary activities should follow the conventions already established for that particular type of work as per norms.

The verses 1595, 1596 and 1597 explain the above information.

How a book should be? – Or the nature or qualities of a book.

The erudite scholars have given certain definitions for a quality book. They are as follows:

1. A treatise should be explainable and possible to write explanatory notes and the understandable to all.
2. As like the type of work called as Kandigai (a form of type in Tamil literature – whether it is an original work or commentary is not explained in detail in Tolkappiyam), which is having direct understandability.
3. The listed ten defects for any book should not be there as explained in verse 1608.
4. Thirty two types of techniques or methodology as mentioned in verse 1610.
5. The information contained should be acceptable and honest in nature and truth only.

The verse 1598 tells the above contents in an explicable way.

**Rule for commentaries**

While writing a commentary to any book, the steps to be followed is clearly described in the verse 1599. When a treatise requires a commentary or explanatory, the following procedure is to

Koviloor Digital Library



be followed. There should be discussion on the commentary among the scholars in the form of question and answers. This is applicable to even the best commentaries written with clarity and with out any flaw. The suggestions coming out of the discussion of such a scholarly one should be incorporated whether it is deletion or addition to the already written commentary to make the work as perfect as possible.

## The qualities of poems

After talking about the nature and qualities of the books and also regarding the commentaries, tolkappiyar is now trying to explain how a part of the treatise should be namely poem. The qualities of the poem should be, as per the scholars of high order as in verse 1600:

1. As per the already mentioned rules regarding the poem writing and its contents as in the chapters on poems, poems should be written.

2. There should be economical usage of words while composing a poem.

3. In spite of economy of words, they should be self explanatory.

4. Deep, clear and sharp should be the compositions.

5. There should be no ambiguity in meaning.

6. The contents should be in such a way that it is immeasurable in nature, meaning the best.

7. The meanings thus derived should be useful in numerous ways to the reader of the poem.

## Kandigai-a form of poem

Verse 1601 gives the nature of Kandigai. The quality of a poem, if it is with out defects, and is not hiding its meaning and gives the meaning in a self explanatory way and openly, then it is called as Kandigai-a form of poem. Whether it is also applicable to commentary is not acceptable because of the previous usage of the word in the verse 1598.

Koviloor Digital Library



## The modifications of the poems or commentaries

As like the form of Kandigai, other modifications are mentioned here in writing poems in verse 1602. They are also applicable to commentaries as well as original works. They are

1. The contents, which are to be focused should be incorporated
2. with out unwanted details, it should be written.
3. It should have necessary details.
4. The poems, thus written should have practical approach and examples or illustrations to make them more useful to the reader.
5. It should follow the accepted methodology to bring out the best meaning.

The above rules can be applied to commentaries as well as original works depending on the situation. But there is a separate verse 1603 on commentary and so it is possible to think in terms of the original work mainly in this context.

## Commentary

The commentary for any book should be written in such a way that it explains in detail regarding the contents of the book. The related information should be also incorporated and explained in such a way that is acceptable to the reader of the commentary. This is the verse 1603.

The questions regarding the contents should be answered. The doubts and misunderstanding about the meaning of the text, which way be raised by the readers, must be clarified. This can be done by quoting from the books written by the author of the commentary or related books written by other scholars. Ultimately the meaning should be clear and there should be no ambiguity and the interpretation must be definite to the subject concerned. This is the best way of writing any commentary, as per the scholars. This is the verse 1604 explaining about the commentaries.

## The defects of Secondary works

If the secondary works like commentaries are not in accordance with the already explained and accepted rules, then that work is defective and not recommended for use in learning as per the verse 1605.

Koviloor Digital Library



**The greatness of Original work**

The works written by eminent scholars of repute cannot be defective at any point of time and is respectable in nature as per the verse 1606.

**The origin of defects in secondary works**

If the presentation and the meaning of the primary work are different from the approach and explanation of the secondary one, then the secondary work is defective. It is like disharmony between the singer and the background musician. This is presented in verse 1607.

**The Defects of Books**

This is a very important verse (1608) regarding the rules of book writing. Tolkappiyar was very much analytical in his approach is derived out of this verse. He was trying to write the negative things to be avoided in this verse first, before going to describe the positive aspects of any book should be in the last verse (1610)-a marvelous exposition of his scholarliness some five thousand years ago and unparallel in the literary history of any language and in short in the whole world literature. Unfortunately this is not well presented to the world to show the genius ness of the great Tamil scholar of repute namely Tolkappiyar.

The defects of compositions or books or treaties can be analyzed with clarity and enumerated as below:

1. Repetitions of the previous writings
2. Contradictions or inconsistency of the already side facts.
3. Incomplete presentation or understatement of information
4. Unwanted and exaggerated presentation or overstatement.
5. Jugglery of words or verbiage.
6. Misinterpretation or confusion or obscurity to the reader.
7. The presentation is such that, it is not relished by the reader's ears or mind
8. Words, which are unacceptable and rejected by scholars and using words of lowly meanings.
9. Without explaining the content of the treaties, trying to focus the interpretation of one's own, especially in commentaries,

Koviloor Digital Library



10. The presentation of contents are done in such a way, the reader or the hearer of the treaties, may not feel better mentally and trying to create a bed taste regarding the book.

These are the defects, which should be avoided in any type of book.

If the above defects are avoided and not found in a book in analysis, then the book can be recognized as the best work, is presented in verse 1609.

**The methodology and techniques of book writing**

This is the Magnum Opus of the great scholar, which is not found in any of the language till September 22, 2004, and a great work in Tamil not exposed beyond Venkata hills unfortunately. This is the third important component for writing a good book.

After condensing the knowledge learned, the following methodologies, which are thirty two in number, are useful for writing a good work for the humanity to be followed and used purposefully for years to come as in the case of Tolkappiyam.

They are as follows:

1. Clarity and simplicity of presentation for easy understandability.
2. Orderly arrangement of the chapters in a logical and meaningful way.
3. Summarizing the whole content in few words in the end of the work.
4. Classifying and systematizing the contents for proving the truthfulness of ideas.
5. Using the already said information, untold information is to be brought out with out difficulty.
6. When writing about the untold, the future ideas should be projected.
7. Using the already happended incidence, the events to occur are to be predicted.
8. The presentation of already written concepts should be change
9. Coordinated way of presentation of the related ideas.
10. The presentation should be precise to a goal and not ambiguous.

Koviloor Digital Library


11. Presenting the ideas of the author in proper places.
12. The order of presentation of the concerned type of book whether original or secondary or applied, should not be changed from established norms.
13. The ideas and concepts already accepted by the scholars of that period should be accepted by the author after due verification of the facts.
14. The already known facts of the literatures, which are vanished from the usage in the society due to various reasons, should be preserved by means of mentioning in the present work by the author for the posterity to be benefited out of those forgotten facts of the society.
15. Futuristic thinking is to be incorporated as like the past ones.
16. Clarifying the facts should be present, if not easily understandable
17. Already known facts should be mentioned with out hesitation, meaning that the origin of information used in the book should be mentioned. This indirectly denotes the present method of reference writing-what a wonderful Scholarliness of the great Tamil giant.
18. The other works of the author should be mentioned wherever necessary.
19. The presentation should be neutral in character and not siding any views of the society. This means that whatever is right should be written and not the views of the majority or the rich or the poor as per his leniency.
20. The bygone conclusions of learned of that time should be incorporated in the writing wherever appropriate and applicable.
21. The presentation should be in the way of command and not doubtful.
22. There may be different meanings for the same one. But the one, which is best, must be taken into consideration.
23. Already known ways of presentation of a book should be used for classifying the materials.

Koviloor Digital Library


24. The opposite views regarding the same subject should be analyzed, discussed and ultimately the view of the authors is made to prevail.
25. Quoting from others' experiences and also writings to be incorporated.
26. The olden ideas, which are there, but not possible to verify and analyze, should also be considered.
27. To highlight the facts, giving new information in between can be also done.
28. In spite of there may be views, which are against the ideas of the book as presented by the writer or commentator, it should also be considered for incorporation.
29. Even if there is some deficiency in the words, it should be rectified and to be explained in complete form. This is another area of best understanding of the situation of the time. Usually the manuscripts were in palm leaves at that time. If the writings in the palm leaves were incomplete due defective writing by the copy writer who was writing the book, that should be also considered and rectified and presented in a complete way, is the meaning. This gives historical information namely that copies of the texts were undertaken, by engaging copywriters.
30. Depending on the situation, various facts of personal views and the available facts to be blended and added.
31. Remembering the already existing facts and pointing them in appropriate situations.
32. The facts presentation should be in such a way that they are understood by the readers and incorporated in their day to day life.

Apart from the above thirty two techniques, new techniques of such nature can be incorporated. The writing should be short and economical but should be explanatory and having clarity. The thinking should be cleared out of defects and mentally organized to avoid defects in presentation. The presentation of the treaties must follow the accepted writing methodology and the type of work to be done

Koviloor Digital Library



and understandable to the readers. This is the way books are to be written as per the definition of the wise men.

**Conclusion**

A masterpiece of Tamil literature and literary techniques are being presented in a short way for the world to not the genius ness, the versatility, in-depth knowledge and the vastness of the Tolkappiyar and Tamil language. This requires a separate book to write the details and nuances of this twenty two verses of the great mother literature of Tamil available today for Tamilians to fall back for explanation on everything regarding grammar of Tamil language and yesteryears Tamilians life.

Long live Tamil! Let Tolkappiyar's fame grows!!

அழகப்பா பல்கலைக்கழகம் வளர் தமிழ் நூலகம் காரைக்குடி

## References

1. Tolkappiyam in English –content and cultural translation-Dr. S.V.Subramanian-First edition-may 2004-Meyyappen pathippagam.

2. Tolkappiyam –Commentary in Tamil Dr. S.V.Subramanian-Third Edition –July 1999- Manivasager pathippagam.

16266

ALAGAPPA UNIVERSITY LIBRARY KARAIKUDI CENTRAL

ALAGAPPA UNIVERSITY, KARAIKUDI
CENTRAL LIBRARY
Accession No. 64545
Date of purchases:
Call Number:

Koviloor Digital Library

Koviloor Digital Library

## நூலாசிரியர் முனைவர் ச. வே. சுப்பிரமணியன்

தமிழகத்தில் நெல்லை மாவட்டத்தில் குற்றாலத்திற்குக் கிழக்கே தமிழூர் என்ற ஊரைத் தோற்றுவித்துத் தமிழ்த் தொண்டு செய்து வருபவர் ச.வே.சு.

தமிழ் மாணாக்கருக்கும், ஆசிரியர்க்கும் அறிஞர்க்கும் நன்கு அறிமுகமான பெயர் ச.வே.சு.

தொல்காப்பியம் - தெளிவுரை, தமிழ் இலக்கிய வரலாறு போன்ற எம் வெளியீடுகள் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன.

கம்பன் இலக்கிய உத்திகள் என்ற நூல் தமிழக அரசின் முதற் பரிசைப் பெற்றநூல். இலக்கிய வகையும் வடிவும், கம்பன் கற்பனை, இளங்கோவும் கம்பனும், காப்பியப் புனைதிறன் போன்ற நூல்கள் முதுகலை மாணாக்கரால் பெரிதும் பயன் கொள்ளும் நூல்கள்.

தமிழ் ஞாயிறு, செந்தமிழ்ச் செம்மல், சாதனைச் செம்மல் என அழைக்கப்பெறும் இவர் வழிகாட்டலில் 44 பேர் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர்.

மத்திய சாகித்திய அக்காதெமி இவருக்குப் பாஷாசன்மான் வழங்கிச் சிறப்பித்தது. திருவாவடுதுறை ஆதீனம் இவருக்கு மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் நினைவுப் பரிசிலை வழங்கி மகிழ்ந்தது.

கல்விப்பயணமாக இவர் ஜப்பான், லண்டன், பாரிசு, ஜெர்மனி, போலந்து, செக்கோஸ்லோவோகியா, பிலிப்பைன்ஸ், பாங்காக், ஹாங்ஹாங், சிங்கப்பூர், மலேசியா, மௌரீசியஸ் போன்ற நாடுகளுக்கும் நகரங்களுக்கும் சென்று வந்துள்ளார்.